ஐந்து படைப்போர்

பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

ஐந்துபடைப்போர்.

இதில்
முதலாவது-இபுனியக்தன்படைப்போர்.
இரண்டாவது-உச்சிபடைப்போர்.
மூன்றாவது-வடோச்சிபடைப்போர்.
நான்காவது-தாகிபடைப்போர்.
ஐந்தாவது-இந்திராயன்படைப்போர்.
இவ்வைந்தும்அடங்கியிருக்கின்றன.

இவை,
பூனைமாநகரம்.
கந்தப்பிள்ளைபுலவர்-குமாரர்
அலியார்ப்புலவரவர்கள்பாடியது.

இராமநாதபுரம்.
இரவுண்ஷாப்புக்கடை
ப-வெ-முகம்மதிபுருகிம்சாகிபுஅவர்களால்
பற்பலஏட்டுப்பிரதிகளில்
ஒன்றுக்கொன்றமையாமலிருந்ததைச்சீர்திருத்தி
கோ - அருணாசலமுதலியாரால்.
பரிசோதித்து.
திருநெல்வேலிப்பேட்டை
பரிமளக்காரவீதியிலிருக்கும்
வங்காளம்-முகம்மதுராவுத்தர்-குமாரர்
மருதணராவுத்தர் அவர்களால்

தி - இரத்தினமுதலியாரது
கலைக்கியானரத்நாகரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.
1883-வரு

உ

விளம்பரம்

சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை முத்துகிருஷ்ணான் வீதியில்-௯-வது கதவிலக்கமுள்ள வீட்டில்ஸ்தாபித்திருக்கும் கலைக்கியானமுத்திராக்ஷரசாலை அச்சுக்கூடத்தில் பல விதத்தமிழ்ப் புஸ்தகங்கள் இருக்கின்றமையால் வேண்டியவர்கள் விலை சரசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

பிஸ்மில்லாஹி.

ஐந்துபடைப்போரில்

முதலாவது

இபுனியத்தன்படைப்போர்

காப்பு.

வெண்பா.

பூமுதல யாவும் பொற்பா யமைத்தவொரு
மாமுதலே யென்குநிறை வள்ளலே-கோமகனும்
இபுனியந்தன் படைப்போ ரியம்பவே நாளும்
கவனமதை நீக்கியருள் காப்பு.

கடவுள்வாழ்த்து.

கண்ணிகள்.

அல்கம்து லில்லாஹி அனைத்தும் படைத்தவனே
குல்லு நிறைந்த குதாயேநற் கோமானே (௧)
பல்லுயிர்கட்கெல்லாம் பகுத்திரணமீபவனே
சொல்லிலடங்காத துய்யவனேபேகமித்தப் (௨)
பொல்லா அடியான் பிழைபொறுத்தெந்நாளும்
சொல்லாலரியசுவர்க்கபதி தந்தருள்வாய் (௩)
இன்சொல்லறியாத இபுனியந்தன்படைப்போரைச்
சொஞ்சொல்லாற்பாடச் சிறியேன்பிழைபொறுப்பாய் (௪)
காதவழிகஸ்தூரி கமழுந்திருப்புயத்தார்
ஆதம்வழியிலவாக்கைமபத்தோ ராந்தலையிற் (௫)
சதுர்வேதநாயகமாய்த் தரியலர்கள்சிங்கமதாய்
எதுவம்புறக்காறுக் கேற்றவிறையோன் றூதாய் (௬)
ஜெகதலத்தில்வந்துதித்த செயிதுமுகம்மதுநபியின்
தருமானபூம்பாதந் தன்னைத்துதிப்பேனே. (௭)
அங்கக்குளிர அபூபக்கர் தாள்பணிவேன்
பொங்கமெனவந்தவுமர் பொற்பாதம்போற்றிசெய்வேன் (௮)
உத்தநெறியாகுமுதுமானை யான்மறவேன்
கத்தனருள்பெற்றஅலி காலைசிரசிற்கொள்வேன். (௯)
அலியார்மதலை யனுசைனையெந்நாளும்
மெலிவேதுமில்லாமல் வெற்றியுடனேபுகழ்வேன் (௰)

பத்துப்பேர்தம்மைப் பண்பாகநான்புகழ்வேன்
முத்துநேர்நல்லோரை மோசமறநான்பணிவேன் (கக)
அசுகாபிமார்களனைவரையும் போற்றிசெய்வேன்
ஓசுவானநபிமாரை யுள்ளகத்தில்யான்புகழ்வேன் (கஉ)
இமாம்களவர்நால்வரையு மின்பமுடனேபுகழ்வேன்
அமானமெனுஞ்சொர்க்க ரவனியினிற்பெற்றவர்கள் (கங)
மலிவார்புகழ்நிறைந்த மக்கநபிதம்போர்
ஒலியாமுகியித்தீனை யொருபோதும்யான்மறவேன் (கச)
ஆதரவினுகைவள ரன்பானநாயனருள்
காதிறுலிசாகிபையென் கண்குளிரவேபுகழ்வேன் (கரு)
துக்கமுமஞ்சதகத துல்லாவைப்போற்றிசெய்வேன்
மக்கைப்பதியாலியை மணமாகப்போற்றிசெய்வேன் (கசா)
நன்மைப்புகழார்மாமு நயினாலெப்பையின்பாதம்
பொன்னதெனப்போற்றிப் புகழ்வேனுமெங்காளும் (கஎ)
ஆகுமபுறுக்கான்வேத மதனின்பயனறிந்த
நூகுலெப்பையாலிமை நுவல்வேனெந்நாளும் (கஅ)
அந்தமுளதென்புரவைக் கல்பாவுவந்துதித்த
கந்தப்பிள்ளைபாதங் கருணையுடனேபுகழ்வேன் (ககூ)
மூமினுமோனையெல்லா முறையாகவேபணிவேன்
ஆமினர்பெற்றெடுத்த ஆலநபிநம்பிறசூல் (உய)
பெற்றெடுத்தபாத்திமத்துப் பெண்ணரிவைநபுருடர்
கத்தனருளோங்குமலி காரணமாய்வென்றபடை (உக)
இம்மானிலமதனி லெல்லவருங்கேட்பதற்குப்
பெம்மானினல்ல பெரியவருளாலே (உஉ)
அம்மானையாய்ப்பாட ஆனவுரைதான்கொடுத்தா
ரிம்மைமறுமைக் கிலகும்புகழாளர் (உங)
ஓசியத்துரைகொடுத்த வுண்மையினர்காலியுசைன்
நசிகத்துச்செய்யுரையை நவிலுமம்மானையதாய் (உச)
அஞ்சுபடைப்போராக வருமையுடன்பாடுதற்கு
வஞ்சகமில்லாத வரிசைபெறும்ஆரைகர் (உரு)
ஆதியருள்பெற்ற அகுமதென்போர்சற்குதன்மா
நீதிபெறும்ராவுத்தப்பிள்ளை நிதி தானீந்தான் (உசா)
அம்மானைசொக்க அரியகொடைதந்தனுல்
பெம்மானவற்குப் பெரும்பதவிசெய்திடுவான் (உஎ)
வருங்காலஞ்செய்தால மற்றுந்தவிர்காலம்
திருவாகவேதியுஞ் செஞ்சொற்புலவோரே (உஅ)
ஏதுமறியா வெளியேன்சொல்அம்மானை
மீதிற்குற்றமிருக்கில் வெற்றியுடனே பொறுப்பீர் (உகூ)
மல்லிகைப்பூ[illegible]ளுமேலே வழுத்துஞ்சுரைப்பூப்போலும்
வல்லியர்கள்மு[illegible]ருமேல வளர்த்தபெண்மணியைப்போலும் (ஙய)

கப்பலதின்முன்னாலே கைத்தோணியைப்போலும்
செப்பும்புலவோர்கள்முன்னே செவிடுமையைப்போலும் ௧௧
நெற்கதிரின்முன்னாலே நீக்குசாவியைப்போலும்
பொற்பணிமுன்னாலே பூண்பித்தளைபோலும் ௧௨
நாகத்தின்முன்னாலே நாக்குழுப்பூச்சைப்போலும்
மேகத்தின்முன்னாலே விளம்புமபனிப்போலும் ௧௩
பாகமறியாதவையல்சொல லம்மானையிதை
ஆகமறிந்தவர்க ளன்பாகக்கொள்வாரோ ௧௪
செஞ்சொல்லாற்பாடிக் திறமரங்கமேற்றிடுநாள்
இன்சொல்கபிஇகறத் தேற்றவருடமது ௧௫
ஆயிரத்திருநூற் றைம்பதாமகல்வருடம்
பாயிரத்தினம்மானை பாடியரங்கேற்றினனே ௧௬
சங்கைபெறவந்த சவுமியாநல்வருடம்
பொங்குஞ்சீர்பைங்கூனி போந்துதெய்திபத்தினிலே ௧௭
திருவளருந்தென்புரவை சேர்ந்தமுகலிங்களிலே
மருவளர்ந்திணைபுயத்தரான் மூரன்கந்தப்பிள்ளைசுதன் ௧௮
ஆதியருள்பெறற அலியோமொஹுஞ்சிறுவன்
நீதிபெறப்பாடி திரையலரங்கேற்றினனே ௧௯
மஞ்சுதவழ்காத்தான் மன்னன்கந்தப்பிள்ளைசுதன்
அஞ்சுபடைப்போரா யலிங்கமேற்றினனே ௨௰

நூல்.

மன்னர்மிகப்போற்று முகம்மதுநறகுல்கயினர்
பொன்னகரமென்னும் புகழார்மதீனமதில் ௨௧
கலிமாப்பயிரேற்றி கக்கணபீவீற்றிருந்தார்
அல்மாமனுரிருந்தங் கரசாளும்நாளையிலே ௨௨
அரசர்க்கரசர் அகுமதுறசூல்கயினர்
சரர்பதிக்ள்வந்திறைஞ்சுங் தூய்மையுள்ளபள்ளியிலே ௨௩
தொழுதுநல்யார்களுடன் சூழ்ந்திருக்கும்வேளையிலே
பழுதிலாவாதியருட் பாரச்சிபுரீலிறக்கி ௨௪
அல்லாசலாமுரைத்தா னகுமதேவிகளுமெனச்
சொல்லத்துடங்கினர் திட்டனிபுனியந்தன் ௨௫
கூடும்பதிகளிலே குருசாளிஎன்னுநகர்
காடுமதில்றையாய் நாடாளிபுனியந்தன் ௨௬
அஞ்ஞூறுமாமுழத்தா ஞருமலன்மார்பகலம்
அருசாதிருக்குமானவிருநூறுமுழம் ௨௭
நொய்யானவாயகலம் நூற்றிமுப்பதாகுமுழம்
கையாலளந்தாற கணக்குச்சரியாகும் ௨௮
இவ்வொருபல்நூறுமுழம் ஓர்முழந்தாளைதினகலம்
தவ்வுடனேமூச்செறியுந் தமர்நாசிநூறுமுழம் ௨௯

கண்களொருகுட்டகலம் கைகள்பனைமரம்போல்
எண்ணில்லாரோம மிருளால்மறைத்ததுபோல் ௫௰
எட்டியுயர்ந்தமலை இரண்டுபோலேயிருக்கும்
கெட்டியாரந்தரித்து விருக்கின்றவிருபுயத்தான் ௫௧
ஓர்பந்தியானையதங் குளபத்துலட்சமுண்டும்
ஆர்வெம்பரிபதுவு மைந்நூறுகோடியுண்டுமே ௫௨
காலாட்டளங்கள் கழறில்நூறுகோடியுண்டும்
சாலவவன்றளங்கள் தான்சொல்லக்கூடாதே ௫௩
ஆண்டிருந்தான்றினை யறியாதமூடனவன்
கூண்டிருந்தேபாவிக் கொடியோனிடந்தனிலே ௫௪
ஆங்கவன்பாற்றூதனுப்பி யழகாருந்தினத்திலே
பாங்காய்வரவழைக்கப் பகர்ந்தானிறையவனே ௫௫
மாறுபகாகாபிர் மனவலுமையுள்ளதெல்லாம்
பாறுமுங்களுக்கெனவே பகர்ந்துஜிபுரீலகன்றார் ௫௬
அகன்றவுடனல்ல அன்பார்நபியிறசூல்
உகந்தான்முடிந்தாலு மொருவன்மொழிதப்பாதென் ௫௭
றறமுள்ளகாலிதை யன்பாகத்தானழைத்துத்
திறமுடனேநீரேகிச் சென்றுகுருசானியில்வாழ் ௫௮
கோமானிபுன்பாற் கூறுவீரோர்வரினம்
சமானிலேயழையு மியம்புமவன்வாராவிட்டால் ௫௯
கேடினக்கென்றேகூறிக் கேளுந்திறையதுதான்
நீடுமிதற்கவன்றான் நிச்சயித்துக்கொள்ளாவிடில் ௬௰
ஆடும்போர்செய்வோமென்றே யறிவித்துவாருமென்றார்
நாடும்புகழ்நபிநாதரின்றன்மொழியைக்கேட்டு ௬௧
அரசேபோய்வாரனென அன்பாய்க்காலீதுரைத்து
விரைவிலெழுந்து வெற்றிமிகவாரும் ௬௨
வேதாம்பர்பாதத்தில் மிகமகிழ்விற்றன்பணிந்தார்
ஆகாரநாயனரு ளாருமகாலீதீர்தாம் ௬௩
ஆங்கவன்பாறபோய்த்தா னஞ்சாதுளமதிலே
யோங்குமிவைசொலுமென்றுரைத்தார்முகம்மதரூர் ௬௪
அஞ்சேனிறையருளா லறையுநந்தம்மாதரவாற்
றீகளுச அடித்திடுவேன் கிருபையிதென்றோதி ௬௫
வாம்பரியிலேறி வழிகூடியேநடந்தார்
போம்பரிசினூதாம் புகலும்வனங்களையும் ௬௬
மலையுங்கெடியும் வழுத்தும்பலசோலைகளுந்
தொலையுங்கடந்தகன்று சொல்லுஞ்சிலநாட்கழித்து ௬௭
சென்றூர்குருசானி சேர்கோட்டைவாயலிலே
நின்றுகநாளதோறும் நாடிநிற்குங்காவலவர் ௬௮
எங்கிருந்திங்கெங்குவந்தா யெவ்வூருனக்குமிகு
தொகையசமாய்வருஞ்சிறியாய் சொல்லென்றுதான்கேட்டார் ௬௯

அங்குநின்றுகேட்டவரோ டஞ்சாதுகாலிது
சிங்காரமாகச்சிலவசனஞ் செப்பலுற்றார் ௭௰
மக்கநகர்த்தூதன் மன்னர்நபியும்மத்தியான்
மிக்கவுங்கள்ராஜனுக்கு மேலானசெய்திசில ௭௧
சொல்லவந்தேன்போறனெனச சொன்னார்நபிதூதர்
நல்லதுநீர்நில்லுமென நவின்றார்க்காவலவர் ௭௨
அங்கோரமேயோடி யானமகராஜனுக்குப்
பன்னோரஞ்செய்யுமுறை பாதந்தனிற்பணிந்து ௭௩
மன்னினர்மன்கேட்டுப் பகர்மக்கததூதனைத்தா
னென்னென்றறிவோ மிங்குவரச்சொல்லுமென்றான் ௭௪
அப்போதுகாவலர்க ளங்குசென் றுகாலிதை
மெய்ப்பாரரசன்விடை வேண்டிவருவோமென்றார் ௭௫
வாசல்தனைவிட்டவர்தான் வந்தார்தெருவீதி
தேசுநெடுவீதியெல்லாந் தேர்நிற்கும்பந்திகளும் ௭௬
பாரக்குஞ்சரங்கள பரவிநிற்கும்பந்திகளும்
கோரமொடுபாயுங் குதிரைநிற்கும்பந்திகளும் ௭௭
ஒட்டகங்கள்கூடி யுலாவிநிற்கும்பந்திகளும்
மட்டுமட்டாயச்சின்னே வனைந்திருக்கும்பந்திகளும் ௭௮
ஜங்கிகள்கூட்டத் தளங்கள்நிற்கும்பந்திகளும்
பொங்குநாமறுமிற் பொலிந்திருக்கும்பந்திகளும் ௭௯
கட்டளகார்காவலர்கள் காத்திருக்கும்பந்திகளும்
எட்டுத்திசையு மிடமில்லாதேநிறையும் ௮௰
கங்குலெனவே அபசியர்கள்கூட்டங்களும்
பங்கமில்லாச்சாவடியும் பாராசர்கூட்டங்களும் ௮௧
எண்ணுக்கடங்காத காடிவருந்தோற்றங்களும்
கண்ணுக்கடங்காதவேறுகோலாரிகளும ௮௨
பல்லக்குகளோகும் பாங்காவரிசைகளும்
சொல்லத்தொலையாத சூரமார்வீரர்களும ௮௩
மலைபோலுயர்ந்துவரு மாளிடவர்கூட்டங்களும்
நிலைபோகக்கூடாது நின்றமனுக்கூட்டங்களும் ௮௪
அங்காடிவீதிகளு மானநெடுவீதிகளும்
சிங்காடிவைத்திருக்குஞ் சிறப்புள்ளகூட்டங்களும் ௮௫
நாடிவைபாந்தடிக்கு நல்லதெருவீதிகளும்
கூடிநீராடுகின்ற கோதையர்கள்சந்தடியும ௮௬
மல்லர்கள்கூடி மகிழ்ந்திருக்குஞ்சந்தடியும்
சொல்லரியராஜாக்கள் சூழ்ந்திருக்குஞ்சந்தடியும் ௮௭
ஆனையுடன்போ ரடருகின்றசந்தடியும்
மானையார்கூடி மகிழ்ந்திருக்குஞ்சந்தடியும் ௮௮
சித்தர்கள்கூடிச் சிலம்படிக்குஞ்சந்தடியும்
சத்திரங்களிலன்னஞ் சமைக்குகின்றசந்தடியும் ௮௯

கடைவீதிில்ரத்தினங்கள காட்டுகின்றசந்தடியும்
கொடைகொடுக்கும் வீதிகளிற்குரவைமிகுசந்தடியும் ௪௰
பாயிரங்கள்நன்றாய்ப் படிக்குகின்றசந்தடியும்
ஆயிரவிதங்களொன்றுக் கறையமுடியாததெல்லாம் ௪௧
கண்டுமனம்பதறிக் கந்தனேகாவலனே
யென்றுமுளவென்னிறையே என்னைக்காவென்றுரைத்து ௪௨
காயிர்களைவெல்லவெனக் காலீதிபுனுவொலிது
நாவுதனில்சலவாத்தை நவின்றிறையைத்தான்புகழ்ந்து ௪௩
ஏறுபரியோடுசென்றங்கேந்த லரண்மனையில்
வேறுமொழிகூறாமல் விரசாய்ப்பரியிழிந்து ௪௪
நின்றுகொஞ்சநேர நீதிநபிதூதர்பின்னே
நன்றிலாதந்தராஜனைத்தான் காண்பமெனா ௪௫
சென்றாரவன்கொலுவிற் சேர்ந்துவரும்பேருடனே
வண்டார்குழலியர்கள் வாழ்த்திடம்புரியும் ௪௬
உப்பரிகைமேடைகளு முயர்பளிக்கின்மண்டபமும்
சப்பரமஞ்சக்கால்கள் தாங்குநவரத்தினத்தால் ௪௭
தங்கத்தகட்டாற்று னழுத்துமாடங்களும்
சங்கிதியைத் தான்வளைந்தபாவனையாய் ௪௮
அமைசசாருகிருந்தங் காகளைக்கொண்டாடுவதும்
சமைத்தமணிப்பெண்ணார்வெண் சாமரங்கள்வீசுவதும் ௪௯
காளாஞ்சியேந்திநிற்குங் காரிகையர்கூட்டங்களும்
பாழாங்கொலுவிற் பகத்தையர்கள்சந்தடியும் ௫௰
நாடகந்தான்ஆடுநரும் நட்டுவங்கள்பாடுநரும்
ஆடகமார்மேடையிலே அஞ்சுகங்கள்பேசுவதும் ௫௧
தாரவேந்தர்தாள்பணிந்து தானடப்பனகட்டுவதும்
தேர்வேந்தர்வந்து ஜெயஜெயவென்பதுவும் ௫௨
கட்டியங்கள்கூறிக்கவரிக்கா லாட்டுவதும்
மட்டில்லாராஜாக்கள் மன்னனைக்கொண்டாடுவதும் ௫௩
இந்தவிதமனேகவிரம்பியம தாயிருக்கும்
அந்தச்சபைதனிலே ஆதிநபிதூதர்சென்று ௫௪
என்றுமுள்ளோனை யிறகுலையுள்நினைந்தே
யொன்றமுறையாம வூமனைப்போல்நின்றனரே ௫௫
செப்புமந்தமன்பார்த்துச் செங்கண்ணிற்றீய்த்தெறிப்ப
இப்போதுநீயிங் கெங்குவந்தாயென்னிடத்தில் ௫௬
தப்பாமல்வந்தசெய்தி சாற்றென்றான்சிக்கிரத்தில்
தப்பாருமந்தத் தறுகண்ணன்தானுரைத்த ௫௭
அந்தமொழிகேட்டே யருள்வார்நபிதூதர்
தந்தைதாயில்லான் தன்னருள்வளர்ந்தோங்கும் ௫௮
அருசிற்கபுசோடேறு மாலநபிதூதனியான்
ஒருசொற்பகருகிறே னுண்மையுடன்கேளுமென்று ௫௯

சற்றேனு மந்தசாது தருமாதிகளைத் தறித்து
மூத்தானைன்றால் முகம்மதுவைத்தானினைந்து ௱௰
சொன்னாரிந்நல்லோருஞ் செர்குசாருநீர்தானும்
பின்னைதானுசொல்லாமற் பேசுமெங்கபிதீனில் ௧௧௧
வருகவுரைத்தார்கள் மறுத்தொன்றும்பேசாமற்
பெருமையுடன்வந்தீரேற் பேறுமக்குமெத்தவுண்டாம் ௧௧௨
என்றுரிதுகேட்டேயிபினியந்தன் கோபங்கொண்டு
தன்றுருங்கோபனலஞ் சொரியவிருகண்ணிலும் ௧௧௩
கையைநிலத்தடித்துக் கறுகறெனப்பற்கடித்துப்
பையலேநீதான்பயப்படா தெனைநோக்கி ௧௧௪
தீனில்வரச்சொன்னாயே தீனேதிங்குன்னுயிரை
ரோசில்விடுமுன்னே வகைவிபரமாயுரைப்பாய் ௧௧௫
என்றுன்பொல்லாத விபுனியந்தனைப்போது
கன்றாநபியின்கற்றாதர் தாமுரைப்பார் ௧௧௬
மக்கநகர்சொர்க்கநகர் மற்றுநகர்க்கரசாய்
மிக்கவராய்வந்துதித்திடும் மேதினியிற்காபிர்கள் ௧௧௭
திருக்கிசையாரைச் செங்குருதியாறொழுக
வாளுக்குயிரேற்றும் வள்ளல்நபியாமவர்தாம் ௧௧௮
ஆதம்வழியாயவரி னைம்பத்தோராந்தலையில்
போதமுடன்வந்தார் புறக்காணவர்க்குளது ௧௧௯
பாதமிதித்தோற்றம் பாருலகிலில்லார்காண்
நிதிகின்றமானதற்கே யுவந்துபிணைநின்றவர்காண் ௧௨௦
அட்டதிசைபோற்று மப்துல்முறைபின்றவத்திற்
றுட்டர்களைத்தானொடுக்கத் தோன்றுசுதனானசிங்கம் ௧௨௧
கல்விமிகுந்தவனர் காசிமெனுந்திறலார்
சொல்லும்புகழுமுறத் தொல்லுலகிற்றந்தமகன் ௧௨௨
மூங்கும்புகழப்துல் முத்தலிபாமன்னவர்சேய்
சிங்கத்திற்சிங்கம் திறலப்துல்லாதவத்தில் ௧௨௩
வந்துதித்தவெங்கள் முகம்மதுற்றசூல்நபிதாம்
இந்துவிகரொவ்வாவிறசூல் நபியொளிவில் ௧௨௪
பாதியைக்கொண்டே படைத்தான்குறுசுதனை
நீதிபெருமாலநபி நீண்டவொளிவதிலே ௧௨௫
நாலிலொருபங்குகொண்டு நற்குறுசைத்தான்படைத்தான்
வாலிபரெங்கள் முகம்மதுற்றசூலொளிவில் ௧௨௬
அஞ்சிலொருபங்குகொண்டே யானசொர்க்கந்தான்படைத்தான்
மஞ்சின்குடையுடையார் முகம்மதுற்றசூலொளிவில் ௧௨௭
ஆறிலொருபங்கா லரியவெளகுவைப்படைத்தான்
சுடறுநால்வேதக்குருவா முகம்மதுவின் ௧௨௮

ஏழிலொருபங்கா லெழுதுங்கலத்தைப்படைத்தான்
வாழியராமெங்கள் முகம்மதுற்றருளொளிவில் ௧௨௯

எட்டிலொருபங்கா லெழும்பொழுதைத்தான்படைத்தான்
தட்டில்லாவெங்கள் சங்கைநபிதம்மொளிவில் ௧௩௰

ஒன்பதிலொருபங்கா லூதுமதிமைத்தான்படைத்தான்
அன்பசெனுமெங்க ளருமதுற்றருளொளிவில் ௧௩௧

பத்திலொருபங்கால் படைத்தான்பலவுயிரும்
பத்திபெறுமெங்கள் பயகாம்பர்தம்முடைய ௧௩௨

வெற்றிகளைச்சொல்வதற்கு மேதினியிலாருமுண்டோ
கற்றவர்களெங்களுக்கு நன்றாய்மனமகிழ்வாய் ௧௩௩

இறுதியில்மன்றுடுகின்ற வெழிலார்முகம்மதுகாண்
அற்றியாயறுங்கரத்தை யன்றுபொருத்திவைத்தோர் ௧௩௪

அரவோடுபேசினவ ரரவைவதைசெய்தவர்காண்
இரவொன்றிலேழ்வான மேகியிக்குமீண்டவர்காண் ௧௩௫

புலியோடுபேசினவர் புகல்கரத்தால்நீரழைத்தோர்
அலிமாமனூரவனை யறியாதபேருளரோ ௧௩௬

காதவழிகஸ்தூரி கமழுந்திருமேனியினர்
ஏதமணுகாதயிறசூல் முகம்மதுகாண் ௧௩௭

வலதுகரம்நீண்டிருக்கும் வள்ளலாமெங்கள்நபி
பலதுமறிந்தாளைக்கும் பார்த்திபர்காணெங்கள்நபி ௧௩௮

பெரிதனிலாஞ்சனைதான் பெற்றவர்காணெங்கள்நபி
அடருங்குபிரோரை யாக்கினைசெய்வார்காணும் ௧௩௯

கதிஜாமணாளரெனக் காசினியெல்லாமறியும்
மதியையறைப்பிர்ந்தவர்காண் மண்மீதிலெங்கள்நபி ௧௪௰

மெத்தப்பொறுதியுள்ள மேன்மையபூபக்கருக்கே
யுத்தமருகரென வூரறியமாட்டாதோ ௧௪௧

வென்றியுமறினுக்கு வேண்டுமருகரென
நன்றியுள்ளயாரும் நலமாயறிவாரோ ௧௪௨

நீதியுதமானார்க்கு நேசமுறுமாதுலரென்
றோதும்புவியி லுள்ளவரெல்லாமறிவார் ௧௪௩

மேகக்குடையுடைய வேதாம்பரெங்கள்நபி
ஆகமதுதன்னை யறியாதபேருளரோ ௧௪௪

அசனுருசைனார்க்கு மண்புடையபேரரென
நிசமாயறிவார்கள் நீணிலத்திலுள்ளவர்கள் ௧௪௫

பாத்திமாநாச்சியர்க்குப் பண்பானதந்தையென
ஆத்துமங்களெல்லா மறியாதோ இப்புவியில் ௧௪௬

நேசமுறுமாநகர் நீண்டபதிதனிலே
வாசமுறவந்துதித்த வள்ளலகும்மதென்போர் ௧௪௭

சத்தனருளாற்பெற்ற கனயோகராவுந்தன்மேல்
சித்தமனம்வைத்தருளும் நீதியுளவெங்கள்நபி ௧௪௮

சாயலிழலுடைய சங்கையுளரெங்கள்நபி
வாயாரச்சொல்லவொண்ணு வண்மையுடையரெங்கள்நபி ௧௪௯
ஈயெறும்புமேனியிலே யெப்போதுந்தீண்டார்காண்
காயம்பளபளெனக் காணுங்காண்நந்நபிக்கு ௧௫௰
சம்பத்துமிக்கதருமமுடனுள்ளவர்காண்
ஜென்மமெடுத்தோரிந்தச் செய்திதானுரறியார் ௧௫௧
ஆதம்படைக்க ஆண்டாண்டாமாயாமுன்
நீதமுடனிந்தயுகம் நிச்சயமாய்ச்செல்லமட்டு ௧௫௨
நித்தமலக்கு நிறைந்தெழுபதாயிரம்பேர்
சுத்தமுடன்சோடினைசெய் தோன்றவரும்வெள்ளானை ௧௫௩
வெள்ளானைமேற்பவனி வேடிக்கையாய்வருவார்
கள்ளாநீகேட்டிலையோ கருநரகில்விழாதே ௧௫௪
ஏதுக்குடல்வளர்த்தா யிறசூலைநீயறியாமல்
ஊனுக்குடல்வளர்த்தாய் உன்கேட்டையாரறிவார் ௧௫௫
நீதமறிந்திலையோ நீமூடனுகினையோ
போதமதுபோச்சோ புத்திகெட்டுப்போனயே ௧௫௬
சாதிகெட்டவேந்தேநீ தாங்நபியோர்கேட்டிலையோ
நீதியோமூடாகெட்டையா யேன்வளர்ந்தாய் ௧௫௭
பஞ்சாநீயெங்கள் பயகாம்பரையறியாய்
மிஞ்சவளர்ந்துமி லேச்சரைப்போலாகினையே ௧௫௮
பாழில்வளர்ந்தென்னபலன் பயகாம்பரையறியாய்
வாழியில்நீதா னெயிலுக்கிரையாவாய் ௧௫௯
மூட்டிக்குளியாதே முகம்மதுற்றசூல்பதத்தை
யெட்டிப்பிடித்தார்க்கு ஈடேறல்வேண்டாமே ௧௬௰
இன்பமறிந்திலையே யேன்கெட்டாய்நீயரசே
அம்பரமட்டேன்வளர்ந்தா யாலநபியையறியாய் ௧௬௧
மொத்தியாய்நீவளர்ந்தாய் மூடாபோநன்நபியை
கத்தியிருந்திலையே நாளெல்லாம்போக்கினையே ௧௬௨
கத்திக்கிரையாவாய் காசிமைக்கண்டிலையே
பெத்தியறிந்திலையே பேயாபோநீயரசே ௧௬௩
வெறிபிடித்தமன்னவனே வேதாம்பரையறியாய்
குறிகேடனாய்வளர்ந்தாய் கொடியபவஞ்செய்தாயே ௧௬௪
மெத்தவளர்ந்தென்னபலன் மேன்மைநபிதம்பதத்தை
நித்தமறியாது நீசாநீயேனிருந்தாய் ௧௬௫
இரவுபகலாக வெங்கள்நபிதம்பதத்தில்
வரவுமறிந்திலையே வான்மட்டுமேன்வளர்ந்தாய் ௧௬௬
கலியோநபிதமைத்தான் கண்டிலையேநீபாவி
அல்மாமாவென்று மறிந்திலையேநீபாவி ௧௬௭
ஏதடாநன்னபியை யிங்காளறிந்திலையோ
ஞதடாகம்ருய் தோசித்தனம்விட்டிலையே ௧௬௮

அடருந்துன்மார்க்கா யறிந்திலையோவன்னையைத்
தொடரும்விதிவசமோ சூமனுய்ப்போனாயே ௧௬௯
பதியெல்லாந்தானறியும் பாத்திபராசன்னையை
விதியோவுன்கேடோ விழலாயறிந்திலையே ௧௭௦
மக்கத்தபூசகலை யாட்டினதுங்கேட்டிலையோ
உக்கித்திரன்போறவனே யுன்சமுகமெவ்வளவு ௧௭௧
மெத்தவளர்த்தினையே மேன்மைமகிதம்பெருமை
சற்றுமறிந்திலையிச் சடமெடுத்திங்கென்னபலன் ௧௭௨
காகந்தலையரிந்த காயகராமெங்கள்நபி
யாகந்தனையடா வன்பாகக்கேட்டிலையோ ௧௭௩
அழற்குழியிற்போகாம லாலகிமையைப்பணிந்
தழக்கமுள்ள ஆலிவந்தால் மோசங்கள்வாரதுமே ௧௭௪
ஜென்மமுடிக்குரைகை சேராதேமன்னவனே
முன்னமறைதக்கைவிட்டு மூடனாய்ப்போகாதே ௧௭௫
கள்ளாய்நீயிங்கிருக்கிற கந்தன்புலிவந்தாக்கால்
எள்ளாய்ப்பறந்தாலு மெங்களைவிட்டுவிடார் ௧௭௬
சாற்றும்புறுக்காளைத் தள்ளிவிட்டுப்போகாதே
ஆத்துமத்தின்மெய்மை யழற்குழியிற்போடாதே ௧௭௭
உன்சேனைகள்தா னுதவுமென்றுமெண்ணாதே
தென்பாய்ப்பறப்பாச் சினத்தினாலிவந்தாக்கால் ௧௭௮
உன்சேனையெல்லா மொருவிச்சலிவாட்குத்
தன்சேனையோடிருந்து தான்வாழவேணுமென்றால் ௧௭௯
மோசப்வருமுன்னாலே மோட்சமதுவேண்டுமென்றால்
பாசிக்காய்ப்போகாமல் பயகாம்பர்தீனதிலே ௧௮௦
ஆசைதனைவைத்திடுநீ யாவரூஞ்சொர்க்ககர்
நேசமிதுபோல நீணுலகிலெய்துகில்லை ௧௮௧
புறுக்கான்வழிசென்றால் பொற்பதியிற்சேர்க்குமதிற
சறுக்காமல்வந்துநீ தானாகிச்சேராமல் ௧௮௨
சேராதேயென்றார் திகைத்துபுனியந்தானும்
ஏராதசொல்லுரைத்து ச்சதவிடத்தில்நின்று ௧௮௩
நல்லதுநீசொன்னமொழி நன்றாச்செவச்சினந்து
பல்லைக்கடித்துப் பாதாதிகளைத்தானோக்கி ௧௮௪
தூதன்தனைக்கொன்றாற் சூழ்பழிகள்மெத்தவுண்டாம்
காதவழிக்கப்பாற் கழுத்தைவெட்டித்தள்ளுமென்றான் ௧௮௫
தள்ளுமென்றசொற்கேட்டுச் சாத்துவார்காலீது
கொள்ளாப்பாவித்திரியமோ கொண்டாய்நீதானரசே ௧௮௬
ஏதடாதுள்ளுகிறாய் எவ்வார்த்தையைக்கேளு
பதந்தனைபாவாத பார்த்திபர்தம்முமமத்தியான் ௧௮௭
போதமில்லாவுன்படை தான் பொங்கியிருந்தாலும்
தீதமுறுமெங்கள் நிபுணரஸிவார்தனக்கு ௧௮௮

காணுமோவுன்சேனை காணுதுபார்க்கவந்தேன்
தாணுமோதுல்பக்கறு நாணுநிங்குன்சிரசை ௧௮௯
துக்குற்றேன்சொன்னதெல்லாஞ் சொன்னார்நபிகேட்டு
மிக்கநபிதினவர்க்கு விளம்பினார்பொல்லாத ௧௯௰
இபுனியந்தனோடுமினித்தா மதங்களின்றிப்
புவனியுள்ளகாபிரெல்லாம் பூசல்மறக்கும்படிக்கு ௧௯௧
படைபோகவேண்டுமினிப் பறையடிக்கச்சொல்லுமென்றார்
கொடையின்நிறசூல்பாற் கொள்கைவிதநடக்க ௧௯௨
மடையனிபுனியந்தன் மதர்த்தங்குகோபங்கொண்டு
புடைசூழ்ந்திருந்தவர்க்குப் புகன்றானேஇவ்வசனம் ௧௯௩
நகையார்நபியேது நவில்புறக்கான்தானேது
மிகையார்நபிக்கு வேண்டுகாரணமேது ௧௯௪
மக்கநகரேது மாட்சியவிதானேது
இக்கணமேப்படையை இங்குவரச்சொல்லுமென்றான் ௧௯௫
படைமுரசவர்முழக்கப் பார்வேந்தரெல்லோரும்
சடுதியிலேவந்து தார்வேந்தனைப்பணிந்தார் ௧௯௬
அன்பதுகோடி யரியமதயானைகளும்
ஒன்பதுபேர்கூர்மையுள்ள பெரும்ராசர்களும் ௧௯௭
அஞ்சப்பொருவமென ஆட்கள்கையிலேதடியும்
குஞ்சரங்கள்கையிற்கொடுத்தாரிரும்புலக்கை ௧௯௮
பரிநூறுகோடி பலதிக்கிலும்நெருங்க
இருபதுகோடி இரதம்நெருங்கிவர ௧௯௯
அறுபதிலட்சம் அபுசிகளின்சேனை
உறுமிதன்சேனையொன்பதுகோடியுண்டும் ௨௱
பூதமெழுகோடி போந்தபடைவீரரல்லாற்
சூதமொழுகோடி துட்டப்படையுடனே ௨௱௧
ஜின்கள்வெகுகோடி திரண்டபடையுடனே
சங்கிப்படையதுதான் சாத்துமெழுகோடியுண்டும் ௨௱௨
காலாட்படைகளைத்தான் கணக்கிடவுங்கூடாது
சாலாட்டிபுனியந்தன் தான்போர்க்குப்போகவென்ன ௨௱௩
ஊத்தைக்குணமுடையோ னூசணுக்கிருந்தனவே
நேத்தியாயப்போ நிதம்பணிகள்செய்யுமவர் ௨௱௪
அரிசிகலநூறுமன்பாய்ச் சமையற்பண்ணிப்
பெரியவொட்டை முந்நூறும்பிந்தாமலேயாக்கி ௨௱௫
கோழியேசுட்டைகோழி யிருநூறும்
கால்யிருநூறுங் கட்டாய்ச்சமையற்பண்ணி ௨௱௬
காய்கனிகள்சொல்லக் கணக்கிடவுங்கூடாது
மாயனிபுனியன்முன் மலைபோலவேகுவித்தார் ௨௱௭
நெய்களொருநூறுகுட நேராகவேவார்த்துத்
தொய்யுந்தயிர்க்குடங்கள் சோறதுமுந்நூறு ௨௱௮

பால்களொருநூறுகுடம் பண்பாகவேவார்த்து
மால்கொள்தேனூறுகுடம் மதிப்பாகவேவார்த்து ௨௱௯
அத்தனையுந்தானருந்தி யாயிரஞ்சால்தண்ணீருஞ்
சுத்தமுடனேயருந்திச்சோரா திபுனியந்தன் ௨௱௰
கட்குடங்களாயிரந்தான் கண்டமட்டுமேயருந்தி
யுட்பெலத்தையெண்ணியவனே கோவெனவெழும்பி ௨௧௧
பன்னீரும் கல்வபலமணமும்தான்பூசி
வன்னிக்குணமெனவே வாய்த்தபணியணிந்து ௨௧௨
அரையிற்கரும்பொன்னரைஞாணொன்னூறுபாரமுண்டும்
வரைபோல்புயத்துடையான் வார்த்தஇடைக்கச்சதுதான் ௨௧௩
ஒருநூறுபாரமுண்டு முல்லாசக்கச்சையிடை
அருகாயெடுத்தணிந்தா னவகருங்கச்சையொன்று ௨௧௪
ஈராயிரம்பாரயிரும்பங்கி தானணிந்தான்
ஓராயிரம்பாரமுல்லாசத் தொப்பியிட்டான் ௨௧௫
காலிற்கழலணிந்தான் கனைக்காயிரம்பாரம்
பாலிக்கும்பொன்முடிதான் பத்தாயிரங்களுண்டும் ௨௧௬
நாகமணிமாலை நாலாயிரம்பாரம்
ஆகமதிற்பூசணமுமையாயிரம்பாரம் ௨௧௭
வில்லாயிரம்பாரம் வேலாயிரம்பாரம்.
பல்லாயிரங்கள் பலமாயெடுத்தணிந்து ௨௧௮
அம்பறாத்தூணி யாயிரம்பாரம்
உம்பருங்கண்டா லுடனேதிடுக்கிடுவார் ௨௧௯
அண்டமெட்டுந் தண்டமாறாயிரம்பாரம்
மூன்றடனெடுத்தகைவாள்மூவாயிரம்பாரம் ௨௨௰
ஆயுதங்களின்னுமனேகமெடுத்தணிந்து
தேயுமனையாளிடத்திற் சொன்னான்பயணமென ௨௨௧
ஆயும்பெரியோர்க்கு மன்பர்க்குமுடனே
பாயும்புலியேநீர் படைபோகவேண்டாங்காண் ௨௨௨
துன்றிரவுகண்டகனவென்னென்றுநான்சொல்லுவேன்
நன்றதல்லவென்னரசே ந[illegible]திர்போறதற்கு ௨௨௩
போகாதேயென்றுரைத்தாள் புத்தியல்லவென்னரசே
ஆகாதவலிதலையை யன்பாகவேதிருந்தி ௨௨௪
நம்முடையசாமிபதம்நாளுங்கெதியெனவே
எம்முடையபேர்விளங்க விப்போதுவாராட்டால் ௨௨௫
என்னைப்போல்வேந்தருக்கின் கென்றும்பயலாகிடுவேன்
பொன்னைப்போல்நீயிங்கிருபூவேபயம்வேண்டாம் ௨௨௬
ஒன்றுக்குமஞ்சாதென்றோதி யிபுனியந்தன்
கன்றுக்கிரங்குமந்தக் கற்றாயைப்போனடி ௨௨௭
எத்தனிபுனிபந்தனேறுதற்கு வாரணத்தைச்
சுத்தமுடன்கொண்டுவரச் சொன்னான்பாகனுக்கு ௨௨௮

உம்பமெழுநூறு உள்ளமதயானைதனை
பயர்விலாச்சோடனைகள் ஆபரணமும்மணிந்து ௨௨௯
காலுக்குநல்ல கனகதண்டை தானணிந்து
மேலுக்குப்பொன்சிரா மேன்மையுடனேயணிந்து ௨௩௰
குஞ்சரத்தின்கைகொடுத்தா னிரும்புலக்கை
அஞ்சபொருவெனவே யானைக்குணவளித்தான் ௨௩௧
சோடனைகள்செய்துபின்னர் தும்பிதனைக்கொண்டுவந்தான்
ஙாடிபிபுனியந்தன் நரகதியைத்தேடி ௨௩௨
ஆலயத்தைச்சுற்றிவந்தங் கிருக்கின்றபுத்தையெல்லாம்
மாலின்முத்திக்கையெடுத்து வணங்கியேதெண்டனிட்டு ௨௩௩
வெற்றிதாவென்றுவிளம்பிக் கும்பிட்டுநின்றான்
மத்தியிலேதாமிதித்த மன்னிடம்பாலெழும்பும் ௨௩௪
கலாபமாய்ச்சொன்னவகை சாதில்விழுந்தட்டாமம்
குலாவிவரும்பானையின்மேற் கொற்றவனுமேறினனே ௨௩௫
மலக்கலமவுத்துவந்து மன்னவனைக்கொண்டேகக்
கலக்கமில்லாவேழங்கலங்கி மிகமுழங்கி ௨௩௬
வேந்தர்வெகுகோடி வெள்ளமுமன்முன்னடக்க
மந்தர்பலகோடி மதயானைதேர்நடக்க ௨௩௭
பரிகள்வெகுகோடி பரந்துவரநாலுதிக்கும்
கரிகள்வெகுகோடி காட்டமுடன்பின்தொடர ௨௩௮
கொழுத்தவுடற்க்காரர்களைக் கூடியேபங்குரைக்க
யழுத்தமுள்ளவாலிபரை யன்னசுற்றம்பார்ப்பாரும் ௨௩௯
கவிகையொருகோடி கட்டாகச்சூழ்ந்துவர
சிவிகையொருகோடி திரளாகச்சூழ்ந்துவர ௨௪௰
கொடிகளொருகோடி கூடியேதாளொருங்கத்
தடிகளொருகோடி தான்சுமக்குங்குஞ்சரங்கள் ௨௪௧
தண்டுமுரசுகுந் தாவுகாளப்நெருங்கக்
கண்டத்திழ்யுங்களைகதப்புந்தாளொருங்க ௨௪௨
தம்பட்டமும்முரசுகுந் தாளநெருங்கிவரக்
கும்பிட்டியானைகளுங் கோதனத்திற்கைதட்டவி ௨௪௩
வாத்தியங்கள்மூவாரும் வளமாய்முழங்கிவரத்
தூத்திநடைகொண்டதுமா தோன்றலும்வேழமது ௨௪௪
ஆலியெங்கேஆலியெங்கேயென்றான்படைதானடக்கக்
கோலியவேந்தரெல்லாங் கொக்கரித்துத்தானடக்க ௨௪௫
அம்புவில்லுக்கா ரணியாயுதக்காரர்
ஒன்பதிலக்கமுயர்ந்தபடை சூழ்ந்துவர ௨௪௬
கம்பமதயானைபரிக் சத்தர்தமோதிவர
அம்பாரிகளுமழகாக்கூடிவர ௨௪௭
குன்றுமலையுங் கொடுங்கானகமுங்கடந்து
கன்றுமலையுங்கடுங்காவனங்கடந்து ௨௪௮

சிங்கமுடனளித்திரளுங் கலேங்கொதூங்க
பங்கமுடனே பறவைபயந்தோட ௨௪௯
ஆறுகுளம்வாவி யறப்பரவைநீர்சுவறப்
பாறுமிபுனியந்தன் பல்நாள்வழிதொலேத்து ௨௫௰
சென்றனறபுநகர் சேரவேதானடந்து
நன்றேதும்மில்லாத நங்களிபுனியந்தன் ௨௫௧
மக்காமதினமன்னவனுஞ் சேர்ந்தனனே
தக்கஇபுனியந்தன் தானங்குவந்ததனே ௨௫௨
ஆலமபிதுர்சரிலோர் அழகர்கண்டேபதறிச்
சாலமயங்கித் தங்காமலோடினரே ௨௫௩
ஓடியேமாமதின ஊர்நபிதம்பார்சேர்ந்து
நாடியிருக்கின்றபள்ளி நாயகர்முன்சொல்லும்போது ௨௫௪
கூடியிருந்தார்கள் குருநபியும்யார்களுடன்
கேடரியவன்னூர் செப்பிடலாரொன்னில் ௨௫௫
வம்புபுறம்பேசாத வள்ளல்அபூபக்கரும்
சம்புதலில்லாதுதுமான் சங்கைபெறுநல்லியும் ௨௫௬
அசனுருசைனுரு மன்பானஜென்னத்தினை
வசமாகப்பெற்றவள்ளளீ ரைந்தவரும் ௨௫௭
ஏகனருள்பெற்ற இபுனுமாலீக்கவரும்
ஆகமறிந்த அன்பர்சல்மான்பாரிசுவும் ௨௫௮
நானத்தவம்புரியும் நசிகத்தக்கல்வியரும்
ஊனமில்லாகாலீ திபுனுவொளீதலரும் ௨௫௯
அல்லாவருள்வனரும் அப்துற்றகுமானும்
ஒல்லாகிருபையுள்ள ஒளீதிபுனுமூன்தானும் ௨௬௰
செல்வமதுபெற்ற சிறப்பினுமூன்தாதும்
நல்லறங்கள்பெற்றிருக்கும் நல்லிபுனுதாபித்தும் ௨௬௧
ஆர்க்குமுககாரியராம் அப்துற்றகுமானும்
ஏர்க்குங்கிருபையுள்ள எழிலுபுனுசையாதும் ௨௬௨
அச்சந்தவிருமபூபுகுறை ருவவரும்
பச்சமிகவுள்ள பண்பார்ஆதிபுனும் ௨௬௩
நபியார்வளர்த்தபிள்ளை நல்லஉசாமாவும்
புவியோர்புகழும் பொற்பிபுனுஅப்பாசும் ௨௬௪
மறையின்படிநடக்கு மாலிபுனுசன்னுவும்
சற்கின்படிநடக்கும் கைதிபுனுஆக்கும் ௨௬௫
அறிவுக்கடலான அரியவன்சாரிகளும்
பொறுதிக்குணமுள்ள புகழியுனுமன்குறும் ௨௬௬
தாட்டிகமதானசைதிபுனுதாபீத்தும்
நூட்டுப்போல்வந்த புகழ்ப்பதுல்தவ்வாதும் ௨௬௭
உண்மையதுபெற்ற உபைதத்துல்சாலீகும்
கண்மணியைப் போலிருக்குங் கனகஇபுனுசலாம் ௨௬௮

எங்கும்பாசிக்கமிபுனுபசிறவரும்
அனகக்குளிரவரு மன்பானதைமிபுனும் ௨௬௯
பொங்குமழகுள்ள புகழிபுனுயாதனும்
சிங்கமெனவந்த சிறப்பாரிபுனவசும் ௨௭௰
எதிர்த்தவனைக்கொல்லுமிபுறு அசுமாவும்
கதிர்ந்தபடைவெட்டுங் கனகரிபுனுசாமாவும் ௨௭௧
எண்ணொந்தீராயிரம்பேர் மீற்றசகுபிகளும்
பண்ணென்றுவந்த பபகாம்பருங்கூட ௨௭௨
ஒத்திருந்துநல்லறிவு வோதுகின்றவேளையிலே
கத்துங்கடற்போர் கலந்திருக்கும்வேளையிலே ௨௭௩
தூதனுமங்கோடிவந்து தாயதிருமுன்னில்நின்று
காதலுடனேசுங் கபிநெருலேபணிந்து ௨௭௪
கைகட்டியோரிடத்திற் கம்பறக்கத்தோடுகின்றார்
மெய்கெட்டியான வேந்தர்பணிகங்கபிதாம் ௨௭௫
பணிந்துநின்றதூதுவனைப் பார்த்துத்தானேதுரைப்பார்
அணிந்தகலன்மேனியல்லா மஞ்சுவதேன்சொல்லுமென்றார் ௨௭௬
கண்டபுதுமைதனைக்காவலரே சொல்லுதற்கு
மீண்டிடுமிங்கெந்தன்மேனியெல்லா மஞ்சுதென்றார் ௨௭௭
அஞ்சாதேசொல்லுமென்றங் கருளினார்சிங்கபிதாம்
பஞ்சமாபாதகனோர்பாரமலை போலுயரம் ௨௭௮
எழுகடற்போலே ஏகபடையுடனே
சூழும்படையுடனே தோன்றியேவாரானே ௨௭௯
இந்தப்படைதனக்கே இங்கொருவர் தங்கரிது
அந்தப்படையைக்கண்டா லாருந்தரியாரே ௨௮௰
மக்கம்பிழைத்திடுமோ மாமதினந்தங்கிடுமோ
கக்கனருள்ளப்படியோ கபிபெயெனவுரைத்தார் ௨௮௧
அந்தாத்தைக்கொட்டுகிற்கு தங்குவருவோன்சிரசு
இந்தப்படைக்கங்கே யெவர்பிழைப்பாரென்றுரைத்தார் ௨௮௨
அந்தமொழிகேட்டே யறைவார்கபியிறசூல்
முந்தவிட்டவோலையிவன் மூடனிபுனியன்காண் ௨௮௩
வந்ததுபோலாகுதென வள்ளலிறசூலுரைத்தார்
சொந்தமொழிகேட்டவுடன் சூழ்ந்தஅசுகாபிகள் ௨௮௪
சிந்தைதிடுக்கிட்டு மறுசெய்தியொன்றுஞ்சொல்லாமல்
அந்தமுட்டனேயவர்பாட்டிலே யிருந்தார் ௨௮௫
கலங்கியிருக்குமதைக் கண்டோர்கபியிறசூல்
மலங்கியிருக்குமந்த வலியார்கள்தம்முடனே ௨௮௬
தொழுதுதுவாவாங்கித் துய்யநபியேதுரைப்பார்
பழுதில்லாவெல்லோரும் பண்பார்மனேபுகுந்து ௨௮௭

காளைத்தினத்திங்ஙன் னன்றாகவெல்லோரும்
கோளையின்றிவாருமெனக் கோமாலையுரைத்தார் ௨௮௮
அங்கவாதுபோலவரவர் மனைபுகுந்தார்
பங்கமில்லாநால்வரும் பண்பார்மனைபுகுந்தார் ௨௮௯
கபியுமவர்கள்மனை னன்றாகச்சென்றனரே
குவியும்பொழுதுதிக்கக கூண்டபஜிரெருக்கத்தில் ௨௯௰
வந்துதொழுதிருந்தார் வண்மைமயிலைச்சூழ்ந்து
இந்துமுகத்தாரிருக்கின்றபோதினிலே ௨௯௧
வந்தங்கியுனியந்தன் மதினத்தைத்தான்வளைந்தான்
அந்தநகர மதைச்சேர்ந்திருக்குமிடம் ௨௯௨
எண்பதின்காதவழி வேகமாய்நாலுதிக்கும்
கண்படைத்தோர்காணரிது கனத்தவல்வன்படைதான் ௨௯௩
கட்டுமட்டாய்த்தானிறங்கிக் கனமேளவாத்தியங்கள்
திட்டன்முழக்கினது சொல்லுமிடிபோல்முழங்கும் ௨௯௪
கடற்போல்முழக்கிநின்றான் காதவடைக்குபக்கமெல்லாம்
உடற்போனபேர்களைப்போலோடினார்மதினமுள்ளோர் ௨௯௫
அந்தத்தருவாயி லாலகமியென்சொல்லுவார்
இந்தப்படைதனக்கிங்கேனச்சமுங்களுக்கு ௨௯௬
பயந்திருக்கவேண்டாநீர் பாருமொருநினைவாய்
நயந்திருக்குமிப்படைக்கு நாமெல்நதோமனுக்கால் ௨௯௭
நாமெழுந்துவிடு நாயனுக்குமேறாது
தேடுந்திரவியமுஞ் சேந்தமனைபெண்டுபிள்ளை ௨௯௮
சாகும்பொழுதிதுகள் தானென்றும்வாராது
மேகம்போல்வரும்படையைவெட்டினும்வென்றக்கால் ௨௯௯
சொர்க்ககர்கிடைக்குந் தூய்யவனுக்கேயுவக்கும்
துக்கமறஇப்படையைச்சேராமல் வென்றீரால் ௩௱
அன்பாகச்சொர்க்கமுமக் கேகப்படுங்காணென்றுரைத்து
இன்பாகஇப்படையை இலேசாகவெண்ணிமிங்கள் ௩௱௧
அல்லாவுரைப்படியே யானதூரேவிட்டோம்
பொல்லாதானிங்கு போர்ப்படையோடும்வந்தான் ௩௱௨
ஆதியறிவான்காணவிந்தச்செய்தியெல்லாம்
நீதியோநாம்பயந்தால் நித்தனுக்குமேறாது ௩௱௩
என்றைக்குந்தான்மவுத்தின் தாரு மிருப்பதுண்டோ
அன்றைக்குமோட்சமென்னு மழகல்லோவேண்டியது ௩௱௪
ஓடிநீர்போகவென்று லோடவழிஎங்குமில்லை
நாடிநீரெல்லோருநன்று யொருமனதாய் ௩௱௫
ஆயுதங்களைத்தானணிந்திங்கே வாருமென்றார்
பாயும்புலியனையப்பண்பாகவே கூவி ௩௱௬
உங்கள்மனைபுகுந்தங் குங்கள்திருத்தேவியர்பால்
தங்குமனச்சம்மதங்கள் தான்கேட்டுவாருமென்றார் ௩௱௭

ஏதென்றுகேட்பதற்கிங் கேதகவற்கூடாது
ஆமென்றகாரியங்க ளாகுமிறையோனருளால் ௱௮
நாயனமக்குதவி நாடோறுந்தந்திடுவான்
ஆயகருமமெல்லா மவனல்லாலாருளது ௱௯
நட்டநயம்வந்தாலு நல்மனைவிக்கேன்வருத்தம்
திட்டமுடனுங்கள் திருத்தேவிசொற்படியே ௱௰
நடந்துகொள்ளுமென்று நபிதாமுரைத்தனரே
தொடர்ந்தமொழிகேட்டேனே துய்யமனையுட்புகுந்தார் ௱௧௧
நாச்சியாருமெழுந்து நாயனவிவையைப்போற்றி
மாட்சிபெறுமெம்மரசே மானிலமெல்லாம்பகையாய் ௱௧௨
வங்கக்கடற்போல வளைந்திருக்குமிப்படைகள்
பங்கப்படுங்காபிர்படையேற் சமுத்திரம்போல் ௱௧௩
வந்திருக்குதிப்போது வாத்தமனைவந்ததென்னே
சந்தாபமென உங்கள்மனந்தானேதுசொல்லுமென்றார். ௱௧௪
இந்தப்படைபோரதற்கிங் கெம்பாவாவேதுசொன்னார்
அந்தப்படிநடவுமரசேயெனவுரைத்தார் ௱௧௫
படைபோகவேண்டுமென்றார் பாவையனைக்கேளுமென்று
விடையருளினார்நபியும் வேறொன்றுஞ்சொல்லாமல் ௱௧௬
தடையில்லாதிங்குவந்தேன் சங்கையுள்ளோன்றன்பாலில்
அடவுடையமாதே யழகாகக்கையேந்தி ௱௧௭
கேளுநந்துவாவதனைக் கெம்பீரத்தோடுநின்று
நீளும்படையயைவெல்ல நேர்துவாச்செய்யுமென்றார் ௱௧௮
பாத்திமாதாம்கேட்டுப் பத்தாவைப்பார்த்துரைப்பார்
மாற்றலரைவெல்வதற்கு மாறார்கள்சொல்வதென்ன ௱௧௯
சித்துவங்களுள்ளமட்டுந் திறஞ்செயயலாகுமென்றார்
சாற்றுமொழிபாத்திமத்துத் தாமுறவலாயுரைத்தார் ௱௨௰
பிரசநறுங்குழலீர் போரானதுங்கள்துவா
உரைசெய்யுமுங்கள்துவா உல்லாசமங்கையரை ௱௨௧
மன்றடிசொர்க்கபதி வாழ்விக்குமென்றவுண்மை
நன்றாகயாவருக்கும் நயமாய்த்தெரியுமென்றார் ௱௨௨
கணவனுரைத்தவுடன் காரிகையாரேதுரைப்பார்
மணமானதின்றிரவில் மாட்சியுடனோர்கனவு ௱௨௩
ஆதிபதிவித்தான்காணாய்கேச யுரைப்பார்க்கில்
நீதியுள்ளவென்கனவ தின்களுக்குவெற்றியுண்டும் ௱௨௪
தாட்டிகத்தினற்புலியே தான்சிறிதுதன்பமுண்டும்
எட்டிலடங்காத இறையோனுமைக்காப்பான் ௱௨௫
வானவர்தஞ்சொற்படியேவள்ளலேநீர்கேளும்
நானமுள்ளீரென்றார் நாயனவிதாமகிழ்ந்தார் ௱௨௬
காவலருடன்பின்னுங்கவலுவார்பாத்திமுத்து
பாவரும்போற்றும் பாக்கியரேஎம்மரசே ௱௨௭

துணையானவெம்பாவா சொன்னதுபோல்நீர்சேரும்
மணமாரும்எம்பாவா மாட்சியுடனேயிருக்க ௱௨௮
ஆதியருள்பெற்ற அபூபக்கரும்மிருக்க
நீதியுமருதுமா னிங்களுமேதானிருக்க ௱௨௯
அசுகாபிமார்களனைவோருந்தாமிருக்க
ஓசுவாகவென்னிடத்தி லுந்திதுவாக்கேட்கவந்தீர் ௱௩௰
சற்றேசரசமொழிசாற்றினர்பாத்திமுத்து
கத்தனலிப்புலியார் காரிகையினோடுரைப்பார் ௱௩௧
ஆண்ணப்பிறந்தவருக் காலமமென்றுரட்டம்
கோணாதமாதருக்குக் கோதாயுமென்றுரட்டம் ௱௩௨
திபத்தையேற்றிவைத்தாற்றீண்டுகுச்சில்தான்வேண்டும்
ஆபத்துவாரமலாதியிடங்களுமென்றார் ௱௩௩
சொன்னவுடன்பாத்திமுத்துத் துய்யோனைத்தானினைந்து
பின்னமில்லானைப் பிரியமாய்த்தான்றொழுது ௱௩௪
கையையெடுத்தேந்திக் காரிகையாரோதுரைப்பார்
ஐயமில்லாதென்புருடர்க் கன்பாகவெற்றிகொடு ௱௩௫
வந்தபடையைவெல்ல வல்லோனேநீயுதவு
இந்தப்படையெப்போதுமேகனேகண்டதில்லை ௱௩௬
சத்திபலநீகொடுப்பாய்சாற்றுங்காபிர் தன்னைவெல்ல
வெற்றிதனைக்கொடுத்து வேதனேகாப்பையென்றார் ௱௩௭
அறத்தவாயி லாதிமலக்கோர்களெல்லாம்
பாத்திமாகேட்குந்துவாய் பார்த்திபனேநீகொடுப்பாய் ௱௩௮
சாத்தருள்நீகத்தாவே காரணனேயப்பதியில்
சித்துவமாகவந்த செய்யிதுறசூலும்மத்தில் ௱௩௯
மூவலகும்போற்றுமுகம்மதுவின்சேய்
தவ்வுதல்லாத சங்கைராவுத்தப்பிள்ளை ௱௪௰
சட்டமுடனுவந்த சகலவுறமுறையு
மிட்டமுடன்வாழ்ந்திருக்க வேகனேநீயருட்செய் ௱௪௧
ஆலமிமகளா ரன்றிராக்கண்டகளு
சாலப்புகழ்நபிபாற் சாற்றினரேபுகழ்ந்து ௱௪௨
ஆங்கருமங்கேள்மகளே யல்லாவுதவியுண்டும்
வாங்குசொல்லுமோதினுடன் வல்லநபிதாமுரைத்தார் ௱௪௩
நீங்காதவர்தாம்நீதி நபியைப்பணிந்து
பாங்காகஅந்தபிலாற் பகர்ந்தார்தெருவெங்கிலும் ௱௪௪
கூறியசொற்கேட்டவுடன் கூண்டஅசுகாபிகளும்
மீறியவாயுதங்கள் மேன்மையுடனேயணிந்து ௱௪௫
வந்தார்நபியிடத்தில் வள்ளல்நால்பேருடனும்
கொந்தாலராலநபி கூடும்படையோடிருந்து ௱௨௪
ஈமானுடையவர்கள் யாவருக்குமாளனுப்பச்
சிமானபியிடத்திற் சேர்ந்தார்படைவீரர் ௱௪௬

என்னொருபத்தாயிரம்பேர் ஏற்றவர்கள்வாம்பரியும்
திண்ணமுள்ளராஜாக்கள் சேர்ந்தார்களேவெகுபேர் ௧௪௮
நல்லஅசுகாரிகள் நாற்பத்திராயிரரும்
எல்லவருந்தளபதியை இன்பமுடனேசேர்ந்தார் ௧௪௯
அந்தந்தராவாயி லாலகபியேதுணைப்பார்
இந்தொத்தஆலகபி யின்பமுயிலொத்தாதை ௧௫௰
போருக்குமுந்தவன்பாற் போயொருசொல்நீர்கேளும்
நேருக்குநேரான நிச்சயமாமார்க்கத்தனில் ௧௫௧
ஈமாணிலேவருக இயம்புமென்றேநிறைந்த
பூமானுரைத்திடவே பொங்கமுளகற்றூதர் ௧௫௨
செல்வர்குடைபிதற் சீர்பாதமேபணிந்து
நில்லாதுசென்றார் நீசனிபுனியன்பால் ௧௫௩
கண்டாரவனைக் கைகளெல்லாம்பறக்கத்
கொண்டார்மனத்திலச்சங் கொடுமதிதான்மாறி ௧௫௪
விண்டலமெல்லாந்தொழுமே வேண்டாதகாய்தலை
இன்றிவன்பாற்பேசமட் கேதுநிடமென்றுநின்றார் ௧௫௫
கண்டாணிபுனியந்தன் கற்றனபிதூதனைத்தான்
விண்டாணிவடம்வந்த வேற்றுள்நீயாரெனவே ௧௫௬
தொண்டாநீசொல்லெனவே சூமனவன்கேட்டிடவே
இன்றிவனேடேபுலாக்க வேகாவருட்செயென்று ௧௫௭
ஆலநபிதூதனியான் ஆங்கருமஞ்சொல்லவந்தேன்
சாலவேயாங்கருமந் தாமேனதுசொல்லுமென்றான் ௧௫௮
எங்களுடதினிப்போ எங்கள்நபியுந்தனேயும்
பொங்குகடல்போலிருக்கும் புத்திகெட்டமாந்தரையும் ௧௫௯
கலிமாமொழிகவெனக் கட்டுரைத்தாரெங்கள்நபி
சலியாதிங்கெங்களுட தயவுள்ளதினதில்லா ௧௬௰
சிக்கிரத்திலேகல்மாச் செப்பென்றவருரைத்தார்
தாக்கியவர்சொல்லுமொழி தான்கேட்டிபுனியந்தன் ௧௬௧
எதிட்டுத்தான்பார்த்தா னிரண்டுகண்ணுந்தீயெரியக்
கூறிட்டுப்போடுவன்யான் கொண்டதூதாகையினால் ௧௬௨
ஒன்றுநான்சொல்வதில்லை யுங்கள்நபிதம்மிடம்போய்
இன்றுவராச்சொல்நீ எனபதக்கிலேபணிந்து ௧௬௩
நன்றுஎங்கள்சாமிதனை நாட்டமுடன்கையெடுத்து
நின்றுபணியநீதா னிப்போதுசென்று ௧௬௪
கூட்டிவருவாய்நீ கூட்டிவராதேபோனால்
நாட்டையழித்தவனை நன்னபியைத்தான்பிடித்து ௧௬௫
காகம்பருந்தினுக்குக் காட்டாய்விருந்திடுவேன்
தாகமுடனேசிறையுந் தப்பாமலேபிடிப்பேன் ௧௬௬
நில்லாதேபோவெனவே நீசன்வகைசொல்லினனே
பொல்லாதபாவிபுகன்ற தெல்லாந்தான்கேட்டு ௧௬௭

கல்லாதபாவியிடம் கழறினர்கபீதூதர்
அல்லாவின்தூதர் அருமதிறகுல்கபியை ௧௬௮
பொல்லாங்குசொன்னாயே புத்திகெட்டபேப்பயலே
கல்லைதனைக்கும்பிடவுங் கட்டுரைதான்சொன்னாயே ௧௬௯
சொன்னவுந்தனவதனைத் துண்டுதுண்டாய்த்தானரிந்து
வன்னிதனிற்சுட்டிடவும் வாரார்காணெங்கணபி ௧௭௰
நாகம்புகுதுகிறனாளாச்சு துன்றனக்கு
விரகமுடனேதான் வீண்பேச்சுரைத்தனையே ௧௭௧
உன்னிடம்நான்வந்ததெல்லா மோதுகிறேன்நீகேளாய்
நின்னுடையசேனையெல்லா நேசரிவாள்தனக்கு ௧௭௨
இரைபோதுமோவெனவே யிப்போதுபார்க்கவந்தேன்
தரைமீதிலேபுகழார் தருநபிமாதுலராம் ௧௭௩
அதிபாபூபக்கர் அடலுமறுகைவாட்கும்
நிதியுதுமான்வாட்கும் நின்படைத்தான்போதாது ௧௭௪
என்வாளுக்காளுமு யிப்போதுபார்க்கவந்தேன்
உன்படையும்பத்தாதிங் குன்னுடலும்பத்தாது ௧௭௫
கழிகையால்மண்ணெனதிந்தால் காடெங்குமடிவிடும்
புவியிலொழித்திப்போ போய்விடுநீயென்றுரைத்தார் ௧௭௬
தூதருரைத்தவுடன் துட்டனங்கேதுரைப்பான்
நீதம்பார்த்திதென்செயலாம் நின்றவரைத்தான்கூவி ௧௭௭
இங்கிவனைத்தான்பிடித்தே யிங்குகழுப்போடுமென்றான்
அங்கிவிழிதெறிப்ப அங்குரைக்கவேவலர்கள் ௧௭௮
திர்க்கமுடனேசிலபே ரெழுந்தனரே
ஆர்க்கும்பலனுதவா வங்குசவம்போலநின்றார் ௧௭௯
கைகாலுதவாது கண்டங்கிடரியந்தன்
வைதானபியுடைய வஞ்சனைகள்வந்ததென்றே ௧௮௰
தூதர்தனைப்பார்த்தான் தூதராங்குகாணவில்லை
ஏதென்றவன்கலங்கி யெண்ணர்களைத்தானழைத்தான் ௧௮௧
குறிக்காரர்தன்னையெல்லாங் கூட்டிவர ஆள்விடுத்தான்
வெறிகாரன்சொன்னவுடன் வேணகுறிகாரர்வந்தார் ௧௮௨
பதினாயிரம்பேரைப் பண்பாபருகிருந்தி
விதியானதெப்படியோ வேண்டுமின்குறிபார்ப்பெனவே ௧௮௩
கண்டானிபுனியந்தன் கட்டானவேதியரை
விண்டானகொடிகளிட்ட வெற்றிகுறிக்காரர்களே ௧௮௪
வெற்றிபெறுமோர்படைதான் வீரருக்குறியேதெனவே
புத்தியுள்ளவேதியர்கள் பொங்குகுறியேதுரைப்பார் ௧௮௫
எந்தம்பெருமானே யேதுசொல்வோங்கள்குறி
சூத்திரமாக்கமலங் கூடுதில்லையெங்களுக்கு ௧௮௬

கப்புடையதேசமதை நாடியேன்வந்தோமென்றார்
தவியாதகேதியனாந் தாக்காய்ப்பிறனோக்கி ௧௮௭

அஞ்சாதவேதியனே ஆனகுறிகண்டதெல்லாம்
ஒஞ்சாமற்சொல்லுமென ஓதினனேமூடன் ௧௮௮

பஞ்சானபாடேபடும் பாரசேயுஞ்சேனே
கெஞ்சஅடித்திடுவான் கெட்டியல்லியென்றொருவன் ௧௮௯

எண்ணிக்கையற்றமனு விறப்பாரவன்களால்
கண்ணுக்குக்கண்ணான காரானைபட்டுவிழும் ௧௯௰

மண்ணுக்குட்சோரி மடைபாயமேகடற்போல்
திண்ணிக்கைசொன்னவுடன் தீயெனவேகோபமதாய் ௧௯௧

கல்லாதபுல்லன் கசடனிபுனியந்தன்
மல்லர்களைத்தானழைத்து மன்னனவேதியனை ௧௯௨

கொல்லுமெனச்சொன்னான் கொடியஇபுனியந்தன்
சொல்லுங்குறிகாரசெல்லாஞ் சொல்லுவார்வேந்தனுக்கு ௧௯௩

விண்டங்குரைத்திடுவார் வேந்தவேகேளாய்
குண்டகுறிசொன்னக்காற் காவலனேயெம்மரசே ௧௯௪

வண்டந்தனுஞ்செயல்நன்றோ வாழ்ந்திருப்பாய்நீயரசே
திண்டுமிண்டில்லாத திரளாருநல்வேந்தே ௧௯௫

உன்சமர்தையாரறிவா ருற்றசமர்க்களத்தில்
பின்சமர்த்தைக்கண்டிடலாம் பேசினதைநீபாரென்றார் ௧௯௬

அப்போபடைத்தலைவ ரானவர்களேதுரைப்பார்
இப்போபொருகளத்தில் எதில்வேதியனைக்கொன்றால் ௧௯௭

தோசம்வருமல்லாமற் சூழ்பழிமுன்னுகாது
நீசனதுகேட்டவுடனீளகோபமாகினனே ௧௯௮

ஆலகபிதாகனைத்தா னனேவோரும்பார்த்துநின்றார்
நீலனிபுனியன்முன் னின்றார்நபிநாதர் ௧௯௯

காலிதிபுனுவொலீதைக் கண்டானிபுனியந்தன்
சோலியென்றம்பன்னுமற் சொன்னானவர்தமக்கு ௨௱

காயக்கமாகவென் காலுதொழித்துநின்றாய்
மாயப்பொடிக்கார மூகம்மதுவைத்தானல்லை ௨௱௧

ஆளைப்போலிங்குவா வழைத்துவாநீபோடா
நாளைப்போர்வாராட்டால் நாணைந்துவந்திடுவேன் ௨௱௨

சீக்கிரத்தில்வந்திடப்போய்ச் செப்பென்றவனுரைத்தான்
தாக்கமுறுந்நூதுவருந்தானங் கிதுவுரைத்தார் ௨௱௩

வேண்டாமழியாதே நெக்ராகின்செங்காயே
ஏண்டாவுன்புத்தியெல்லா மெங்குவிட்டிங்குவந்தாய் ௨௱௪

உன்னைபோல்ராஜாக்க ளுலகிலெங்குங்கிட்டார்கள்
பொன்னைப்போலுன்னுயிரைப் போற்றிக்கொள்ளீரசே ௪௱௫

கல்லாங்கைத்தேடி நற்கதியிலேசேரு
பொல்லாங்குசெய்யாதே போய்நரகில்வீழாதே ௪௱௬

அல்லாவின் தூதர் அடிபணிநீசொர்க்கமுண்டும்
இல்லாதுபோனக்கா லின்றழியுமுன்சேனை ௪௱௭

உறுதிநான்சொன்ன தெல்லாமுன்னினைவையும்பாரு
பொருதியாயென்று சொல்லிப்போனார்நபிதிருமுன் ௪௱௮

சென்றுநபிதாள்பணிந்து செப்பினார் தூதுவரும்
கன்றுநபிநாயகமே நானெங்குங்கண்டதில்லை ௪௱௯

நீனில்வரமாட்டான் சேனையெழுகடற்போல்
மாநிலமெல்லாம்பரவி வழியிதேநந்நபியே ௪௱௰

விண்ணவர்களும் பயந்துமேனிதிடுக்கிடுவார்
மண்ணவர்கள்கண்டால் மடிவார்களேயுடனே ௪௱௰௧

சொல்லப்படாதமொழி சொன்னனிபுளியக்தன்
வெல்லப்படாதவனை வேதனினைவெப்படியோ ௪௱௰௨

சொன்னமொழிகேட்டுத் துணிக்கினாரங்கிருந்தோர்
மன்னசிறகுலு மனமகிழ்ந்துபள்ளியிலே ௪௱௰௩

அசுகாபிமாருடனு மானநல்லபேருடனும்
ஒசுவாகவேதொழுதன் குத்தவைத்தான்வாங்கி ௪௱௰௪

அடிபக்கரைமழைத்தங் காலநபியேதுசொல்வார்
கபுலத்துவைக்காதீர் காபிர்களைவெல்வதற்கு ௪௱௰௫

ஆலநபியுரைத்து ஆனநல்லபள்ளியில்ல
சாலவயவர்தம்முட்டனே படைத்தலைவர் ௪௱௰௬

உத்தந்துணையான ஒலிதிபுனுமுக்தாறும்
சுத்தமுள்ளகாலிதிபுனு வொலீதும் ௪௱௰௭

சற்றுங்கலங்காத தகிய்யத்துக்கல்வியரும்
மற்றுங்கொவ்வாத மன்சல்மான்பாரிசுவும் ௪௱௰௮

வல்லபெலமுள்ள வாணரிபுனுதாபித்தும்
நல்லகுணமுள்ள நாதரிபுனுமாலிக்கும் ௪௱௰௯

அன்பனெனவந்த அப்துற்றகுமானும்
இன்பமெனவந்த வெழிசல்மான்என்பவரும் ௪௱௨௰

அட்டதிசைபோற்று மப்துற்றகீமாவும்
திட்டமுடன்வெட்டுந் தீராபூசாவும் ௪௱௨௰௧

பத்துத்தலைவர் பண்பபூபக்கருடன்
கொத்துக்குடையுங் கொடிகள்பத்துந்தான்கொடுத்து ௪௱௨௰௨

வெற்றிக்கொடியொன்று வேதரூபக்கர்க்கீந்து
உற்றதிறமுள்ள வொன்னலரைக்கொல்வதற்கு சஉங

மோறுபடைக்குதிரை முப்பதினாயிரமும்
ஓதும்புறவாசர் உண்மைதவறாதவராய் சஉச

முடிதரித்தராசாக்கள் முப்பத்தமூவாயிரரும்
அடிதுணியுங்கூட்ட மறுபதினாயிரமாம் சஉரு

கொடிவிருதுபேரிகையுங் கூடியேமுன்னதிர
துடியாகவெங்குஞ் சேதிக்கக்கைவாள்கள் சஉசா

வலமாகச்செல்லுமென வள்ளல்நபிதாமுரைத்துக்
கலனணிந்தவெற்றியுமர் கத்தாபைத்தானழைத்து சஉஎ

சற்றுநெறியாமற்றான்படைக்குச்செல்லுமென
மறும்படைத்தலைவர் மாலிக்கிபுனுசின்னார் சஉஅ

சிங்கமென்னங்க திறலிபுனுஅப்பாசும்
பங்கங்களில்லாமற்பாருலகெல்லாமறிய சஉகூ

பந்தயங்கள்போட்டுவெட்டும் பண்பானமாலிக்கும்
சந்தாபமில்லாத சுமீமன்சாரியரும் சஙய

சிங்கமெனப்பாயுஞ் சீரிபுனுமன்சூறும்
எங்கும்ப்ரசங்கமியம்புந்திருமதியார் சஙக

ஆன்போற்கொடையுதவு மபூகுறைறாவவரும்
நாணகொண்டடல்பொருதும்நல்லிபுனுசையாது சஙஉ

சத்திமிகவுள்ள சைதிபுனிமாலிக்கும்
தத்தும்படைவெட்டுகின்ற சைதிபுனுதாபித்து சஙங

ஆகும்படைத்தலைவ ராமிவர்பத்துப்பேரும்
ஏகுமெனக்கொடியு மின்பமுடன்பத்தளித்து சஙச

குதிரையொன்பதாயிரந்தான் குதிகுதித்துமுன்னடக்
முதிருமுடிமன்னவர்கள் முப்பத்துமூவாயிரரும் சஙரு

ஆதியருளா லறுபதினாயிரரோ
டோதுமுமரு முவப்பாகவேமகிழ சஙசா

வீரமுரசும் விருதுகொடியுக்கொடுத்து
சூரமுடன்செல்லுந் தோன்றுமிடப்பாலிலென சஙஎ

இடங்கையிற்சொல்லுமென இன்பநபிதாமுரைத்தார்
திடங்கொளும்தென்னுந்தீரர்மிகமகிழ்ந்தார் சஙஅ

உதுமான்தமைபழைத்தங் கோதுவாரசூலநபி
சதுமாமறையறிந்தோய் சாருநீரிப்படைக்கு சஙகூ

ஆமெனவேகூடவனுப்பும் படைத்தலைவர்
தாமதமில்லாதுவெட்டுஞ் சங்கையுள்ளசானுநும் சசய

அத்தனருட்பெற்ற அன்கவுதல்தவ்வாபும்
உற்றதுணையான உபைநத்துசனாகும் ௪௪௧

எத்தலமுந்தான்போற்றும் இபுனுபசிருனவரும்
பற்றலனைவெற்றிசெயும் பண்பினுயாதாமும் ௪௪௨

சடையாமல்வெட்டுகின்ற சங்கைமிபுனுஆதம்
படைக்குச்சடையாத பண்பான இபுனுசலாம் ௪௪௩

நடுக்கமொடுமாற்றலர்களோடோடமஞ்சிடவே
அடக்கிப்படைவெட்டும் ஆமிரிபுனுவசாமீயும் ௪௪௪

தகைமையுள்ளபோர்களிலே சங்கைமிகவுள்ளவராம்
இகல்கெடுவாட்சுழட்டும் இபுனுஅகுமதுவும் ௪௪௫

மற்கட்டும்போரில் மருவலரைத்தானடித்துத்
தற்கமிட்டுவெட்டுஞ்சகலகுணசைதிபுனும் ௪௪௬

படைத்தலைவர்பார்த்துமெய்க்கும் பாங்கருதுமானுடனே
கிடைக்குங்கொடிபத்துநல்ல கெம்பீரமாயளித்து ௪௪௭

முத்துமணிபோற்குதிரை மூவொன்பதாயிரமும்
முத்திபெற்றராசாக்கள் முப்பத்துமூவாயிரவர் ௪௪௮

அஞ்சாதகூட்ட மறபதினாயிரம்பேர்
ஒஞ்சாதுசொல்ல உதுமானுடன்கூடி ௪௪௯

சங்கையுள்ளவெற்றிக்கொடி தானுதுமானுக்களித்து
எங்குமிராசங்கமுள்ள யிறகூல்முகம்மதுவும் ௪௫௰

பின்னணியாய்வெட்டுமெனப் பெற்றியுடனேயுரைத்து
நன்னயத்திரேடேகூடத்திலைவைத்தாரப்போது ௪௫௧

தாங்கும்படைக்குத் தாங்களுமேபோகவென்று
நீங்காநபிக்குவந்து நீதிஅசனாரும் ௪௫௨

பாங்கானநீதிபெறும்பண்பாருசைனாரும்
வேங்கையைப்போல்நின்று விளம்பினாரப்போது ௪௫௩

மன்னவர்கள்மன்னன் மாலிக்குகபீபென்பவரும்
எங்கிலமும்போற்றும் இயல்கச்சசென்பவரும் ௪௫௪

அமுதமொழியான ஆதியருள்அப்பாசும்
திமிதிமென வாளிவிடுஞ்செல்வர்அமுசாவும் ௪௫௫

மாற்றலரையஞ்சவெட்டு மன்னர்அகுதாவும்
ஏற்றவரைக்கைதூக்கு மேந்தல்மூறுதியரும் ௪௫௬

சாற்றரியகீர்த்திபெருஞ் சங்கையபுதுல்லாவும்
காத்திரட்புகிக்குங் கடவுளின்பேராலே ௪௫௭

இல்லாதவர்க்குதவு மேந்தல்உசாமாவும்
உல்லாசமாகவளர் உவைசுல்கறணியரும் ௪௫௮

உற்றதிஞனவர்க்கேயு தவிசகுல் மன்னவரும்
மற்றப்ர மத்கரொனுமுகம்மதனிபாவும் ௪௫௯

வாளும்படைத்தலைவர் வாழ்த்தும்பதின்மூவருடன்
மூன்கொடிபன்னிசண்கிம் வண்மையுடனேகொடுத்து ௪௬௰

ளுமசகாபியர்கள் நாற்பத்திராயிரரும்
சூழம்புகழுஞ் சுகமுமிகப்பெருகும் ௪௬௧

கோமானபியுடனே கூடுகின்றபேர்ணியாய்ச்
சீமான்அலிதமையுஞ் செப்பிதுறகுல்கூலி ௪௬௨

சீமான்தனத்தினரோ சேர்ந்தபடைவெட்டுமெனத்
தாமிதமில்லாமற்றவ்வியே பாய்ந்துலவி ௪௬௩

நூழங்குகிளையது தோன்றமூவாயிரமும்
ஆளுகின்றராசாக்களயிரம்பேர் தம்முடனே ௪௬௪

எல்லோரையும்பாத்தங் கேந்தல்நபிதாமுரைத்தார்
பொல்லாக்கடுங்காபிர் போதனிலேபோனக்கால் ௪௬௫

முன்வைத்தகாலதனை மோசம்பின்வாங்காமல்
பின்வைக்கவேண்டாம்நீர்பேறுபெறுவீர்களென்றும் ௪௬௬

தங்கள்தங்கள் தன்னிற்றான்மனதுவையுமென்றும்
திங்கள்நபிசொன்னவுடன் சித்தமெனவேயுவந்து ௪௬௭

சென்றார்படைதனக்குச் சீமானலியாரும்
நன்றாகமுன்னிலையில் நாடும்படைபோக ௪௬௮

கம்பர்தனையழையுங் கடிதாகவேயழைத்து
இன்பமுள்ள துல்துலதையென்னிடத்திற்றந்திடென்றார் ௪௬௯

என்றவுடன்கம்பர் எழிலாருந்துல்துலுக்குத்
துன்றும்ரத்னக்கல்லணையைத் தூக்கிமுதுகிலிட்டு ௪௭௰

குசையின்மணியணிந்து கூர்காலிற்றண்டையிட்டங்
கிசையப்பணியணிந்தே இன்பமுறக்குச்சணிந்து ௪௭௧

கல்லணையிற்குஞ்சங்களுங் கடிவாளந்தான்பூட்டி
வெல்லவெனவாம்பரியை விட்டாரல்ருதிமுன் ௪௭௨

விட்டவுடன்வம்பாரிமேல் வெற்றியலிதானேறிச்
சட்டமுடன்வீரபட்டந் தன்னையெடுத்தணிந்து ௪௭௩

திட்டமுடன்துல்புக்காற் செங்கரத்திற்றானேந்தி
அட்டதிசையோர்கள் அநுதினமுமெய்க்கும்படி ௪௭௪

முக்காலமும்பணியும் முன்னிபிமானோடு
எக்காலமுள்ள இறைவனபிமுன்புவந்து ௪௭௫

அந்தமுடனபிக்கங் கன்பாகத்தாழ்ச்சிசெய்து
எந்தனக்கிங்குத்தரவு இப்போதுதாருமென்றார் ௪௭௬

சொந்தமெனவந்ததூவாவருணர்நபிதாம்
சிந்தைமகிழ்ந்தலியார் திருவிதைமைத்தான்தொழுதார் ௪௭௭

கொண்டற்குடையார் குதாயலியுன்காவலென்றார்
தண்டாயுதமெடுத்துத் தான்கம்பர்பின்வரவே ௪௭௮

பத்துக்கொடியலிமூன் பண்பாகவேபிடிக்கச்
சத்துருக்கலங்காமற்றான் அலியுஞ்சென்றனரே ௪௭௯

ஆலநபிபேரணியிலன்பாகச்சென்றனரே
சாலவேயார்களவர் தன்னணியிற்சென்றனரே ௪௮௰

வானவர்களாலநபி மலரப்பதத்தைப்போற்றிசெயத்
தீனவர்களெல்லாஞ் செறிவாகப்போற்றிவர ௪௮௧

நாலணியாய்த்தான்படைகள் நான்குதிக்குஞ்சூழ்ந்துவரக்
காலணியுந்தூசியதாற் கண்டதில்லைச்சூரியனை ௪௮௨

மாற்றான்படையருகேமன்னபியும் போய்ச்சேரப்
பார்த்தானிபுனியந்தன் பாரமலைபோலெழும்பி ௪௮௩

முப்பத்துமூக்கோடி மூவர்களைத்தான்முடிமேற்
செப்பத்துடனணிந்து சேர்வேழமேறினனே ௪௮௪

ஒப்பத்துடனவனை யுண்மைநபிகண்டனரே
செப்பமுடியாத தீயவினியவனை ௪௮௫

கண்டுதிருவாயால் ஹக்கனபியேதுரைப்பார்
என்றுமுள்ளோனைப்புகழ்ந்தே யேகனபிதான்வாக்கால் ௪௮௬

சுபுதானல்லாகுவெனத் துய்யகலிமாவுரைத்து
சபுருகநின்றார்கள் சாற்றுமந்தவேளையிலே ௪௮௭

வேழத்தின்ராசர்களும் வெம்பரியின்வேந்தர்களும்
காளங்கள்தான்முழங்க காலாட்பெரும்படையும் ௪௮௮

தேர்வேந்தரெல்லோருஞ் சேரவெழுந்தேயணியாய்
ஆரவேதானெழுந்துங் கப்படையிலுள்ளவர்கள் ௪௮௯

வந்துவளைந்தார்கள்வள்ளல்நபிதம்படையைக்
கொந்துலவும்ஆலநபி கூடும்படைதான்பயந்து ௪௯௰

ஆதியேயெங்களைக்காரல்லாவுன்தஞ்சமென்றார்
மாதிரங்களெட்டுமொன்றாய் மட்டிட்டுச்சேர்த்தாப்போல் ௪௯௧

காபிரிபுனியந்தன் கனத்தபடையுள்ளதெல்லாம்
தாபாமாயேழுசத்த் சாகரம்போலேவளைத்தான் ௪௯௨

வந்ததுபிர்ப்படைஞர்மதிக்காமற்சண்டைசெய்தார்
இந்தவிதங்கண்டவிறகூல்படையவர்கள் ௪௯௩

நான்குதிக்குந்தான்வளைந்து நாய்நரிகள்தின்னும்படி
வான்தெறிக்கு மின்னெனவேவாள்வீசிக்காபிர்களை ௪௯௪

வெட்டினார்வாள்வேல் வகைகள்பலவாகும்
திட்டமுடனங்குவந்த திருட்டுக்குபிரேசர்மயங்கி ௪௯௫

இருவர்படைக்காற்றா னெப்பொழுதைக்காணுதங்
கொருவர்படையொருவ ருற்றுணர்ந்து தானறியார் ௪௯௬

வெட்டொன்றுகண்டமிரண்டாய் விழுந்தார்கள்பூமியிலே
அட்டர்மலங்கிவெகு தண்டமதாய்த்தான்விழுந்தார் ௪௯௭

தண்டாயுதத்தலைவர் தண்டமெடுத்தேயடித்தார்
கொண்டாடிவாட்படைகள் கொக்கரித்துவெட்டினரே ௪௯௮

நன்றாகவேலெறிவார் நாடிவிருபடையும்
துன்றுங்குபிரர்படை தூளாகிப்போயிடவே ௪௯௯

விற்பூட்டிவாளி விரைவாகத்தானெறிவார்
கற்பூட்டிக்கையிற் கவணுமிகவேயெறிவார் ௫௱

சக்கராயுதமெறிவார் சாடுவார்கேசிசங்கள்
உக்கிரகட்டாரிகொண்டங் கோங்கியேகுத்திடுவார் ௫௱௧

பட்டையங்களெல்லாம் பளீர்ப்பளீரென்றேதுலங்கத்
தொட்ட இருளுமின்னுக் தோன்றியபோலத்தோணும் ௫௱௨

இரும்புத்தடியேந்தியங் கிடிபோற்குரல்முழக்கிக்
கரும்பிட்டஆலையென்னக் கண்டங்கண்டமாக்கிடுவார் ௫௱௩

வானந்தெரியாது வன்தூசியினாலிருண்டு
தானமுடன்தங்கள்படை தானறியார்க்குமிங்கும் ௫௱௪

ஒருவர்படையொருவ ரொன்றையொன்றைத்தானறியார்
இருபர்படையுமெதிர்க்கசங்கமர்பொருதார் ௫௱௫

கைதெறித்துவீழ்வாருங் கால்தெறித்துவீழ்வாரும்
மெய்தெறித்துவீழ்வாரும் வெல்தெறித்துவீழ்வாரும் ௫௱௬

கண்டமிரண்டாய்க் கலங்கியேவீழ்வாரும்
துண்டம்படவே துடிதுடித்துவீழ்வாரும் ௫௱௭

வாயைப்பிளந்தங்கு மலந்துகிடப்பாரும்
காயத்துயிர்விட்டுக் கரைந்துகிடப்பாரும் ௫௱௮

மேனிதுடியாமல் மேதினியில்வீழ்வாரும்
பாணிபாணியென்று பதைபதைத்துவீழ்வாரும் ௫௱௯

பட்டாவுங்கையும் பதைத்துக்கிடப்பாரும்
கட்டானவேல்பிடித்துக் கையற்றுவீழ்வாரும் ௫௱௰

தலையிலிட்டபாகோடே தாளற்றுவீழ்வாரும்
உலையின்மெழுகதுபோல் உருகிக்கிடப்பாரும் ௫௧௧

மலைபோற்றலைகளற்றுமாண்டுகிடப்பாரும்
நிலைகளற்றுமாமரம்போல் நீளவிழுவாரும் ௫௧௨

பல்லைக்கடித்தாப்போற் பட்டுக்கிடப்பாரும்
வில்லைப்பிடித்தாப்போல் வீழ்ந்துகிடப்பாரும் ௫௧௩

மனையாளைத்தானினைந்து மாண்டுகிடப்பாரும்
பனைபோலேசாய்ந்து பட்டுக்கிடைப்பாரும் ௫௧௪

மக்களொடுமாடமெண்ணி மாண்டுகிடப்பாரும்
ஒக்கவேதான்பிணத்தோ டொளித்துக்கிடப்பாரும் ௫௧௫

அம்புதொட்டகையோடே யற்றுக்கிடப்பாரும்
கும்பிட்டகையோடே குடற்சரிந்துகிடப்பாரும் ௫௧௬

கேடகத்தின்கையோடோ கெட்டுக்கிடப்பாரும்
ஆடையுடனாபரண மற்றுக்கிடப்பாரும் ௫௧௭

கவண்பிடித்தகையோடே கவிழ்ந்துகிடப்பாரும்
எவன்போய்விடுவமென வெங்கிக்கிடப்பாரும் ௫௧௮

தலையின்விதியென்றே தான்றெறிந்துவீழ்வாரும்
மலைபோற்புயமறுந்து மாண்டேகிடப்பாரும் ௫௧௯

சக்கராயுதங்கள் தானற்றுவீழ்வாரும்
உக்கிரமாய்ப்பேசி யுருண்டேகிடப்பாரும் ௫௨௰

கட்டாணிதான்பிடித்துக் கையற்றுவீழ்வாரும்
கொட்டாவிவிட்டாப்போற் கூவென்றுவீழ்வாரும் ௫௨௧

கொடியோடுகைதெறித்துக் குப்புறவேவீழ்வாரும்
அடியோடுமாலவட்ட மங்கையொடுவீழ்வாரும் ௫௨௨

கொடிபிடித்தகையோடே குவலயத்தில்வீழ்வாரும்
தொடையானதுதெறித்துத் துண்டுபடுவாரும் ௫௨௩

பூரியலுங்கையும் புரண்டேகிடப்பாரும்
வீரியமெல்லாமிழந்து விழுந்துகிடப்பாரும் ௫௨௪

கருங்கொம்புதான்தெறித்துக் கையோடேவீழ்வாரும்
வருவிதியையெண்ணமல் மலந்துகிடப்பாரும் ௫௨௫

நகராப்பிடித்தகையும் நாணற்றுவீழ்வாரும்
பகராதவுமையைப்போற் பட்டுக்கிடப்பாரும் ௫௨௬

தம்பட்டத்தோடுந் தலைபற்றுவீழ்வாரும்
எம்பட்டோமென்றங் கிழிவாய்க்கிடப்பாரும் ௫௨௭

பரிசைபிடித்தகையும் பழித்தேகிடப்பாரும்
பிரிசமுடன்வந்தோர் பிணமாய்க்கிடப்பாரும் ௫௨௮

கூளிக்குணவெனவே குப்புறவேவீழ்வாரும்
ஆழிக்கடலிரத்தத்தாழ்ந்து கிடப்பாரும் ௫௨௯

பாசைசொல்லிவெட்டினவர் பட்டுக்கிடப்பாரும்
வீசையிற்கைதொட்டாப்போல் வீழ்ந்துகிடப்பாரும் ௫௩௰

ஆசைதனைவிட்டே யலமலர்ந்தருள்வாரும்
பாசமொடுவந்தவர்கள் பாடாய்க்கிடப்பாரும் ௫௩௧

பரியோடுதுண்டாகப் பட்டுக்கிடப்பாரும்
கரியோரிதானிழுக்க கைத்துகிடப்பாரும் ௫௩௨

அங்கமெங்குந்தான்வடுவா யலர்ந்தேகிடப்பாரும்
பங்கம்வந்ததென்று பதறியேவிழ்வாரும் ௫௩௩

ஆனையொடுவீழ்ந்தே யலறிக்கிடப்பாரும்
பூனைபோல்வீழ்ந்து புரண்டுகிடப்பாரும் ௫௩௪

சிவிகையொடேதானுந் திரண்டுகிடப்பாரும்
கவிகையொடுகைதான் சுழன்றுகிடப்பாரும் ௫௩௫

முதுகற்றுவிழ்வாரு முகம்மற்றுவிழ்வாரும்
மறுவுறையுந்தோளோடு மாலையொடுவிழ்வாரும் ௫௩௬

தேர்கள்நெருங்கித் தியங்கியேவிழ்வாரும்
கரிடிபோலானையெல்லாம் கையற்றுவிழ்வதுவும் ௫௩௭

சோரிதனிலேமுழக்குந் தோன்றுருடல்மாமலைபோல்
வாரியெனச்சோரி வடிந்துவெள்ளமோடியதே ௫௩௮

எண்ணிக்கையிற்சொல்லரிதங் கெங்குமேமாண்டபடை
நண்ணிப்பொருத்திலே காண்குவிக்குமேபிணமாய் ௫௩௯

மலைபோல்மலைபோல் மாண்டபிணந்தான்குவிய
நிலையாறுமொத்தாறில் நீந்துகமற்றும்யானையெல்லாம் ௫௪௰

தீனோருயிர்கள்சேர்ந்தனவே சொர்க்கமதில்
ஊனோருயிருயி ரொயில்நரகில்வீழ்ந்தனவே ௫௪௧

அலியோடுகம்பனையும் அன்றறுக்கவேண்டுமென
கலியாநிபுனியந்தன் கன்றுகமேலெழுந்தான் ௫௪௨

வந்தலியைத்தாம்வளைந்தார் வாரியெனவந்தபடை
எந்தலிதம்பொருவோ மென்றலியுங்கம்பருந்தான் ௫௪௩

ஆனைப்படைகளெல்லாம் அலியையவந்துதான்வளைந்தார்
சேனைப்படைகளெல்லாஞ் சேரவந்துதான்வளைந்தார் ௫௪௪

வஞ்சகமில்லாதலியார் வல்லோனைத்தானினைந்து
குஞ்சரத்தின்கொம்புகளை கூட்டியலிதாம்பிடிக்க ௫௪௫

சத்தமிட்டுக்குஞ்சரங்கள் தாம்மடிந்ததெண்ணிலையே
மத்தகத்தைத்தானிழந்து மாண்டகரியெண்ணிலையோ ௫௪௬

சந்தசாகரம்போற் றான்வளைந்தசேனைகண்டு
கத்தனருட்பெற்றலியார் கையிலிருக்குகின்ற ௫௪௭

வாளையுறைவிடுத்து வண்மையலிதான்சொலுவார்
ஏழைகளேயுங்களுக்கிங்கிப்போது சொல்லுகிறேன் ௫௪௮

இல்லாருக்குஞ்சினவ ரேழைமனதுள்ளவராம்
எல்லார்பயித்திகம் எாபிலேறோர்களெல்லாம் ௫௪௯

அல்லாவுக்காக அறிந்தேன்காண் ஓடிவிடும்
நில்லாமலோடிவிடும் நின்றால்மதிமோசம் ௫௫௰

ஓடிவிடுமென்றலியு முண்மையுடனேயுரைத்துப்
பேடிகளைப்பார்த்துப் பின்னுமுரைக்கலுற்றார் ௫௫௧

ஈமான்தரிப்படுத்த ஏற்றவடிவாளிதுகாண்
குமானசூரர்களைச் சோரியெனவெட்டியவாள் ௫௫௨

அலியார்க்குவெற்றிவைத்தா னன்பாகத்தந்திடும்வாள்
மலிவானகாபிர்களை மாட்டிவிட்டவாளிதென்று ௫௫௩

வீசினாரலிப்புலியார் மின்வெட்டிஆர்த்தனபோல்
பாசிக்குளத்தவளை பாய்ந்ததுபோல்தல்துலது ௫௫௪

செக்காடிவாறதுபோற் செங்களத்திலேதிரியும்
கொக்காடியேதிரியக் கூறிட்டார்சேனைதனை ௫௫௫

வெட்டினவாய்தோறுது வீறுகநின்றுபின்னும்
திட்டெனவேகீழ்விழுந்தாற் செத்தபிணந்தோறுது ௫௫௬

ஆனைபட்டதெண்ணறியே னரசர்பட்டதெண்ணறியேன்
சேனைபட்டதெண்ணறியேன் தேர்கள்பட்டதெண்ணறியேன் ௫௫௭

வாம்பரிகள்பட்டதொகை வல்லவனுக்கேதெரியும்
தேம்பிவிழுந்தார்கள் திரளானசேனைஜனம் ௫௫௮

தன்னிலேதான்பயந்தே சடையாமனந்துணிந்து
பின்னும்அலிவெட்டியங்கு பிணக்குன்றாய்த்தான்குவித்தார் ௫௫௯

ஆறுகவொத்தமழலாக வோடியதே
மாறுனகாபிரெல்லா மாண்டுவிழுதல்கண்டே ௫௬௰

வந்தாளிபுனியந்தன் வன்மையில்முன்னாலே
கொந்தாருமூலசபி கூட்டப்படையுள்ளதெல்லாம் ௫௬௧

கைகால்நடுநடுங்கிக் கத்தனேகாப்பாயென்றார்
கைகாலிவர்நடுங்கக் கண்டங்கலுயேதுசொல்வார் ௫௬௨

ஓய்யாரமானவரேலுஞ்சாதீர் நீங்களென்றார்
மெய்யாருநல்லலியார் விரைவாகத்தான்திரும்பி ௫௬௩

எதிரிட்டுப்பார்த்தார் இபுனியனையன்னவன்தான்
மாதிட்டவன்காபிர் மாபாவிதன்னுயரம் ௫௬௪

அந்தரத்தைத்தொட்டுநிற்கு மானகொடியோன்சிரசு
பந்தமெனநின்ற படைதனிலேதானெருங்கி ௫௬௫

எட்டுமலையொன்று பிணைந்ததுபோலேயிருக்குந்
துட்டனிபுனியந்தன் சுறுக்காகவப்போது ௫௬௬

பந்தமெனநின்ற படை தனிலேதானெருங்கிக்
குந்தமதையுங் கோரியெடுத்தான்பிறகு ௫௬௭
தொட்டெடுத்தான் தண்டமதை துய்பவலக்கையதனிற்
கட்டுமட்டாகக் கலன்கள்தனையொதுக்கி ௫௬௮
அடித்தான் தண்டாயுதத்தா லானபடைவீரர்களைத்
துடித்தார்படைவீரர் சோர்ந்துவிழுந்தேமடிந்தார் ௫௬௯
அறுபதினாயிரம்பேரான அடியால்மடிந்தார்
தேறுதலையற்றுத் தியங்கினார்மற்றவரும் ௫௭௰
தப்பற்றோன்றாதருடன் சங்கைப்படைத்தலைவர்
செப்பத்துடனின்றோர் சேர்ந்தார்கள்சொர்க்கமதில் ௫௭௧
ஆறுநால்பேரும் அபூபக்கரும்அல்லாமல்
மீறும்படைத்தலைவர்வெற்றியுடனேமடிந்தார் ௫௭௨
ஒக்கமடிந்தார்க ளுண்மையைக்கண்டுசொல்வார்
தர்க்கமிடவேண்டாம்நீர் சாரும்நபியாலியென்றார் ௫௭௩
ஆலமொழிதப்பாமல் ஆலநபியாற்சேர்ந்தார்
கோலிஇபுனியந்தன் கூண்டவிடக்கைதனிலே ௫௭௪
சென்றானிபுனியந்தன் சேரவேதான்பயந்தார்
நின்றான்தண்டாயுதத்தால் நெஞ்சமுன்றுதான்பிடித்தான் ௫௭௫
கொண்டாரிடக்கையிலே கொக்கரித்துவேந்தர்களைத்
தெண்டனிட்டகூட்டமதிற் சேரவிருப்போரில் ௫௭௬
பங்கப்படுந்துண்டாய்ப் படையிலுள்ளவீரியரில்
அங்கமதுநீறுவா ரறுபதினாயிரம்பேர் ௫௭௭
மடிந்துவிழுந்தார்கள் மாவோடுநீறாகத்
தடிந்துமொழிசொல்லாத சங்கைப்படைத்தலைவர் ௫௭௮
ஈரைந்துபேரும் இபலுறுமந்தானெதிர்த்தார்
ஆரல்யார்கண்டதனை ஆனவுமறைக்கூவி ௫௭௯
செல்லும்நபியாலெனவே செப்பினாரலிப்புலிதான்
சொல்லுமொழிப்படியே சொருகுசாரவர்களெல்லாம் ௫௮௰
சென்றார்படைத்தலைவர் சேர்ந்தபத்துப்பேருடனே
வண்டாடினைப்போலவன்னெஞ்சிபுனியந்தன் ௫௮௧
பின்னணிபிற்போய்ப்புகுந்து பேருதுமான்கூட்டமதில்
வன்னியெனச்சுழற்றி வளர்தடியினாலடித்தான் ௫௮௨
மண்டிச்சினந்து மாபாவிதானடித்தான்
அண்டியடிபட்டங் கறுபதாயிரமிறந்தார் ௫௮௩
படைத்தலைவர்பத்துடனும் பண்புதுமனில்லாமல்
அடைக்கும்படைவீரரத்தனையுந்தான்மடிந்தார் ௫௮௪

இறந்ததைக்கண்டலியவர்க்கேத்தக்துமான்தனையும்
அறந்தவழும் ஆலநபியாகுமிடஞ்சாருமென்றார் ௫௮௫

சார்ந்தார்நபியுடனே தானும்பத்துப்பேருடனே
நேர்ந்தாரலியும்அன்று நேத்திகைப்பூசலிலே ௫௮௬

கல்லாதபுல்லன் கசடனிபுனியந்தான்
பொல்லாதபாவியவன் போந்தான்கைத்தண்டமதால் ௫௮௭

முன்னணியில்நின்றவனை மோதியேதானடித்தான்
மன்னவர்களாயிரரு மாண்டார்கள்போர்க்களத்தில் ௫௮௮

ஆகாதகேடனசடன்பின்னுந்தானடித்தான்
ஊவாயிரங்குதிரை மோட்சமுடனேமடிந்த ௫௮௯

அசியாருங்கம்பரல்லாகுபேர் தாமடிந்தார்
நபியாதுநிற்கையிலே நானுங்களிடஞ்சொல்லுவேன் ௫௯௰

ஆனைதனைவெட்டி மலியார்தாமப்போது
இனையறியாத சிர்கேடன்றன்னைவெல்ல ௫௯௧

கம்பர்தனைக்கூவிக் கண்முழிப்பாநில்லுமென்றங்
கெம்பிரான்தந்தவருளென்னைவிட்டுநீங்காதே ௫௯௨

நீங்காமற்கம்பரப்போ நெடியோன்றனைநினைந்து
பாங்கானஆலநபிபார்த்தார் படையதனை ௫௯௩

சுற்றும்வெள்ளம்போல்நிறகத் தய்போனையேநினைந்தார்
கத்தனருளால்ஜிபுரீல் கடுகவேவந்திறங்கி ௫௯௪

மாண்டவருக்காக மயங்குவதேன்நன்னபியே
ஆண்டோன்கிருபையாலவர்சுவனம்பெற்றதென்றார் ௫௯௫

வேணபடிதேறுதலே விளம்பிவிண்ணிலேபுகுந்தார்
காணரியவெற்றியுள்ள கத்தனிறசூல்நபிதாம் ௫௯௬

அந்தமொழிகேட்டவுடனந்நபி தோழருக்கங்
கெந்தவிதமாறுலு மேகளருளென்றுரைத்தார் ௫௯௭

முந்தஅவன்தண்டமதால் மோதினன்கம்பர்தனைச்
சந்தாபமில்லா நலிதான்தாட்டினார்தண்டமதால் ௫௯௮

தட்டினதண்டமோடிநபிதம்படையிலேவிழுந்து
கெட்டியுள்ளநல்லகிருபைக்கடலான ௫௯௯

ஆலநபிசம்படையி லநேகம்பேர்மாண்டார்கள்
மேலவர்கள்நல்ல வெற்றியொடுமேகுணமார் ௬௱

தாலமதிற்பட்டவர்கள் தானிறையோன்றன்னருளால்
கோலமிகுந்திருக்குங் குடியானசொர்க்கமதில் ௬௱௧

பச்சைப்புருப்போலே பணபானசொர்க்கத்திலார்
இச்சையுள்ளகூடில்நீ னேந்திழையார்கொண்டுசென்றார் ௬௱௨

காபிர்படைமாண்டவரைக் கைச்சங்கிலிவிலங்கும்
நீபிரமுமார்நரகிற் சேர்ந்தார்கள்காபிரெல்லாம் ௬௱௩

பாலன்தனக்கரசர் பண்பானஅலிப்புலிதாஞ்
சாலவேயாலியவர் தன்படையைப்பார்த்துரைப்பார் ௬௱௪

பின்னுமேலநில்லுமெனப் பேரலிதான்முன்னெதிர்த்தார்
மன்னுவுன்காவலிலே மன்னரலிகம்பருந்தான் ௬௱௫

தண்டாயுதமெடுத்துத் தக்கோனைத்தானினைந்தே
அண்டாஇபுனியந்த னடிமார்பிலேயெறிந்தார் ௬௱௬

எறிந்ததண்டம்போயங்கனிபுனியந்தன் மார்பில்விழ
முறிந்தது நூறாக மூடனுமப்போசிரித்தான் ௬௱௭

எள்ளத்தனைபோலவந்தா யென்னடாவுன்பெயர்தான்
முள்ளுக்குட்சிலையிட்டே மோதிவலிக்கின்றாய்நீ ௬௱௮

உங்களோடென்கொல்வதில்லை யுங்களலிதன்சமர்த்தை
இங்கல்லோகாணவந்தேன் என்னிடத்தில்நீங்கள்வந்து ௬௱௯

குண்டுசட்டிதன்னிற் குதிரைவையாளிவிட்டாற்
கண்டிடுவாரோவெனது கண்ணெதிரேவந்தாக்கால் ௬௱௰

அன்றறியலாஞ்சவத்தை யாலிமென்றபேரதனை
இன்றொளித்துப்போனுக்கால் யான்விடேன்கண்டாயே ௬௧௧

அடையாளங்கானறிந்தால்ஆலிதனைவென்றிடுவேன்
மடையாபோயுன்னலியை மண்டியிங்கேவந்திடச்சொல் ௬௧௨

என்முன்வாராவிட்டால் இப்போபதிபுகுந்தங்
குன்னகரைத்தானழித்திங்குள்ளசிறையும்பிடிப்பேன் ௬௧௩

ஆலிதலையறுத்திங் காலனபியைப்பிடித்துக்
கோலியேகொன்றிடுவேன் கொள்கைதனைப்பார்நீயென்றான் ௬௧௪

பாருமென்றபோதே பகர்ந்தாரலிப்புலிதான்
மேருவெனவந்த மிலேச்சனீகேட்டிலையோ ௬௧௫

இங்காளறிந்திலையோஎவ்பெயர்நீகேட்டிலையோ
அங்காயந்தான்வளர்த்த அலிப்புலிகாணென்றறியாய் ௬௧௬

உன்னூரைத்தேடிவர வுற்றிருக்கும்வேளையிலே
என்னூரைத்தேடிவந்தாயென்கையாலேமாள ௬௧௭

முருக்கப்பருந்தென்செய்யு மோதுதாறுகிடுமோ
எருக்குப்பூத்தென்செய்புமேறுமணமாயிடுமோ ௬௧௮

கல்லெல்லாமாணிக்கக்கல்லாமோகாசினியிற்
சொல்லவெல்லாந்துட்சணச்சொற்சொன்னாற்பலனேது ௬௧௯

ஆனைவெகுபார மடுசிங்கமெவ்வளவோ
தானையெல்லாம்விரியன்காண் தான்சிறிதுவீரருண்டோ ௬௨௰

கத்திபெடுத்தென்செய்யக் கத்தானைவெட்டுவையோ
புத்தியுள்ளராஜனல்லப் போர்செய்யமாட்டாயே ௬௨௧

கல்லைப்பிளப்பதாவுங்காணுஞ்சிறு சிற்றுளிதான்
எல்லைக்கல்காட்டினபோல் எதிர்வந்தாயானையின்மேல் ௬௨௨

புத்துக்காளுஞ்சிரசி ;போக வணிந்து வந்தாய்
செத்துவிடப்போருய்நீ சீக்கிரத்திற்கீழிறங்கி ௬௨௩

மற்றொன்றும்பேசாமல் வந்தெனதுகாலில்விழு
வெற்றியுண்டுமென்றேவெகுசாகச்சொல்லினனே ௬௨௪

பாதம்பணியென்றே பகர்ந்தாலிப்புலித்தான்
போதமழிந்தவர்போற் பொங்கியிபுளியந்தன் ௬௨௫

நீசமோசொன்னாய் நிகழ்த்துகிறேனேர்வசனம்
காதவழிவிலகு கண்டதுண்டமாக்கிடுவேன் ௬௨௬

அவியைவரச்சொல்லடா ஆகாதுநீசிறுவன்
வெலியிட்டேப்போடுமுன்னே பேயாயெனைவணங்காய் ௬௨௭

கண்டதுண்டமாக்குமுன்னே காலில்வந்துகும்பிடுநீ
இன்றுமுண்டுபேசாதே செத்திடுவாய்நீயேழை ௬௨௮

அண்டருலகம் அழிந்தாலும் நான்பொறுத்தால்
உண்டோதான் சத்திபுகாக்குலவிலையவந்திடச்சொல் ௬௨௯

ஆவியிதுகேட்டவுடனே யங்கவனைப்பார்த்துரைப்பார்
கோவிமலைபோலுயரங் கொண்டாய்நீயென்றனக்கு ௬௩௰

கொசுகுபோலாகுமிந்தக் குவலயத்திலேநீயும்
பிசகாமல்வந்தெனது பேரடியிலேவிழுவாய் ௬௩௧

காணேநீதானிருக்கட்டுமில்லையோ வுனக்குச்
சாவையம்வந்தொட்டுமுன்னே தாவெனதுகாலில்விழு ௬௩௨

பாதம்பணியென்றமொழி பாரியுளியன்கேட்டு
ஏதடாநீதானிப்புமெத்தப்பேசுகிறாய் ௬௩௩

குறும்புமெத்தப்பேசுகிறாய் கொண்டபிறகுமுண்டோசொல்
எறும்புபூத்தாப்போல்நீயென்முன்னேநின்றுகொண்டாய் ௬௩௪

ஆவிநீதானேபின்னாலும் வேறுமுண்டோ
சோலிவருத்தாயே சொல்லடாவுன்பேரை ௬௩௫

உண்மைசொல்லிவிட்டிப்போ தோடிப்போவுன்பதிக்குத்
தன்மைவருமுன்னே சாற்றுனதுபேரதனை ௬௩௬

என்றுனிதுகேட்டியம்புவா ராவிப்புலி
நன்றாக்கிவ்வுலகம் நான்கிடந்துமேபுகழார் ௬௩௭

ஆசிம்கிளையின் அபித்தாலிப்புத்திரன்யான்
காசிம்முகம்மதுக்குக் கண்ணானமருகன் ௬௩௮

அலியெனப்பேர்கொண்டவனு னஞ்சுவேனோ யுனக்குப்
புலியெனவேதான்பாய்வேன் போரில்வந்தகாபிர்களோ ௬௩௯

காலிலிட்டசோட்டினுக்குங் காணுயேநீமூடா
தாலியுன்றன்றேவியர்க்குத் தாளிருக்கவேண்டுமென்றால் ௬௪௰

ஆனைவிட்டுங்கிழிறங்கி யன்பானநற்கலிமா
வாளிலுயிர்போகு முன்னேபவன் றிந்தெனச்சொலித்த ௬௪௧

இனிதீயில்நீவருவாய் சேரமனமில்லாட்டால்
நானிலமெல்லாமறிய நவிலுமெந்தன்வாளாலே ௬௪௨

உன்னைவதைத்திடுவே னுன்சடந்தானரகிற்
பின்னிவிழுமென்றார் பேயனிபுனியந்தன் ௬௪௩

ஆலியென்றபேர்கேட்டங் கப்போதவனைக்குத்
கூலிக்குவேலைசெய்வோன் கோட்டமேலேறிவந்தாய் ௬௪௪

பெருப்பமாய்ச்சொன்னதெல்லாம் போமோநீயிவ்வளவோ
நெருப்பதனில்வீழ்ந்தபுழு நிற்குமோநீயெனக்கு ௬௪௫

அனுவர்கத்தோற்றுமிப்போ தங்கைவாலுனைப்பிடித்து
இனுக்காயினுக்கிடுவே னெந்தனுடைகையதினால் ௬௪௬

வாயினுனதினக்கால் வாளமட்டும்நீபறப்பாய்
தேயுமெல்வந்ததெனச் செங்கைகொட்டியேசிரித்தான் ௬௪௭

வன்கணிற்றீயெழும்ப வன்னெஞ்சுதான்சினந்து
செங்கண்நெருப்பெரியத் தீர்க்கமுள்ளதண்டதினால் ௬௪௮

அடித்தானலிசிரமேல் அலிதுல்புக்காறுவாளால்
தடுத்தார்பரிக்குசையை தாவெங்கிழ்தாரப்போது ௬௪௯

அண்டரண்டமுங்குலுங்க வார்ப்பரித்துவாம்பரிதான்
வண்டனுடயானையைத்தான் வலமிடஞ்செய்தேகுதிரை ௬௫௰

கொண்டல்வரைக்குங் குதித்தேகுமன்றுவரும்
விண்டிடமுன்னாலே வெகுதாரஞ்சுற்றிவரும் ௬௫௧

பாயுங்குதிரையிந்தப் படிவரவேயங்கேசம்
வாயுவைத்தபொல்லா வன்கண்இபுனியந்தன் ௬௫௨

அண்ணாந்துபார்த்தான் அவன்தலைக்குமேலுயரும்
விண்ணுரந்திபுனியந்தன் மேவறுகினைவாயுரைப்பான் ௬௫௩

பறக்கவிறகுமில்லைப் பாத்தாகுதிரையிது
துறக்கப்பறககுதிகாண் சூறுவளிபோல ௬௫௪

நன்றானதிப்புதுமை நானிலத்திற்கண்டதில்லை
இன்றேயிப்பரிதா னென்கையால்மாளுமென்றான் ௬௫௫

மாளுமென்றசொற்கேட்டு மன்னரலிதம்பரிதான்
நாளுமுனக்காச்சுதென நாடிமனந்தனிலே ௬௫௬

ஈழமெல்லாம்வென்ற விபுனியனையிப்போது
ஊழிமுடிவாற்கொலென உற்றகரிமத்தகத்தில் ௬௫௭

பந்தாடற்போல்மிதிக்கப் பார்த்தானிபுனியந்தன்
பிந்தாதுதும்பிகொம்பிற் பேராய்நடனமிடும் ௬௫௮

அடிவயிற்றிலேமிதிக்கு மந்திரத்திலேபாயும்
துடிபுடனேயங்கவன்றன் றோள்மீதிலேகுதிக்கும் ௬௫௯

ஆனைமுன்னேவந்துநிற்கு மாராய்ந்துதூரநிற்கும்
தானைகளைத்தானுழக்குஞ் சட்டமுடன்சத்தமிடும் ௬௬௰

வலசாரிசுற்றிவரு மற்றுமிடசாரிநிற்கும்
பெலமாயரசனுட பின்முதுகிலேகுதிக்கும் ௬௬௧

வேந்தன்விலாப்புறத்தில் விட்டிற்போலேயுதைக்கும்
மாந்தரெல்லாந்தானே மலைக்கமண்ணிலேகிடக்கும் ௬௬௨

வானத்தளவுசெல்லும் வந்துதும்பிவால்மிதிக்கும்
தானமுடன்வானமட்டுந் தானுயரும்பூமியிலே ௬௬௩

மலைபோலவேதாவு மன்னனையுஞ்சுற்றிவரும்
அலைகடலைச்சேருக்கு மானைமுன்னேவந்துநிற்கும் ௬௬௪

கம்பர்தனையாளி கடுகவேதான்கூவி
எம்பரியின்வால்பிடித்தே யெம்பிறகேநில்லுமென்றார் ௬௬௫

இல்லாதுபோனவிபுனியந்தன் கொல்வனென்றார்
சொல்லானதுகேட்டுத் துய்யபரிவாற்பிடித்தார் ௬௬௬

கோடைமழைபோல்வாளி கோர்த்தானிபுனியந்தன்
வாடையுடன்சூறை வளிக்காற்றெனச்சொரிந்தான் ௬௬௭

ஆளிமேல்விட்டகணை யத்தனையும்வாளாலே
கோலியறுத்துவிட்டுக் குஞ்சரத்தைச்சுற்றிவந்தார் ௬௬௮

ஐங்கதியைத்தான்காட்டி யாகாசத்தேயுயரும்
பைங்கிளியார்பாத்திமத்துப் பாத்தரதம்வாம்பரியை ௬௬௯

வாற்பிடித்துக்கம்பரப்போ வவ்வாற்போற்றொங்குகிறார்
கோற்பிடித்தங்கெய்தான் கொடியஇபுனியந்தன் ௬௭௰

தறையடியிற்றன்சிரசிற் றட்டென்றுகால்மிதிக்கும்
முறையிடும்பின்யானை முழக்கமிடிபோல்முழங்கி ௬௭௧

உல்லாசவாம்பரியு மோரடியுயரப்பறக்கும்
பொல்லாதிபுனியந்தன் பொங்குசிரமேல்மிதிக்கும் ௬௭௨

அந்தரத்திற்செல்லயிலே அம்புதொடுத்தான்கொடியோன்
வந்தகணையாளி வலக்காற்கணைக்காலில் ௬௭௩

தைத்ததுகண்டாளியவர் தன்கைவாட்டன்னாலே
பொய்த்தனும்புவெட்டாகப் போராலதாம்வெட்டினமே ௬௭௪

வெட்டியவரங்கவன்றன் வீரமுடிமேற்படவே
கெட்டிவந்தபுத்துங் கிரிடமுடியத்தனையும் ௬௭௫

சிரசில்வைத்தமுப்பத்து முக்கோடித்தேவதையும்
அரசுவைத்தஆபரண மத்தனையுந்தானறுத்து ௬௭௬

நிலத்தினிலவீழ்ந்திடவே நெஞ்சழன்றுதான்கொடியோன்
பெலத்தைவிட்டுத்தான்பயந்து பேச்சொன்றுபோசலுற்றான் ௬௭௭

எத்தலத்தைப்பார்த்தாலு மிவன்களைபோற்றோணுதுகாண்
உற்றதிவனென்றேயின் னுள்ளவரெல்லாமலியோ ௬௭௮

கம்பரொருவன்பேர் கண்டதிசையெங்குமுண்டோ
உம்பரிவனைக்கண்டாலோடி யொளித்திடுவார் ௬௭௯

வாளிவிட்டதெல்லாம் வாள்தனக்குக்கிட்டவில்லை
சூழும்படைக்களத்திற் றனுக்கேதுமில்லாவல் ௬௮௰

குஞ்சரத்தின்கோடுவெட்டிக் குவித்தான்மலைபோலே
அஞ்சாதவேந்தர்களையறுத்துவலை போற்குவித்தான் ௬௮௧

பஞ்சாக்கவேண்டுமெனப் பாழானிபுனியந்தன்
மிஞ்சவேதன்னுடைய மீசைமுறுக்கிக்கொண்டு ௬௮௨

மீறியவிமுன்னாலே வேடிக்கையாய்நடந்து
கூறித்தன்பேரைக் கூப்பிட்டுச்சொல்லலுற்றான் ௬௮௩

மாளாதேநீயெளிமை மானிடரிற்சின்னவனே
தூளாகிப்போய்விடுமுன் துட்சணனேபோல்விடென்றான் ௬௮௪

வாயிலுலையடிப்பேன் வந்திடாய்நீனிலென்றார்
நேயரவிசொன்னசொல்லை நீசன்தானேகேட்டு ௬௮௫

திணிலமைழக்கிறையோ செப்புவேன்கேளவே
மானமுடன்வந்தே மன்சாமியைக்கும்பிடென்றான் ௬௮௬

கேடனுரைத்தசொல்லைக் கெம்பீரல்கேட்டுக்
கோடையைத்தான் தட்டிக்கோபமிகவாகி ௬௮௭

ஆதிரவியையழகாகப் போற்றிசெய்து
மாதிரங்களெல்லா மண்ணதிரத்தான்பாய்ந்து ௬௮௮

தொல்புக்கறையோங்கித் துட்டனிபுனியந்தன்
மல்லனுறும்புயத்தில் வாவியேவெட்டினரோ ௬௮௯

வெட்டியவாளவன்தோளை விரியக்கிழித்துநிலந்
தட்டிக்கீழோடிடவத் தறுவாயிலேயாதி ௬௯௰

உத்தரவுவானவர்க்கந் துண்டானதாலியின்வாள்
மெத்தப்பிலத்தில்வீழு யிறங்குமுன்னே ௬௯௧

சோலியொன்றும்பாராமற் சுறுக்காய்ப்பிடியுமென்றே
வலியோனுரைத்திடவே வானவர்கோனச்சணத்தில் ௬௯௨

கல்லுப்பிளக்கவெட்டுங் காரணர்வாளானதனை
வெல்லுந்திறத்தாலியுட வெற்றிவாளசனதனை ௬௯௩

ஏந்தினர்தன் சிறகா லேந்தலிவாளதனைச்
சார்ந்துசிறகேந்தித்தன்சிரசி லேசர்துணியும் ௬௯௪

ஈழமதாகல்லிவிடுவதுபோற் றான்மனுவாய்த்
தாழவும்பின்செல்லாமற் றங்கினர்வான்வரும் ௬௯௫

வாளதனைத்தாங்காட்டால் வள்ளலலிவாட்படிலோ
தூளுந்தூளாகச்சுற்றுமட்ட கோணங்களும் ௬௯௬

சேரஇடிந்துவிடும் திக்கெங்கும்போயிவிடும்
கூருந்திரிகையெனக் கொக்கரித்துவாம்பரியும் ௬௯௭

வானிலெழும்பியதால் வாளையலிபெடுத்தார்
மானிதமாராலிபின்வாள் வலக்கரத்திலேபுகுத ௬௯௮

பூமியதிர்ந்துரைக்கும் போரலியேயென்னிடத்தில்
நேமிதமாய்நீர்வருகாய் நிச்சயமாய்க்கேட்டிடுவேன் ௬௯௯

அன்றைக்குக்கேட்பேனது நிசமென்றேயறியும்
என்றைக்குமுன்பா விறையானைவாரதில்லை ௭௱

ஆலியுரைத்தனரங் கடப்பையில்மீந்ததர்கள்
சோலிவருத்தாமற் றுய்யவலிதாள்பணிந்தார் ௭௱௧

றலிபதம்பணிந்தங் கவர்கள்நீனைபின்னர்
சிலரலியார்செப்பின ரங்கவர்பால் ௭௱௨

உங்கள்மனதிப்போ தொத்துதோவென்றதற்குச்
சிங்கப்புலியலியே சேர்ந்தோம்றப்யாதமதால் ௭௱௩

வானில்வழிகாட்டாமல் வந்தவலாக்காருமென்றார்
நீனில்வருவோங்காண் சிங்கமேநாங்கள்முன்னே ௭௱௪

கலிமாவுரையுமெனக் கட்டுரைத்தார்கல்லலியார்
ஒலியானவருரைக்க வுடனே நீனுனர்கள் ௭௱௫

நாதமதிற்புகுதும் கஞ்சிபுளியந்தன்சிரம்
விரகமுடனறுத்து வெற்றிகம்பர்கைக்கொடுத்து ௭௱௬

நீனவருடனே சென்றார்நபிதிருமுன்
வானுடர்போற்று முகம்மதுறசூல்நபிதாம் ௭௱௭

அலியைமிகத்தழுவி யங்கைதனைப்பிடித்து
வலியோனருள்மிகுதி வாசமுடனேபெறுவீர் ௭௱௮

வச்சிரமேனியென்றும் வல்லோன்தருவானென்று
மெச்சிமகிழ்ந்து மேனியெல்லாந்தான்தடவி ௭௱௯

சொல்லொண்ணாச்சந்தோஷர் துனையாமுகம்மதுவுங்
கல்பதனிற்கொண்டுநின்றார் கழறுமந்தவேளையிலே ௭௱௰

வேண்டாதிபுனியந்தன் வீரமுடியானதுவைக்
கூண்டிசனைகடுவே கொண்டுவந்தார்கமபருந்தான் ௭௧௧
பாரமலைபோன்முடியைப் பார்த்தவனைத்தான்மகிழ்ந்து
சூரன்முடி தன்னை மிகத் தூஷணித்தங்கெல்லவரும் ௭௧௨
வெற்றியபூபக்கருமர் வேதருதமானுநும்
கத்தனவிதைத்தழுவிக் கையெடுத்துக்கண்ணில்வைத்தார் ௭௧௩
சித்தம்புறக்காளின் திண்ணையங்கள்மாறாத
மற்றுமசுகாபிகருமன்னரசுமையைப் புகழ்ந்தார் ௭௧௪
ஆவிதனைமகிழ்ந்தகன் காலகலியும்படையும்
பாலியுடனெழுந்து பத்துக்கொடியும்பிடித்து ௭௧௫
வந்தார்கள்மக்கமதில் வள்ளல்நயியுந்திரளும்
நந்தாதபள்ளியிலே நாடியேபோயிருந்தார் ௭௧௬
ஆலகபிதம்படையி லமர்களத்திற்பட்டவர்கள்
யோவமுள்ளசீர்த்தி யொருலக்கம்ராசாக்கள் ௭௧௭
எண்பதிளுபிரங்குதிரை யேகமாய்மாய்ந்தசென்றார்
கண்படைத்தோரிபாருங் கடும்புதுமையாயிதென்றார் ௭௧௮
மடிந்தமனுவைத்தனையும் வல்லோனருளாலே
இடந்தருஞ்சொர்க்கத்தினிற் சேர்வரென்றார்நபிதாம் ௭௧௯
ஆதியின்கற்பனையை யார்தமிக்கத்தான்கூடும்
நீதியுடன்மாண்டவர்க்குநிட்சயம்பொன்னுலகென்றனர் ௭௨௰
ஓதினார்யார்களுடனுண்மைநபியிப்போது
நீதியுள்ளயார்கள் நேசமுற்றார்புன்புநபி ௭௨௧
எண்ணியெண்ணியுள்மனதி லேதும்வெளிபேசாமல்
திண்ணமொடிறந்தவர்க்குச் சீர்துவாச்செய்தனரே ௭௨௨
ஆலகனைக்கூவிருந்தவம்புதனைக்காட்டினரே
காலிலேதைத்தவம்பைக் கத்தனபிகண்டுசொல்வார் ௭௨௩
அம்பைப்பிடுங்குமென வபூபக்கரோடுரைத்தார்
தம்பமெனவீழ்ந்தார் தைத்தகணையாராது ௭௨௪
கணையைப்பிடுங்குமெனக் கர்த்தருமரோடுரைத்தார்
அனைத்துருவப்பாய்ந்தஅம்பை யாருமட்டுந்தானிழுத்தார் ௭௨௫
வாராதுகண்டுநபி வண்மையுதுமானவரை
நீராயிலும்பிடுங்கும் நீதியரேயென்றுரைத்தார் ௭௨௬
உதுமானுரைப்போது மைநபிசொற்படியே
சதுமாமறைதெளிந்தோர் தாமிழுத்தாரம்புதனை ௭௨௭
கணைக்காலிற்றைத்தவம்பைக் கண்டமட்டுந்தானிழுத்தார்
பணைக்காலுறையக்கணை பறிபடாதிவராலும் ௭௨௮

சத்தியெல்லாங்கூட்டித் தானிழுத்தார்வாராது
வெற்றியவில்லை வேதனைபிதாமகனிழுத்து ௭௨௯

தக்குயிர்கட்டித் தான்றொழுமென்றாரவிலை
கக்குக்கடலுருகிக் கத்தனவிதான்றொழுதார் ௭௩௰

பின்னுமமர்ந்தநூலவனையும் பிடுங்குமென்றாரம்புதனை
மன்னருரைத்தவுடன் மறுத்துமிழுத்தார்கணையை ௭௩௧

வாராதுவாளியது வரிசையுயர்தொழுக
சீரமிழுக்கக்கணைச் சீக்கிரமாய்வந்திடவே ௭௩௨

வெற்றிக்கொடிப்பிடித்த வேந்தரெல்லாரையுமே
சித்திரமனைக்கேச்செய்பினார் கங்கைபிதாம் ௭௩௩

தங்கள்தங்களின்மனையிற் றான்புகுந்தாரெல்லோரும்
பொங்கழுதுங்கங்கைபிதாம் புகழாகிவாயிருந்து ௭௩௪

போர்க்களத்தின்மாண்டவர்க்குப் புகழாகவேசிறப்பாய்
ஏர்க்குநின்றகைத்தமொசிடு மியல்பாய்ச்சடங்குசெய்து ௭௩௫

மவுத்தான்வர்களுடை மங்கையர்களெல்லவர்க்கும்
அவுத்துவமொன்றில்லாமற் கனகமயனிமணிகள் ௭௩௬

மாலுடனேதான்கொடுக்க மைந்தும்மேலோர்க்குரைத்தார்
ஏலமட்டுமவர்வாங்கி யேகன்தனைப்புகழ்ந்தார் ௭௩௭

ஆலகமியுமவர்கள்மனை போயிருந்தார்
சாலவெவர்களுமே தங்கள்மனைபோயிருந்தார் ௭௩௮

பாவியுபுலியந்தன் பட்டதுவுமாட்படைகள்
தாவியேபோரிற்றன்மடிந்த வாறதுவும் ௭௩௯

கேட்டரசன்தேவிகிலேசமுற்றுத்தானெழுந்து
நாட்டகமெல்லாம்விடுத்துத் தன்மகனைத்தானெடுத்து ௭௪௰

ஒக்கலையிலேற்றிக்கொண் டுடன்கூட்டத்தோடெழுந்தாள்
மக்கத்தைநாடியந்த மாமயிலுங்கூட்டமிட்டாள் ௭௪௧

பழிவாங்கவேண்டுமெனப் பாலகனோடேபாவை
வழியானதைத்தொலைத்து வஞ்சிசிலநாட்கழித்து ௭௪௨

சென்றாள்படைக்களத்திற் சேர்ந்தமகனோடுங்
குன்றானதுபோலக்கூண்டவினங்கண்டனளே ௭௪௩

ஐந்நூறுமாமுழத்தானறுநூறு நூண்டாக
வெய்நூறித்தான்கிடக்கு மேனிதனைக்கண்டனளே ௭௪௪

மைந்தன்றனையிறக்கி மன்னவன்றன்காலடியில்
வைந்துவிழுந்தழுது கன்றாய்முகத்தறைந்து ௭௪௫

கொந்துறையும்பூங்குழலாள் கோகோவெனவழுதாள்
அந்தக்குறைய வவளடங்காததன்பழுற்று ௭௪௬

22

கையை முகத்தணைந்து கண்ணீர்மிகச்சொரிந்து
ஐயோவென்கண்ணே யனியாயமோவிதுதான் ௭௪௭

வந்துமடிந்தீரோ மன்னவரோயென்றழுதாள்
நந்திமடிந்தீரோ நாதரோயென்றழுதாள் ௭௪௮

ஏதுசெய்யப்போறேனென் றேங்கிவிழுந்தழுதாள்
வாதுசெய்களமதிலே மாண்டீரோவென்றழுதாள் ௭௪௯

ஆராளப்போறார்க ளையகோவென்றழுதாள்
சோர்களமதிலே சென்றீரோவென்றழுதாள் ௭௫௰

இபுனியந்தனென்றுபேரெடுத்தகோ வென்றழுதாள்
அவனிதனில்நான்தனித்தே னையகோவென்றழுதாள் ௭௫௧

பத்துவயதிலெந்தன் பாலகனுநானுமும்
மற்றொருவர்தஞ்சமில்லை மன்னவனேயென்றழுதாள் ௭௫௨

என்னைவிட்டுப்போனீரோ யெப்போதுமைக்காண்பேன்
மன்னவரேயென்று மாரடித்தாள்மாமயிலாள் ௭௫௩

சகலபேரோடும்வந்து தான்மடிந்தீர்மன்னவரே
அகலவேநின்றுக்கா லனியாயம்வாராதே ௭௫௪

பகலில்நரியோடு பாற்றிழுக்கப்பட்டீரோ
இகலிருளிற்பேய்களு மிழுக்கத்தான்பட்டீரோ ௭௫௫

பளிங்குமாமண்டபமும் பார்த்திடக்காணிருந்தேன்
ஒழுகிடந்திலேயோ யுற்றதுணையென்கணவர் ௭௫௬

சீமானேயுன்தேசஞ் சென்றாளப்போறதெவர்
ஆமாதனக்கொல்லி லரசாளப்போறதெவர் ௭௫௭

தாலியளித்திட்ட தம்பிரான்தானிலையோ
இல்லையையாகாதென அப்போதுசொன்னேனே ௭௫௮

ஆண்டிபரதேசியர்க ளங்கிருந்துதேடுவரோ
மாண்டீரோஆலிகையால் மன்னவரோஎன்றழுதாள் ௭௫௯

நாலுமுழந்தாலிகையால் நவில்நீர்மடிபொழுது
பாலும்பழமும்பொசித்துப் பண்பாகநானிருந்தேன் ௭௬௰

மண்டபமுமாளிகையு மற்றுமுள்ளநற்சிறுங்
கண்டவர்க்குத்தானமெனக்கையளித்து விட்டீரோ ௭௬௧

கையெடுத்தபுத்தனைத்துங் காட்டிற்றே ஆலியிடம்
மெய்யெடுத்தநுஞ்சடல மேதினியிலேபுரள ௭௬௨

பஞ்சணையிற்றூங்குகின்ற பாரவுடலிப்போது
அஞ்சுமணற்புழுதி லானீரோவென்னரசே ௭௬௩

பட்டடுகளத்தைப் பார்த்தென்வயிறெரியக்
கட்டமதுசெய்தாரோ கத்தனபிமருகா ௭௬௪

குறிகாரர்சொன்னதெல்லாங் கோவேநீர்கேட்டிலேயோ
அறியாமல்வந்திரே யாலிகையின்மாளவென ௭௬௫

பொல்லாநிமித்தமதைப் புத்திதனிலெண்ணிலேயோ
கல்லாதபேர்களைப்போற்காவலரேமாண்டீரே ௭௬௬

குஞ்சரத்திலேறுமிப்போ குஞ்சரஞ்சைகைகாட்டிலேயோ
நெஞ்சினிற்றுகாரேமது விட்டிலேயோ ௭௬௭

பொல்லாக்கனவுகண்டேன் போகாதேயென்றேனே
நில்லாமல்வந்திரே நேரசலிவாட்கிரையால் ௭௬௮

ஆனையிழந்திரே யருககரும்பாழாச்சே
தானையதுபோச்சே தையல்மார்தாறுச்சே ௭௬௯

கல்நெஞ்சக்காரவலி சைவாட்பகையாச்சே
வல்நெஞ்சரோடெதிர்த்து வாளுனைவிட்டீரே ௭௭௰

பொன்முடியுந்தான்போச்சே பூபதியேயென்றழுதாள்
என்மடிமேற்சாய்ந்திருக்கவெப்போதுகாண்பனினி

எழுவாள்விழுந்திடுவாள் ஏங்குவாளேந்திழையாள்
அழுவாளருண்டிடுவாளவல்லயெங்கேயென்றிடுவாள் ௭௭௨

மைந்தனைத்தான்சட்டியிந்த வாறுசொல்லியேயழுதாள்
பைந்தலைவாய்மண்டுகம் பற்றினபோலானேனே ௭௭௩

நபியுமிரங்கிலேயோ நாயபேருந்தானிலேயோ
புவியிலுள்ளவாலயரும் பொய்யாச்சோசாமிகளும் ௭௭௪

பொல்லாதபுத்தனைத்தும் போட்டுவிட்டிங்கேமானே
நல்லாகக்கொண்டிலீரோ நாடாளுமன்னவரே ௭௭௫

அடியாளிருக்கவிங்கே யரசேநீர்மாண்டீரோ
கொடியாளினிநான் கோமானேயெங்கிருப்பேன் ௭௭௬

ஊரிலுள்ளமங்கையர்களொக்கவுமங்கிலேயாம்
வாரியுங்கைகொள்ளாதேனே மன்னவரோவென்றழுதாள் ௭௭௭

இந்தவுயரமினி யெப்போதுநான்காண்பேன்
அந்தமதிங்குத்தமைப்போ லார்காணுமன்னவரோ ௭௭௮

பொன்னகரிபாழாச்சே பூமானேயென்றழுதாள்
என்விதியிங்காரறிவாரென்னரசே யென்றழுதாள் ௭௭௯

பொறுதிமபாறுத்திலேயோ போலிங்கேயென்றழுதாள்
அறுதியெனவந்திரோ ஆவியுடையாள்தனக்கு ௭௮௰

காய்நரிபேய்கள் கடுக்களத்திற்சூழ்ந்திருக்கக்
காயுதேமேனி கத்தனேயென்றழுதாள் ௭௮௧

தனித்தேன்மலரணைமேற நஞ்சமில்லையென்னரசே
இனித்தானெனங்கிருப்பேனென்னரசே யென்றழுதாள் ௭௮௨

சளியன்துடர்தானே தாம்வாராபோதுமைதான்
பனியும்வெயிலும் பாங்குடல்லேவிழுக ௭௮௩

பள்ளியறையும் பளிங்குமாமண்டபமும்
தெள்ளியபொற்றாண் சிறந்திருக்குமண்டபமும் ௭௮௪

சிங்காரமேடைகளும் சிறந்தகொலுமண்டபமும்
பொங்கியிருப்பதினிற் புறத்திருப்பதாரசே ௭௮௫

ஆசையுடன்நீனி லாகிலேயோவெம்மரசே
பூசைபண்ணித்தான்வணங்கும் புத்துகளத்தனையும் ௭௮௬

சண்டாளத்தெய்வமது தன்வாயில்மண்போட்டு
கன்றுகளையானே நாயகனேகொண்டிலேயோ ௭௮௭

கண்கெட்டசாமியெனக் கையாரக்கண்டோமே
எம்பட்டுக்கொண்டீரே யோர்தலைக்கைதனிலே ௭௮௮

சமையமறிந்துதப்பத் தன்மதியும்பாழாச்சோ
இமையும்விழியுமென வெண்ணியிருந்தேனுனைநான் ௭௮௯

நாடியிருந்தேனுனைநான் நாயகனேயெப்போதும்
வாடிமெலியவருத்தினீ ரென்னரசே ௭௯௰

நானேமடிந்திடுவேன் நன்மகனுக்காதரவார்
மானேப்பிள்ளைமீண்டு முகம்மதிடம்போவனென ௭௯௧

பிள்ளைதன்னைபிடுங்கிப் போகமதித்துடனே
கிள்ளைமொழியாளங்கு கிலேசமுடனேகினளே ௭௯௨

பள்ளிதனிலிருந்தார் பாங்குருடன்னநபிதாம்
துள்ளிநடைகொண்டமங்கை குப்பயமுன்புவந்து ௭௯௩

மகனைவிட்டுக்கொண்டே மங்கைதானேயழுதாள்
நகனைப்படைத்தவொரு நத்தனருளார்நபியே ௭௯௪

மன்னவனைக்கொல்ல மருகருடன்சொன்னீரோ
எல்லைவகையால் ஆலிஎன்புருடனேவைத்தார் ௭௯௫

அபூபக்கரும்முமறு மானஉதுமான்அலியும்
சபூறனவரெல்லாம் தான்சூழ்ந்திருந்திடத்தில் ௭௯௬

மங்கைதனைக்கண்டே மயங்கினார்பெருவென
எங்கேயிவளிருந்தாள் என்றுமலைத்தேயிருந்தார் ௭௯௭

அப்போதலிபார்த்த மங்கைவாய்பார்த்திருந்தார்
செப்பாமுலையாளுஞ் செங்கைமுகத்தேயறைந்தே ௭௯௮

உங்களுடதேமிதோ உங்கள்பெயரோஅலிகாண்
எங்களுடதேசமதில் இல்லையோஆண்பூடு ௭௯௯

மைப்படியுங்கூந்தலின மங்கையாள்தானழுதாள்
இப்படித்தான்செய்வீரோ என்றுமோஎல்லவர்க்கும் ௮௱

எந்தன்கணவனைநீ ரிப்படிக்கொல்லத்தகுமோ
நுந்தனுடநீதமிதோ நுந்தம்பெயரோ ஆலிகான் ௮௱௧
வெட்டிப்பிளந்தீரே வேடிக்கையோதானுமக்குத்
தட்டிப்பறையவொருத் தனையுமேகண்டிலேயோ ௮௱௨
ஈமானையின்றுகொள்ளா தின்னஞ்சிலகாலிருந்தாற்
கோமாதான்கொண்டிடுவார் கோரல்செய்தீரென்னபலன் ௮௱௩
புறுக்காகல்வேதமதின் பொறுதியேசெய்யாமற்
சறுக்காதுமன்னவனைத் தான்பழிதான்செய்தீரே ௮௱௪
அந்தந்தவேதமதில் அவரவர்கள்தாளிருப்பார்
நுந்தமுடவேதமது நுங்களுக்குத்தான்அருமை ௮௱௫
அடர்ந்துபடைவெட்டுதற்கிங் கார்பொறுப்பாரிக்கொடுமை
தொடர்ந்துபடைவெட்டுதற்குச் சொல்லுவரோராஜாக்கள் ௮௱௬
தாளுண்டதேசமதிற் றானிருப்பார்ராஜாக்கள்
மாளுண்டதேவர்களும் வன்கொடுமைசெய்வரோ ௮௱௭
கலியோஅலியேநுள் கைவாட்மட்டோவாள்காண்
மலிவானராஜாக்கள் மாநிலத்தில்வேறிலேயோ ௮௱௮
என்புருடர்துஞ்சரீரத்திப் போகிற்சாய்ந்தாக்காற்
றென்புபட்டுநீறு யிடைகுவீர்நீரலியே ௮௱௯
நீதியுடையகபிநேர்வரிசை யாற்பிழைத்திர்
ஆதியுடைக்கேளாநே அநியாயஞ்செய்திரே ௮௱௰
வீண்பழிகள்செய்தீரே விட்டிடுமோசாமிநும்மைக்
காண்பதுதான்மெத்தவுண்டுங் கண்சிரிதுகண்டீரோ ௮௰௧
இப்பழிநும்பிள்ளைகளை எப்போதும்விட்டிடுமோ
தப்பிதங்கள்செய்தீரோ சண்டாளரானீரே ௮௰௨
உந்தன்திடமறிவேன் உள்ளிரக்கமற்றீரே
தொந்தம்பழிகொண்டீரே துய்யவனுக்கேற்றிடுமோ ௮௰௩
நாலுமுழப்பாலகனை நோக்கியெவர்தாம்வளர்ப்பார்
ஆறுதலாம்பாலனுக்கிங் கார்தந்தையாரினிமேல் ௮௰௪
கட்டாண்மைசெய்தீரே காடாச்சேயெங்கராம்
ஓட்டாதுகொன்றீரே உந்நீதமோஅலியே ௮௰௫
விட்டேனேநும்மையினி வீண்பழிகள்கொண்டீரே
மட்டிலடங்கிலேயே மாமனதிங்கெந்தனுக்கு ௮௰௬
துல்துல்பனையாகத் துட்சணங்கள்செய்திடுமோ
துலபுக்கருவானுந் துண்டப்படவெட்டிடுமோ ௮௰௭
கம்பர்பனைத்தெதன்னுடைய காவலனைக்கொல்வதுவோ
இன்பமுள்ளபாந்திமத்தன் கேற்றதுவோ ஆவதுமோ ௮௰௮

நன்புருடர்தங்களுக்குத் தான்தீங்குவாராமல்
முன்புதுவாவிரந்த மோசமதுதானிதுவோ ௮௰௯

நாயனவியாளுக்கால் நடுக்கேடுசெய்வாரோ
மாயப்பெலமோ கண்டமட்டுங்கெடுக்கிறீர் ௮௨௰

கபிகட்காசரிவை நன்றென்றுசொன்னாரோ
கபிகைக்குடைகபிதான் கண்டிருக்கவெட்டுகரோ ௮௨௧

ஆலகபிவாவெளடுத்தால் ஆர்ராலுந்தாங்கரிது
தாலவலர்பார்த்திருக்க தானுமக்குவேகமென்ன ௮௨௨

ஓர்பிடிமண்போதுமகபிக் குற்றபடைவெல்வதற்கு
ஆர்பொறுப்பாசிக்கொடுமை யாலனபியேயரசே ௮௨௩

பொறுமைக்குடையஅயூ பக்கர்பொறுத்திருக்க
உறுமெய்மிகவுள்ள நல்லோர்பொறுத்திருக்க ௮௨௪

வலுமைக்குடையஅலி வன்கொடுமைசெய்தாரோ
கல்வைத்தவிராத ராஜசிங்கமென்றுரைக்கும் ௮௨௫

நத்தாமகளுமருகன்ணாரப் பார்த்திருக்க
வித்தாரமானவலி வீண்பழிகள்செய்தாரோ ௮௨௬

உதுமானுரைங்களுண்மையாய்ப் பார்த்திருக்க
எதுவாயலிக்கிருந்த தென்புருடனோவதைக்க ௮௨௭

என்னவொண்ணாப்பேரிருந்து மிக்கொடுமைசெய்தாரே
பண்ணுனதற்குடையோர் பயகாம்பரல்லவோதான் ௮௨௮

சாகாவரங்கொணடோர் தானுண்டோபூமியிலே
ஆகாதுசெய்தாரே அலிப்புலிதான்நீதமிதோ ௮௨௯

வேதாபிக்கவது வேறவர்க்குவேகமென்ன
நீதமுடனெங்கும் கிரசாலுய்கித்தியனாய் ௮௩௰

நாயன்கொல்வதற்கனுப்பும் நன்றுனஆயத்துண்டோ
நேயமுடனாருமிந்த கெட்டரேஞ்செய்வாரோ ௮௩௧

ஆலத்துக்கெல்லாமரசர் ஆலகபியேக்கடபிர்
நால்பேரிலேயொருவர் நானறிவென்னன்பியே ௮௩௨

ஆகொடுமைசெய்வரோ மரியபெரியோரிலேயோ
பாகொடுணைவருந்தித் பார்ப்பமே அவர்சமர்த்தை ௮௩௩

எளிவையாத்தானிருந்தே மிந்தச்சமர்த்தானதென்னே
பழியெல்லாமேற்றீரோ பத்தாவைக்கொன்றீரோ ௮௩௪

ஏறுகின்றவாசம்பரியும் நச்செப்புமாயுதமும்
தாறுவருத்துமருந்தஞ் சோராதகைவாளும் ௮௩௫

ஊறுமருந்தன்வீரப்பட்ட முள்ளதுவந்தானிருக்க
வெறுங்கையுடனிருக்க விளம்புகான்வாராதோ ௮௩௬

நயங்கற்புயத்தாளர்நபியுநூதன்தானதுலோ
வெறுங்கையாய்விட்டேனே மேதினியிலென்னசெய்வேன் ௮௩௭

ஆகையாலெவ்வளவு மானபெலனுந்தமக்குப்
போகநாள்வந்தாக்காற் போகுமோஇப்பழிகாண் ௮௩௮

பெண்ணுனுரைத்ததெல்லாம் பேசாவலிகேட்டிருந்து
அண்ணார்ந்துபார்த்தாங் கவர்முறுவல்கொண்டிருந்தார் ௮௩௯

புவியில்வருமங்கையர்க்குப் போரலையங்கேதுசொல்வார்
செவிதவிறையின் செய்கைக்காரென்செயுவார் ௮௪௰

கலங்காமல்நக்நபிதான் காரிகையைப்பார்த்துரைப்பார்
நலங்கொளிறை தானோநானிலத்திலேவிடுக ௮௪௧

வந்தவிதிவந்தாக்கால் மனதுபொறுமாதேநீ
சொந்தமுள்ளவுள்பதியிற் சேர்விலாசானு ௮௪௨

உந்தனுடதேசமெல்லா முன்மனதுக்காமலது
அந்தமுடன்கலிமாச்சொல் அன்பாகவென்றுரைத்தார் ௮௪௩

உருவுவருமலிக்கிங் குற்றநீசொன்னதெல்லாம்
அரசுசெலுத்தும் அலிபகையைத்தேடாதே ௮௪௪

பெண்பழியென்றேஅலிதான் பேசாமற்கேட்டிருந்தார்
கண்பாலதம்பகையை நாள்தோறுந்தேடாதே ௮௪௫

கோலமுடன்படையைக் கூட அனுப்பிவிப்பேன்
பாலன்றனையிங்கு பகரச்சொல்கலமாவை ௮௪௬

அரசுசெலுத்தெனவே ஆண்டகையுந்தானுரைத்தார்
பிரிசமதுதேடும் பேரனன்மீவதுபோல் ௮௪௭

சொன்னமொழிதப்பாமற் றேகையுந்தான்பாலகனை
மன்னர்நபிபதத்தில் மாட்சியுடனேவிடுத்தி ௮௪௮

என்புருடனைவதைக்க ஏகநபிக்கானதல்லாற்
பின்பொருவர்சத்தியுண்டோ பேரலிக்குத்தானெதிரி ௮௪௯

இப்பேர்பொருநதாட்ட லென்மகனைத்தான்வதைப்பார்
செப்பமுடன்ஈமானிற் சேருவதுநன்றெனவே ௮௫௰

நேருடனேஈமானை நிச்சயமாய்க்கொள்கவென்றாள்
பாரறியஈமானைப் பாலகனங்கோதினனே ௮௫௧

வடித்துக்கனைத்திசுலாம் வாழ்த்திமிகப்படித்தான்
படித்தமுறைகளைத்தான் பாரோர்மகிழ்ந்தனரே ௮௫௨

சிருதைய ஆனாகள் சேர்ந்தமுசிலீங்களிலே
ஆரும்நிகரொவ்வாத அகுமதுதன்புத்திரனும் ௮௫௩

பேர்பெரியராவுத்தப் பிள்ளைபெரியோனருளும்
ஆரவேபெற்றிங்கவன்கிளைதான் வாழியவே ௮௫௪

போர்க்களத்திலேமான் புகுந்தபோத்தனையும்
ஊர்க்குபோமாமயிலே யுந்தன்ரசரனெனவே ௮௫௫
நல்லநபிசொன்னவுடன் நாடிபெருந்தாள்பதிக்கு
அல்லலகல்பெண்ணேநீ யாருந்தியென்றுரைத்தார் ௮௫௬
நீயென்றசொற்கேட்டுச் செப்புவார்மாமயில்தான்
கோனேநபிக்கரசே கூறுவேன்றுர்வசனம் ௮௫௭
மகன்சமான்கொண்டாரோ மன்னவரேபோகாதோ
நகரதிற்புனலுரைத்த நபியீதுசொல்லலுற்றார் ௮௫௮
தாய்மகனுமாறலுந் தன்வயிறுவேறலாதே
நேயமுடன்கலிமா நிச்சயமாய்ச்சொல்லுமென்றார் ௮௫௯
கூறுமொழிதான்கேட்டுக் கோதையுந்தானுகிவிட்டாள்
பேறுபெறுவாய்மாதே போதலமுந்தான்கூட்டி ௮௬௰
நாடுகளிற்செல்லெனவே நம்பியுந்தானுரைத்தார்
வாமேனைத்தானீக்கி வன்மையலியைப்பார்த்தாள் ௮௬௧
அலியாருரைத்திடுவா ரன்னமேயுன்மனது
சலியாதேமுன்னெழுத்தைத் தப்புவரோ ஆரொன்கிலும் ௮௬௨
எத்தனையோபுத்தியுனக் கேற்றமணவாளனுக்கு
மெத்தவுநான்சொன்னேன் மேட்டியாய்த்தானிந்தான் ௮௬௩
அவனிதனிலெவ்வளவே யாருநானென்றிருக்கிற்
புவனிதனிலிருக்கப் புத்தியுண்டோமானிடர்க்கு ௮௬௪
மனதுகலங்காதே மன்னனிறந்தானெனவே
உனதுநினைவைப்பாசங் குள்ளமவுந்தெந்குமுண்டு ௮௬௫
உன்கரிசேசேர்ந்தங் குலககனையாண்டிருநீ
என்னவிதம்வந்தாலு மெந்தனக்கிங்காளனுப்பு ௮௬௬
ஆனபொழுதெந்தனக்கிங் காதியுயிர்தந்தானேல்
நானுஞ்சனுடியிலேநாடுவே னுனவகரம் ௮௬௭
வந்துவினைதீர்த்திடுவேன் வல்லோனுதவியினால்
அந்தமுனசொர்க்கமுனக் காகவெனவேநினைத்தால் ௮௬௮
உந்தன்மாரான்தா னுருக்காலுந்தப்பாமற்
சுந்தரமாய்நில்லெனவே சொன்னாராசரலி ௮௬௯
ஆலிபுலிசொன்னவுட னாயிழைதானப்போது
சேலிழயெல்லாந்தான்தவிர்த்துத் துய்யநபிதாள்பணிந்து ௮௭௰
புலிஅலியைத்தான்பணிந்தே போந்தவரைத்தாழ்ச்சிசெய்து
சலிபாதஆலநபி தம்மைமிகப்போற்றிசெய்து ௮௭௧
நாயபத்திராயிரனை நன்றாகத்தாழ்ச்சிசெய்து
ஆற்பத்துடனிருந்த அலங்குதயனையகற்றி ௮௭௨
மேலிப்படையுடனு மெல்லித்தானேநடந்து
ஒலிப்பெருஞ்சேனையுட னேக்கவுந்தானடந்து ௮௭௩

பாதைவழிகடந்து பலவனங்கள்தான்கடந்து
வேதையெல்லாம்விட்டொழிந்தே வெற்றிமகனோடவரும் ௮௭௪
கூடும்படையுடனே கோதையுந்தன்றூடுபுக்காள்
தேடுநகரமெல்லாஞ் சோத்திருக்கிவித்தாள் ௮௭௫
மருட்டுகுருசாமி மற்றுள்ளமண்டலமும்
திருட்டுமிகலுமிலாச்சிந்து மிகப்பொன்மிகுநும் ௮௭௬
கட்டுபுனைகளும் கத்திமகளுள்ளோரும்
மட்டுப்படாச்சிமையரும் வனர்திணிலாயிருந்தார் ௮௭௭
சிராகுருசாமித் திருநகரிபுலியந்தன்
யோர்மனைவியுநற்பிரிய முள்ளமைந்தனுமே ௮௭௮
செல்வமாயவ்வூரிற் றீருக்கித்தாங்களுமே
கல்வியொடும்வாழுமக்கா கழனிபுலியன்மனைவி ௮௭௯
மகனோடுசந்தோஷமகிழ்வாயொருநாளில்
அகமேமோடொருநினைவா யாகுமிதென்றேநினைத்து ௮௮௰
இந்திராயங்கர்க்கம் கெழுதாமல்நாமிருந்தாற்
பிந்திவரும்வினையும் பெரும்பகையுமுண்டுமென்றே ௮௮௧
புந்திதனிலெண்ணியக்கு புகழ்கணக்கனையழைத்துச்
சிந்தைமகிழ்ந்தே திறமானவக்கனையாய் ௮௮௨
பத்திரத்தைவாசகத்தைப் பண்போடெழுதுமென்றாள்
வெற்றியுள்ளநற்கணக்கன் வேடிக்கையாயிருந்தே ௮௮௩
வாசகத்தைச்சொல்லுமென்றான் வல்லியுமங்கேதுசொல்வாள்
வாசமுடனிந்தராயர்க்கு வாழுங்குருசாமிகர்த்
தேசந்தனிலிருப்போர் சேரவேகைகுவித்தோம் ௮௮௪
நேசந்தருஞ்செய்தி நெறியானதென்னவெனில் ௮௮௫
மங்காரடாளுகின்ற மாசபிதாக்துறதனுப்பி
மிக்கபுறக்காறுரையை வேந்தனுக்குச்சொன்னதுவும் ௮௮௬
சேனைபதாதிதனைச் சேர்த்தாசன்போனதுவும்
தானையெல்லாமாண்டதுவுந் தன்புருஷன்மாண்டதுவும் ௮௮௭
ஆனையொடுசேனை யழியற்றுப்போனதுவும்
மோனமுடனதம்பின் மொழிகபொற்றுனேகி ௮௮௮
மைந்தனொடுதானிம் மயக்கமாய்த்தானிருந்து
வைந்தமுதகாரணமும் கல்லிமான்கொண்டதுவும் ௮௮௯
பிந்தயெந்தன்பாலன் பெரும்பதியையாளுவதும்
முந்தவிருந்தமனு முற்றுமேமாண்டதுவும் ௮௯௰
இந்தவிதமாகவேதான் எழுதிமிகக்கொடுக்க
அந்தமுள்ளவாசகத்தை அடாது தன்கைக்கொண்டு ௮௯௧
மன்னனிந்திராயன் மாநகர்க்குத்தான்செல்ல
பன்னுமுச்சிமன்னன் படைப்போரினிப்பகர்வாம் ௮௯௨

முதலாவதுஇபுலியர்தன்படைப்போர்

முற்றிற்று

இரண்டாவது,

உச்சிபடைப்போர்.

முழுத்தாளியையாளு மூர்க்கமுள்ளராசனுக்கு
வலுத்தநகராசர் வாழ்தேசமெத்தவுண்டு ௧

அட்டாளசிமை யடர்ச்சியெனுமண்டலமும்
திட்டமுள்ளமற்றச் சிறப்பாருமண்டலமும் ௨

உச்சியென்றதேச முயர்வானமண்டலமும்
அச்சையொடுகிட்டா ஆழிநாடுமண்டலதும் ௩

இவ்வளவுந்தாளுளும் ஏந்தலிந்திராயனுந்தான்
தலயிருந்துபெற்ற தையலர்களிருவருண்டு ௪

அந்தமிகுரூபவதி யானவிருபெண்களிலே
முந்திடுகல்லக்காளை மோகமுடன்தாகிகொண்டான் ௫

பிந்தவொருபெண்ணினுக்குப் பேர்தான்பனிமதியாம்
சந்திரனுங்கோடியவள் தன்முகத்திற்கேற்காது ௬

திருப்பாற்கடற்பிறந்த செவ்வியவட்கொவ்வாது
உருப்பார்த்தபேர்களெல்லா மொக்கமடிந்திடுவார் ௭

இந்தராணியரம்பைப்பெண்ணென் றெல்லவருஞ்சொல்வார்கள்
சுந்தரஞ்சேர்பெண்களெல்லாஞ் சோர்ந்திடுவார்கண்டவுடன் ௮

அந்தப்பனிமதியை யாணமணஞ்செய்வதற்கு
வந்திருந்தார்ராஜாக்கள் வாய்த்தகொலுவதனில் ௯

ஒவ்வுமிபுனியன்மனைவி யுகந்துப்புங்காதிதத்தைத்
தவ்வுதலில்லாத்தூதன் தானீந்தானிந்தரனிடம் ௰

முத்திரையைத்தானுடைத்து முதியோலைவாசியென்றான்
புத்தியுள்ளார்வாசிக்கப் புகழோடுகேட்டிருந்தான் ௧௧

பத்தியனல்கொளுத்தப் பாங்காகத்தான்கேட்டு
கத்துமனவேகமதாய் கயனங்கள்தீயெரிய ௧௨

சத்தியுள்ளவிபுனியன்றான் றானிறந்தான்காணிருந்தேன்
இந்தமிருந்தென்னபல னீனிலத்திலென்றேதான் ௧௩

கையைநிலத்தடித்துக் கைகொட்டிமூக்கிலவைத்து
வையகத்திற்கேட்டதில்லை மக்கபியல்யென்றா ௧௪

ஏதடாமக்கமதி லிப்பெருமைபெற்றவர்கள்
சூதடாமாயமிது சொல்லியிருப்பாருமில்லை ௧௫
கெவ்வைகுகித்தாப்போற் கேட்டோமிதுவசனம்
அங்கேதுஆலியவன் ஆலமபிதானேது ௧௬
வேதமதுதானேது வேந்தர்கபிதானேது
நீதமோவிவ்வசனம் நெஞ்சுதுணிவுடனே ௧௭
அத்தனைக்கும்வெற்றிசெய்ய ஆலியவனெக்குளவன்
பித்தனே ஆலியவன் பேய்ப்பயலென்போலவவன் ௧௮
அரசுண்டோமக்கமதில் ஆலியுண்டோநம்மையல்லால்
சரசமொழியாகத் தானிருக்குதிப்போது ௧௯
ஆலிதனைக்கொண்டுவர ஆர்வருவதென்றுரைத்தான்
கோவியிருந்தவர்கள் கொற்றவனைப்பார்த்துரையார் ௨௰
இருக்கின்றராஜாக்கள் என்னவொண்ணைப்பேர்களுண்டு
பெருக்கமுடன்கேட்டுப் பேசாதிருந்ததினால் ௨௧
அந்தநேரத்திலான இந்திராயனவன்
எந்தன்மகள்நல்ல விசைக்தபனிமதியை ௨௨
கொள்ளவென்றால் ஆலிதலைகொண்டுவந்தோர்க்காகுமென்றான்
எள்ளளுள்ளராஜாக்கள் ஏதொன்றுஞ்சொல்லாத்தால் ௨௩
நகரிற்பறைபோட்டான் நபிமருகரால்தலை
நிகரில்லைக்கொண்டுவந்தால் நேரிழைந்தான்கொடுப்பேன் ௨௪
ஆனஇந்திராயனுட னக்கிருந்தராஜரிலே
மானமென்றில்லாத மாமதங்கொள்துட்டனங்கள் ௨௫
சேர்ந்திடுமூச்சியவன் செப்புவானைப்போது
நேர்பெருநும்ஆலிதலை நிபிடக்கொண்டுவாரேன்காண் ௨௬
திண்ணமுடனரசன் செப்புவானேர்வசனம்
எண்ணினைக்கொண்டோனவிவை எப்போநீவெல்வதென்றான் ௨௭
அங்கோரம்சேர்மா னருமருகனீதுசொல்வார்
இங்கருக்கெல்லா மியல்பாகவந்ததிர்த ௨௮
இந்திராயனென்னு மேந்தலேநீர்கேளும்
முந்தநடந்தமுதிர் சேதிசொல்லுகிறேன் ௨௯
சங்கைபெருந்திமிக தாளுள்கபிபரசன்
ஆக்கபொடுசேர்ந்த சொருசார்படைகளோடும் ௩௰

மக்கமதிற்புகுந்த மன்னர்நபிபதத்தின்
தக்கமிட்டுச்சந்திரனைத் தானழைக்கச்சொன்னதற்கு ௧௧

அமாவாசிதன்னி லழகானவட்டமதி
தமதாகவேயழைத்துத் தான்வகிர்ந்தங்கோட்டினரே ௧௨

காரணத்தைதக்கண்டு கதிசேர்ந்தாரெல்லோரும்
ஆரணத்திலுட்புகுந்தாரந்தவிடம்வந்தவர்கள் ௧௩

பூரணமாய்க்கண்ட புகழாகபாவர்களும்
வாரணங்களாகும் வலிமானகொல்லமென்ற ௧௪

ஏந்துமதியானுட் இணக்கமுள்ளவென்மாமன்
அந்தகாரன்தன்னிரவில் அரண்மனைமீதிலுலாவியேதே ௧௫

அறமிதினைசநேராய் அழகார்மதியெழும்ப
நிறமாகக்கண்ட செய்தினையறிய ௧௬

வந்தமதிகணக்கின் வகைதெரியவேண்டுமென்று
சிந்தைதனினினைந்து சேரமானென்மாமன் ௧௭

சூழுதியேவைத்திருந்தாரே சிலநாட்கழித்துப்
பழுதிலாமக்கமது போனவரசர்களில் ௧௮

வந்தார்சிலபேர்கள் வண்மையுடன்சோங்கேறிப்
பிந்தாதவரையெங்கள் பேரரசர்தானழைத்து ௧௯

சச்சிக்குப்போனவரே காரணமங்கேதாமுண்டோ
அச்சமில்லாதோர்து மெனவரசங்குகேட்டிடவே ௨௰

மக்கநபியுல்லாவில் மாலிக்காசுற்றதுவும்
அக்கமில்லாமதியைத்தோன்றவழைப்பித்ததுவும் ௨௧

பகிர்ந்துவிதங்காட்டிப் பழையபடியோட்டியதும்
இகந்துவந்தசேனையெரிம் சமான்கொண்டதுவும் ௨௨

இந்தநாளிந்தவொருத்திக்க ஆண்டிந்ததிங்கள்
அந்தவர்கள்சொல்லு மவலோழுதமவ்வொருத்தும் ௨௩

நன்றாமெனவரசனுள்ள தெல்லாந்தான்மகிழ்ந்து
நன்றாகச்சொன்னவர்க்கு நல்லவெகுமானமிட்டு ௨௪

கப்பல்தனியேறிக் கத்தனபிமுன்புசென்று
செப்பமுள்ளதினதிலே சேர்ந்தார்காணென்மாமன் ௨௫

பின்னுமொருசெய்தி பிரித்துரைப்பேனீர்கேளு
மன்னனெனுமாலிக்கு மானுமொருதங்கையை ௨௬

பெற்றானுறுப்பதில்லாப்பேரான முண்டமதாய்
வித்தாரமாய்ப்பொதிந்து வீட்டிலொருபெட்டகத்தில் ௪௭

ஆண்டுபதினாறளவு மவள்தசையைவைத்திருந்தாள்
கண்டுகபியிடத்திற் கொண்டுசென்றாள்துறையிலே ௪௮

உருவாக்கிப்பெண்ணாயுடனெழுப்பினார்கபிதான்
திருவானபெண்ணவளுஞ்சேர்ந்தாள்இகவாயில் ௪௯

இன்னமொருவனை யிப்போதுகேளரசே
அன்னதருவெல்லவரு மாநகர்வாழ்பூபன் ௫௰

முன்னோனுரவிபெற்ற மூலனருமதுமதனை
சொன்னமொழிமாறாத சுந்தரஞ்சேராவுத்தன்மேல் ௫௧

அன்புவைத்துக்காப்பாற்றும் ஆலகபிதம்மருகர்
இன்பமுடனே யெவர்களுமேதான்வாழ்த்த ௫௨

சேர்ந்திங்கரிஸ்லங்காற் சேரத்திருக்கிவோர்
காதகபிமருகர் தான்காணும்ஆகிபுலி ௫௩

உங்களிடத்திலுன்மகனையுச்சிகொள்ள
எந்தவிதம்ஆலிகனை யேகிக்கொல்வாரென்றுரைத்தான் ௫௪

செப்புமொழிகேட்டவுடன் சிதியிந்திராயனிடம்
தப்பானசொல்லுரைத்தாய் தான்பலகாடேகுகின்றான் ௫௫

ராசராசாக்கள் கலந்திடுகென்றேயுரையாய்
போசவென்னுமிந்திராயன் பொறிபெறவேகண்சிவந்து ௫௬

உச்சிதனைநோக்கியங் குரத்தேதுசொல்லலுற்றான்
மெய்ச்சவனிபோகவென்று மேன்மைபெறவேயுரைத்து ௫௭

மந்திரிமார்தன்னுடனே மற்றும்படைதன்னுடனே
தந்திரமாய்ச்சென்றறபு சார்ந்துமக்கமாநதிலே ௫௮

பேயனென்னும்ஆலிதனைப் பேய்க்குலிருந்தாகிடவே
காயந்தனையறுத்துக் கண்டமிட்டுத்தான்தலையை ௫௯

கொண்டுவந்தாற்சிறையிலே கூண்டதொருபரியும்தான்
இன்றுதருவேன்மகளை யேற்றகலியாணஞ்செய்து ௬௰

மருவாய்ப்பனிமதியை மகிழ்ச்சியுடனேயுனக்குத்
தருவேனவிதலைத் தந்திடவேயுரைத்தான் ௬௧

பெருவாரிபோர்ப்படையைப் போகவேயனுப்பி
கருவினமைப்பறியாக் கசடனிதுகூறிடவே ௬௨

பரனுரைத்திடவே மன்னனெனுமுச்சியவன்
சூரவேலாலிதனைத் துண்டுதுண்டாய்த்தானரிந்து ௬௩

சாரவேலாலிதலை தாங்கொண்டுவாரோனென்றான்
ஆரம்வயுத்தரவு அம்பாகத்தாருமென்றான் ௬௪

ஒப்பத்துடன்போய்வாவென் றேதினனிந்த்ராயன்
அப்போதங்குச்சி யகமகிழ்ந்துபொற்றேரில் ௬௫

செப்பத்துடன்தானேறிச் சென்றான்பிறவிந்தி
இப்பதியைவிட்டே யேகுவோமென்றன்னி ௬௬

ஆலிதலைக்கொண்டுவந்தோர்க் கச்சணமேயென்மகளைத்
தாலிகட்டிவாழ்ந்திடலாந் தாராதபேர்களெல்லாம் ௬௭

பிலிகட்டிச்சேலைகட்டிப்பேசும்புறவூர்க்கேகி
கூலிநெல்லுக்குத்திக்கொண்டு வயிற்றைக்கழிக்க ௬௮

கோலியிருப்பதென்னக் கூடுங்களுங்கர்க்குக்
சாலநெறியுந் தருகிக[illegible]ந்தானறிவீர் ௬௯

என்றரசன்சொல்லவங்கே விருந்தமற்றிராசாக்கள்
நன்றரசன்சொன்னதென்றே நாணமுற்றுங்கள்மனதில் ௭௰

காலிகண்டவெம்புலிபோற் கன்னெஞ்சுதானுழன்று
வாலிபத்தார்கேட்டவர்கள் வன்னெஞ்சராகினரே ௭௧

பனிமதியைக்கொள்ளவந்த பண்பானராசாக்கள்
இனிமையுடன்போர்க்கோல மெல்லோருந்தானெடுத்தார் ௭௨

இந்திராயன்தானுரைப்பா னிபுணியந்தன்பொன்முடிக்குத்
தந்திடும்சீராலிதலை தான்வேண்டுமென்றுரைத்தான் ௭௩

எண்ணிலாச்சேனை யெழுந்ததேயுச்சியுடன்
மண்ணிடந்தான்கொள்ளாது மந்திரிமார்கூட்டமது ௭௪

இத்தனையென்றெண்ணரிதங் கேந்தல்படையோர்கூட்டம்
வித்தகரையெண்ணரிது வேந்தர்களையெண்ணரிது ௭௫

குதிரைகளையெண்ணரிது கொடிகளையுமெண்ணரிது
சதிருடையவாட்காரர் தானெண்ணக்கூடாது ௭௬

சொன்னபலபாஷையுடன் தோன்றும்பலபாளையமாய்
மன்னவர்களின்னதென்றே மட்டிடவுங்கூடாது ௭௭

கடலேழும்வாராதுபோற் காபிர்படைதானெருங்கத்
திடனாகவுச்சிபடைச் சேரவேதானெழும்பி ௭௮

செல்லுறார்கள்மக்கமெங்குந் தின்னலிமையொக்கவே
உண்டானசேனையுட னுச்சியுமக்கேகினவே ௭௯

சங்குமுழங்குஞ் ஜயத்தொனியதுமுழங்கும்
எங்கும்படைநடக்க இபுலீசுமுன்னடந்தான் ௮௰

தங்கும்பெருவழியுந் தானதுவெல்லாங்கடந்தே
பொங்கும்புகழ்சிறந்த பூமிக்கெல்லாநாயகமாம் ௮௧

மக்கத்தைநாடிவர மலைபோலவேபிணங்கள்
திக்குதொறுங்கண்டங்கன் சேர்ந்தகண்ணைப்பொத்தினரே ௮௨

இக்குத்துஉச்சியவன் என்னமலையொன்றுரைத்தான்
தக்குகளில்லாதஅலி தாம்வெட்டிக்கட்டையென்றார் ௮௩

செத்தபிணத்தைக்கண்டே திகைத்துக்கண்பொத்தினனே
மற்றவர்களெல்லா மதிமயங்கிமூர்ச்சையிட்டார் ௮௪

கண்பொத்திநின்றவன் தான்கபீகேட்டனமூர்ச்செறிந்தான்
திண்பட்டநெஞ்சந் திடுக்கிட்டேநின்றவன்தான் ௮௫

வம்பட்டசேனைகண்டீர் மன்னவனேயஞ்சலென்றார்
திகைத்திட்டவனுமப்போ செப்பினனிவ்வசனம் ௮௬

இங்குவந்துமாண்டவர்கள் எண்ணிறைமில்லைகாண்
உங்கள்மனம்பெருக வொன்றிற்குமஞ்சாதீர் ௮௭

ஓர்நொடிக்குள்அலிதன்னை யுங்களிடந்தந்திடுவேன்
சேரநிறைகுமெனச் செப்பினனுஉச்சியவன் ௮௮

கூடாரந்தான்விரித்தே கோதாரியாம்படைகள்
வாடாதிறங்கினதை வள்ளல்நபிகாவல்வைத்த ௮௯

வழிதுறவிற்றுனிருந்த வாய்த்தஅசுகாபிகண்டி
பரிகாடிவந்ததென்றே பார்த்தவுடனேபோடி ௯௰

ஆலமபிவீற்றிருக்குமாளைபள்ளிவாசல்வந்தார்
சாலவேயாவகபி தஞ்சரணிலேபணிந்தார் ௯௧

திடுக்கிட்டுடலமெல்லாஞ் செப்புமொழியின்னதென
விடுத்துரைக்கமாட்டாமல் மெய்தழன்றுநிற்கிறதை ௯௨

கண்டோமியல்லாநாந் காவலரேயென்பயந்தீர்
என்றுநபிகேட்க வியம்புவார்தூதரப்போ ௯௩

எங்கள்நபியே யானென்னசொல்வதென்றார்
பங்கப்படுங்காபிர் படையேழ்சமுத்திரம்போல் ௯௪

29

முன்வந்தசேனையைப்போல் மூன்நூறுபங்கதிகம்
இன்னமொருநாழிகையில் இங்குவருமென்றுரைத்தார் ௬௫

இங்குவருமென்றுரைத்த ஏகதல்மொழியைக்கேட்டே
மங்குல்குடையிட்டுவரும் வள்ளல்நபியேதுரைப்பார் ௬௬

போனபடையொழிந்து போனதேனாமிருந்தோம்
ஏனமற்றவிப்படைக்கி யான்போறேனென்றுநபி ௬௭

சொன்னவுடனெல்லவருஞ் சொல்லுவார்நன்னபிமுன்
பின்னமில்லேயிங்கிருங்கள் பேராணைநன்னபியே ௬௮

அந்தப்படையைவென்றிங் கடியேங்கள்வருவமென்று
இந்தப்படிபேசி யிருக்குமந்தவேளையிலே ௬௯

சொல்லிருக்குமங்கமதைச் சூழ்ந்தார்கள்உச்சிபடை
கல்லுங்கணிந்துவிடுங் காபிர்படைவெள்ளமதால் ௭௰

கோதாரியாகக் குலேகுலேக்தார்மக்கமெல்லாம்
வேதன்விதியை வேறொருவர்தட்டுவரோ ௭௧

எண்டிசையெல்லாம்படைத்த ஏகனுவந்திடுவான்
தண்டிவரும்விதிக்குச் சபூறுசெய்திங்கிருங்கள் ௭௨

வானத்தின்கீழிருந்து வரும்விதிக்குநாம்பயந்தால்
சினத்துத்தான்மாறுந் தேசமெங்குந்தான்சிரிக்கும் ௭௩

கோனற்றுப்போனுக்காற் கொள்ளாமல்நாம்பயந்து
தானுற்றிடவேண்டுந் தரிப்பலனைவெற்றிகொள்ள ௭௪

படைத்தோனுதவியுண்டு பாரினிவோர்தினைவாய்ச்
சடைத்தாற்றிறக்கேடு தான்முன்னேவந்துவிடும் ௭௫

ஓர்மையால்நாமிருந்தா லுள்ளபடையெவ்வளவு
ஆனாலும்நீங்கள்படைக் கஞ்சாமலிங்கிருங்கள் ௭௬

நான்போறேனிப்படைக்கு நாடுதனைக்காருமென்றே
தின்தீன்எனவே செய்யிதுற்றசூல்நபிதாம் ௭௭

தான்போகவேண்டுமென்றே சஃபென்னும்வாம்பரியைக்
கோன்முறைமைநன்னபியுங் கொண்டுவரச்சொல்லினரே ௭௮

உரிதானசிற்றெறும்பு ஒக்கவளேந்ததுபோல்
அரிதானஉச்சிபடை யங்கங்கேதானடர ௭௯

கத்தாவைநாடிக் கவசமணிந்தார்நபிதாம்
வித்தாரமானஇறை விண்டமுனிவாற்படைத்த ௮௰

வலையத்தைத்தானேத்தி வாரும்பிறகேநபியே
கல்லாருஅக்பரென்றே ஆலாபியுல்லாதாம் ௱௧௧

பூமியதிர்ந்துரைக்கும் போஜனென்னுமாநபியே
ஆமினென்றுங்கையார அன்னிபொருபிடிமண் ௱௧௨

விட்டெறிந்தாங்கள்படை வெல்லுவோமென்றுரைக்கும்
கட்டுகளில்லாத சங்கைநபிதம்பிறகே ௱௧௩

பச்சைப்பரியேறிப் பண்பபூபக்கர்வந்து
இச்சைதரும்நபியே இன்றுங்களவல்லயத்தில் ௱௧௪

நல்லமுனைதிப்புகைய நாள்கண்டேனந்நபியே
சொல்லும்விருந்துவந்தாற் றுய்யமுனைதான்புகையும் ௱௧௫

பொல்லாப்படைவரினும் பொன்னின்முனைதான்புகையும்
இல்லார்ந்துநீரு மினிப்படைக்குநான்போதும் ௱௧௬

சொல்லியிருக்கையிலே தோன்றிஞரேயுமறு
வெல்லுவேனென்போதும் வேதநபியேயிருங்கள் ௱௧௭

அஞ்சப்பொருவேனுன் அபூபக்கரேயிங்கிரும்நீர்
தஞ்சமெவர்க்குந் தாயகமதாகிவரும் ௱௧௮

உமறுமொழிசொல்போதி னுதுமானாங்குவந்தார்
குமிறுமிடிபொற்பரிமேற் கூடிவந்தங்கிதுசொல்வார் ௱௧௯

எங்கள்திருநபியே யின்றுங்கள்வல்லயத்தில்
அங்கியதுகண்டேன் அடியேனையேவுமிலோ ௧௨௰

வெட்டுவேன்நான்போதும் வெற்றிபெறக்கேட்பதுநீர்
அட்டியில்லாமற்போறே னண்டகையேயென்றுரைத்தார் ௧௨௧

எப்படிப்படைமேலே எந்தலநீர்போவீர்கள்
அப்போதுநந்நபிமுன் ஐயெட்டாயிரரும் ௧௨௨

குப்போடுரைத்திவோர் கொண்டல்நபியேயெங்களைத்
தப்பாமற்றுனே சண்டைக்கனுப்பிவிடில் ௧௨௩

இபுனியனைவெட்டியவா ளின்னம்செத்தமோடுவதாற்
புவியிலின்படையிற் போய்ப்புகுந்துநாங்களெல்லாம் ௧௨௪

கத்திதனைக்கழுவிக் கண்டதுண்டமாயரிந்து
வெற்றியதுபெறுவோம் வேதநபியேயாங்கள் ௧௨௫

வருகிறோமெங்களுக்கு வாருமிடைதாருமென்றார்
பொருகிறோமென்றுரைக்கப் புத்தியுடன்கேட்டிருந்தார் ௧௨௬

அப்போதலியார்தாம் ஆலிநபிமுன்புவந்தங்
இப்போதுவந்தபடை எந்தலைக்குவந்தபடை ௧௨௭

எனைநாடிவந்தபடைக் கெங்கோம்போவமென்றுரா
அனைவோருமிங்கிருங்கள் அடியேன்போய்வென்றிடுவேன் ௧௨௮

வென்றுவாரதிருக்கில் வீரமென்னை ஆண்மையென்ன
கொன்றுவாராதிருக்கிற் குரகதமென்கம்பமென்ன ௧௨௯

அடையலரைவெல்லாவிடில் அலியென்றபேருமென்ன
தடையறவேவீரபட்டந் தாமெனக்குத்தாருமென்றார் ௧௩௦

காபிர்களைவெல்லாவிடிற்கத்தனலிபேரனோ
தாபரமாயாலநபி தம்மருகனென்பானேன் ௧௩௧

கொஞ்சப்படுங்காபிர்படைக் கூட்டத்திரளானதுவை
அஞ்சப்பொருதாமல்விடில் அபித்தாலிப்தன்மகனோ ௧௩௨

இப்படையைவெட்டியிங்க ளிசுலாமிற்சேர்க்காவிடில்
மெய்ப்பாரபித்தாலிப் வேற்றிமகனென்பாரோ ௧௩௩

எண்ணுமல்வந்திருக்கு மேகக்குபிர்ப்படையிற்
கண்ணுறவின்னமொரு கடிகைக்குட்செல்வேனென் ௧௩௪

அலியார்சபீதருமைத் தாளவிடைதான்கேட்டார்
சலியாதநந்நபிதான் சந்தோஷமாயலிக்கு ௧௩௫

வெட்டிவாருமென்றே விடைகொடுத்தாராலநபி
கெட்டியெனவீறலிதான் கெம்பீரமாயெழுந்தே ௧௩௬

கம்பர்தனைக்கூவிக்கடி துபரியிங்கிடென்றார்
தம்பமெனக்கம்பரப்போ சங்கையுள்ளதுல்துலதை ௧௩௭

மெத்தையிட்டுக்காலில் விலங்கவேதண்டையிட்டு
வுற்றகுசையதன்னி லொக்கவேமணியணிந்து ௧௩௮

துல்துல்தனைக்கொண்டு வந்தார்துங்கரலிமுன்பாக
வெல்வேனென்றவீரப்பட்டம் வீரலிதானணிந்தே ௧௩௯

வீரபட்டங்கட்டி விருதுமெடுத்தேயணிந்து
ஆரவேகம்பர்பரி யானதுவாற்றெட்டுவர ௧௪௦

வாசல்வழிபோகாமல் வள்ளலலிதுல்துலதைக்
காசகலுங்கோட்டைக் கடலிலேபாய்ந்ததப்போ ௧௪௧

நாயனலிதானங்கன் காற்பத்திராயிரரைப்
பாயும்புலியலிக்குப் பண்பானாற்றலையாய் ௧௪௨

நேசமுடன்செல்லுமென நீதிநபிதாமுரைத்தார்
வாசமுடன்செய்கவென வள்ளலலிதானெழுந்தார் ௧௪௩

தாயகமாகம்பிறகுல் சங்கையுரைகேட்டெவரும்
ஆயுதமெல்லாமணிந்தங் காசுகபிமார்களெல்லாம ௧௪௪

சென்றார்பெரும்படைக்குச் சிங்காலிமுன்னாலே
நன்றாகுமென்று நடந்ததுமாதுல்துலது ௧௪௫

வந்தபடையெங்கெனவே வாய்திறந்ததாந்துலுதுல்
அந்தமுள்ளஅலியவர் தோளும்பூரிக்குமே ௧௪௬

மாற்றார்களைப்பார்த்தங்கள் மன்னரலிதங்கரவாள்
ஆத்திர்கள்நீங்களென அவ்வாளும்வாய்பிளந்த ௧௪௭

வாள்பிடித்தபேர்கள் வரிசையுடனேநடக்க
வேல்பிடித்தபேர்கள்பரி விருகச்சென்றதுவே ௧௪௮

சென்றபடையைச் சேர்ந்தெதிரேகண்டவுடன்
அன்றவருமேயெழுந்தங் காகும்பரிமேலேறி ௧௪௯

கெச்சிதனில்வகுத்துக் கெம்பீரத்தோடும்உச்சி
மெய்ச்சித்துநாம்பொருவோ மென்றுமனமேமகிழ்ந்து ௧௫௰

மலமிடமுமுன்னும்பின்னும் வாயப்பாயணிவகுத்து
நலமில்லாதெவ்விடத்தும் நரலேபோலேசெறிந்த ௧௫௧

படைவீரரைப்பார்த்துப் பகையானஉச்சிசொல்வான்
விடையானஆலிதன்னை வெட்டமற்கைப்பிடியாய் ௧௫௨

சென்றுகொண்டுவந்தவனைச் சின்னஞ்சின்னமாயரிந்து
அன்றுசெய்தபாதகத்துக் காகத்தானிப்போது ௧௫௩

சதையுடனேடச்சரிசிந் தான்கொடுத்துத்தின்னெனவே
கதையாலடித்துயிரைக் காலிவிடக்காட்டெனவே ௧௫௪

வீரமுரைத்துச்சியவன் வெற்றுமணிவகுத்தங்
காரமேதான்வளைந்தா ஆலிபடையத்தனையும் ௧௫௫

சிங்கத்தையாட்டினங்கள் சேரவளைத்தனபோற்
பங்கத்தர்சூழ்ந்தார்கள் பயகாம்பர்சேனைகளை ௧௫௬

அஞ்சிமிகப்பயந்தங் காதியேகாவிலன
மிஞ்சியிருபடையு மீறியேதானெதிர்த்தார் ௧௫௭

உச்சியவன்படையும் ஓகோவெனமுழங்கச்
செர்ச்சித்திருபடையும் கிட்டிமுட்டியேபொருதார் ௧௫௮

காலாட்படையுடனே காலாட்களுமெதிர்த்தா
மேலாட்படையுடனே மேலாட்களுமெதிர்த்தார் ௧௫௯

பட்டையக்காரருடன் பட்டையங்கொண்டே பொருதார்
ஒட்டகைக்காரருடன் ஒட்டகைகொண்டே பொருதார் ௧௬௰

வேற்காரர்தன்னுடனே வேற்காரரும்பொருதார்
மாற்காரர்தன்னுடனே மாற்காரரும்பொருதார் ௧௬௧

வாட்காரர்தன்னுடனே வாட்காரரும்பொருதார்
பாழ்க்காரனுச்சிபடை பாரைவளைந்தனபோல் ௧௬௨

கார்மழைசொரிந்தனபோற் கடுவாளிதான்சொரிந்தார்
போர்க்களிலேநின்று புத்தியொன்றுமேதெரியா ௧௬௩

பொல்லார்கள்விட்டகணை போய்நிலத்தின்வீழ்த்திடுமே
நல்லார்க்குநல்லாராய்நானிலமெல்லாம்புகழும் ௧௬௪

அசுகாபிமார்களெல்லாம் ஆவிவெட்டுப்பின்னாலே
ஒசுவாகநின்றங் குடையோனைத்தானினைந்து ௧௬௫

நல்லார்கள்விட்டகணை நாடியொன்றிற்காயிரமாய்ப்
பொல்லாதகாபிர்களைப் போய்நிலத்தின்வீழ்த்திடுமே ௧௬௬

அசுகாபிமார்களெல்லாம் ஆவிவெட்டுமுன்னாலே
ஒசுவாகவெட்டவென வுற்றுக்கிவெட்டுவர்கள் ௧௬௭

மாற்றான்தானேமறைந்தான் மன்னுதியாற்றமல்
பார்த்தாற்பகலிருட்டாய்ப்பாரவாள்தன்னொளிவு ௧௬௮

என்றுமிடைக்குமென எல்லவரும்வெட்டினதாற்
குன்றுகுன்றுபோலேகுவிந்ததேயாட்பிணங்கள் ௧௬௯

வட்டமுலைக்காசைகொண்டு வந்தபடைமன்னரெல்லாம்
இட்டமுடனிரண்டுதுண்டாய்ச் சேர்ந்தார்கள்பூமியிலே ௧௭௰

ஒருத்திதனக்காசைகொண்ட வுல்லாசமன்னரெல்லாம்
பருத்திடும்பன்னிரண்டாய்ப் பட்டார்படைக்களத்தில் ௧௭௧

வீணாசைகொண்டவர்கள் வீழ்ந்தார்கள்துண்டுதுண்டாய்
நாணார்கள்நாய்நரிக்கு நல்லவிருந்தென்றும்அங்கே ௧௭௨

ஆனைகளைகாதறுத்தே ஆனமுரம்பாருமென்பார்
பூனையெனக்காலைவெட்டிப் போந்தவராலென்றிடுவார் ௧௭௩

தும்பியிடன்கொம்பைவெட்டிச் சூழ்ந்தபனையென்றிடுவார்
தும்பிக்கைதலைவெட்டித் துடிக்குதிதுபாருமென்பார் ௧௭௪

வாலயத்துப்பெண்ணெனவே வாய்ப்பாகவெட்டிவோர்
பாலேசிகரொவ்வாத பார்வேந்தருமயங்கி கஎரு

பயந்துவிழுந்து பதைப்பார்கள்போர்க்களத்தில்
கயந்துமொழிசொன்னவரை காடார்கள்போர்க்களத்தில் கஎசு

மட்டுந்தெரியாது மாண்டார்கள்காபிரெல்லாம்
திட்டந்தெரியாத தேர்களையெல்லாமெடுத்து கஎஎ

பம்பரங்கள்போலே படுகளமேலேயெறிவார்
அம்பரத்தின்வானவரு மந்தோவெனத்திகைப்பார் கஎஅ

கம்பர்கம்பவென்றேகலங்குவார்காபிரெல்லாம்
நம்புகின்றநாடிழந்தோ ராமினியென்செய்வமெனு கஎகூ

செத்திங்கப்பூசலிலே நின்றறபியேதுசொல்வார்
புத்திகெட்டகாபிர்களே போய்விடுங்களாலிவந்தால் கஅ௦

வெற்றிநுங்கட்கேதுலகில்வெட்டுண்டுபோவீர்கள்
சத்தியமீதெங்களலி தாமேறிச்சாரிவரும் கஅக

பயிரின்குசைநிகழ்ந்தாற் பாய்ந்துகொல்லுந்துல்துலது
செரியக்கிடக்கும்பிண நேராவீர்நீங்களெல்லாம் கஅஉ

வீணரே போய்விடுங்கள் விரசிலென்றுரப்போது
பூணவேயாலியங்கு போந்தாரிந்திராயன்படை கஅங

கடலேழ்வளைந்ததுபோல் கபீபுபடையைவளைந்தார்
திடனுகந்துல்துலது சென்றுளப்பிந்நின்றதுவே கஅச

நகைத்தாராலியதனை நற்பரியச்சைநகைகண்டே
பகைத்தார்கள்மேலே பந்தெனவேதான்சுழலும் கஅரு

காரிலேசெல்லுந்துல்துல் கம்பர்முன்னேசெல்லுந்துல்துல்
பாரிலேசெல்லுந்துல்துல் படைக்களத்தேசெல்லுந்துல்துல் கஅசு

சேரிலேசெல்லுந்துல்துல் செற்றிக்கைமேசெல்லுந்துல்துல
தேரிலேசெல்லுந்துல்துல் சேனையிலேசெல்லுந்துல்துல் கஅஎ

தொலையிலேசெல்லுந்துல்துல் தூர்ங்கிவந்துநிற்குந்துல்துல்
மலையிலேசெல்லுந்துல்துல் மதகரிமுன்செல்லுந்துல்துல் கஅஅ

அலையிலேசெல்லுந்துல்துல் ஆடிநிற்குந்துல்துலது
தலையிலேசெல்லுந்துல்துல் தானைகளிற்செல்லுந்துல்துல் கஅகூ

அங்கங்கேபார்த்தாலு மாலிகப்பர்துல்துலது
எங்கெங்கேபார்த்தாலு மெத்தனையோதுல்துலதா ககூ௦

என்னபுதுமையிதிங் கெங்கெங்குகம்பர் துல்துல்
வன்னமுள்ளகம்பமொன்றே வந்தவெல்லாங்கம்பரோ கசுக

என்றுபலசொல்லிமன தேங்கியேயுச்சியவன்
மன்றுநன்றிங்காலிதலை நாமறுக்கவேண்டுமென கசுஉ

ஒருகோடிமாவுடனே வுச்சிவந்தாருலிமுன்னே
தருவேலார்கையுடனே சங்கையலிமுன்புவந்தான் கசுங

நச்சம்புதான்றொடுத்தே நபிதம்மசுகாபிகளை
யுச்சிதமோடேசிலரை யுறுங்கோபமாய்வதைத்தான் கசுச

நாயனருளொளிவுநன்றாகத்தானிறங்கி
நேயமுடன்பச்சைப்புறா நிகராய்ச்சுவனடைந்தார் கசுரு

உச்சியுடனலி யுறப்பொருதாரந்நேரம்
கச்சியணிகும்பமுலைக் கன்னிபணிமதிக்காய் கசுசா

அச்சிட்டபொற்றொளி னலியுடனேபொருதான்
மிச்சவர்பொருதல் மேதினியிலேகோடிதாய் கசுஎ

காற்றுமழையுங் கனபுயலுமொன்றாக
நீற்றுக்குளம்பாய்ந்ததுபோல் நின்றுபொருந்தனரே கசுஅ

ஆங்கவன்றன்சேனைமிதித் தந்தரத்திலேவிடுவார்
பாங்கினிற்பேர்களெல்லாம் பாய்பகழிதான்விடுவார் கசுகூ

மழைத்தாரைபோலவிவை வந்துகணைமூடியதே
திழைத்தாருமம்புவந்து கிட்டியலிமேற்படவே உ௱

சற்றேயுடல்நெறிப்பார் தாமெதுங்கியவ்விடத்தில்
மற்றொன்றுஞ்செய்யாமல் மன்னரலிநிற்கையிலே உ௱க

மூடிந்துவிடப்போகுதென மோசமுள்ளவுச்சிசொல்வான்
கடிந்தலியார்முன்னில்நின்றுகட்டுரைகள்தான்வகுப்பான் உ௱உ

என்சேனையுள்ளவரை இப்போதுகொன்றனையே
யுன்சேனைதன்னையொருநொடியிலேவதைப்பேன் உ௱ங

இபுனியந்தனைக்கொல்லினு மென்னையவன்போல்நினைத்தாய்
அவனிதனிலுன்னையிப்போ தரைநொடியிற்கொன்றுமுழக்கி உ௱ச

தலைகொண்டுபோகவந்தேன் தாநெளித்துக்கொண்டாலும்
கொலைசெய்துனையழித்துக் கொண்டுனதுதன்சிரசை உ௱ரு

பனிமதிக்குத்தான்பரிசம்பண்பாகவேகொடுத்து
இனிமையுடன்சேரவிட்டா லென்னைப்போலேமையுண்டோ உ௱சா

வந்துநீயென்பதத்தில் வண்மையுடன்தாழாவிட்டால்
இந்தச்சணத்துயிரை யிழப்பாயதற்குமுன்னே ௨௱௭

வாடாஅலியேயென் வன்னப்பதந்தாழ்ந்திடத்தான்
போடாநீயுன்னகரம் பதிகெட்டவீணலியே ௨௱௮

அப்போடேயென்முன்னி லாராலும்நிற்கரிது
என்பேரறியாயோ என்புத்திகெட்டாய்நீ ௨௱௯

என்றுனதுகேட்டக்கோலிதான்கோபங்கொண்டு
ஒன்றேனும்புத்தியில்லா உலுத்தனைப்பார்த்தேயுரைப்பாய் ௨௱௰

நேரோடாவீறலியை நிந்தனைகள்பேசுவது
ஆரோடாசொன்னு பசங்கியங்களுள்ளவனே ௨௧௧

சிச்சிநீகெட்டுச் சேதமாய்ப்போகுமுன்னே
உச்சியென்றபேயே யிறுதிபிசுலாத்தினில்வா ௨௧௨

மவுத்துகொடிக்குமுன்னே வந்துவிடுமுன்றனே
பவுத்துனக்குவேண்டுமென்றார் பயகாம்பர்தினதிலே ௨௧௩

சீக்கிரத்தில்வந்துவிடு சேரமனையில்லாவிட்டால்
நாக்கறுத்திங்குன்சிரசை நாளின்றுநாய்நரிக்கும் ௨௧௪

பேய்க்கும்விருந்திட்டிடுவேன் பேயாவணங்கிறையை
நோய்க்குமருந்துண்டுமன நோய்க்குத்தானிவ்வுலகில் ௨௧௫

ஆர்க்குமருந்துண்டோவென் றுல்சொலவுச்சியவன்
தீர்க்கமனம்வெகுந்து செக்கெருப்பீர்கனகாட்ட ௨௧௬

யானைச்சுழுட்டியவன் வண்மையலிதன்சிரமேல்
கோழைப்படாதோர்வசனங் கூறியேயுச்சியவன் ௨௧௭

பாகமறியாதவுச்சி பதைபதமல்வெட்டினனே
வேகமதாயுச்சி வெருண்டோடிவெட்டினனே ௨௧௮

வெட்டையலிதட்டி விண்டார்கள்வீறுகை
முட்டிலகப்பட்டேநீ மோசமாய்ப்போய்வருவாய் ௨௧௯

கட்டைமாறேயுனக்குக் காலமதுகாணுச்சு
கட்டையதுபண்ணாமல் நீதான்வெட்டினையேடா ௨௨௦

தீனைநிலைவிறுத்துஞ் சிக்கலைதங்காவாள்
வானில்வழிகாட்டுமுன்னே வந்திடுகற்றீனதிலே ௨௨௧

ஆயிரப்போராளுலை மசைந்துவெட்டுமொலிசைவாள்
பாயிரவேதம்பகருமலிதங்காவாள் ௨௨௨

வேற்றுமனிசர்வந்தால் விள்ளுமேஆலிகைவாள்
பாத்திமாநாச்சியுடன் பகலெல்லாம்பேசிடும்வாள் ௨௨௩

வானச்சிறையாற்றுங்கு மன்னரலிதங்கரவாள்
தீனிற்குபிரர்களைச் சேர்த்தவலிதங்கரவாள் ௨௨௪

சக்கூனைவென்ற தடமாருமாலிகைவாள்
மிககவெகுகாபிர்களை வென்றவெற்றியாலிகைவாள் ௨௨௫

வாளைத்தான்பாரெனவே வள்ளலலிவாள்வீசித்தார்
கோழைக்காரவுச்சிபடை கூண்டதிலேதான்சிறிது ௨௨௬

அப்போதுமாண்டவர்க ளம்பதினாயிரவர்
குப்புறவேவீழ்ந்தபரி கூறிலொருகோடி ௨௨௭

இருநூறுலெட்ச மிந்தராயன்காலாட்கள்
ஒருநூறுலெட்ச முயாரரசர்தாம்மாண்டார் ௨௨௮

தேர்கள்நூறாயிரங்கள் செத்தானதானதுவே
பேர்கொள்மாமாருதம்போற் பேசுமொருநொடிக்குள் ௨௨௯

இந்தப்படியோர்வீச்சி லிரண்டிரண்டாய்மாண்டதுவே
சிந்தைகெடுமுச்சி சிரமொன்றுதுண்டிரண்டாய் ௨௩௰

விழுந்தான்பனைமரம்போல் வீறலிகைவெட்டாலே
எழுந்தாரவன்சேனை யேகமாயோட்டங்கொண்டார் ௨௩௧

ஊறுபட்டேயுச்சி யுடற்குளிர்ந்துவீழ்க்கவுடன்
தேறுதலையற்றுத் தியங்கிவந்துபார்த்தார்கள் ௨௩௨

கண்டம்ரெண்டுதுண்டாக கண்டம்கண்டமாயினனே
தண்டாமற்சோரியறு தாங்கடற்போலோடியதே ௨௩௩

வாலயமாங்காபிரவர் வம்படையில்மாண்டவனாக்
காலனுயிர்வாங்கக் கனபாடுபட்டனரே ௨௩௪

மாருந்தனப்போர்புயத்து மன்னாலிதான்சினந்தால்
ஆருங்கலிக்கெதிரி யாகாரென்றேறுடுமென்றுள் ௨௩௫

ஊரோடிஞமுமொக்க வோடுவோமென்றிடுவார்
பாரோடிஞருநம் பரதேசம்போவோமென்பார் ௨௩௬

ஓடிவாளைப்பின்தொடர்ந்தங் கோடியலிவெட்டினரே
ஆடும்பரிதுல்துலது அத்திசையைச்சுற்றிவரும் ௨௩௭

புல்வாய்க்குழுவிற் புலிபாய்ந்தவாறதுபோல்
கல்வாய்ப்புயிப்படைதான் காளைவந்துகிட்டாதென்ன ௨௩௮

வெட்டியலிகைசலித்தார் வேந்தன்படைதன்னையெல்லாம்
மட்டில்லாச்சேனையெல்லா மாண்டதுகாணன்னேரம் ௨௩௯

வெள்ளெழுதிக்கப்பயிர் விட்டுவிளைவ்வாராதுபோற்
பாற்குளத்தவளைப் பாய்ந்தோடும்வாராதுபோல் ௨௪௰

மகரக்கடல்தனிலே வன்சுறாப்பாய்ந்ததுபோற்
சிகரமெனுமானைகளும் சேரமடிந்தனவே ௨௪௧

வழுக்காள்பறைந்துவந்த லங்காபிரானவர்கள்
முழுத்தாளியோட முறிக்கியல்வெட்டினரே ௨௪௨

அந்தரத்தினின்றங் கதிர்த்தேசத்தமொன்று
உந்தனிடவாட்டலைக்கு முந்தமக்குமோ அல்லியே ௨௪௩

எங்களுடமனுவமை யெல்லாமிப்போபடைத்தேன்
இந்தவிதமாகாதிந் தென்படைப்புத்தான்மடிந்தா ௨௪௪

வாழைப்பழமோகாய் வகுத்தவுயிருந்தமக்குக்
கோழைப்படமனுவைக் கூட்டிவெட்டீரோமனே ௨௪௫

பாலமுறுமந்தரத்தைப் பரிந்தசத்தம்வந்ததுவே
ஆலகமெருகர் அங்கைபிழக்கும்வாட்டான் ௨௪௬

சத்தமதுகேட்டவுடன் சங்கையுள்ளதல்புகழு
கத்தனருளாலொதுங்கிக் கண்டவுடன்சகுனி ௨௪௭

நடுங்கியல்லிகையைவிட்டே நன்றாகவேயுறையில்
ஒடுங்கியுறைந்திடவே யுத்தபரமானதுவே ௨௪௮

வளையிற்புகுந்ததுபோல் வாளுமுறைபுக்கியதே
தாளையற்றவீரபட்டந் தானுமடிபுக்கியதே ௨௪௯

அற்றமடியில்விழ ஆனதால்தால்மீண்டதுவே
சற்றும்பரிபின்போகா தானதுபின்வாங்கியதே ௨௫௰

முன்வைத்தகாலதனை முன்வைப்பதல்லாது
பின்வைக்கமாட்டாதே பின்வைத்ததேதெனவே ௨௫௧

பரிவிட்டிறங்கியல்லி பாய்ப்பரியைக்கம்பர்கையில்
சரிவிட்டுநில்லெனவே தான்படையைத்தான்துறந்த ௨௫௨

அல்லிகையைவிட்டிறங்கி ஆனவர்கள்தல்தலைது
கல்லியிதெனவாம்பரியுங் கைவாளுங்கம்பருந்தான் ௨௫௩

இன்னதிசையென்றறியார் பேசியதங்கள்னேரம்
கன்னமாய்ப்படையை காடியல்தான்நடத்தி ௨௫௪

பொன்னைகொள்ளைகொண்டே போறானேகோடிகளும்
மின்னுகிரீடங்களும் வெண்டாளமாலைகளும் ௨௫௫

தம்பக்குடங்களுடன் தங்காரத்தினங்கள்
பொங்கத்துடனெடுத்து போந்ததிலும்மெடுத்து ௨௫௬

ஆனைகுதிரைகளும் ஆடைகளுங்கொள்ளைகொண்டு
தானைகளில்மாமலைபோற் றுமெடுத்தகொள்ளைகளைக் ௨௫௭

கொண்டுவந்தாரெல்லவரும் கோமானயிதிருமுன்
அன்றுவந்துதான் குவித்தாராலயமுன்பாக ௨௫௮

வண்டர்களைத்தானெடுக்கும் வள்ளலவியாருஞ்சென்றார்
கண்டங்கவியானைக் கால்நடையேதென்றாரயி ௨௫௯

எந்தம்மாசேயெழில் பெறுமெம்மாதுலரோ
தந்தவன்கொண்டேகிறக்கால் தான்வழக்குண்டோரயியே ௨௬௰

அந்தமொழிகேட்டவுடனதிரயியேதுரைப்பார்
சொந்தமுள்ளாகன்மருகர் துய்பசவுத்தென்றுணர்த்தார் ௨௬௧

கொள்ளைகொண்டபொன்னை யெல்லாங்கொண்டுவந்தபேர்களுக்கு
எள்ளளவுள்ளமானிடர்க்கும் எளியோரவர்களுக்கும் ௨௬௨

நேருடனேபகிர்ந்திந்தார் நீதிரயியெல்லவர்க்கும்
ஊருடனேதான்மேபாக வுத்தகணக்கின்படிக்கு ௨௬௩

ஆற்றிலேக்கிராக மவரவர்க்குத்தான்பகிர்ந்தார்
பார்த்திபாராம்ஆலரயி பாங்காபொருகாசும் ௨௬௪

அவியார்தமக்களித்தா ரன்றவியுகதான்வாங்கிச்
சவியாமல்வெட்டிலாங்தோர தந்தாரொருகாசெனவே ௨௬௫

உன்னிநார்காறகிமே வுண்டானசெங்கெருப்பு
வன்னியெரும்பியவி ல்ன்பழத்தைக்சுட்டிடவே ௨௬௬

ஆவியசந்துவிழ யாலரயிதாமெடுத்தார்
கோவிநினைத்ததென்ன கூறுமென்றாராலரயி ௨௬௭

காசொன்றெனநினைத்தேன் கண்டதெந்தன்கால்நெருப்பு
மாசதனைநீர்நினைத்திர் மன்னவனுக்கேற்றிடுமோ ௨௬௮

தங்கமாயிப்புவியைத் தந்திடென்றாற்றந்திடுவான்
பங்கம்வரும்சொர்க்கநகர் பண்டானவாழ்வுக்கென்றார் ௨௬௯

ஆகையாலிப்புவியி லாசையுள்ளார்தங்களுக்கு
மாப்புகையாற்போய் விடுமேமண்மேல்நிமைக்குமுன்னே ௨௭௰

அவ்வுலகுப்பேறான்தனக்கே யாசைவையுநீரயியே
இவ்வுலகிலாசைவைத்தா வீடேறவாரிலையே ௨௭௧

முந்நாளவிபொருநாள் மோட்சஆசுகாயிகளும்
அந்நாளில்யார்களெல்லா மன்பாயிருக்கையிலே ௨௭௨

வந்தாரொருமிசிக்கின் வண்மைபெறுங்கூட்டமதில
எந்தாலுமென்பசிக்கிங் கெதுவேனுந்தாருமென்றார் ௨௭௩

அந்தாவிருக்கிறவ ராலியிடங்கேளுமென்றார்
கொந்தாலரோஅலியே கூறுமெனக்கேதேனும் ௨௭௪

அல்லாவுக்காகவெனக் காகும்ரண்டாயிரங்காசு
நல்லாகத்தங்கமது நன்றாகத்தாருமென்றான் ௨௭௫

எளியோருரைத்திடவே இன்பமுடனேயாலி
வழியோடளித்திடுவேன் உண்மைஅல்பக்கீறே ௨௭௬

இங்கிருநீரொன்றுசொல்லி ஏகினார்தங்கள்மனை
நங்கிலுடன்பாத்திமத்தை நன்றாகததான்கூவி ௨௭௭

சபையிலிருந்ததுவும் தான்பக்கீர்வந்ததுவும்
உபையமென ஆதிக்காயுத்தரவுகேட்டதுவும் ௨௭௮

தாமேறவெனவுரைத்துத் தான்வந்தேனுங்களிடம்
வேறேதுபுத்திவிளம்பு மென்றார்பாத்திமத்து ௨௭௯

மனைவியுமையன்றி மற்றொன்றுவேறிங்கிலையே
வினவுகின்றீரேதுமுண்டோ விள்ளுமென்றார்பாத்திமத்து ௨௮௦

என்னையல்லாலுங்களிடம் ஏதெனிலுங்காணாது
நன்னயமாயுங்கள்மகன் நன்றிஅசனார்தமையும் ௨௮௧

என்னிடத்தில்நீயு மின்றுபொழுதாகுமுன்னே
உன்னிடத்திற்சேர்ப்பனென்ன வுண்மையலிதாருரைத்தார் ௨௮௨

அசனாரைக்கைக்கொடுத்தார் அன்றலிதாக்கொண்டேகி
வசமாய்த்தெருவூடே வண்மையலியேகையிலே ௨௮௩

கண்டானொருகுதன் கத்தனலியோடசனை
நன்றாகநீரலியே நாடியெங்கன்போவதென்றான் ௨௮௪

என்றாலிமகவை யின்றவனைக்கிடுவைத்து
கொண்டோர்கலக்கமின்றிக் கூறுகடனுகவே ௨௮௫

ரண்டாயிரங்காசு லாபத்திற்கிந்திமோல்
உண்டானதிப்பொழுதில் உற்றபொழுதாகுமுன்னே ௨௮௬

காசுதருவேனெனவே கத்தனலிதாருரைத்தார்
பேசும்ஜெல்யாலிசொல்லப் பின்குதனேதுரைப்பான் ௨௮௭

தருவேன்மனம்பொருந்தித் தான்பொழுதுபோனக்கால்
உருவானபிள்ளையெனக் குறநகாசாமதற்கும் ௨௮௮

சம்மதமேற்றாருமெனாத் தான்குதன்செம்பினனே
இம்மொழிக்குச்சம்மதித்தேன் என்றுரைத்தாராலியப்போ ௨௮௯

எண்ணியந்தக்காசித்தான் இன்பமுடனேவாங்கி
என்னியேபக்கீர்க்கு நாட்டமுடனேகொடுத்தார் ௨௯௦

வாங்கியவர்போனார் மறந்தும்அவிதம்மனதிற்
றூக்கியேபிள்ளைதன்னைத் தாங்கிருப்பவேண்டுமென ௨௬௧

சென்றொருதேசஞ் செல்லவிலேயாறுடைத்து
நன்றாகவோட்டினது நாட்டிலுள்ளோர்தம்மனையை ௨௬௨

சேரவிடித்துவெள்ளந் தேசத்தைத்தானழிக்க
ஆரவோராசாவும் ஐம்பதாயிரம்பேரும் ௨௬௩

ஆறுதிங்களாக அடைத்தார்களப்போது
தேறுதலையில்லாதத் தேசத்தோர்தாங்கூடி ௨௬௪

நீடுபெத்ததுகாணீன்றவெள்ளந்தங்கவில்லைத
தேடுமதியிதற்குச் செய்வதென்னவென்றெண்ணுகையில் ௨௬௫

அரசிடத்திற்போயவர்தா மன்பாயுரைக்கலுற்றார்
துரிதமுடனோர்வசனம் சொல்லுகிறேன்கேளெனவே ௨௬௬

ஆண்டுதேர் நமிப்பதியை யாறழிக்குதல்லாதிங்
கூண்டடைப்பாரில்லையிங்கு கூடும்வெள்ளந்தானிற்கவே ௨௬௭

ஆற்றையடைப்பவர்க்குக் காணதென்னநீகொடுப்பாய்
வார்த்தைதப்பாதிப்போ வழங்கென்றாரால்புவி ௨௬௮

கூறியசொற்கேட்டவுடன் கோமான்தானீதுரைப்பான்
தேறியசொற்சொல்லுகின்றாய்ச் சித்துவமுண்டோவுனக்கு ௨௬௯

ஏறுமட்டுந்தேசமுள்ளோர் இப்போதுதானடைக்குஞ்
சாலையடைபட்டதில்லைத் தாங்காப்பெருமந்திகாண் ௨௭௦

நீகேட்டதென்செய்வாய் நிந்தனக்குச்சத்தியுண்டோ
நீகேட்டுஞ்சொல்லைத் திறமாயரசுரைக்க ௨௭௧

ஆலிசினத்துரைப்பார் ஆகட்டுமாறதனைக்
கோலடைப்பார்க்குக் கொடுப்பதென்னசொல்லுகென்றார் ௨௭௨

வாசமுடன்கேட்டிடவே வாசித்தான்ராசனுமே
தேசத்திற்பாதியுந்தன் செல்வியொருபெண்மகளும் ௨௭௩

பாசமுடனமைத்தாற் பண்பாகநான்கொடுப்பேன்
காசகலச்சொன்னவுரை கட்டாகக்கேட்டலிதாம் ௨௭௪

தங்கக்காசானதுதான் தந்தாலிரண்டாயிரம்
பொங்கத்துடனடைப்பேன் போரலிதான்சொன்னபின்னர் ௨௭௫

கைவிலுடன்கொடுத்தான் காசிரண்டாயிரந்தான்
ஐயமில்லாதோர்மலையை அப்போபிடுங்கிவந்து ௨௭௬

அண்டைகொடுத்தாலதா னணைவெள்ளம்நின்றதுவே
கண்டானந்தயரசன் கைகால்கடுக்கமுற்றே ௨௭௭

அண்டருலகத்துள்ளோரே ஆரிவர்தானென்றரசன்
கின்றபொழுதாலியம்மனிருபனுடனேசொலுவார் ௧௱௮

மங்கநகராளகல மாநபியினன்மருகன்
மிக்கபுதுக்கான்வேதத்தில் வந்திடென்றுர ௧௱௯

மனம்பொருந்தித்தினில் மாட்சியுடன்வாராவிட்டால்
உனதுடையதேசமெல்லாம் ஒருகோடியிலேகவிழ்ந்து ௧௱௰

போயிவிடும்நீசொல்லெனப் போரலிதானேமொழிந்தார்
காயுமலிசொல்லக் கசடில்லாகல்லரசன் ௧.௧௧

நாடுமழிந்திடுமே நாமேதுசெய்வமென்றே
தேடுந்திரவியமும் தேசமெல்லாம்போகுமென்றே ௧.௧௨

அஞ்சிப்பயந்தொடுங்கி ஆலிபதத்தைப்போற்றிக்
கெஞ்சிக்கலிமாக் கெம்பீரமாயோதி ௧.௧௩

பழுதுபடாத்தினதனைப் பாவையர்க்குந்தான்பயிற்றி
முழுதுநகரமெல்லா மூமீன்தனமாக்கி ௧.௧௪

கொஞ்சியேதீன்முறையாய்க் கோமகளைத்தான்கொடுத்தான்
கஞ்சமலர்மாதைக் கல்யாணஞ்செய்தபின்னர் ௧.௧௫

தொழுகையதபுநெறி தோணவேதான்பயிற்றிப்
பழுதுபடாத்தீனிற் பாரிலுள்ளோர்தாமும்வர்தார் ௧.௧௬

வையம்புகழவரும் வாசமுள்ள ஆனைநகர்
ஐயனருட்பெற்ற அருமைதருட்புத்திரனும் ௧.௧௭

ராசசீர்வாழ்வுடைய ராவுத்தப்பிள்ளைமகன்
பாசமுடனேயுதவிப் பண்பாகச்செய்ததுபோல் ௧.௧௮

தேசத்திலுள்ளவர்கள் சேர்ந்துதினுஞர்கள்
வாசமுடன்தேசம் வழங்கினுளோபாதி ௧.௧௯

ஆதாயமுண்டாக்கி ஆமீறைக்கேகொடுத்து
நீதமுடனேநடந்து நீரிருப்பீராசாவாய் ௧.௨௰

இரும்நீரெனப்பொழுதை யேகனலிதாம்பார்த்தார்
கருமமுடனேயதுதான் கருகிமங்கியேமிகவும் ௧.௨௧

கொஞ்சப்பொழுதாகக்கண்டார் கூடிவழியேநடந்தார்
அஞ்சிப்பொழுதடைய ஆனமக்கம்போய்ப்புகுந்தார் ௧.௨௨

சூதன்தன்வாசலதிற ரேன்றிஞர்சூதனுந்தான்
நீதமோதாமலியே நீர்பொழுதுபோனதின்பின் ௧.௨௩

வந்தீர்நீர்காசுக்கு வாகுபிள்ளையென்றனக்கு
முந்திநீர்சொன்னமொழி மோசமில்லையென்றுரைத்தான் ௧.௨௪

ஆலியங்கனி துரைத்தா ரச்சூதனைப்பார்த்துப்
பாலியேமேற்றிசையிற் பாசென்றார்தானய்யார் ௧௨௫

அலியாருரைத்தவுடன் ஆனயிறைதானறிந்து
சலியாதலியுரைத்தார் சார்பொழுதேபோகாமல் ௧௨௬

பொழுதேயிருவென்றன் புறப்பட்டான்சூரியன்தான்
எழுதும்படியெனவே யெழும்புகின்றசூரியனை ௧௨௭

பார்த்தான்பொழுது பகறபோலிருந்ததுவே
வேர்த்தானுடலமெல்லா மெய்யீமான்கொண்டனனே ௧௨௮

காசையின்பமாயிருந்தார் காசொன்றுதான்குறைந்த
மோசமடயெண்ணிவந்தோ முந்தமக்குப்பின்தாரோன் ௧௨௯

கடனுகவென்மீதிற்கணக்கெழுதிவையுமென்றார்
திடம்பெற்றஅரசனுமைச்சீக்கிரத்திலேதிருப்பி ௧௩௰

கூட்டியசன்னைக் கொடுகேடந்தார்மனைவியிடம்
தாட்டிகமாய்ப்பொழுது தான்போய்ப்புகுந்தனனே ௧௩௧

நாட்டில்நடந்ததெல்லாம் நங்கையோடேவுரைத்தா
ஏட்டிலடங்காது யேங்கோனுயெங்குமுள ௧௩௨

அல்லாவருளெனவே ஆலநபிதாமுரைத்தார்
உல்லாசமாய்ச்சிலநாள் ஒன்றுபடச்சென்றபின்னர் ௧௩௩

உச்சிபடைவெட்டி யொருகாசுதான்வாங்கி
மெச்சிமனைபோகையிலே மேனுட்கடன்காரன் ௧௩௪

அந்தக்கடன்காரன் ஆளவிட்டுத்தான்கேட்டான்
சொந்தமுள்ளகாசனித்துந் துய்யமெறங்கையாக ௧௩௫

போனார்மனைதனிலே புத்தியுள்ளபாத்திமத்து
ஏனேபுரவியெங்கே யேற்றமுள்ளவாருமெங்கே ௧௩௬

ஆனேநம்வீரபட்ட மானதெங்கேகம்பரெங்கே
கோனேகளையுமெனக் கூறினர்பாத்திமத்து ௧௩௭

அந்தமொழிகேட்டவுட னலியுமங்கீதுரைப்பார்
முந்தயிறைவந்தவந்தான் மோசமில்லைவாங்கிக்கொண்டான் ௧௩௮

எந்தவிதஞ்செய்தாலு மேகனவனுத்தரவாம்
இந்தமொழிகேட்டவுடனீ துரைப்பார்பாத்திமத்து ௧௩௯

படைக்களத்திலேமனுவைப் பாழ்ப்படுத்திவிட்டதனை
அடைக்கலமாகப்படைத்த ஆதிபொறுப்பானே ௧௪௰

உடையோன்பொறுப்பானேவுங்கள்சமர்த்தானதென்றே
மடவாருடைத்திடவே மா அலிதானீதுரைப்பார் ௧௪௧

பிசமில்வெட்டப் பேசினன் குருநாதிலே
காசமுறுங்காபிர்களை நற்தீனிலாக்கவென ௱௪௨

கூசாமல்வெட்டினதிற் குற்றமென்னநயனுக்கு
வீசைக்குங்கூழாச்சோ வீணாசையேனிறைக்கு ௱௪௩

எப்பேரிற்குற்றமென்ன வென்றாசியார்தாம்
அப்போபாத்திமத்தாங் காணசபூர்செய்யுமென்றார் ௱௪௪

இப்போடவிபட்டினியாக லேயிருந்தார்
முன்பேர்கொளுமிறைவன் முக்கியத்தூதாகவந்தி ௱௪௫

நபிதாமனைபுகுந்தார் நல்லவெறுக்கையாகக்
குவியும்பசிதனக்குக் கொள்கையுடனேதுமுண்டோ ௱௪௬

அப்போமனையாரங்கன் போமீதுரைத்தார்
செப்பமுடன்மூன்றதினஞ் சென்றதினந்தீமூட்டி ௱௪௭

ஒன்றுமில்லையென் றுரைத்தாருண்மைநபிதாமேகி
அன்றுமகள்தன்மனையில் அன்பாகவேபுகுந்து ௱௪௮

உங்களிடமேதெனிலு முண்டாபசிக்கெனவே
தங்காலிகேட்டிடவே சொல்லுவார்பாத்திமத்து ௱௪௯

நாலுநாட்பட்டினிதாம் நல்பாவாவென்றுரைத்தார்
மேலுமசனுரு மென்பசியால்வாடிநின்ற ௱௫௰

கண்டார்நபிதாம் கையெடுத்துத்தன்வயிற்றை
நன்றாகக்கட்டிநடந்தாரொருதிசையில் ௱௫௧

சென்றொருதிசையிற் சேர்ந்துநின்றேயத்தலத்தில்
நன்றாயொருவனிட நணுகிநபிமுடுகி ௱௫௨

கூலிக்குவேலையுண்டோ கொள்கையுடன்சொல்லுமென்றார்
ஆலித்துக்கேட்டவுடனப்போதொருயூதன் ௱௫௩

வாருநீரென்தோட்டம் வண்மையுடன்கூனைகொண்டு
சாருநீர்தானிறையுந் தான்தோட்டமிவ்வளவும் ௱௫௪

தண்ணீரிறைத்திரேற்றங் கமைந்தான்தருவேன்
உண்ணீர்ப்பகற்பசுக்குள்ளகனியைந்துமுண்டு ௱௫௫

கூனையிறையுமென்னக் குருநபிதாஞ்சம்மதித்தார்
பானையுடைந்தாற் பயகாம்பரணையுன்னை ௱௫௬

அடிப்பேனெனவுரைத்தங் காலநபிதம்மைவிட்டுத்
துடிப்போடவன்மனையிற் சோராமற்றூயோனுள் ௱௫௭

கலாயைப்பிடித்திழுத்துத் தூதற்குத்தண்ணீர்விட
அலாயத்துடன்கூனை பற்றுவிழுந்தேபொடியாய் ௱௫௮

அண்டாயிற்றலபி சோர்வுவருமேயெனவே
நின்றூர்சலாஞ்சொல்லிந்து நீள்தோட்டமுள்ளதெல்லாம் ௧௫௯

வெள்ளப்பெருக்காக யோன்மையுள்ளதோட்டமெல்லாம்
கொள்ளப்பெருநீராய்க் கூடிநிற்கும்வேளையிலே ௧௬௰

தள்ளப்படாதெனவே தான்தோட்டமுள்ளதெல்லாம்
விள்ளத்தொடங்கினதவ் வேளையிலேதோட்டமுள்ளோன் ௧௬௧

அருமையுள்ளவேலேயென்றங் காஸகபிமுன்புவந்து
உருமையுடன்தோண்டியெங்கே யுள்ளதுசொல்லென்றுரைத்தான் ௧௬௨

தோண்டியுடைந்ததெனச் சொன்னவுடனேயவன்தான்
தாண்டிநபிக்கிட்டவந்து தாடையிலேயடித்தான் ௧௬௩

அடித்தஅடிநபிமேல் ஐந்துவிரற்பட்டப்போற்
நடித்துமொழிசொல்லாமற் றானேதுந்தாருமென்றார் ௧௬௪

பாண்டம்விலைத்தங்கமம் பாழ்போச்செனவுரைத்தான்
கண்டபழமைந்தும் கொடுத்தானபிதனக் ௧௬௫

ஏந்தியவர்கொண்டுவந்தங் கின்பமுள்ளநற்கனியை
மாந்திநின்றபேரருக்கு மன்னர்நபிதான்கொடுத்தார் ௧௬௬

வாங்கிப்பசியாறி வண்மையசைஞேகிசைதனும்
ஆங்கிருக்கஆலநபி யன்பாய்மனைபுகுந்தார் ௧௬௭

அப்போதபூபக்கரங் காஸநபிபோனவழி
தப்பாதுதேடிவந்து தான்தோட்டம்புக்கினரே ௧௬௮

தோட்டமுடையவன்பாற் சொல்வாரபூபக்கர்தாம்
நாட்டமுடனிங்குவந்த நங்கபிதானெங்கெனவே ௧௬௯

கேட்டவுடன்தோட்டமுள்ளோன் கெட்டேன்கெட்டேனென்றழுதான்
வாட்டமில்லாமேனி முகம்மதுவோயானறியேன் ௧௭௰

கூட்டமிட்டுத்தானழுது குற்றம்வந்துவிட்டதெனத்
தாட்டிகமெல்லாமழிந்து தட்டழிந்துநின்றானே ௧௭௧

தரையில்விழுந்தழுது தங்காததுக்கமதாய்
முறையலவென்றங்கரத்தை மோதிவாட்கொண்டறுத்தான் ௧௭௨

ஒற்றைக்கரமுடனே யோடிநபிமுன்னர்வந்தங்
கற்றகரம்பொருந்தும் ஆலநபியென்றறியேன் ௧௭௩

தலையைக்களைவனென்றே தான்வாளுறைவிடுத்தாள்
கொலையென்றறிந்துகபி கூடியேயோடிவந்து ௧௭௪

கத்திதனைப்பறித்துக் கழுந்தறுப்பதேதென்றார்
முத்திபெற்றநல்லபிராம்மோட்சபதத்திற்பணிந்து ௧௭௫

உங்களருள்தனில்வர வுங்களுக்கோர்தோட்டம்வைத்தேன்
தங்களிடஞ்சேர்ந்து தானீமான்கொள்ளவென ௧௭௬

அங்குவந்தீர்நீங்க ளடியேனறியாமற்
றங்குதிருமேனிதனிற் றானடியேன்கைப்படவே ௧௭௭

என்னபவஞ்செய்தேனோ யின்றுவிடுவேனுயிரை
சொன்னதாலாலகபி செல்லுவார்சுதனுக்கு ௧௭௮

வாரவிதியார்தடுப்பார் வல்லவன்றன்கற்பனைக்குத்
தேரமனம்வைத்தீமான் சீக்கிரத்திற்சொல்லுமென்று ௧௭௯

பாதம்பணிந்தங்கீமான் பரிவாகக்கொண்டுபின்னர்
நாதனமார்தோட்டமது நுங்களுக்கென்றேயுரைத்து ௧௮௰

கரத்தைப்பொருத்திவைத்த கத்தனபியைப்பணிந்து
பரத்தைநினைத்துமனைப் பண்பாய்ப்புகுந்தனனே ௧௮௧

துட்டனெனும்உச்சிபடைச் சேர்ந்தவர்போய்மீந்தவர்கள்
பட்டதுபோய்மீந்தவர்கள் ப்ராயிந்திராயன்முன்னே ௧௮௨

கெட்டோமென்றேவிழுந்தார் கெம்பீரமற்றவராய்
நட்டாற்றின்கோணையொத்தோம் நாங்களெனநின்றழுது ௧௮௩

உச்சியவன்பட்டதுவு மொக்கவேமாண்டதுவும்
பட்சிகள்போலேயொடுங்கிப் பாரவனமோடியதும் ௧௮௪

பட்டதுவுங்கெட்டதுவும் பாய்ந்தலிதாம்வெட்டியதும்
விட்டபடைமாண்டதுவும் வேந்தன்முன்னேசென்றதுவும் ௧௮௫

கையிற்பலமில்லாத காரிகைபோற்சொல்லினர்கேட்
டையப்பட்டிங்கிந்த்ராயன் ஆலிக்கோதான்பயந்திர் ௧௮௬

ஆலிக்கோதான்பயங்கா ணனபடைவீரர்களே
கோலியவனைப்பிடித்துக் கொல்லுவேனல்லால்விடேன் ௧௮௭

என்றேசபதமிசைக்குமந்தநேரமங்கார்
வண்டலவுந்தோளான் வடோச்சிபவன்வாறுரைப்பாம் ௧௮௮

இரண்டாவது உச்சிபடைப்போர்-முற்றிற்று.

பிஸ்மில்லாகிற்றகுமானிற்றகீம்.

மூன்றாவது

வடோச்சிபடைப்போர்.

வட்டானமண்டலத்தில் வாழும்வடோச்சியர்கோன்
கட்டாணவேந்தனவன் காலாட்களும்படையும் ௩௱௮௯

வெள்ளமெனக்கூட்டி வேந்தன்முலுத்தானில்வந்தான்
கள்ளமனமுங் கசடுகளுமெத்தவுள்ளோன் ௩௱௯௰

முலுத்தானின்கோட்டைவெளி முன்வடக்குவாசலிலே
கொலுத்தானமாய்ப்படையைக் கோதாரியாய்நிறுத்தி ௩௱௯௧

மந்திரிமார்சூழ்ந்துவர மன்னவன்வடோச்சிசென்று
இந்திராயன்கொலுவி லன்பமுடன்சென்றனனே ௩௱௯௨

சென்றபொழுதந்தச் சிறந்தயிந்திராயன்கண்டு
நன்றுவடோச்சிவந்தான் நம்படைதான்வெல்லுமென்றே ௩௱௯௩

வடோச்சிநீகேட்டிலையோ மக்கநகரானதிலே
அடாச்சியமாய்வேதமொன்றும் ஆதிநபியாகுமென்றும் ௩௱௯௪

மலிவாகப்போனவரை மாட்டிவிட்டாள்கோடியுண்டு
பொலிவாயவர்களெல்லாம் பிணமானார்வெற்றியில்லை ௩௱௯௫

இன்றுநீபோயெனக்கிங் கியம்பலிதலைதாருமென்றான்
நன்றாயிற்றென்று நகைத்தான்வடோச்சியர்கோன் ௩௱௯௬

கண்டார்சிரிப்பென்றே காதுதனைப்பொத்தியங்கு
கொண்டுவருவேனுன் கொற்றவனேஆலிதலை ௩௱௯௭

அன்றவனைத்தான்படைத்த ஆதிதடுத்தாலும்விடே
னென்றின்றுபோய்வாறேனென்னவெகுளியொடும் ௩௱௯௮

மானிடவனலிகையில் மாளுவனேனிப்படைதான்
நானவனைவிட்டுவிட்டால் நானென்னவீரமுள்ளோன் ௩௱௯௯

சிறைபிடித்தலிதலையைச் சீக்கிரத்திற்றந்திடுவேன்
நறைசேர்குழலியுந்தன் நல்லபனிமதியை ௪௱

தந்திடுவீரென்றனக்குத் தகுமானநல்லவிடை
விந்தையாய்த்தாருமென வீண்வடோச்சிதான்கேட்டான் ௪௱௧

சொல்லுமொழிகேட்டவுடன் சொல்வானிந்திராயனப்போ
நல்லதுநீசொன்னமொழி நான்சொல்வேனீகேளாய் ௪௱௨

உத்தனினைவின்படியே வுற்றகலியாணஞ்செய்ய
ஆர்த்தணரேசென்றங் கனிதல்லையைக்கொண்டுவா ௬௱௩

இனசந்தமுறியெனக்கிங் கிந்தாற்பின்னான் தருவேன்
வசமாயவிதலைக்கு வடோச்சியெழுதிக்கொடுத்தான் ௬௱௪

நிசமாய்மணமுடிக்க நீதியுடனங்களித்தான்
கஜாததுரகபடை காலாட்படையுடனே ௬௱௫

வல்லாதுரகோட்டையெல்லாம் வகையாயெனக்கெதிரி
கல்லைத்துளைத்தலிதான் கல்குளிருந்திட்டாலும் ௬௱௬

விண்ணேகிலும்மவனை விடேனென்றெதிருரைத்து
நன்றாயிற்றென்றே நகைகுலுங்கவேசிரித்தான் ௬௱௭

பகைத்தவனைவெல்வனென்றே பாரயிந்திராயன்சொன்னான்
நகைத்ததுவிண்போகாது நாளைப்படையெனவே ௬௱௮

அரசன்தனையனுப்பி யானைநல்லவீதியிலே
உரமானராசாக்கள் ஒக்கவேசூழ்ந்துவர ௬௱௯

அரியின்மேலேறிவந்தோ ரானைநல்லவீதியிலே
கரியின்மேலேறிவந்தோர் கணக்கில்லாப்போர்களுண்டு ௬௱௰

பைங்கிளியாள்தோழியர்கள் பக்கத்திற்சூழ்ந்துநிற்க
தங்கியசிறப்பினொடுந் தாதியர்கள்சூழ்ந்துநிற்க ௬௱௰௧

மேல்வீட்டில்ராசாக்கள் மெல்லியர்கள்சூழ்ந்துநிற்க
மேல்வீட்டிலேயிருந்த மேனிப்பனிமதியாள் ௬௱௰௨

அரிசியுலாவிவர அங்குபோம்வடோச்சிகண்டாள்
விரசாகவேயுலவும் வெற்றிமயில்போல்நடையும் ௬௱௰௩

கிஞ்சுகம்போலேமொழியும் கிற்றுப்போல்வளர்நுதலும்
மஞ்சுதவழ்குழலு மாமதியைப்போல்முகமும் ௬௱௰௪

முருக்கம்பூப்போலிதழு மோகமுற்றபல்லழகும்
கருக்கெழுதும்கண்ணழகும் கழறுகின்றநகைவீச்சும் ௬௱௰௫

வள்ளைத்தண்டுபோலே வடிந்தவடிக்காதும்
கொள்ளைகொள்ளுமாடவரைக் கொந்தளகபாரமது ௬௱௰௬

பச்சைக்கமுகுபோற் பாருமக்கழுத்தழகும்
இச்சைப்பூந்தேன்வார்த்த யேய்ந்தவேய்பொற்றோளும் ௬௱௰௭

காந்தளம்பூக்கையழகும் கையில்வைத்தபசுங்கிளியும்
மாந்தர்களைக்கொள்ளைகொள்ளு மகமேருவைப்பழிக்கும் ௬௱௰௮

பந்தையொத்தகொங்கைப் பரிமளச்செண்பகமும்
விந்தையொத்தஆலிலைபோல் மேலுதரமும்நடுவில் ௬௱௰௯

உந்திச்சுழியழகும் உரோமத்தொழுங்கழகும்
சந்தித்தசிங்கவிடை தனைப்போலிடையழகும் ௬௱௨௰

அரம்பைப்போலேதுடையும் ஆனைவிராற்போற்கெண்டையும
உரம்பெறுபந்தானதுபோ லுள்ளகுதிகாலழகும் ௪௨௧

அன்னம்போலேநடையும் ஆகமெல்லாம்பூஷணமாய்
இன்னமவள்போலழகு கெவ்விடத்துமில்லையென ௪௨௨

கண்டான்வடோச்சியந்தக் காரிகையாள்தன்னடியை
நின்றுனினைவொடுங்கி நேமிதனிலேவிழுந்தான் ௪௨௩

வாய்ப்புகுந்தயியறியான் வாயுமிழ்நீர்தானொடுங்கி
காயம்போய்விட்டவர்போற் காசினியிலேகிடந்தான் ௪௨௪

கண்ணையிழந்தவர்போற் கல்லாதவுமையைப்போல்
வண்ணமுள்ளஆட்டிழந்த வாயாதபம்பரம்போல் ௪௨௫

ஓசையில்லாக்கின்னரம்போல் லொடுங்கியேதான்கிடந்தான்
ஆசைத்தீயொன்றெரிய வானமலர்போல்வாடி ௪௨௬

ஏங்கிக்கிடந்தா னிவன்வடிவைவல்லிகண்டாள்
பாங்கிமார்தானறியாப் பாவைகொண்டாள்துயரம் ௪௨௭

துயரக்கிடைக்கையிலே தோகையிடம்போயொருவன்
பயப்படாச்சென்றான் பளிங்குவாமண்டபத்தில் ௪௨௮

மண்டபத்திற்சென்றே மதிசேர்பணிமதிமுன்
உண்டதொருகருமம் ஒண்ணுதலேநீகேளு ௪௨௯

வட்டானமண்டலத்தில் வாழும்வடோச்சியவன்
நட்டாயிற்றேசமெங்கும் நாடியேபார்க்கவந்தான் ௪௩௰

உந்தன்பிதாவிடத்தில் ஓர்முறியுந்தான்கொடுத்து
எந்தலிதம்ஆலிதனைக் கேத்ததல்லகொண்டுவா ௪௩௧

உன்னைமணமுடிக்க வுந்தகப்பன்சம்மதித்தான்
இன்னதலம்வந்தவுட னேங்கியேதான்விழுந்து ௪௩௨

தன்னைமறந்திப்போ தயங்கினன்மெய்சோர்ந்து
மன்னவனுமிந்த வடோச்சியழகுனாக்கில் ௪௩௩

இனமதுரசிவகனு மிங்கிவனுக்கொவ்வாது
கனமகுடராஜர்களுங் கலங்குவாரேயிவர்க்கு ௪௩௪

தண்டாயுதமெடுத்தாற் றன்வீமன்தோர்த்திடுவான்
நன்றானவில்லெடுத்தால் நல்விசயன்தோர்த்திடுவான் ௪௩௫

நளனுமிவன்வடிவி னான்கிலொன்றுகாணனே
பழகுமிவன்வடிவு பார்க்கிலரிச்சந்திரனும் ௪௩௬

கன்னனிவன்கொடைக்குக் கர்வாசிகாணாது
தன்மமிவனீதந் தனக்குமிகர்காணாது ௪௩௭

கன்மத்தொலையுமவன் கைதொட்டகாழிகையில்
வன்மந்தனைத்தொடுத்தால் மாயவன்தானெவ்வாது ௪௩௮

தேவாதிதேவரெல்லாஞ் செங்கரத்தினைத்திறத்தைப்
பரவாகப்பார்த்திருப்பார் பட்சமிவன்பேரில்வைத்தே ௪௩௯

எதிர்த்தவரைவெற்றிசெய்யு மேர்தலிவர்தானுகும்
கதித்தவரைக்காலடியில் கைகுவியச்செய்திடுவான் ௪௪௰

ஆசைகொண்டபெண்கள் அநேகம்பேரிக்காளரய்ப்
பாஷைசொன்னாற்று முடியாள்பண்பன்வடோச்சிபவன் ௪௪௧

எத்தவங்கள்செய்தவளோ யிங்கிவன்பாற்சேருவது
கற்றவங்கள்செய்தவள் நாடியிவன்பாற்சேர்வாள் ௪௪௨

இன்னமவன்வெற்றிசொல்லிக் கென்னாலமுடியாது
மன்னவன்வடோச்சி மதிமயங்கிமெய்சேர்ந்து ௪௪௩

பொன்போன்றமேனியெல்லாம் பொங்கியேமண்மீதிற்
றன்மேனியெல்லாந் தரையில்விழுந்துருண்டு ௪௪௪

உயிர்விடுத்தகூடாக வோர்பேச்சும்பேசாமல்
கயிறுனிய்யத்தாய்க்கிடக்கக் கண்டேனென்றுரைத்தான் ௪௪௫

இப்படிக்குப்பாடேட பெண்விதிவந்ததென்றுள்
செப்பமுடனேவீட்டிற் சேர்ந்துநீசிற்கையிலே ௪௪௬

கண்டாசைகொண்டே கருந்தழிர்தானென்றுரைத்தான்
ஒண்டொடியாள்கேட்டங் குரைப்பாளத்தூதனுக்கு ௪௪௭

பூவிருந்திங்கென்செயலாம் பொங்குமணமில்லாவிடில்
நாவிருந்திங்கென்செயலாம் நல்வேதமோதாவிடில் ௪௪௮

பணமில்லாதென்செயலாம் பாழ்மணிதனுக்கால்
குணமானமேகமதேன் கூண்டமழையில்லாவிடில் ௪௪௯

கிணலிருந்தென்செயலாம் நீண்டமுகத்தண்டானுற்
றணவில்லாதென்செயலாம் தருந்திக்கற்றுனிருக்கில் ௪௫௰

படையிருந்தென்செயலாம் பாய்ந்துபோர்செய்யவிடில்
இடையிருந்தென்செயலா மெத்தவுணர்வில்லாவிடில் ௪௫௧

தடமிருந்தென்செயலாம் சாரும்நீரில்லாவிடில்
சடமிருந்தென்செயலாம் தான்சீவனில்லாவிடில் ௪௫௨

வாளிருந்தென்செயலாம வாள்வீரரில்லாவிடில்
நாளிருந்தென்செயலாம் நமதுயிரேபோனக்கால் ௪௫௩

கனவில்நபிஅலியைக் கண்டமான்கொண்டேனுன்
வினைவினுடனலியால் நிட்சயமாய்த்தானேகி ௪௫௪

ஈமானைக்கொண்டாக்கா லிருபேரொருமனதாய்ச்
சிமான்வருதிதினக்காற் சேரலாமின்னமொன்று ௪௫௫

வஞ்சகமில்லாதனை வாராமையம்பதிவாழ்
மஞ்சுதவழுங்கரத்தான் மன்னர்முசுலிங்களிலே ௪௫௬

மோட்சமதுபெற்றுவளர் மூலன் அருமதுமகனு
மாட்சியுடன்பேறுபெற்ற மாரனெனும்ராவுத்தன்மேல் ௪௫௭

ஆட்சியகாலமெல்லா மன்புவைத்தான்நகபிமேல்
சூழ்ச்சியதுபோலவர்தான் தூரநின்றேபோரதிலே ௪௫௮

கம்பிமுறியாமற்கதை திண்டிபோகாமல்
வெற்றிபெறும்வில்லும்அம்பும் வீணிற்பட்டுப்போகாமல் ௪௫௯

குதிரைமடியாமற் கோழைமனுச்சாகாமல்
பிதிர்கலங்கியேமுதுகிற் பின்தழும்புவாராமல் ௪௬௰

மயிருமுறியாமல் மாணிபங்கள்போகாமல்
கயிறேகொடுக்கும் கைத்தழும்புவாராமல் ௪௬௧

தன்மம்நினைத்தலிபாற் றுன்சென்றுபாதம்புக்கி
வன்மந்தனையொழித்து வஞ்சகத்தைதானறுத்து ௪௬௨

தலங்கொண்டுதன்மங்கொண்டு தானீமான்கொண்டாக்கால்
பலங்களெல்லாமோடிவிடும் பாங்காயமணமுடியும் ௪௬௩

எழுதிக்கொடுத்தமுறி யென்னசெய்யும்நான்முரணில்
வழுவைநினைத்தாக்கால் வாஞ்சையொன்றுங்கிட்டாது ௪௬௪

இந்தமொழிதன்னையுங்களேந்தலுக்குச்சொல்லுமென்று
சொர்சமுள்ளபொற்கலத்திற் றுய்யநல்லசந்தனமும் ௪௬௫

புழுகுஞ்சவாதுமிகப் பொற்புமுள்ளபன்னீரும்
பழுதுபடாமாலையதும் பாங்காகத்தான்பரப்பி ௪௬௬

கொண்டுபோயும்முடைய கோமானுக்கீயுமென்றுள்
நன்றென்றுவாங்கியவன் நாடிவடோச்சியின்பால் ௪௬௭

சொல்வேனென்றேநடந்து துண்டுசலிப்பார்த்திடுவோன்
அல்லிநிகர்கூந்த லழைகையங்குபார்த்திடுவான் ௪௬௮

ஆலியுடற்கெற்றதண்ட மாகுமென்றுபார்த்திடுவான்
பாலிலேவைத்திருந்த பட்டாவைப்பார்த்திடுவான் ௪௬௯

மடலெழுதிப்பார்த்திடுவான் மாளுர்பனிமதியை
உடலுயிரில்லாமல் வுணிழந்தானன்னேரம் ௪௭௰

பூனையெலிக்கஞ்சிடுமோ புலியானுக்கஞ்சிடுமே
ஆனபுலிதாருவைக் கஞ்சுமோமன்னவரே ௪௭௧

வலுவோடவலியவன்தான் வண்பதத்திற்றூழ்ந்திடென்றான்
பெலமோசமர்த்தைப் பேசாதீரென்றுரைத்தாள் ௪௭௨

வீரத்தைவிட்டிடென்று வீண்பேச்சுத்தானுரைத்தாள்
சிரற்றஆலிதலை சீக்கிரத்திற்கொண்டுவர ௪௭௩

சேரப்புறப்படவே செழுமுரசம்போடுமென்றான்
காருற்றகூந்தலிசொற் கருவளவுங்காட்டவில்லை ௪௭௪

முரசமறையமோதிவெள்ளம் பாய்ந்தனபோற்
பரியானைதேரும் பாரத்திகழ்படையும் ௪௭௫

விரிவானவாரியென வேந்தன்புறப்பட்டனனே
கிரியாவும்வந்தவுடன் காசினியோரஞ்சிடவே ௪௭௬

புத்துலாத்தன்னைவலம் போந்தவடோச்சிசுற்றி
முற்றுந்துணையென்று புத்தைமுக்காலுஞ்சுற்றிவந்து ௪௭௭

பூசைதனைமுடித்துப் போஜனமுந்தானருந்தி
வாசமுடனாயுதங்கள் வாய்ப்பாயெடுத்தணிந்து ௪௭௮

ஆளுமந்தபோற்றேரி லானவடோச்சியர்கோன்
ஏழுசமுத்திரம்போலேகினான் சேனையொடும் ௪௭௯

ஆதித்தனுமறைந்தா னந்தரத்திற்றாசியதாய்
மாதினைக்கொள்வோமெனவே மன்னவன்வடோச்சியவன் ௪௮௰

நீதிபெருக்கநகர் நீண்டவறபிற்புகுதக்
கோதில்லாநம்பிதான் குணமாகக்காவல்வைத்தோர் ௪௮௧

செல்லும்பொழுதோரறபி சேனைதனைக்கண்டங்கன்
பல்லும்வாயுமேகடுங்கிப் பார்த்தாரச்சேனைதனை ௪௮௨

வெல்லும்படையிதுகாண் வென்றியுளதென்றுநின்றார்
நல்லஆலிதலையை நாடிவருமாசன் ௪௮௩

அறபிதனைக்கண்டா னவடோச்சியர்கோன்
துறவுதனைப்பார்க்கவந்தோ ரென்றுறவழைத்து ௪௮௪

எங்கிருந்துவந்தாய்நீ யெவர்மனிதனென் றுரைத்தான்
மங்கூற்குடையுடைய மாநபிதம்பு தனென்றார் சஅரு

ஏதுக்குவந்தாய்நீ யென்றான்வடோச்சியர்கோன்
மாதுக்காய்வந்தவனே மனதுவந்துகேளுமென்றார் சஅசு

உங்கள்படைப்பெருப்ப முள்ளதெல்லாங்கண்டுசிலர்
எங்கள்நபிதீனை யின்பமுற்றுக்கொண்டார்கள் சஅஎ

மோட்டுத்தனமாய் முறைபிங்கினிலாகி
காட்டுக்குளில்லாமல் நாடியேவோடிவிட்டார் சஅஅ

ஓடினவரெங்கெனவே யுற்றுநான்பார்க்கவந்தேன்
நாடிநீயிங்குவந்தாய் நவிலேழ்கடல்போலே சஅகூ

பகைநாடவந்தவனே பயகாம்பர்தினதனைத்
தொகையாய்த்தள்ளவொடுஞ் சூழ்ந்துகொள்ளவந்தவனே சகூய

ஆர்மேற்படைகொணர்ந்தா யாங்கருமஞ்சொல்லுமென்றார்
நிரவேவுன்பெயரைத் தீர்க்கமுடன்சொல்லுகென்றார் சகூக

பேணைநீகேட்டாய் பெரியவன்வடோச்சியென்பேர்
ஆரபாரத்தோடு மதட்டாகச்சொல்லினனே சகூஉ

வந்தேன்அலிதலைவை வாங்கவென்றேயுன்னகரில்.
உந்தேசம்போயலியை யோட்டிவரச்சொல்லுகென்றான் சகூங

சொன்னமொழிகேட்டவுடன் சொல்லுவாரேயறபி
என்னமதிகெட்டாய்நீ யெங்களலிவந்தாக்கால் சகூச

இன்னமொருதினந்தா னிங்குநீதானிருக்காய்
மன்னர்கள்மன்னர் வரிசையலிவந்தாமேல் சகூரு

சதுரங்கசேனையொடுந் தான்மாண்டுபோவாய்நீ
எதிரெங்கேயாலிதனைக் கேற்றமுடிவுண்டாமோ சகூசு

உச்சிஇபுனியந்த னேடுவந்தசேனையெல்லாம்
பட்சாலிவெட்டினதைப் பார்க்கிலையோநீகளத்தில் சகூஎ

போர்க்களத்திலில்லாதே போய்விடுநீயுன்தேசம்
ஏர்த்தகலராலிவந்தா லித்தனையும்பேசுவையோ சகூஅ

நீவந்தசெய்தியெங்க ணீதர்நபிதாங்கேட்கில்
நாய்வந்ததென்றே நகைத்தோட்டுவாருனையே சகூகூ

சாற்றுங்குறுனைமிகத் தாங்குகின்றயெங்கள்நபி
பாத்திமத்தைக்கேட்டார்கள் பாங்காருமென்மகளே ருா

நீங்களார்கூட்டெனவே நிட்சயமாய்க்கேட்டவுடன்
ஆங்கவர்கள்சொன்னார்கள் ஐயருங்கள்கூட்டெனவே ருாக

மென்மையழுபுக்கார்தான் மென்மைகபிகூட்டத்தென்றார்
நான்குமலக்குகளும் நல்லகபிகூட்டத்தென்றார் ௫௱௨

கத்தாபுமதுங் கத்தகபிகூட்டமென்றார்
உத்தவுதுமானு முண்மைகபிகூட்டத்தென்றார் ௫௱௩

சலக்கமில்லாமற்ற அசுகாபிமாரெல்லோரு
மலக்கல்மவுத்து முகம்மதுடகூட்டந்தென்றார் ௫௱௪

சலியாதசனுசைனுங் தங்ககபிகூட்டத்தென்றார்
அலியாருமேன்மையுள்ள ஆலகபிகூட்டத்தென்றார் ௫௱௫

காயன்தானப்போது கபிகூட்டத்தென்றானே
பேயனேநீதான் பிரபலங்கள்பேசுகிறாய் ௫௱௬

உப்புக்கடற்புவியி லுற்றவீணவாயே
தப்புக்கருமமிது தான்திரும்பிப்போய்விடுநீ ௫௱௭

வட்டாரமண்டலத்தில் வாழும்வடோச்சியேநீ
கெட்டாய்நீயெங்கள் கிருபைகபிவந்திங்ஙனே ௫௱௮

போர்க்களத்தைக்காணுமுன்னே போடாவடோச்சியேநீ
ஆக்கம்பொருதழிக்கும் அசுகாபிமார்களெல்லாம் ௫௱௯

எங்கள்கபியாற்கேட்டா ரேத்தசொர்க்கமாமதிலே
அங்குமின்னலுண்டோவென் றலகபியைக்கேட்டார் ௫௱௰

அப்போகபியுரைத்தா ரானசொற்பமானதிலே
செப்பமுள்ளநல்லுதுமான் ஜெகராஜனல்லவிதான் ௫௧௧

மின்னலைப்போலாகுவர்கள் மேலானவிண்மையென்றார்
கன்னயமாய்ச்சொல்லுகிறே னவிலுகின்றமேலோராம் ௫௧௨

அந்தவுதுமான்வருவா ராகுமுந்தன்காலமதா
வந்தாலுனைவதைப்பார் வடோச்சியுந்தனுாரேபோல் ௫௧௩

ஆலிகம்பர்வந்தா லழியுமுந்தன்சேனையெல்லாம்
வாலிபத்தில்மாளாதே வடோச்சியுந்தனூரேபோல் ௫௧௪

கோஜாலர்வந்திங்ஙன் கொள்கையுடனேர்பிடிமண்
ஞசாரமாயெறிந்தா லழிந்திடுமுன்சேனையெல்லாம் ௫௧௫

காயனிவந்தாக்கால் காய்நின்னுமுன்ஜடத்தைக்
காயம்பிழைக்கவென்றாற் காணுமுன்னேயோடிவிடு ௫௧௬

காயன்படைத்தானைவையு நல்லகபிதங்களுக்காய்
ஆயகபிமருகராலிவருமுன்போய்விடு ௫௧௭

ஆதில்லாக்கான மிதிங்காலாத்தங்காண்பாயேநீ
பாறுநரியோரிகள்பேய் பார்க்கும்படைக்களத்தை ௫௧௮

கண்டுகொண்டுபோகாதே காரியமேமுன்னுரைத்தேன்
வண்டுலவுந்தோளாய் வடோச்சியுந்தனூரேபோ ௫௧௯

போவென்றுரைத்தவுடன் பொங்கிமனம்வேகமதாய்
நாவொன்றும்பேசாமல் நாடிவந்தான்போர்க்களத்தில ௫௨௦

களத்தின்வருகையிலே கண்டான்பிணமலையை
யுளத்தில்விசாரமிட்டங் குற்றகண்ணைமூடினனே ௫௨௧

அழுதுவிசாரத்துடனந்தப் பனிமதியை
முழுதுங்கைக்கொண்டே மூடுகுவதெந்நாளெனவே ௫௨௨

எண்ணிமனதிலுன்னி யேத்துநபிதூதனைத்தான்
நண்ணியேதான்கூவி நான்சொல்லக்கேளெனவே ௫௨௩

உங்கள்நபிதானிங்ஙனேர்நொடியிலவாராவிட்டால்
அங்குவந்திவ்வினை ஆவியுடன்சொல்லுகென்றான் ௫௨௪

உற்றமொழிகேட்டவுட னேதினுரேயறபி
பித்தாகித்தான்படுதல் பின்னுந்தெரியுமென்றே ௫௨௫

அத்தனருகிற்சேருகின்ற ஆலநபிமுன்புசென்று
மெத்தஅவன்சொன்னதெல்லா மேன்மைநபிக்கோதினரே ௫௨௬

உச்சிபடைக்கிப்படைதா னொட்டிரொட்டியாகுமென்றே
மெய்ச்சிநபிநயினூர் மேலோன்விதியிதென்றே ௫௨௭

கெச்சித்திருக்குமப்போ கெம்பீரராகவந்தார்
உச்சிதத்தின்வந்தஅலி யுண்மைநபிதாருக்கு ௫௨௮

வாகாய்சலாமுரைத்து வரிசைபெறுநந்நபியே
தாகாமேயாவருக்குந் தாயகமேநாயகமே ௫௨௯

வள்ளலேவாரியைப்போல் வளைந்தேதகுபிர்ப்படைகள்
கொள்ளையெனவந்திருக்கக் கோமானேநீங்களிங்கே ௫௩௦

எள்ளாதிருக்கமன மெட்டடித்தான்வந்ததென்றார்
தெள்ளுமறைக்குத் தேசிகராய்வந்துதித்தோர் ௫௩௧

அப்போதுவாய்திறந்தங் கலியாருடன்சொலுவார்
இப்போதுநீர்போக வேகனலியேயுமக்கு ௫௩௨

படைவெட்டமின்விடுக்கும் பாரவாட்டானுமில்லை
நடைவிட்டுப்போகவென்றால் நல்லதுல்துல்தானுமில்லை ௫௩௪

வீரபட்டந்தானுமில்லை வெற்றிகம்பர்தானுமில்லை
ஆரவேதான்போக ஆர்சொல்வாருமமையென்றார் ௫௩௫

கோமானிவையுரைக்கக் கூறுவாராலிபுலி
சீமானபியேநீர் செய்யுந்துவாவெனக்கு ௫௩௬

வந்தார்களெந்தலைக்கு வந்தவரைவெல்லதற்கும்
கெந்தனாசேயெனக்குவிடைதான்கொடுக்கில் ௫௩௭

அந்தமில்லாவருணாசலனுவெனக்கிங்கப்படைதான்
தந்திடுங்கள்சீக்கிரத்திற்றான்விடையென்றாரலி ௫௩௮

எல்லோருந்தான்பயந்தாரேந்தலவியேயுமக்கு
அல்லாவுதவிசெய்வா னனபடைக்கேகுமென்றார் ௫௩௯

அலியார்விடைவாங்கி ஆயுதமும்வாம்பரியும்
சலியாதுவீரபட்டந் தன்னையுநற்கம்பளையும் ௫௪௰

கானிறைபாற்கேட்டேனே நாயன்தந்தாற்காண்பனென்ன
கோனறியமாட்டாரோ கொண்டகுறியத்தனையும் ௫௪௧

என்றுசொலிப்பாத்திமத்துக் கேத்தமனையுட்புகுந்து
நன்றுமனையாட்டியரை நன்றாகத்தானழைத்து ௫௪௨

அசனுநுசைனுமை அன்பாகமுன்னிறுத்தி
எஜமானபியுரைத்தா ரெந்தனக்கிங்குத்தரவு ௫௪௩

நீங்கள்விடைதாருமென்றே நீதியலியாருரைத்தார்
பாக்கானபாத்திமத்தும் படைத்தோனுதவியென்றார் ௫௪௪

நாயனுதவிசெய்வா னல்லதென்றார்பாத்திமத்து
நீயவனைவென்றுவரச் செய்வானெனவுரைத்தார் ௫௪௫

தங்களுடன்வருவோந் தாமென்றசனுசைனுந்
சிங்கமுனைந்திடவே செப்புவாராலிப்புலி ௫௪௬

சங்கமெனவந்தகளந் தான்கூடிநிற்கையிலே
அங்குவருவார்கட் கானசிறுபிள்ளைகள்நீர் ௫௪௭

இங்கேயிருங்களென வேந்தலவிசொன்னவுடன்
தங்கமெனும்பிள்ளைகள்தான் சந்தோஷமாயிருந்தார் ௫௪௮

படையைவென்றுவாருமென்றே பாலகருந்தானுரைத்தார்
தடையில்லாதப்போது தாசலிதானேதுரைட்டார் ௫௪௯

எக்காலமுள்ள இறையோனுதவியினால
இக்காலம்வாரமெல்லா மேகல்லியுபாருமென்ன ௫௫௰

அவன்தானமைத்தபடி யா[illegible]மேயெழும்பிப்
புவனங்கிடுகிடெனப் புய[illegible]யோதி ௫௫௧

கலிமர்லவாளாகக் கத்[illegible]தாருஞ்சேர்த்துச்
சலிபோலனைக்கமதைத் தான்வாங்கினாரலியார் ௫௫௨

தவுபாவைச்சட்டையெனத் தானணிந்தாரலியவர்
யாருமக்குருபதத்தைப் பாரதனிலேயுவப்பார் ௫௫௩

செய்யுர்தாவாவதனைச் சேர்த்தார்நல்லைநல்லயசாய்
ஐயப்படாமேனிதனை யானதண்டமாகக்கொண்டார் ௱௫௪

தகப்பிதும்வீரபட்டர் தன்னுடமர்நோக்கினரே
ஒருமானைநால்மலக்கை புத்தல்க்குத்தாள்விடுத்தான் ௱௫௫

வந்தபடையெல்லைனை வள்ளவதிதாணடைந்தார்
அந்தப்படைவேந்த னதியவிடோச்சியவன் ௱௫௬

ஏழணியாய்த்தன்படையை யெங்கும்பிரித்துவைத்தான்
வாளணியுந்தோளணியும வான்பரிகள்தன்னணியும் ௱௫௭

குதிரைகள்தன்னணியுங் கூடுகாலால்தன்னணியும்
அந்தலஞ்சமப்பிறந்தி யங்கனேவடோச்சிநின்றான் ௱௫௮

அலியார்தமப்போ தக்களத்திலேவீரராய்ப்
புலிபோலக்கெர்ச்சிதமாய்ப் போந்தாரேவாளலியார் ௱௫௯

போரும்பொழுதினிலே பொல்லாக்குபேர்ப்படையோர்
ஆருமிலாரமெனவே யஞ்சியிகடபயந்தார் ௱௬௰

வீரர்கள்வீரர் வேந்தாலிதாமேகி
ஆரவடோச்சிமுன்னே அல்பாகச்சென்றனரே ௱௬௧

அல்லாவுன்காவலென அலியார்மனதிலெண்ணிக்
கல்லாவடோச்சிருக்கும் கனகமணித்தேர்மீதில் ௱௬௨

உன்னியேடாய்ந்தங் குயரவிருந்தாரலியார்
மன்னியரேயென்றறியான் மன்னன்வடோச்சியவன் ௱௬௩

பிச்சைக்குவந்தவனே போபெரியதேர்மீதில்
அச்சமில்லாதேறுமவன் ஆரடாவந்திருந்தாய் ௱௬௪

உச்சமுறுந்தேரதனி லுயரப்பறந்துவந்தாய்
பிச்சத்தனமேதெனவே மேன்மையலியோருரைப்பான் ௱௬௫

சத்துருக்களிடபதின்றிச் சட்டைபண்ணுமைற்றேரில்
பித்தனைப்போலேறினையே பெயரையெனக்குச்சொலென்றான் ௱௬௬

என்பெயரைக்கேட்டா யினியுரைப்பன்பின்னாலே
முன்னேயுன்பேரினைச்சொல் மூடாவெனவுரைத்தார் ௱௬௭

பிச்சையெடுப்பவனீ பெயர்கேட்கவேண்டியதேன்
அச்சமிலேபோவுனக்கிங் கடித்துவிட்டப்போறேனான் ௱௬௮

தேரைவிட்டுக்கீழிறங்கிச் சேரொன்றன்பாதமதில்
வரைவிட்டுக்காட்டினிலே யோட்டிவிடுவனென்றான் ௱௬௯

உரைத்தமொழிகேட்டங் கோதினாரலிபுலி
தாத்தையுடையவனே தான்கோபமேதுனக்கு ௱௭௰

போர்கேட்டேனுந்தன் பெருமைதனையானறிய
சீர்கேட்டதுன்றனக்குத் தீவினையேகோபமென்னே ௫௭௧

கோபத்தைவிட்டுநீதான் கூறுவாயுன்பெயரைத்
தாபத்துடன்கேட்டாய் சாற்றுகிறேனென்பெயரை ௫௭௨

அட்டதிக்குமாளுகிற ஆதிதன் அருட்புலிகாண்
இட்டமுடனென்பெயரை யிங்காலறிந்திலையோ ௫௭௩

கேட்டுமறிந்திலையோ கேடுகெட்டநீசிறியன்
மோட்டுத்தனமாக மூடாநீபேர்கேட்டாய் ௫௭௪

நாட்டுக்கதிபதியாய் நாடாள்வடோச்சியென்றான்
தோட்டமுடனையந்தச் சீர்கேடனைப்பார்த்து ௫௭௫

நாடாள்வடோச்சியென்றாய் நாடியிந்தமக்கத்திற்கு
வாடாதுவந்ததென்ன வாசகத்தைச்சொல்லுகென்றார் ௫௭௬

கேட்டாரவியார்தான் கெம்பீரமாயுரைப்பான்
தேட்டாரனமக்கத்திற் சேர்ந்தவிணைத்தான்பிடித்து ௫௭௭

சென்னிதனையறுத்துத் தினைபிணைத்தான்பிடித்துக்
கன்னியர்கள்தன்சிறையுங் கட்டாகவேபிடித்து ௫௭௮

எம்பதிக்குச்செல்லவென விட்டோதுவந்தேனென்றான்
தன்பதிக்குச்செல்லவெனச் சாற்றும்வடோச்சியிடே ௫௭௯

கழிமாருகாளிதலை காட்டம்வைத்ததேதுக்கென்றார்
புலியிலந்தப்போர்க்களத்திற் புகுந்ததைநீபார்க்கிலையோ ௫௮௰

அழியும்நாட்கள்வந்தாலும் ஆலிதலைகிட்டாதே
வழிபோடேயினதனில் வந்தக்கால்நீபிழைப்பாய் ௫௮௧

அல்லாதேபோனக்கால் ஆலிதனைவென்றிடுவார்
பொல்லாதினைவிடு புத்திகெட்டுப்போகாதே ௫௮௨

புத்திகெட்டுப்போவையென்ற போதவிமுன்கோபமதாய்க்
கத்திதனையுருவிக் காவலன்விட்டவந்தான் ௫௮௩

இட்டபொழுதவிதான் கெம்பீரமாயிறங்கித்
தொட்டடுத்துத்தேரதனைத் தூரத்தேவிட்டெறிந்தார் ௫௮௪

சில்லிநூறுபீரமாய்த் தேருந்தூங்கியதே
சல்லியமென்றேயவன்தான் தாழ்ந்துவிழுந்தெழுந்து ௫௮௫

மற்றுமொருதேர்மீதில் மன்னவனுமேறினனே
இத்தனைபோலேமனிதனிந்தருமமைசெய்தமென்றே ௫௮௬

கைகொட்டிமூக்கில்வைத்தான் கந்தவலிதான்திரும்பி
மெய்யெட்டுகூலியவர் மீண்டுமேந்தமதோற்றார் ௫௮௭

அஞ்சிவடோச்சியுங் கலியாரின்தாள்பணிந்து
ஒஞ்சிச்சிறியாணியுன்பெயரைச்சொல்லுகென்றான் ௫௮௮

அன்றுபெயரலியாரறைந்தாரதுகேட்டு
ஒன்றுமறையாமலுமமைப்போல்நின்றனனே ௫௮௯

கண்டங்கலியாரைக் கண்சிமிட்டான்வாய்பேசான்
வண்டர்தலைமொடுங்கி மன்னன்வடோச்சிநின்றான் ௫௯௰

பார்த்தானைமுகத்தைப் பண்டுவினைவிட்டகன்று
நோக்கத்திலுன்மனதில் நுண்மையாயீமானே ௫௯௧

ஆகமதில்வேதரித்தங் கப்போவடோச்சிநின்றான்
பாகமதில்லயிருந்தீர் பண்பானவுரோபேய் ௫௯௨

மக்ககராலிமுகம் மதுகடன்மருகர்
திக்கிலுளாளகாயிர்களைச் சேரவெடுக்கிவித்தோர் ௫௯௩

நற்கமலம்போல்முகத்தாய் நல்லவடோச்சியேநீ
சொர்க்கங்கள்கிடைக்குந் துய்யபுறுக்கான்வேதம் ௫௯௪

சலியாமற்றீனதிலே தான்வருவாயென்றுரைத்தார்
வலியார்அலிக்கூறவண்மைவடோச்சிசொல்வான் ௫௯௫

கலியாமரசொன்னீரோ நான்சொல்வேனீர்கேளும்
கலியாருமார்க்கமதிற் களிப்பாய்வரகவின்றீர் ௫௯௬

எந்தனுடன்வீரமென்ன வென்சேனைவேழ்கடற்போல்
வந்திருக்கவிப்போது வாய்மதங்கள்பேசுகிறீர் ௫௯௭

கையானைச் சொல்லுங் கீண்கெட்டுச்சொல்லுகிறீர்
எயயென்றொருபடைக்கிங்கின்று முங்கள்தன்முகத்தை ௫௯௮

கண்டுமயக்கிவிட்டேன் காரணத்தில்நீர்பெரியோர்
என்றும்படைத்தனக்கிங் கெனைப்போற்பெரியரில்லை ௫௯௯

படைக்கலங்களேதுமில்லைப் பாய்ந்துவெட்டநுங்கரத்தில்
இடைக்குத்துணியுமில்லை யேறுபரிதானுமில்லை ௬௱

இந்தகர்வாதமெல்லாம் எனக்கோர்நினைவுள்ளது
உந்தன்தலைவென்டேக வுத்தவழிவந்ததெல்லாம் ௬௱௧

எந்தனையும்சமானில் எப்படிநீர்வாருமென்றீர்
இந்தமொழிதான்கேட்டங் கெழிலார்நபிமருகர் ௬௱௨

அப்போதவனிடத்தி லாலிதலையேதுக்கென்றார்
தப்பாதுசொல்லுகிறேன் தானலியேகேளுமென்றே ௬௱௩

இந்திராயன்மகளாம் எய்யம்பணிமதியைத்
தந்திடவேணுலிதலை தாருமெனவேயுரைத்தான் ௬௱௪

தலைகொண்டுபோயவனைத் தான்மணக்கவந்தேனென்றான்
கொலைசெய்யவந்தவன்தான் கூறுமொழியைக்கேட்டு ௬௱௫

அல்லவென்றுசொல்லவில்லை யாருஞ்சமத்தெல்லுரைத்தார்
நல்லதுநீர்காயணைவி கம்படையுமாற்றுமொக்க ௬௱௬

கொல்லவும்மைக்கூடாது கூண்டபடை தான்மடியும்
எல்லோருமினிக்கலாபிட்டுபோதுவைந்திடுவோம் ௬௱௭

அல்லசிவுக்காக வனிப்பாருமதுதலை
உல்லாசமாக வுதவுவீரேதலைதான் ௬௱௮

வாசமுடன்கேட்ட வடோச்சிக்கனியீதுரைப்பார்
ஆசையைநான்தட்டுவதே ஞானவுத்தல்வாளாலே ௬௱௯

வெட்டிக்கொடுபோநீ வெம்வேத்திதில்வந்திடென்றா
கட்டிமுடிச்சொல்லாமற் சங்கையாய்வடோச்சியவன் ௬௱௰

சூரியனைக்கண்ட தாமரைநல்லதாமரைபோற்
காரியமென்றேயல்லைக் கண்டவர்களுளமகிழ்ந்தே ௬௧௧

வாரியெனவந்த வடோச்சியர்கோனும்படையும்
கோரியாய்த்தானே குணமானநல்மனதாய் ௬௧௨

சமான்தனைமனதிலெண்ணியவிலையைப்புகழ்ந்தார்
கோமானைபிக்கீமான் கொண்டான்வடோச்சியர்கோன் ௬௧௩

புலிராஜர்போற்றும் புகழ்பெரியஆனாகர்
அபிமானமான அருமதுப்பிள்ளைசுதன் ௬௧௪

சங்கைபெறும்ராவுத்தன் தன்முகங்காணும்பெரியோர்
சக்கள்மனச்சந்தோஷந் தன்னைப்போலேமகிழ்ந்தார் ௬௧௫

காடியவனேறிவந்தோர் நல்லிமான்கொண்டவர்கள்
வாடிமெலியாமல்வருத்தமதுயில்லாமல் ௬௧௬

மூடிமுறிக்குமுன்னே மோட்சமதுபெற்றனரே
நாடியிறையவனை நன்மனதிலேபோற்றி ௬௧௭

நீனில்வந்தபெருடனே சேர்ந்தலியார்தாமிருந்தார்
வானிலுயிர்போகுமுன்னே வந்தீர்கலிமாவில் ௬௧௮

மானிதமாய்நின்ற வடோச்சியுடனிசொல்வார்
தேனிலினிதான செல்வியர்க்குஞ்செல்வமிகும் ௬௧௯

பனிமதியைக்கொள்ளவந்த பாரரசேயென்தலையை
இனிமையுடன்வெட்டியுனக் கேற்றபடிசெய்யுமென்றார் ௬௨௰

வாளுருவிவெட்டவென வந்தான்வடோச்சியர்கோன்
தோளுருகிநின்றுசுழன்றான்வடோச்சியர்கோன் ௬௨௧

ஏனதுவயிரிப்போதிங் கேங்கியிரங்குதென்றார்
மனதுபொறுக்கார்கள் மங்கையரிணுசைகொண்டோர் ௬௨௨

பெண்ணுசைகொண்டவர்க்குப பேசாதிருக்கவொன்ணுக்
கண்ணுசைகொண்டவர்கள் காதலெளிதாய்விடுமோ ௬௨௩

தவத்தையுடையவருந் தாழுவாராசைகொண்டால்
மவுத்தைநினையார்கள் மானிலப்பெண்ணுசைகொண்டார் ௬௨௪

தந்தையெனுந்தாயரெனுந் தானிரங்கார்பெண்மோகம்
அந்தமுள்ளநம்பரவா ஆதமெந்தப்பாடுபட்டார் ௬௨௫

பெண்ணுலேமூன்றுலகும் பேர்மாண்டுபோகிலேயோ
உன்னுருநறங்கார்கள் உங்கள்மோகங்கொண்டவர்கள் ௬௨௬

அப்படிக்கிங்கல்லாமல் ஆனகலாலென்றெடுக்க
எப்படிச்செய்தாலும் இறைக்குச்சம்மதமாயிருந்தால் ௬௨௭

எந்தலைவெட்டுதற்கிங் கெனக்குச்சந்தாபமில்லை
யுந்தப்பினைவின்படிக்கிங் குற்றநிறைவேற்றுமென்றார் ௬௨௮

வாசகத்தைக்கேட்டே வடோச்சியர்கோனேதுரைப்பான்
ஆசையரிதானதல்ல ஆனயிந்திராயனுக்கு ௬௨௯

எழுதிக்கொடுத்தேனு னின்றுநுந்தலையையொரு
பொழுதிற்றருவனெனப் பெண்ணுசையாலழிந்தேன் ௬௩௰

துயரம்பொறுக்கரிது சோர்வுவருமெனக்கு
உயரேயிறந்தாலு முள்ளாசைதீராது ௬௩௧

தீராதஆசையினுற் சிக்கிரத்திலுங்கள்தலை
நேராகக்கொள்ளவென்றால் நெஞ்சோதரிக்கவில்லை ௬௩௨

பொறுந்திலையேயென்றவுடன் போர்வேந்தராலிசொல்வார்
மருந்தினுற்றீராது மங்கையர்மேலாசைகொண்டால் ௬௩௩

ஈமானுக்காக விந்தேனெனது தலை
கோமானேவெட்டெனவே கூறினுராலிபுலி ௬௩௪

வாளெடுத்தங்காலிமுன்னே வந்தான்வடோச்சியர்கோன்
தாளெடுத்தோரொன்றுமனாந் தான்வாளைக்கீழ்ப்போட்டான் ௬௩௫

ஏந்தன்அலியாரே யென்மனதிற்றான்பயந்தேன்
அந்தமதுபெற்றவர்நீ ராலகையினுல்தான்பயந்தேன் ௬௩௬

வொருவாதேவெட்டுதற்கு வெட்டென்றுராலிபுலி
திருவான ஆலிசொல்லச் செங்கரத்தில்வாளெடுத்தான் ௬௩௭

வெட்டினுனலிதலை வெட்டுக்கறுதப்போது
கட்டினுனலிதலைக் கட்டப்பிறகாலிலிருப்பான் ௬௩௮

இருப்பியவன்வெட்டிச் சிறந்தவலபாகிலிற்பான்
விரும்பியேவெட்ட வீழ்குமிடபாலிலிற்பான் ௩௩௯

இடதுபுறமாய்வீச வெத்திசையுங்காணாது
அடரும்வடோச்சியவ ளங்குமிங்குமேதிரிந்தான் ௩௪௰

திரிந்தானேயன்றிச் சிங்கஅலி தலையை
இரிந்தானிலையின்னு மேங்கிப்பரதவித்தான் ௩௪௧

ஆயுதத்தைக்கீழப்போட்டங் காலிலேயோடேயுரைத்தான்
பாயும்புலியுலியே பாழானவென்னினைவு ௩௪௨

என்னால்முடியாதிங் கென்னுசைதிரவில்லைச்
சொன்னான்வடோச்சியர்கோன் துங்கப்புலியாலிசொல்வார் ௩௪௩

வருத்தப்படவேண்டாம் வடோச்சிநான்சொல்லுகிறேன்
திருத்தமுடனென்னைநன்றாய்ச் சேர்த்தேயிறுக்கிக்கொண்டு ௩௪௪

சிரத்தின்கழுத்தறுத்துச் சீக்கிரத்திற்சொல்லெனவே
கரத்திற்கயிறெடுத்துக் கணமாய்க்கொடுத்தனரே ௩௪௫

அன்றுவடோச்சிசொல்வான் அலியாரேயுங்கலைநான்
கண்டிருந்துகட்டுதற்குக் கல்புபொருந்தாதல்லயே ௩௪௬

உயிரைநான்விட்டிடுவே னும்மைநான்கட்டுவேனோ
கயிறுகச்சொல்லுகிறேன் கல்புபொருந்ாதெனக்கு ௩௪௭

அலியார்பதம்பணிந்தே யாளவடோச்சிசொல்வான்
சலியாதிங்கென்றலிதான் தன்தலைப்பாகுதன்னை ௩௪௮

அலிகயிறெடுத்தங் காலிலேசேருமென்றார்
அலியைக்கரத்தோடுநன்றாய் அன்பாகக்கட்டினனே ௩௪௯

சாலவேவானோர்கள் தான்சலித்தாரந்நேரம்
நாலாவுயிர்களுமே நடுநடுங்கிநின்றனவே ௩௫௰

வண்டுமதுவுண்ணாது வல்விலங்குபுற்கடியா
கண்டுபக்கிசாரமெல்லாங் கதறுமேவாய்திறந்து ௩௫௧

வானமொடுபூமி மலைதானதிர்ந்துவிடும்
தானமுடனீமானிற் றுன்வந்தோரேதுசொல்வார் ௩௫௨

வெட்டிநான்காமிருந்தோம் வீணன்வடோச்சிதன்னைத்
தட்டிநாஞ்சொல்வதென்ன தானறியலாஞ்சமர்த்து ௩௫௩

அலியாரைவெட்டுதற்கிங் காராலுங்கூடாது
கலியாம்வடோச்சியின்று கைசலித்துப்போவனென்றார் ௩௫௪

கலியாரலியார்தாம் காம்பார்க்கலாஞ்சமர்த்தைச்
சலியாதிருந்தவர்கள் தாஞ்சொல்லும்வேளையிலே ௩௫௫

புலியாம்வடோச்சிநிற்கப் போராளராகிசொல்வார்
மலங்கியேநிற்பதென்ன வாட்கொண்டுவீசுமென்றார் ௬௫௬

கலங்கியேநின்றவனும் கையாரவாளெடுத்து
தலங்களதுபார்த்துத் தானக்குறிகுறித்து ௬௫௭

வீசினன்வாளாலே வெற்றியுள்ளஆலமரம்
மூசியேயால்விழுது மூடியதேயாலிதலை ௬௫௮

அடித்துவிழுந்துநிற்க ஆலிதனைக்காணாது
தொடர்ந்துவடோச்சிவெட்டத் துய்யபாலோடியதே ௬௫௯

கண்டானிலையப்பிலையைக் காவலன்தான்கூவினனே
தண்டாமலுள்ளிருந்தார் தானேயலிப்புலியார் ௬௬௦

விண்டான்வடோச்சியர்கோன் வெற்றியென்னசெய்யரிது
நன்றாலசொல்லுரைக்க நாடியவிநின்றனரே ௬௬௧

ஆலமரமதுதான் அல்லாவருளாலே
சாலவேவாசம்பெற்றுத் தடாகங்களெல்லாநிழலாய் ௬௬௨

ஆலிபதம்பணிந்தின் கானமரமேயுரைக்கும்
பாலிப்புடன்பணியப் பார்த்தான்வடோச்சியர்கோன் ௬௬௩

வாயிலடித்திடபோ வடோச்சிதவுபாவுரைத்தான்
பாயும்புலியலியே பாவிதனைக்காப்பீரென ௬௬௪

பெண்ணாசையென்னாற் பொறுக்கரிதுகாணுமிப்போ
நண்ணாசையெல்லாம் நான்காணவேண்டுமென்றான் ௬௬௫

ஓட்டுகருமமெல்லாம் ஓடிவிடுமன்னவனே
எட்டாப்பழத்திற் கிச்சைவைத்தாற்காரியமோ ௬௬௬

தட்டாரைச்சேருவது தான்புத்திகேடலவோ
வட்டக்கடல்வலையில் மயங்குந்துரும்பதுபோல் ௬௬௭

மாணிடரார்கூடாது மன்னவரோயுங்கள்தலை
நான்துணிந்துவாங்கின்றதோ நம்மால்முடியாது ௬௬௮

உங்களைநான்கொன்றாலு முடையோனுக்கேராது
தங்கள்மனதின்படிக்குத் தானடப்பேன்தானவியே ௬௬௯

கண்ணாசைதீரவுந்த காரிகையைப்புல்லாவிட்டால்
உன்னாதுவாடிடுவே னுத்தமரேயென்றுரைத்தான் ௬௭௦

நித்திரையும்வாராது நேசமும்வீணாகிவிடும்
வெற்றிசெய்யக்கூடாது வேந்தனிந்திராயனிடம் ௬௭௧

என்னால்முடியாதின் கின்னமொருசொல்லுளது
மன்னனிந்திராயன் மகள்மூத்தபெண்ணொருத்தி ௬௭௨

நல்லகரத்தான்புருஷன் நன்றானதாகியவன்
சொல்லக்கேளும்மரசே துட்டனிற்றுட்டனவன் ௯௭௩

தாகியெனுமண்டலத்தைத் தானாந்தீயனவன்
ஆகிலவன்காபிரவ னானதுட்டன்காபிரே ௯௭௪

உங்கள்வடிவுங்கள்நிற முங்கள்முகம்போலிருப்பான்
தங்கள்குரலதுபோற் றான்பேசுவானவனும் ௯௭௫

அங்கவன்பாற்போவோ மவன்றீனில்வாராவிட்டால்
துங்கவனிங்கம்மறுத்தேதோகையைநான்கொள்வனென்றான் ௯௭௬

அந்தத்தலைகொண் டேகி யானயிந்திராயனிடம்
சொந்தத்தலையாலியென்றே தோகையைநான்கொள்வனென்றான் ௯௭௭

வந்ததெல்லாம்பின்காண்பேன் வல்லிமட்டும்வந்தாக்கால்
இந்தப்படிநடத்து மென்றானகத்திலெண்ணி ௯௭௮

அப்போதலியுளாப்பா ராசைகொண்டபேய்ப்பிறப்பே
தப்பாதுதான்கிடைக்குஞ் சந்தாபமேயுனக்கு ௯௭௯

ஆதியிடத்தாசைவைத்தா லானதெல்லாங்கைகூடும்
பேதித்துநின்மனதிற் பெண்ணாசையேதுனக்கு ௯௮௰

கக்கன்றனைநபியைக் கல்புதனிலேநினைத்தால்
மிக்கதெல்லாங்கைகூடு மேன்மைபெறுவாயெனவே ௯௮௧

சொன்னமொழிநல்லதெனச் சோர்வுபடாதேவருவேன்
மன்னவன்றாகி மனதுவந்துதீனானால் ௯௮௨

என்னவகைதன்னாலவ் வேந்திழையைக்கூடுவைநீ
பின்னாலேசொல்லுகிறேன் புறப்படுநீயென்றலியார் ௯௮௩

மக்கநகரறிய மாட்சியுடன்கத்தெழுத
கக்கனருளாலே கடிதாசினையெடுத்து ௯௮௪

மையுங்கலமும் வரிசையுடனேயெடுத்துத்
தொய்வில்லாமற்றான் தாசியதுமெடுத்து ௯௮௫

தூசியில்லைமதேய்த்துத் துலங்குமுதல்வரியில்
காசில்லாநல்பிசுமி கக்கன்றனையென்றெழுதி ௯௮௬

ஓசுவாயிரண்டாம்வரியி லுண்டயார்க்குங்கத்தெழுதி
மசுமைமூன்றாம்வரியில் மகுமூதாம்ஆண்டெழுதி ௯௮௭

சுத்தன்திருத்தூதர் காலிரண்டுமென்றலைமேல்
பத்தருடன்போற்றிப் பணிந்தேனலியெனவும் ௯௮௮

எத்தலமுமாளும் எந்தலிந்திராயன்விட்ட
சுத்தன்வடோச்சியுடன் சூழ்ந்துபெரும்படையோர் ௯௮௯

காரோனவேவந்ததுவுங் கண்டேனேதாம்பயந்து
தேர்மீதிலேறியதுந் நேரைநுழைக்கிறதும் ௬௰

கார்மேகங்கண்ட களைபயிர்போலேசிறப்பாய்
மேருவேனவந்தபடை மெய்யாகவேமுழுதும் ௬௧

நீனிதழைத்ததுவுஞ் சோரத்தீனுனதுவும்
மானிபமாய்மன்னான் வடோச்சியுரைத்ததுவும் ௬௨

தாகியிடல்போலதற்குச் சங்கைவடோச்சிசொன்ன
ஆகவிதுசெய்தியெல்லாம் அங்கதியவேண்டுமென ௬௩

கத்தெழுதிவிட்டார் கருதலர்கள்சிங்கமலி
கத்தனிடத்தென்றுந் துவாவிரந்துகொள்கவென்றும் ௬௪

மெத்தப்படித்தெழுத வேளையில்லையிவ்விடத்தில்
வெற்றிதான்செய்ததெல்லாம் வேதாமபர்தம்கிருபை ௬௫

அசனுருசைனுரவருடைய தாய்தமக்கும்
ஏஜமாங்கள்தாங்களதா லென்னவிங்ஙனெழுதல் ௬௬

கோட்டந்தவிர்க்கக்குலவுதாயுண்டுமென்றும்
தீட்டமெந்தக்கத்ததனைத்தீர்க்கமுடனேற்றார்வசம் ௬௭

அனுப்பினுரேயலிதா மங்கவனுங்கொண்டுசென்றே
இனிப்புறவேயாலக பிக்கீத்தான்கடிதமதை ௬௮

வாசித்துப்பார்த்துகவி வல்லாயுங்காவலென்றே
நேசிப்பாய்த்தாமிருந்தார் நீண்டமக்கமூர்தனிலே ௬௯

அப்போதவியார்தாம் ஆனவடோச்சியுடன்
இப்போபுறப்படென வேந்தலலிதாமுரைத்தார் ௭௰

என்றுமன்றெனவுரைத்தே நாடிவடோச்சிபர்கோன்
வென்றிபெறுவதற்கு மேலோன்லியுடனே ௭௧

கூட்டத்திரள்சூழக் கொள்கையுடனேயெழுந்து
வேட்டைப்புலியெனவே மேவியேபாதைபுககி ௭௨

கானங்கடந்து கடியமலைதாண்டிசெல்லத்
தானமதையாளுந் தாகிப்படைப்போர்புகல்வாம் ௭௩

மூன்றாவது

வடோச்சிபடைப்போர்-முற்றிற்று

பிஸ்மில்லாகிற்றகுமானிற்றகீம்

நாலாவது

தாகிபடைப்போர்.

இந்திராயன்றனக்கு யேற்றபெண்களிருவர்களில்
முந்திநெல்லக்காளை மோகமணந்தான்முதத்த ௭௱௪

தாகியென்றமன்னன் றணிநகரையாண்டிருக்க
ஏகிவெடோச்சியர்கோ னிசைந்தவியும்படைகளுமாய் ௭௱௫

கடந்துசென்றுதாகியுட னற்கோட்டையைவளைந்து
அடர்ந்துதொழுதாய்முனமே யாகுபுத்துவினொனவே ௭௱௬

ஆனைகுதிரைகளு மாகுந்தேர்க்காலாளும்
தானைகளுஞ்சூழ்ந்திடவே தாங்குநகபத்தடித்தார் ௭௱௭

கூடாரந்தானடித்தார் கொற்றவர்களெல்லோரும்
வாடாதவியிருந்தார்வல்லாயுதமில்லாமல் ௭௱௮

வெறுங்கையாயாலியவர்வீற்றிருந்தாரந்நேரம்
நறுங்கற்பகத்தோளான் நல்லவடோச்சியுந்தான் ௭௱௯

வடக்குகிழக்குமேற்கு வந்ததெற்குவாசலெல்லாம்
படைகளெழுகடற்போற் பாயும்புலிபாய்ந்தனபோல் ௭௱௰

மேலத்திருவாசலிலே மேன்மையலிபோயிருந்து
ஆலத்தையுண்டாக்கு மானயிறைக்காகவொரு ௭௧௧

தூதுவிடுவமெனத் தோன்றியொருகத்தெழுதி
சாதுவாயுள்ளகுணத் தானொருவரையழைத்தே ௭௧௨

தாகிதனைத்தினில் வாத்தானைமையுமென்றுரைத்தார்
ஆருமிதுகன்றெனவே யானவந்தத்தூதருந்தான் ௭௧௩

வீதிதனைக்கடந்து வெற்றிநகரத்தெருவிற்
சோதிநெடுமண்டபங்கள் சூழ்ந்தநெடுவீதிகண்டு ௭௧௪

சாதிவணிகர் தானிருக்கும்வீதிகண்டு
ஆதிதனைநினைந்தே யங்கேகடக்கலுற்றார் ௭௧௫

வச்சிரக்கூடங்களு மண்டபத்தின்வீதிகளும்
பச்சையொளிவீசுகின்ற பல்லணியின்வாசல்களும் ௭௧௬

குஞ்சரத்தின்பந்திகளுங் கோடாலின்பந்திகளும்
மஞ்சுதவழ்கின்றதொரு மண்டபமுந்தான்கடந்து ௭௧௭

தலைத்தாணையமிருந்த தாகியைப்போய்க்கண்டோ
முலைக்காரமாமடவார் மூர்க்கமுடனடிசிற்க ௭௧௮

தேவேந்திரன்சபைபோற் சேர்ந்துமன்னர்சூழ்ந்திருக்க
கோவிநெய்க்கூந்தற் கோதையர்களாடிநிற்க ௭௧௯

இந்திராயனுக்கு மேற்றமருகனவன்
சந்திரோதயம்போன்ற சங்கைப்பனிமதிக்கு ௭௨௰

மூன்பிறந்தமங்கைதனை மோகமுடன்கொண்டவன்காண்
பொன்போன்றமங்கைபெயர் போந்தநல்லக்காள்காண் ௭௨௧

நல்லக்காள்தன்புருடன் காடாளுந்தாசியவன்
செல்லப்புலியனுப்புஞ் செயதிகொடுபோந்தூதர் ௭௨௨

அங்கிருக்குங்கேளாயிலங் கப்போதூதரியவன்
எங்கிருந்துவந்தவனீ யென்னுமைலென்முனமே ௭௨௩

சத்துருங்களியாமற்றால் தனிலும்வீழாமல்
மற்றும்பயமில்லாமல் மட்டுகளெல்லாங்கடந்து ௭௨௪

வந்தார்ப்பீடித்தனைப்போல் வந்தவரலாறனைப்பாய்
பிந்தாதுசொன்னவந்தப் பேயனுரைதான்கேட்டு ௭௨௫

சாதெனும்பெயருடையோர் சத்துருப்பயமில்லாமற்
காதுவெடிக்கும்படி காகூவெனக்கதறி ௭௨௬

கேளடாதாசிமன்று கேசரியாரெம்மலிக்கு
வாளடாகையிலில்லை வந்தார்திருக்கயின்னும் ௭௨௭

உச்சிபுலியந்தன் உற்றபடைவேந்தர்களைப்
பச்சித்தஆலியுட பாங்கானதூதனென்றார் ௭௨௮

தூதனுப்வந்தவனே சொல்லுனதுசெய்தியென்றான்
ஆதவியாலவரில் ஐம்பத்தோராந்தேயில் ௭௨௯

நபிகள்பெருமானும் நாயனுக்குநற்றாதாய்
புவிகட்கரசாகப் பொன்னுலகாள்கோமானும் ௭௩௰

அவியும்காள்மன்றும் ஆலசபிதம்மருகர்
செவிதானஆலியவர் சீக்கிரத்திலுன்னையிங்கே ௭௩௧

புறக்கான்வழிபுகுதப் போந்தழைத்தேவாருமென்றார்
சுறுக்காதேதினிற் றுனீவராதிருந்தால் ௭௩௨

ஒருக்கான்கோட்டையெட்டும் ஒருகொடியிலேயிடிப்பார்
சுறுக்காகத்தன்னின் சுந்தரஞ்சேர்கைசீட்டி ௭௩௩

இந்தாஅலித்தாரிவ்வெழுத்தைப்பாருகென்ன
நந்தாதவனிடத்தில் நாடியளித்தார்வாங்கி ௭௩௪

வாசித்துப்பார்த்து வழிகேடன்தனமனது
கூசியுடல்நடுங்கிக் கொண்டான்கலவேகம் ௭௩௫

இருபத்துநாலெழுத்தின் கேதென்றுநிசயித்துச்
சுருபத்தைத்தகாண்றியத் தோணுதல்விடுத்தார் ௭௩௬

வேகமிகவாகிமேனியெல்லாந்தீக்கொளுத்தி
ஏகமாய்ப்பூமிதனில் எற்கெதிரியாரெனவே ௭௩௭

இந்திராயன்னிருக்க வென்னுடன்கையாளிருக்க
வந்தானென்வாசல்மேல வாணாளில்லாவோ ௭௩௮

ஓடிவிடச்சொல்லியப் பூரீறங்கிவந்தவென்றால்
ஆடிந்துருப்பொனவே யாக்கிவிடுவேனவியை ௭௩௯

வேடிக்கையாயுரைத்தான் வேந்தரலிதூதனுந்தான்
காடிலிந்திராயனுக்கு நல்லமருகேசனீதான் ௭௪௰

தேடிநபியாலகந்குச் செல்வமருகேசாலி
கோடிச்சந்தாசெனவாத கூறுமொளியானனைத்தார் ௭௪௧

ஆண்டோனைதிருந்தாசரலர் மருகாதம்முடனீ
வேண்டாமெதிர்த்திடவே வெற்றிசெய்யமாட்டாய்நீ ௭௪௨

மாண்டுவிடப்போரூய்நீ மாளுமுன்னேநீவதில்வா
தாண்டுமொழிகேட்டவுடன் துட்டன்தானேமிகவும் ௭௪௩

சிரித்துநகைக்குத் திகைக்கவிதுசொல்லலுற்றான்
சரித்துவிடவேதுனோசான்தான் தூதாய்வந்துவிட்டாய் ௭௪௪

எழுத்தழிந்துபோகாமல் இப்போதகலுகென்றான்
அழுத்தமுடனுரைத்தா னங்ஙனேதூதருந்தான் ௭௪௫

வாடாநீபோர்க்களத்தில் வந்தாலலிசமர்த்தை
மூடாநீயறிவையென்றே மூளீலோடினுமுரைத்தார் ௭௪௬

முள்ளுள்ளகொம்பலிகாண் முள்ளில்லாக்கொம்பேநீ
கள்ளில்லாப்பூநீயே கள்ளுள்ளபூவலிகாண் ௭௪௭

தூண்டாசவிளக்கிமான் சொல்லாதிருந்திடீலோர்
ஏண்டாவுங்கோட்டையிப்போதழியுமடா ௭௪௮

வெளியிற்புறப்படென்றே வெற்றியலிதூதர்சென்றார்
அழியாப்பதிகாணை ஆலிதிருமுன்வர்வந்து ௭௪௯

வித்தைதவறுத்தால் விளையுமோ ஆண்டகையே
எத்தையுரைத்தாலுமவன் ஈமான்கொளமாட்டான் ௭௫௰

நீனில்வராவனென்றமொழி செப்பக்கேட்டாலியுலி
வானின்வழிகாட்டுகவே வல்லானலிசினந்து ௭௫௧

தபார்வேர்தனைப்பார்த்தே புகன்றாரலியுல்லா
சீர்வேந்தரோதாகி நீனில்வரமாட்டான்காண் ௭௫௨

48

வாசலதுவாசன்கில் வளைவேலேமென வுரைத்து
கோஜாலர்தன்மருகர் கூடநெருங்கினரே ௭௫௩

அப்போதுதாகிபடை யானைதளமத்தனையும்
ஒப்புடனேதானெழுந்து கோங்கியேகொள்ளிகொடு ௭௫௪

கொள்ளியெறிவார்கள் கூர்வாளிதான்விடுவார்
அள்ளியெறிவார்மரத்தை யானமழுத்தானெறிவார் ௭௫௫

சயத்தைக்காய்ச்சி யெவ்விடமுமேயெறிவார்
காய்க்கமானமழுக் காய்ச்சியெறிந்திடுவார் ௭௫௬

கல்லெறிவாரெங்குங் கடற்போல்வளைந்திடுவார்
வல்லமைமிகொண்டு வளைந்தெதிராரெல்லோரும் ௭௫௭

வேயியதிர்ந்திடவே நிகராகத்தானடிப்பார்
தாமதமில்லாமலவர் தாக்குவார்தண்டமதால் ௭௫௮

இரும்புலக்கைதான்கொடுத்துங் கேகுவாராளைதனை
பெருப்பமாய்வல்லயத்தைப் பிந்தாதெறிந்திடுவார் ௭௫௯

கழுமரத்தைத்தானெறிவார் கையாயுதமெறிவார்
உழுதரிலத்துழுத வுலைமைபோற்றுனெறிவார் ௭௬௰

வானமொடுபூமி வளைந்துபொருதனபோற்
றூனமுடனுலியொரு சத்தமுழக்கினரே ௭௬௧

ஆயுதங்கள்பட்டன் கழிந்தார்வெகுதிரள்கள்
பாயும்புலிபோலிருந்தோர் பட்டார்வெகுதிரள்கள் ௭௬௨

ஆயுதங்களெல்லா மழியப்பொருதனரோ
வாய்மதங்கள்பேசி வலியகளைவொண்டெறிவார் ௭௬௩

ஆதித்தனுமறைந்தா னம்புமழையாலுடனே
கோதிகழுந்தானே குடியாகவேயிருப்பேன் ௭௬௪

அப்போதுதாகியவன் ஆலிதனைக்கைப்பிடியாய்ச்
செப்பமுடனேபிடிக்கச் சோத்தான்படைக்கலன்கள் ௭௬௫

ஆரவேதான்கலங்க வன்பாயெடுத்தணிந்தான்
வீரப்பட்டிகட்டி விருதுமெடுத்தணிந்து ௭௬௬

அப்புறத்தாணியில் வழுகுபெறவேயணிந்து
கம்பமெனவேலெடுத்துத் தண்டாயுதஞ்சேர்த்து ௭௬௭

பட்டாவுஞ்சேர்த்தே பரிசையதுந்தானணிந்து
கட்டாகச்சக்கரங்கள் கல்லுமெடுத்தணிந்து ௭௬௮

புத்தகனைத்தான்வளைத்து பூசைபண்ணிச்சுற்றிவந்து
நித்தமுதலாய்முக்காலும் நன்றாகச்சுற்றிவந்து ௭௬௯

பொற்றேரிலேறிப் புறப்பட்டான்றாகியவன்
நற்றேரைவிட்டவன்றான் கன்றாகக்குருசாத்தில் ௭௭0

எதிரூர்ராசாக்களெண்ணாயிரம்பேர்கள்
பேதில்லாமிருடே பெருவாரிபோலெழுந்தார் ௭௭௧

படைவீரர்சூழப் படைக்களத்திலார்த்துகேட்டான்
கடையான ஆலியெங்கே சாளுமலேயெங்கனே ௭௭௨

கண்டான்வடோச்சிதனைக் கட்டாணதாகியவன்
வீண்டாவீதான்புறத்தே வியுமுன்னேபோவையென்றான் ௭௭௩

செண்டாமேமாலியெங்கே செப்பென்றான்றாகியவன்
பண்பிள்ளைகீர்த்தி படைத்தவடோச்சியவன் ௭௭௪

தேனாமுடுகிகின்று செப்பக்கேள்தாகியென்றே
ஆனாகிதேடுகிருய் அல்லாஅலியல்லவோ ௭௭௫

புலிவாய்ப்போகுகடா புத்திகெட்டதாகிமன்று
சலியாமலீமானைத் தான்கொல்வாய்சீக்கிரத்தில் ௭௭௬

வழிக்குப்பொதிசோறு வண்மையுள்ளதிமான்காண்
பழிக்குவந்தாயில்லாதே பாழ்படுமுன்தேசமெல்லாம் ௭௭௭

நாகம்புகுதாதே நான்சொல்லைத்தட்டாதே
வீராலிசத்தமிட்டால் வெற்பெல்லாந்தூளாகும் ௭௭௮

கல்லக்காள்தாலியிப்போ காடியறுங்கண்டாயே
சொல்லக்காணுரேபோ துட்சனுபட்டிவோய் ௭௭௯

தாலிபிழைக்கவென்றாற் சமர்ப்புலிதன்காலில்விழு
வாலிபத்தைக்காட்டாதே வாளுக்குப்போங்கண்டாயே ௭௮0

வாழைப்பழமலிக்குநீ வாளுனைப்போக்காதே
கழனைப்போவென்றுசொல் காட்டமுடனீபோடா ௭௮௧

உந்தலைக்குவந்தேனு உன்னுனைதப்பாது
தந்தலைகொண்டேபோ சங்கைபலிவர்திடுமுன் ௭௮௨

ஓடிப்போவென்றவுடனுண்மைகெட்டதாகிசொல்வான்
தேடித்திரிந்தாலுனைப்போற் றேசத்திற்கிட்டாது ௭௮௩

வஞ்சகத்திலுட்புகுந்த வடோச்சியுனைப்போலாரே
கொஞ்சஅடித்தலியைக் கீறவேண்பார்த்திசென்றான் ௭௮௪

பணமதியைக்கொள்ளுதற்கோ பாசாங்குபண்ணுகிறாய்
இனியுனக்குத்தான் றனைபோ பிந்தஅலிதன்பாட்டை ௭௮௫

[illegible]னைது கண்டீரவென்றுரைத்தான்
[illegible]க்குச் சொல்லென்றான்கண்டசெய்தி ௭௮௬

ஆலிவாள்மூந்துமுன்னே யாலிபதத்தேபணிந்து
போலியென்ணுதிங்ஙன் புத்திகெட்டதாகிமன்ணு எஅஎ

சொல்லுமொழிகேட்டவன்தான் சொன்னுனேதாகிமன்னன்
வெல்லும்படியாலிதலை வென்றுல்கான்போவேனே எஅஅ

புத்திகெட்டவனேநீ போடாவடோச்சியென்றான்
வெற்றிசெய்யுந்தாகியுந்தன் வெற்றியக்கேகாட்டாதே எஅகூ

அத்திதன்னைநடத்தி யலியானைத்தேடினனே
கத்தித்திரிந்தான் கண்ணில்லாரைப்போலே எகூ௰

அப்போவடோச்சி யத்தாகிமுன்னில்நின்றான்
இப்போதுகொல்வே னென்பதத்தில்வீழ்ந்திடச்சொல் எகூக

வில்லைவளைத்தந்நேரம் விறைவாகவாளிவிட்டான்
நல்லதடாவென்றங்ங னகைத்தான்வடோச்சியர்கோன் எகூஉ

கணைமாரிதான்பொழிதான் கண்டுவடோச்சியர்கோன்
துணையானபேருடனே சுற்றினார்தாகிதன்னை எகூங

இருபடையுந்தானெதிர்த்தா ரேகவெள்ளம்பாய்ந்தனபோல்
பொருவாதியாப்படைகள் போர்க்களத்தில்மாண்டதுவே எகூச

குன்றுகுன்றுபோலே குவிந்ததேயாட்பிணங்கள்
அன்றுஅலிகண்டுநின்றே அல்லாவைத்தானினைந்து எகூரு

மண்டிக்காற்றுன்போட்டு மண்மீதிருந்துகொண்டு
கண்டிப்பாய்ச்சத்தமொன்று காட்டவேதாங்கனும் எகூசா

விலாவிலேகைவைத்து வீரருடன்சத்தமிட்டார்
குலாவிவந்தவீரரொரு குப்புறவேதான்வீழ்ந்தார் எகூஎ

ஆனையுடன்வீழ்ந்தே யடிமாண்டுபோனவரும்
தானைபரியுடனே தான்மாண்டுபோனவரும் எகூஅ

வில்லோடுகையும் வீழ்ந்துமடிந்தவரும்
கல்லோடுகையுங் கவிழ்ந்துமடிந்தவரும் எகூகூ

அம்புபிடித்து வோட்டியும்றுவீழ்வாரும்
கொம்புபிடித்தவர்கள் குப்புறவேவீழ்வாரும் அ௱

நம்புகின்றபுத்தைவிட்டு நாடிமடிந்தவரும்
பம்பரம்போலாடிப்பகைத்துமடிந்தவரும் அ௱க

தேரோடுதான்புரண்டு செத்துக்கிடந்தோரும்
ஊரோடேபோகாமல் ஒன்றிரண்டாய்வீழ்ந்தோரும் அ௱உ

கத்தியொடுகையுங் கரிந்துநின்றவரும்
பற்றியிழுக்ககரி பாழாய்க்கிடந்தவரும் அ௱ங

வேல்பிடித்தகையோடு வீழ்ந்துமடிந்தவரும்
கோல்பிடித்தகையோடே குப்புறமேலவீழ்ந்தோரும் ௮௱௪

வலுப்பறைந்துகோட்டையின்மேல் வந்துநின்றமாவீரர்கள்
இலுப்பைக்காய்போல்சிலத்தி லெல்லோரும்வீழ்கதவரோ ௮௱௫

தானையொடுதாகி தான்வளையும்வேளையிலே
கோனைமிகப்போற்றிக் குருசபியைத்தான்வாழ்த்தி ௮௱௬

ஆலிவெறுங்கையாலே யங்கனிற்கும்வேளையிலே
கேலிபடுத்தினவன் கீழ்விழுவானென்றவனின் ௮௱௭

தேனைமுடுக்கிவிட்டுச் சிறந்தவடோச்சியர்கோன்
தாளைவிட்டவாளாலே தாகிதனைமறித்தான் ௮௱௮

உன்சமர்த்தைநான்காண வுத்திருவரும்பொருவோம்
என்சமர்த்தைநீயறியா யேகுலைவயேஆலயிடம் ௮௱௯

ஆனைபொடுதாகி ஆலியிடத்தில்வந்தனனே
சேனையொடும்வந்தான் ஜெயங்கொள்ளலாமெனவே ௮௱௰

வள்ளல்வடோச்சியுட வாசகத்தைக்கேட்டலிதாம்
தள்ளிக்கொண்டங்கவனைத் தானென்முன்விட்டிடென்றார் ௮௧௧

விட்டான்வடோச்சியங்கன் வீரமுள்ளதாகிதன்னைத்
தட்டாமல்வந்துநின்று தானலிமுன்னேதுரைப்பான் ௮௧௨

காமேதுந்தனக்கு நான்குழுழம்நீசிறியாய்
சேமமேதிங்குவந்த நீயார்மனிதவென்றான் ௮௧௩

அப்போதலிசொலுவா ராதிநபிதம்மருகன்
எப்போதுமுள்ள இறையோனலியென்பெயர் ௮௧௪

சொல்லடாவுன்பெயரைச் சூமனேயென்றலிதாம்
உல்லாசமாய்க்கேட்க வுவப்பில்லானேதுசொல்வான் ௮௧௫

கில்லடாபேர்கேட்டாய் நீசிறியடாஎிடவன்
நல்லதடாவென்னகரை நாடிவந்ததேதுரைப்பாய் ௮௧௬

கல்லடாசொல்லாவிட்டாற் காவலனேநீசாவாய்
சொல்லடாவுன்பெயரைச் சொல்லிவிட்டால்நீசாவாய் ௮௧௭

கொல்வனென்றுசொன்னவனே கூறுமென்பேர்தாகிகேளும்
சொல்லவொருகுடையிற் றேசத்தையாள்பவனும் ௮௧௮

வல்லபுகழ்ராசாக்கள் வந்தென்பதம்பணிவார்
வல்லபுவியினிலே வாஞ்சையுடன்வாழ்ந்திடுவர் ௮௧௯

எல்லோருமென்பதத்தில் என்றைக்குந்தான்பணிவார்
கல்லாருமிவ்வுலகிற் கருத்திலுடனேநினைத்து ௮௨௰

என்பேரிலாணையிட்டாலெமனுஞ்சற்றேயஞ்சிநிற்பான்
அன்போடுநானிருக்கேதல் ஆயிரமாண்டிருவரையும் ௮௨௧

பேயுமகாபூதமெமர்தன் பெயர்கேட்டாலோடிவிடும்
தாய்முலைப்பால்பிள்ளையுன்னை தானுமெமர்தனுளையென்றால் ௮௨௨

எத்தலமும்ஆளும் இந்திராயன்புதல்வன்
பற்றலரைவெற்றிசெய்யும் பாராசகேசரியான் ௮௨௩

நற்றலராய்நானும் நான்குகோடிரிஷிகளும்
மூன்றுமுறைமுப்பத்து முக்கோடித்தேவர்களும் ௮௨௪

பிரமாவும்வசிஷ்டனுமென் பெயர்கேட்டாலஞ்சுவர்கள்
தாமரையென்றிட்டநின்று தன்பெயரைக்கேட்டனையே ௮௨௫

உாமேயுனக்கறுதி யுள்ளநாளிவ்வளவோ
திசமாகநின்று செப்பினாயஞ்சாமல் ௮௨௬

எதற்றுமென்றுமுமில்லாதெளியவனீ
நீதபருத்திடுவேன் வீண்கயிலேசத்தியில்லை ௮௨௭

பஞ்சேசீயுச்சி பழிதனையும்மறந்தையோ
வஞ்சகங்கள்செய்தாயே வாழும்பிள்ளையினை ௮௨௮

வென்றனமென்றேநினைவில் வெற்றிமையெண்ணிவிட்டாய்
உன்றலைனைப்போல்நாய்க்குவிருந்திடுவேன் ௮௨௯

இன்றுகெடுத்திடுவேன் ஏன்வந்தாயென்னூர்க்கு
பொன்றிவிடாமற்போய்விடுநீயுன் னூர்க்கு ௮௩௰

சொல்லென்றேதாகி துடிப்புடனேகேட்டிட
அல்லாபுலியவிதா னங்கவனைப்பார்த்துரைப்பார் ௮௩௧

உன்னகரிலுள்ளவரு முன்னையுமேதீருக்க
இன்னகரில்வந்தேனுன் எந்தனில்லாராவிட்டால் ௮௩௨

வாயிலடித்துன்னை வாளாற்றலையரிந்து
காயந்தனையேயழித்துக் கண்டமிட்டேயுன்சிரசை ௮௩௩

வெட்டிவடேசச்சிகையில் வீரமுடனேகொடுத்துக்
கிட்டியிந்திராயனிடங்கெம்பீரமாயளித்து ௮௩௪

சங்கைப்பளிமந்திரைத் தானேவடீாச்சியர்க்கு
மங்கையரைத்தாலிகட்ட வாழ்வாகவேபரிசம் ௮௩௫

மெய்யாகத்தான்கொடுக்க மேவிவந்தேனுன்னிடத்தில்
பொய்யாகவெண்ணாதே போரைவிட்டிங்கெம்பிறையை ௮௩௬

சிக்கிரத்தில்நீபணிந்து தினிலேயில்வந்திடென்றார்
தாக்குமுடனலிசொல்லத் தாகிமனம்வேகமதாய் ௮௩௭

வெட்டிஞளவியையவ்வெட்டதனைக்கையாரக்
தட்டிஞர்வாள்முறிந்து தலையிலவன்வீழ்ந்திடவே ௮௩௮

மட்டிபிவனென்றபிதான் மண்மீதிருந்துகொண்டு
சட்டமாய்ச்செப்பைத் தானினைந்துபோற்றிசெய்து ௮௩௯

தோலாலடித்துத் தொனியாயோர்சத்தமிட்டார்
ஆலாலமுண்டவர்போல் அங்ஙனேதாகியவன் ௮௪௰

நிலத்தில்விழுந்து நினைவுதடுமாறினனே
பெலத்திலவன்யானை பிரண்டுருண்டுதான்கிடக்க ௮௪௧

மானைப்பினைமீட்டு முகம்மதற்றகுல்புறக்கான்
தினையுவந்த சிறந்தவடோச்சியப்போ ௮௪௨

தாகிதலையறுத்தே தான்முன்றேசென்றனனே
ஆகவிதுபோதுமென ஆதியலியார்மகிழ்ந்தே ௮௪௩

ஆதியேயித்தலையை ஆமென்றலைபோலாக்குவையென்
நீதறவேசொல்லியின்பமுடனேகேட்டார் ௮௪௪

அப்போதல்லாவுதவியாலேஅலிதலைபோ[..]
குப்பாகவேயிருக்கக் கோன்வடோச்[சி]மகிழ்ந்தார் ௮௪௫

செல்லுவீர்தலையைக்கொண்டு சே[..]ந்தயிந்திராயனிடம்
நல்லடனிமதியை நல்லமணஞ்[செ]ய்திடென்றார் ௮௪௬

மணஞ்செய்யமுன்னாலே மா[..]றநும்வந்தாக்கால்
வணக்காதபெயரையெல்லாம் [..]னில்வழிகாட்டிடுமென்றீர் ௮௪௭

திறஞ்செய்யப்போகாவிட்[..]ற சீக்கிரத்திலிம்முராசை
அறஞ்செய்வதிறகிடை[..]க தானதாலடியிலென்றார் ௮௪௮

வீரமுரசென்றே[..]வ்வாவாயலிகொடுக்க
ஆரவடோச்சி[..]தை யன்பாகத்தான்வாங்கி ௮௪௯

அலிர[..]பதம்பணிந்தங் காண்டபடைவீரருடன்
சலியாதவிடம்விட்டுத் தானகன்றுபோயினனே ௮௫௰

வலியான்புலியாரவரு வண்மைகருள்ளவராக்
சலியில்லாதெங்கும் கலிக்குமறையான ௮௫௧

தினில்வரவழைத்தே சிங்கப்புலியாலியன்பாய்
ஆனைபிசுலாமாக்கி யவர்களுக்குநீதஞ்சொல்லி ௮௫௨

அங்கிருந்துதினிசுலா மாக்கியேயெல்லவரும்
பொங்கியதீனைதற்பின் போனாரேதங்கள்க்கு ௮௫௩

நாளமுழுதுந்தோளார் கதைதாமையைகிறப்
போனவுடனேசபிக்குப் புகன்றார்நடந்தசெய்தி ௮௫௪

அல்லாவுமக்குறுதி யானபெலந்தந்தருள்வான்
கல்லாருந்தீனிசலாம் நன்றாகவேவளர்த்தீர் ௮௫௫

ஆலகபியும் அசுகாபிமாருமயந்தார்
சாலவேதாகியுட தன்மனையாள்தன்னிடம்போய் ௮௫௬

சொன்னார்சிலபெயர்கள் தோகையேகேளனவே
இன்னாளில்ஆலிகையால் இரைகடற்போற்சேனையோடும் ௮௫௭

பட்டாண்டியுன்கணவன் பனிமதிக்குமூத்தவளே
விட்டானுயிரையென்றே வேடிக்கையாயுரைத்தார் ௮௫௮

சாற்றுமொழிகேட்டுத் தான்மயங்கியேயெழுந்து
வேர்த்துநடுநடுங்கி மெய்சோர்ந்துதாவெழுந்து ௮௫௯

கணவன்படுகளத்தைக் கண்டுநின்றுதானழுதாள்
மணவாளர்தாகியுடல் மண்மீதிலேகிடக்க ௮௬௰

கண்டாள்திகைத்தழுதாள் கைசேதமாயிற்றென்று
உண்டோவினிவேறிங் குற்றதுணையென்றழுதாள் ௮௬௧

மலைபோற்புயமிருக்க மற்றுமுடற்றானிருக்கத்
தலைபோகக்காரியமேன் தாகிமன்னாவென்றழுதாள் ௮௬௨

ஆலியார்கருவேறே படையவர்கள்தானிலையோ
கலியோவிதென்புருடன் கைக்கிளைந்துமடிந்ததோ ௮௬௩

பழியோபனிமதிக்குப் பரிசத்திற்கென்றாலி
வழிகேடுசெய்தார் வடோச்சிக்காவென்றழுதாள் ௮௬௪

சர்ங்கமாயென்றாலி தானறுத்தாரிதுபோது
ஆங்குபனிமதியை யன்யாகக்கட்டினரோ ௮௬௫

நீதமோஆலியைத்தான் நெடியோன்விடுத்தன்றோ
போதமதுதானவிக்குப் போய்விட்டதோவென்றழுதாள் ௮௬௬

விழுந்தாளெழுந்தாள் வெற்றிமன்னேயென்றழுதாள்
கொழுந்தேயெனைப்பிரியக் கூடுமோவென்றழுதாள் ௮௬௭

எனக்கார்துணையுமில்லை யேற்றப்புத்துப்பாழாச்சே
தனக்கானபுத்தையெல்லாம் தான்விணென்றேயுரைத்தாள் ௮௬௮

பகல்மதிபோன்முகத்தாள் பாழ்புடைத்தழுதாள்
அகலமிட்டநீரைவிட்ட ஆனைகையிற்போலானாள் ௮௬௯

அத்தமில்லாமனிடர்போ லாயினளாயிழைதான்
உத்தபுகழ்கீர்த்திவிட்ட வுண்மைநூற்போலானாள் ௮௭௰

தாரைவிட்டகெய்யானாள் தாயைவிட்டகன்றானாள்
தூரைவிட்டதூணானாள் சுடுமணல்ன்பாம்பானாள் ௮௭௧

காரைவிட்ட பூவானாள் கன்னகட்டேர்பூசமென
கூராயிட்டபுண்போலுங் கடியிழந்தபூப்போலும் ௮௭௨

மூட்டிவைத்ததீபமுனையில் மூளுகின்றவாட்போலும்
ஆட்டிவிட்டபம்பரம்போல் ஆயிழையாள்தானழுதாள் ௮௭௩

மலையோடுதான்பொருத மார்பிருக்கத்தோளிருக்கத்
தலைபோகநீதியுண்டோ தாகிமன்னாவென்றழுதாள் ௮௭௪

அம்பிருக்கத்தூணிருக்க ஆனதுந்தம்வாளிருக்க
கம்புதலாய்யானிருக்க காடுயிப்போயாழிருக்க ௮௭௫

உண்டுடுக்கவாழ்விருக்க வுயிர்போமோவென்றழுதாள்
தண்டிருக்கந்தலைபோ தாகிமன்னாவென்றழுதாள் ௮௭௬

இந்தப்பழிவாங்க வென்றகப்பன்தானறிய
அந்தநகர்க்கோலைவிட ஆமென்றரண்மனையில் ௮௭௭

சென்றுபுகுந்தே சிறந்தநிருபம்மெழுதி
அன்றுநடந்தசெய்தி யனைத்தும்படிப்படியே ௮௭௮

ஓலையிற்றானேயெழுதி யொட்டன்கரத்தளித்தே
காலைதனிலோடுகெனக் கழறினனப்போது ௮௭௯

வெற்றிக்கொடிபிடிக்க வேந்தரெல்லாஞ்சுற்றிவர
பத்திபலவாக்கியங்கள் பண்பாய்முழங்கிவர ௮௮௰

வசந்தாவிதானெழும்பச் சேனைபதிநடக்க
தொனுலுத்தான் வடக்குக்கோட்டைவாசலிலே ௮௮௧

நூறாயிரம்பரியும் கோக்கமன்றும்யானையுடன்
ஆறாயிரம்பேர்க ளாளமுடிமன்னருடன் ௮௮௨

வடபுறத்துவாசலிலே வந்திருக்கவடேச்சியர்கோன்
அடவிந்திராயன்போ ரன்புடனேயினியுரைப்பாம் ௮௮௩

காண்காவது

தாகிபடைப்போர்-முற்றிற்று.

பிஸ்மில்லாஹிற்றகுமானிற்றகீம்

ஐந்தாவது

இந்திராயன்படைப்போர்.

முலுக்தானகரார்ளும் முறைமைஇந்திராயருடன்
சொலத்தகாமன்னரொடு சூழ்ந்துகொலுவிருக்கையிலே க

வல்லவடோச்சியர்கோன் வந்திருக்குஞ்சேதிதன்னை
சொல்லியனுப்பத் தூதனிந்திராயருக்கு உ

நன்னயமாய்ச்சொல்ல நாதிபஇந்திராயன்
மன்னவனுங்கேட்டு மகிழ்ந்தனெயெனினைந்தான் ௩

ஆலிதலைக்கிருக்கும் ஆருமெனவேமகிழ்ந்து
கோலிவெதிர்கொண்டவனே கூட்டிவரச்[illegible]றனே ௪

ஏவினன்மந்திரியொடு எண்ணிவர்களேகினரே
கோவினுக்குக்கோவான குணமார்வடோச்சினுக்காய் ௫

நகரியெழுநாறும் கன்றுனவீதியெல்லாம்
பகரொணுச்சேனைதளம் பண்பாயலங்கரித்து ௬

பன்னீருஞ்சந்தனமும் பட்சமாகக்கொடுத்தார்
பொன்னீருங்கஸ்தூரி போந்ததெருவீதியெல்லாம் ௭

முத்துவமணிகள் மூன்கொழிக்கும்வீதியெல்லாம்
மற்றுநிகரொவ்வாத மன்னரெலாஞ்சொல்வார்கள் ௮

மக்கநகராவிதலை வந்ததுகாணிப்போது
துக்கந்தவிர்த்தோநாம் துய்யவடோச்சியினல் ௯

பனிமதிக்குத்தானேற்ற பார்காவமன்னனிவன்
இனிமதிக்கப்போறவரார் இலங்குமக்கமாநகரை ௰

மக்கநகர்தோற்றதிப்போ மாநபியுந்தோற்றதிப்போ
தர்க்கமிடுமாலைதலை தான்வந்தபோதினிற்றுன் ௰௧

தோற்றவர்கள்தன்பழியைத் தூரிதம்போய்வடோச்சிகொண்டார்
மாற்றவர்களெல்லாமன்னவடோச்சியின்கீழ்தான் ௰௨

கோவிற்றலங்கள் கொழுந்திவிட்டுவிளக்கெரியும்
தாவிவடோச்சியிட தன்வாழ்வேவாழ்வதுகாண் ௰௩

ஆவியேமற்றவர்வாழ் ஆனமச்சந்தானநதியும்
கோவுநெறியிவர்க்கே கூறலாங்காசினியில் ௰௪

எடுத்தான்வடோச்சிவில் எவர்கள்வில்லும்பஞ்சுவெட்டும்
கடுத்தான்வடோச்சிக்கல்லால் காவலர்தண்டாடுவெட்டும் ௰௫

ஆனவடோச்சிக்கல்லா லாடாருமற்றவர்கள்
தானைவடோச்சிக்கல்லால் தாங்காதெவர்க்குமெலி ௰௬

வீராதிவீரன் வேந்தன்வடோச்சிக்குநிகர்
பாராளும்வீரரில்லை பாழாச்செயிப்பார்கள் ௰௭

வாயுள்ளவம்பரெல்லாம் வடோச்சிக்கேயாருமெல்யார்
பொய்ச்சபதஞ்சொன்னார் புன்மன்பாரெல்லோரும் ௰௮

ஆவிதலைவந்ததாகாண் ஆலகாலனெவ்வளவோ
கோலியவனைப்பிடித்துக் கொன்றுவெரளமொருவர் ௰௯

அப்போசிலருரைப்பா ராலைபிதம்பிலத்தைச்
செப்பக்கேளாவியுட திரபலைத்துக்கதிகம் ௨௰

ஆயிரத்திமுந்நூறதிகபங்குதான்பெலமாம்
வாயுரைத்துப்பேசாதே வன்மைபூபக்கருண்டு ௨௧

பூமிதனைப்புரட்டும் போதவுமறமுமுண்டு
தாமிதமில்லாதுதுமான் சத்திமான்காறுமுண்டு ௨௨

நாற்பத்தீராயிரம்பேர் நல்லஅசகாயியுண்டு
ஆம்பத்தலிபோறு லாளபடைதோற்றிடுமோ ௨௩

என்றுபலர்சொல்லுமப்போ திக்திராயன்தன்னிடத்திற்
சென்றான்வடோச்சியர்கோன் சேர்ந்தபெருஞ்சேனையுடன் ௨௪

நாற்பத்தெண்ணைசிரந்தான் நன்றியுள்ளமண்டபத்தில்
சீர்பெற்றமந்திரிமார் சேனைகுழாநெருங்க ௨௫

வெண்சாமரைவீச வேடிக்கைப்பெண்களெல்லாம்
பண்சார்ந்தவேதியர்கள் பக்கத்திற்றானெருங்க ௨௬

பாவாணரெல்லோரும்பாடியருகேயிருக்க
தேவாதிகள்சூழத் தேவேந்திரன்சபைபோல் ௨௭

காளாஞ்சியேந்திக் களந்தளத்தார்மேற்பிடிக்க
ஆளானராசாக்கள ஆனைகப்பங்கட்டிநிற்க ௨௮

கட்டியக்காரர்பலர் கட்டியங்கள்தான்கூற
மட்டில்லாராசாக்கள் மன்னனைக்கொண்டாடிநிற்க ௨௯

வீற்றிருக்கும்வேளையிலேவேந்தன்வடோச்சியென்று
சாற்றதிகப்பட்டதிறற் றான்கொணர்ந்தாவிதலை ௩௰

எடுத்தரசனைமுன்னேவைத்தக் கேதுமொழிசொல்லலுற்றான்
வடிப்பிளக்கும்வேல்விழியாள் வல்லிபிணிமதிக்கு ௩௧

பரிசமிதுஆவிதலை பாருமெனவைத்தனனே
கரிசமுடனிற்திராயன் கண்டானிருவிழியால் ௩௨

பல்லழகுமீசைப் பருமையுக்கண்ணழகும்
நல்லழகுக்கண்டே நகைத்திந்திராயன்சொல்வான் ௩௩

வெல்லாதபேரையெல்லாம் வென்றனையோவிதனை
வல்லாமைக்கார வடோச்சிகையால்மாண்டனையே ௯௪

இபுனியனைக்கொன்றங் கேற்றபழிவாங்கினையே
அவனிதனிலிச்சிதனை ஆவிநீகொண்டனையே ௯௫

இன்னமநேகம்பழிகளை யேற்றாயேஆவியேநீ
மன்னமன்னரெல்லாம் மாளவைத்தாய்மண்டலத்தில் ௯௬

வல்லபங்களெங்கேயிப்போமாண்டாய்வடோச்சிகையால்
சல்லியங்களைவிளைக்குஞ் சாமார்த்தியமெங்கேயிப்போ ௯௭

என்மகள்பனிமதிக்காய் இவ்வுலகில்நீபிறந்து
உன்றலையைப்பரியமதாய் ஒன்வடோச்சிகொணர்ந்தார் ௯௮

இந்தவிதமாயவசைகள் இந்திராயன்றானிசைத்து
சுந்தரவடோச்சியர்க்குந் தோகைபனிமதிக்கும் ௯௯

நாளைகலியாணமென நகரறியவேணுமென்று
ஆளையழைத்துமுர சறையென்றாரப்போது ௱

சீரார்முரசடிப்போர் சிறந்தஇந்திராயன்சொல்லை
நேராகக்கேட்டே நில்லாதங்கேகியவர் ௱௧

முரசந்தனையெடுத்தே மோட்டானைமீதேற்றி
அரசர்தெருவீதிகளு மயல்நகருந்தானடித்தார் ௱௨

பறைபோடக்கேட்டுப் பனிமதிதான்தாதியர்பால்
நறைசேரும்வீதியெல்லாம் நல்லமதிப்பாக ௱௩

ஏதோமுழக்கமிதிங் கென்னென்றாள்பெண்கள்சொன்னார்
மாதேயுனக்கு மணமானதால்கட்ட ௱௪

நாடுநகரமெல்லாம் நன்றானசோடனைகள்
கூடுபடையரசர் கூறியசொற்றப்பாது ௱௫

செய்யுமுரசறைந்தார் தேசமெங்குந்தான்சிறப்பாய்
ஐயமில்லையென்றங் கறைந்தார்கள்தாதியர்கள் ௱௬

கூறியசொற்கேட்டவுடன் கோதைபனிமதிதான்
தேறியெனைக்கொள்ளவந்த தேர்வேந்தரானவரே ௱௭

ஓதியேகேட்டவுடன் சேயிழையாரேதுரைப்பார்
மாறிலான்றூதர் முகம்மதுற்றகுலமருகர் ௱௮

மக்கத்தலிதலையை மாட்டியுடன்கொண்டுவந்த
துக்கமொன்றுமில்லாத தோன்றல்வடோச்சியென்றார் ௱௯

வள்ளல்வடோச்சியென்ற வாசகத்தைக்கேட்டுவல்லி
கள்ளொளணைதாலிதலை தானேனென்றேசிரித்து ௱௰

சும்மாவிருந்தகள் தோன்றலழியார்தலையை
இம்மாநிலத்திலுள்ளோ ரெவரேனும்வெட்டுவரோ ௫௧

அம்மாடிசும்மாவறைந்தார்கள்பொய்யதனைத்
தெம்மாடிப்பூர்த்தி சிறந்தஇந்தராசாக்கள் ௫௨

நிறையாயறிந்திலேயோ நீநியுள்ளராசாக்கள்
கரைசேருந்தாகிதலே காணுமிதிங்கென்றுசொல்லி ௫௩

மண்மீதுதானே மதித்துமங்கையப்போது
கணமானகன்னியர்க்குங் கன்னிபனிமதிதான் ௫௪

இன்னமொருநாளிலிச் செய்கைகாண்டிரென
கன்னயமாய்த்தானிருந்தாள் நாரிபனிமதிதான் ௫௫

அப்போதுநகரிலுள்ள ஆனதெருவீதியெல்லாம்
செப்பமுடனேசிறப்புச் செய்தார்கள்வீதியெல்லாம் ௫௬

கன்னல்கமுகதிறம் காவணங்கள்செய்திடுவார்
வன்னமுடன்கோலம் வடித்தெழுதியெல்லோரும் ௫௭

வாழைபிலாநடுவார் வாசமலர்தூக்கிடுவார்
தாழைமலர்பிச்சிச் சரந்தொடுத்துப்பார்தரிலே ௫௮

சொன்னக்கால்நாட்டி துலங்கவேபந்தலெல்லாம்
வன்னக்கால்நாட்டி வளர்பிறைபோற்பந்தரிட்டு ௫௯

பன்னீருஞ்சந்தனமும் பாங்காய்த்தரைமெழுகி
நன்னீருங்கும்பகுடம் நன்றாகவேபதித்து ௬௰

பொன்னெடுத்துப்பட்டாடை பொங்கவேதான்விரித்துங்
கன்னிபனிமதிக்குங் காணும்வேர்ச்சியர்க்குங் ௬௧

கலியாணமென்றங்கன் களித்தாடிப்பாடிநிற்பார்
அலியானவர்போனார் ஆர்க்குமையமில்லையென்பார் ௬௨

பாடுகர்கள்பாடிடுவார் பாவையர்களாடிடுவார்
காமெங்கரமெல்லாம் நல்லோசைகொண்டிடுவார் ௬௩

நீரோசைகொண்டிடுவார் நீதிமுழுக்காலிலுள்ளோர்
தாரோசையானதை வில்லிபில்லைகைமணியும் ௬௪

காளமுழக்கிடுவார் கட்டியங்கள்கூறிடுவார்
மேளமுழக்கிடுவார் மேதினியெல்லாமறிய ௬௫

குருப்பூட்டும்வேதக் குறிகாரரைப்பார்த்துத்
திருப்பூட்டும்வேளைபலன் செப்புமென்றான்ராசனுந்தான் ௬௬

குறிகாரர்சொல்லுவர்கள்கோவேகேளின்றையிலே
தெறிவானபொல்லாங்குந் தீவினையும்பின்வருமே ௬௭

குருதியலைபோலுங் கோட்டைவெளிமீதோடி
அரிதரிதுசொல்லுதற்கிங் காராலுங்கூடாது ௬௮

பட்டத்துயானை பதையாலேமடியும்
கொட்டமிடும்வாம்பரிதான் குருதிதனிலேகுதக்கும் ௬௯

திட்டமுடன்தேர்களெல்லாஞ் செங்குருதிமீதமிழும்
வட்டப்பரிகள்வாளுள் அழித்துவிடும் ௭௰

மணமுடிக்குமன்னன் வடோச்சியினலாமிதென்றார்
குணமுடனேபின்னுமே கூடுமணமென்றுரைத்தார் ௭௧

வேறுபகையிங்கில்லையே வேதியரேபொய்யிதெனத்
தேறுதலாய்மாப்பிள்ளையைச் சீக்கிரத்திலுகாச்சுற்றி ௭௨

ஊர்கோலம்வாருங்களென்றே திருவிந்த்ராயன்
கார்மேகம்போலே கலந்தங்கவர்கூடி ௭௩

துங்கவுரைத்தபடி தோன்றல்வடோச்சினுக்கு
அங்கமெங்குஞ்சாடனையா யானவடோச்சினுக் ௭௪

தங்கமெனவேயணிந்து தாம்மணக்கோலமதாய்
துங்கத்தேரோதுமுன்னே தோன்றல்வடோசினுக்கு ௭௫

பங்கமொன்றும்வாராமற் பண்பார்படைக்கலன்கள்
அங்கமதின்மீதே யணிந்தவடோச்சியர்கோன் ௭௬

படையாயுதங்கள் பதினெட்டுந்தானணிந்து
கொடிகளதுசூழ்ந்துநிற்கக் கொள்கையுடனிதுநினைந்தார் ௭௭

தாலிகட்டுமுன்னாலே தாகிசெய்திவாராமல்
வேலிகட்டிக்காவெனவே வேந்தனிடந்துவாவிரந்து ௭௮

தன்சேனையுள்ளவர்க்குத் தானுபதேசம்பண்ணிப்
பின்பழிகள்வந்தாலும் பிசகாமல்வெட்டுமென்றே ௭௯

உறுதிதனையுரைத்துங் குறுபெலந்தான்கொடுத்து
மறதியில்லாவீரமணி மன்னன்சிரமேலணிந்து ௮௰

பிறிதியில்லாகல்விறையைப் பிந்தாதுளத்திலுன்னி
பொறுதியாய்மற்றவர்கள் பேரற்பாகவேசூழ ௮௧

இந்திராயன்சொற்படிக்கே யேந்துமணித்தேரேறி
சந்திரனுஞ்சூரியனும் தான்வாரதொப்பாக ௮௨

வீதிவருகையிலிவ் வேந்துமகள்நல்லக்காள்
ஓதியெழுதிவிட்ட ஓலைவந்துசேர்ந்ததுவே ௮௩

வாசகத்தைப்பார்த்தான் மகள்தர்லிவாங்கினதை
வேசமுடன்தாகிதலை வெட்டிக்கொண்டுவந்ததுவும் ௮௪

ஏழுபுரிசைகளும் பிழிவாயழித்ததுவும்
நாளும்புறக்காவலே தம்நாட்டி லுள்ளோர்கொண்டதுவும் ௮௫

பிணக்காடுமாமலைபோற் பெண்களின்கூக்குரலும்
மணக்காடுகொண்டவிபின் மக்கத்திற்போனதுவும் ௮௬

வடோச்சிமணமுடிக்க வந்ததலையானதுவென்
நடாச்செயலாலென்புருடனுளனென்றங்கிருக்க ௮௭

வந்தவிபரத்தை வாசித்துமன்னவன்
அந்தமுள்ளவோலையைப்போட்டலறிவெளியாகினனே ௮௮

சிந்தைதளர்ந்திந்த்ராயன் சேனாபதியிருக்க
வந்தவிதியென்னவே வாயுவர்ந்தங்கேதுசொல்வான் ௮௯

இப்புதுமைகண்டிலனே இடிவிழுந்ததுபோலே
அப்பெண்டின்தாலியதை யறுத்துவந்ததெய்விதமோ ௯0

புத்திகெட்டோனுனதும் போசந்தெனதுதாகிதலை
சத்தியுடன்கொண்டுவரத் தான்மனதுவந்திடுமோ ௯௧

எத்தினன் ஆலிதலை என்றேவடோச்சிநம்மைச்
சுற்றினன்பாவியவன் சோர்வையறிந்தோமிலையே ௯௨

என்மருகனேவதைத்தின் கிப்படியுஞ்செய்வானோ
கன்மங்கினைத்தானே கண்டவர்தால்சொல்லவில்லை ௯௩

களவாணிப்பையலெனக் கையுமெய்யாகக்கண்டேனே
இழவாணைதைக்கொணர்ந்தா னென்மன்னைதத்தான்கொடுத்தான் ௯௪

மீனைமீன்பாய்தனபோம் மீளவும்வந்தென்பதியிற்
றூனையுடன்போருமினை தானவிமேலென்றிருந்தோம் ௯௫

சத்திகெட்டபாவியென்று தான்வந்தானென்னிடத்திற்
புத்திகெட்டிங்கென்மருகன் போந்ததலைகொண்டுவந்தான் ௯௬

ஆலிதலையென்றல்லோ அன்றிழுத்தோமனைச்சுற்றி
நீள்செய்யாவேலையிந்த நெட்டூரஞ்செய்தானே ௯௭

என்னகொடுமையிதின் கெப்போதுங்கேட்டதுண்டோ
பின்னையில்லையிங்கிவனைப் பேய்க்குருவிருந்திடவே ௯௮

கன்னெஞ்சஞ்செய்தபிழை கண்டதில்லைக்கேட்டதில்லை
வன்னெஞ்சனிப்பழிதனை வாராதென்றேநினைத்தான் ௯௯

வெட்டியில்லையூர்கோலம் வேடிக்கையாய்வாரான்
புட்டுவிருந்தானோ புகழார்பனிமதிலை ௱

அலியின்பதம்பணிந்திங் கானமனைஞ்செய்யவந்தான்
கலியோஇதென்னடாழி கன்னெஞ்சஞ்செய்ததுதான் ௱௧

அற்பசுகந்தூக்கமென்ற பாவமனத்தென்னிலனே
சற்பனைகள்செய்தாமீன சண்டாளனென்றபிள்ளும் ௱௨

ஆலகபிக்கோன்கொண் டாயிழையைச்சேரவந்தான்
காலனவனைத்தொடரந்த காலமதுதானையே ௱௩

கையெடுத்தசாமியிப்போ காட்டிக்கொடுத்தவனை
வையகத்தில்ஆலியின்மன்வந்திலனோகாண் துணிக்க ௱௪

நாக்கழிவுசெய்த நபிமருமகனைப்பிடித்து
வாக்கரிவுசெய்து வடோச்சிதனையும்பிடித்து ௱௫

ஒருவர்க்கொருவர்பார்த்திருக்க வந்துநான்வெட்டேனேல்
தருமனையாளப்பிறர்க்குத் தான்கொடுத்தோனவனென்று ௱௬

இந்திராயன்சினத்தங் கேக்கியேவாடிநின்று
பந்திபரியானைப் படைகளெல்லாந்தான்திரட்டி ௱௭

வழிகேடுசெய்த வடோச்சிதனைவெட்டுமென்றான்
பழிகாரனென்கெனவே படைகளெல்லாந்தானெழுந்து ௱௮

கலியாணவீடு கனத்தெழுவார்வீட்டதுபோல்
மலிவானவீதிவலம் வாரதெருப்பக்கமதில் ௱௯

கூத்தாடுமேலொருபாற் குரவைகளுமேலொருபால்
ஆத்தாடியென்தங் கையமொருபக்கமதில் ௱௰

மாப்பிள்ளையென்பர்சிலர் மாபாவியென்பர்சிலர்
கோப்பழியச்செய்தான் கொடியவடோச்சியென்பர் ௱௰௧

இப்படியேதான்சூழ்ந்த ஈப்போலச்சேனையது
மைப்படியுங்கண்ணார்கள் மலைபோலவேசூழ ௱௰௨

ஆனையொடுதானை படர்பரியின்சேனைகளும்
சேனையொடுதேர்கள் திசையெங்குஞ்சூழ்ந்தனரே ௱௰௩

சுற்றிவளைந்தார்கள் தோன்றல்வடோச்சிதனை
எற்றவெளியாயிற்றென் றேங்கிவடோச்சியர்கோன் ௱௰௪

சூழ்ந்தபடையுடனே தோன்றுமதிமேதுரைப்பான்
சார்ந்தவரேயிந்த்ராயன் தன்சேனைதான்மாளக் ௱௰௫

கொன்றுமுக்கித்தீனைக் குறையாமலேகிறத்தும்
என்றுஞ்சவர்க்கமுண்டு இப்படைக்குநாம்சலித்தால் ௱௰௬

உயிர்திவதல்லாதிங் கோர்கதியுங்கிட்டாது
வயிரமுடனேயினிவாய் வாய்த்தபடைவெட்டுமென்றான் ௱௰௭

எந்தல்வடோச்சிசொல்ல எல்லோருஞ்சம்மதித்தே
சார்ந்தவர்கள்தங்களுடன் தானும்வடோச்சியுமாய் ௱௰௮

வாளையுறைவிட்டார் வடோச்சியுடன்படைஞர்
கோழைப்படாதுயிரைக் கொண்டுதப்புவோமெனவே ௱௰௯

நாளையெல்லாம் ஆலியவர் நன்றாய்வருவரென
ஆளோடுஆளிடறஆனையொடங்கானைதுன்ன ௱௨௰

வாளோடுவாளிடறவாசியொடுவாசிதுன்னத்
தோளோடுதோளிடறத் துட்சணரெல்லாம்பொருத ௱௨௰௧

வேலோடிவேலிட்ட வீதியெங்குங்கூக்குரலாய்
காலனவகைப்படையுங்காடெல்லாந்தான்சூழ ௧௨௨

அப்போபனிமதியென் றனபெயர்ப்பெண்ணாநிந்து
தப்பல்லோவந்ததுகாண் தாசனிக்கென்றேயுரைத்து ௧௨௩

என்றென்னுத்தாதியர்க ளிடம்பலமுங்கூடிநிற்கப்
பெண்ணுதமந்தப் பேர்தாதியர்க்குரைத்தாள் ௧௨௪

கர்பாழதாகுமென்றே நான்முன்னே சொன்னேனே
பகர்தாகியின்தலையென் றேபகாத்தேன்முன்னுலே ௧௨௫

சொன்னதுமெய்யாயிற்றிப்போ சோர்வுவருமிந்நேரம்
என்னபழிவருமோ என்பிறவிதாலியும்போய் ௧௨௬

தனித்தாள்பிறவியெனச் சற்றேமனதுடைந்து
இனித்தான்கபிதமக்கிங் கிமான்தான்கொண்டிலையேல் ௧௨௭

எல்லோர்க்குமங்கலியம் இடப்பித்தானேகெகின்கன்ன
வல்லான்தனக்கு வந்ததுபுல்யாமலியோ ௧௨௮

இந்தவூருள்ளவரோர் வேந்தலலியர்க்கெதிரி
அந்தவுலகுள்ளவரும் ஆலியென்றுவஞ்சுவர்கள் ௧௨௯

அப்பனுக்குப்புத்தியில்லை ஆர்சொல்லுங்கேளான்காண்
செப்பமுடன்பட்டாற் றெரியுமென்றேயங்குரைத்தாள் ௧௩௰

தந்தைதாய்தன்பேரிற் றுணைசைவிட்டொழிந்தாள்
முந்துமிறையோன்முகம்மதுற்றகுல்நபியை ௧௩௧

நெஞ்சில்நினைந்து நெடியோனைத்தான்புகழ்ந்து
வஞ்சிதுவாச்செய்தாள் வடோச்சிபடைவெல்லவென்றே ௧௩௨

மணவறையிலேதாலி வாங்கினபோலாயிற்று
குணமகல்மூடிக்கமட்டுக் கொன்றபழிநின்றிலையே ௧௩௩

தாலிகட்டவாமெனவே தான்வாளுறையிடுத்தான்
காலிகண்டவெம்புலிபோற் கம்பெடையில்வாள்வீச்சில் ௧௩௪

வெட்டொன்றுகண்டம்ரண்டாய் வீழ்ந்தார்கள்சேனையெல்லாம்
பட்டென்றிருந்த பரந்தொருவிநியெல்லாம் ௧௩௫

சட்டென்றுநாணிறவனே தாலிதலைகொண்வெந்தான்
விட்டுதோஇங்கிவனை வீண்பழிதாவென்றுரைத்து ௧௩௬

கண்மாரிதான்சொரிந்தார் காவலர்கள்சேனாண்டும்
அணையானைதமுறித்தங் கானவெள்ளம்பாய்ந்ததுபோல் ௧௩௭

செநீர்க்கடற்போலே செறிந்துபரந்தோடிவிட
வன்னிதனில்வீழ்புழுப்போல் மாண்டார்படைவீரர் ௧௩௮

குப்பல்குப்பலாகக் குவிந்ததேகோடிபிணம்
தெப்பக்கட்டைபோலே செறிந்தபிணங்கோடிகோடி ௧௩௯

வெட்டிக்கைதான்சலித்தான் வேந்தன்வடோச்சியர்கோன்
கட்டித்தண்ணீர்போலே நான்குதிக்கிலும்பறந்து ௧௪௰

நடுக்கடலின்கப்பலைப்போல் நான்குதிக்கிலும்பறந்து
நொடுக்கமென்னசெய்வமென்றங் குள்ளேமனதிடைந்தே கசக

என்னசெய்யப்போகிறோமென்றேங்கிமுகம்வாடி
மன்னன்படைதனக் மற்றேதுசெய்வமென்று கசஉ

ஓடியேபோனாலு முலகஞ்சிரிக்குமென்றே
ஆடித்துரும்பதுபோல் அங்கின்னமேடாச்சிநின்று கசங

பெண்ணாசையால்நமக்கும் பேரினித்தான்போச்சுதென்று
கண்ணாசையல்லாது காரியம்வீணாயிற்றென்றே கசச

இந்திராயன்தனக்கிங் கெதிரிநாம்காணாது
அந்தமாச்சென்றிங் கலமலைந்துவெட்டிப்பின்னும் கசரு

ஆலிசொலைக்கேட்டோமே ஆலிநகர்தூரமல்லோ
சோலிவருத்தினமோ தூரமல்லோ ஆலிநகர் கசசு

ஆறுமாதப்பயணம் ஆலிவரப்போறதில்லை
தூறுவருத்தினமே சோர்வுவருமேயுயிர்க்கு கசஎ

ஒருநாட்பொறுத்ததில்லை வேலைவந்துகெட்டதுகாண்
கருவாம்பனியதியைக் கண்டுயிரைத்தோற்றிலமே கசஅ

காற்றேறுபார்த்துவரக் கத்தனையார்தாமிங்கு
காற்றுகிலுஞ்சிலநாட் கழித்தல்லோகண்டிடலாம் கசகூ

மாற்றான்வளைந்திருக்க மற்றேதுசெய்வதினி
தேற்றுதொருவரையும் செய்யுமிடுக்கமிதே கருய

கடலோவழிந்துவரக் கப்பலோ ஆலியவர்
கடலோடுங்கப்பலென்றாற் காணுஞ்சிலநாட்கழித்து கருக

இடறானவிப்படைக்கிங் கிப்போதுநவாதே
படரானகாரியந்தான் பார்மீதுவந்ததுவே கருஉ

புள்ளேபறந்துவரப் போர்செய்யும்ஆலியவர்
புள்ளொன்றாலுஞ்சிலநாட் போனபின்னர்கண்டிடலாம் கருங

வெள்ளமோ ஆலியவர் வேகமுடனோடிவர
வெள்ளமேயானாலும் விள்ளுசிலநாட்செலுமே கருச

உள்ளபடைக்கிப்போ துதவிலையேலோர்நொடியில்
எள்ளளவுஞ்சீவனுக்கிங் கிப்போதழிவாகும் கருரு

ஆதவனோவோடிவர ஆலியவரிங்குவர
ஆதவனேயானாலுமா றைந்துநாழிகையாம் கருசு

நீதமல்லோசெல்லு நிமிசத்தில் நம்முயிர்போம்
நாதராய்வந்துதித்த நபிமருகர்வாராரோ கருஎ

வல்லிபனிமதியும் வள்ளல்நபிதன்கலிமாச்
சொல்லிமணஞ்செய்யுமென்ற சொல்லும்பொய்யானதுவோ கருஅ

சல்லியமாய்வாதத்திப்போ கார்குழலிசொற்கேட்டு
வல்லவன்றன்றூதர் முகம்மதுநம்மருங்கேயிக்கு கடுகூ
கலிமாவுனாதகேோமே கன்னிகமக்கெய்துமென்று
ஆலிமானுர்தீனி லாகுமெனக்கொண்டதற்கோ ககூய
மெலிவாய்ப்படைதனிலே மேன்மையுயிர்போகிறது
கலிமாப்பலனதினுற் கத்தனலிவாராரோ ககூக
சூதுசொல்லவிட்டாளோ தோகைபணிமதிதான்
வாதுசெய்துநம்முடைய வாளுளைப்போக்கிடவோ ககூஉ
இந்த்ராயன்தாளதனி லிப்போபணிந்தாக்கால்
முந்தியேதாகிதனே மோசஞ்செய்தோமாகையினுல் ககூங
வந்தியாநம்முடைய வாளுளைப்போக்கிடுவான்
அந்திமதிபோலமுக மாகினமேயென்றடைந்து ககூச
நம்போலேமன்னவர்க்கு நாளுஞ்சிரிப்பாயிருக்கும்
வம்பேபடுந்துயரம் வந்ததெல்லாங்காணபமென ககூரு
ஈடுசெய்யக்கூடாதிங் கின்றுமவுத்தாய்விடுவோம்
நடும்படியேனுமட்டும் நாம்பார்ப்போமிங்கிவனே ககூசா
ஆருதவியொன்றுமில்லே அல்லாவுன்றஞ்சமென்றே
பேருலகில்மவுத்துப் பிக்காதுவந்ததென்றே ககூஎ
கைசலிக்கவெட்டிக் கஸ்திவரும்வேளேயிங்ஙன்
வையகத்திலேயரசாய் வந்தஅலியார்முரசை ககூஅ
எடுத்துமுழக்கிடலா மிந்நகர்க்குமந்நகர்க்கும்
அடுத்தநகரல்லவது ஆறுமாததூரமென்று ககூகூ
முரசோசைகேட்டிடுமோ முன்னலிதான்வாசதுண்டோ
கனசேரக்கூடாதே காரியமும்வீணுயிற்றே களய
ஆசையொழியயாயிழையைச்சேர்ந்திலமே
பாசமெல்லாம்வீணுச்சே பாவியான்செய்வேலே களக
நாடுமிழந்திட்டோமே நாயனலிசொற்கேட்டாற்
கேடுவராதெனவே கெம்பீரமாய்நினைந்தோம் களஉ
இத்தனேயுமெண்ணிமன மீடுசெய்யும்வேளேயங்கு
சத்தியெல்லாங்கெட்டுமன்னர் தள்ளாடிவாளதனே களங
நின்றுநிலத்தெறித்தே நெஞ்சமெல்லாந்தான்கலங்கி
அன்றலியார்சொன்னமொழி யாமறிந்துபார்ப்பமென களச
தந்தமுரசுதன்னைத் தாமுழக்கிப்பார்ப்பமென்றே
அந்தமுடனெடுத்தங் கடித்தான்வடோச்சியர்கோன் களரு
முரசையவனெடுத்தே மோகமுடனேமுழக்க
அரசாலிதஞ்செவியி லப்போதுகேட்டனவே களசா
மக்கநகர்க்கடுத்த மாகனத்தீச்சம்மரத்தில்
மக்கனலியேறிக் கனிபசிக்குத்தான்பறித்து களஎ

உணவருந்தும்வேளையிலங் கோசைமுரசானசத்த
மணமுடனேகேட்டிடவே மண்டிக்காலோடனீதாம் கஎஅ

இந்தமுரசோசையதங் கேந்தல்வடோச்சிகையில்
முந்தவொருந்கொடுந்த முரசினதுசத்தமல்லோ கஎகூ

சத்தமுழக்கினதாறுனேவடோச்சியர்க்கு
மெத்தவினைவந்திட்டதோ விளம்புமதையறிய கஅய

இந்தச்சமயமங்கு யாம்போயுதவாவிட்டால்
முந்தகாறுசொன்னதெல்லா மோசமிறைக்கோரது கஅக

இப்போதுகாமேகி யேதென்றுதவாட்டாற்
றப்பல்லோமுன்சொன்னதெல்லாந் தனிபனுக்குமோரது கஅஉ

ஈச்சமரத்திருந்த வேசனவ்யோர்நினைவாய்
மூச்சடக்கித்தீன்தீன் முகம்மதெனவேயுரைத்து கஅங

பாய்ச்சலுக்குக்கால்மடக்கிப் பாயும்புலிபோலவிதாம்
நீச்சலால்நீரினிலே நில்லாதுநீத்ததுபோல் கஅச

வாய்த்தாருலுத்தான் படைக்களத்திற்சென்றங்கனம்
பாய்ந்தவடோச்சிமுன்பாய் வருந்தாதேவந்தனென்றார் கஅரு

உள்ளங்கலங்காதே யொன்றுக்குமஞ்சாதே
தள்ளவொண்ணுச்சேனை தனைமடிப்பனென்றாரலி கஅசா

கண்டான்வடோச்சியர்கோன் கத்தனலிதம்மையங்கு
கொண்டாடிச்சத்தமிட்டான் குதாயுதவிசெய்தானென்றே கஅஎ

விண்டானசலாமலிக்கு வெறறிவடோச்சியர்கோன்
குன்றுப்பிறந்தியலி கூறினானகேளும் கஅஅ

இந்திராயன்சத்தமதிங் கேதாவிதென்னவென்றான்
சந்தோஷம்வீரலியார் தாம்வந்ததைப்பார்த்தே கஅகூ

வேலைக்குதவிலவர் வீறுபெற்றஆலியென்றம்
கேழையாய்ப்போருமுன்னே யேகிவந்தஆலியென்றே ககூய

வாய்ம்பயிரதற்கு மழைவந்தவாறதுபோற்
றேடும்பொருள்வலியச் சிக்கினதுபோற்றினமும் ககூக

கண்குருடரானவர்கள் கண்பெற்றவாறதுபோற்
பண்புகுதாயிக்குரலிற் பண்புகுந்தவாறதுபோல் ககூஉ

உண்டுடுக்கவொன்றுமில்லா துற்றவெளியோர்கள்
கண்டெடுத்தற்புதையல் கைசேர்ந்தவாறதுபோல் ககூங

பிள்ளையில்லாமாளிடர்க்குப் பிள்ளைவந்தவாறதுபோல்
கொள்ளைவரும்போது கோவலர்நீரிங்குவந்தீர் ககூச

உயிர்போயிருந்தவுட லுயிர்பெற்றவாறதுபோல்
கயிர்பெற்றுக்கொள்ளக் கத்தனலியிங்குவந்தீர் ககூரு

அத்தனருளாணையில்வாழ் குமதருன்றன்மகனும்
பற்றலர்கள்போற்றிசெப்பும் யார்த்திபன்சாவுத்தப்பிள்ளை ககூசா

கற்றவர்கள் கண்டு கவிதீரும்வாறதுபோல்
எத்தலமும்போற்ற விற்குக்லியாதிசெய்தான் ககூஎ

அந்தார்புயத்தோ னவவடோச்சியர்கோன்
பிந்தாதவிவந்தாற் பெரும்படையைவெல்வனென்றே ககூஅ

அந்தவிலத்திற்போட்ட அடிகாளைத்தானெடுத்தே
நந்தாப்பனிமதிதானம்முடனேசேர்வதென்று ககூகூ

நம்படைக்குச்சேதமில்லை நம்மாஅவிவந்ததனால்
தெம்படைக்கிப்படையைச் சின்னபின்னமாயறிந்து உள

துண்டாடவேண்டுமென்று சோராதவ்வாளாலே
கொண்டாடியேபடையைக் கூறுகூறாக்கினனே உளக

அப்போபனிமதிதா னவிவந்தானென்றறிந்துங்
கிப்போவடோச்சியுட னீடுசெய்யமல்லரில்லை உளஉ

தப்பாதிங்கேநமக்குத் தானேமனுளனென்று
குப்போடுதானினைத்துக் கோமானுதவியென்றான் உளந

என்றுமகிழ்ந்திருந்தா னிந்தாயன் தானறிந்தான்
இன்றுவந்தேயவிதானிப்படைக்குநல்லவிதஞ்சொன் உளச

அன்றுபடைத்தலைவனையழைத்தங்கிந்த்ராயன்
இன்றங்கவிதலையை யியம்புநீதந்திடென்றான் உளரு

சென்றங்கவனிராங்காச் சேனைதனிலேபுகுந்து
கொன்றிடவேகோபமதாய்க் கோடிபடைக்கூட்டிசென்றான் உளசா

அல்லாவும்பக்கவென ஆலிகினைந்தேதுரைப்பர்
கில்லாதிங்கிப்படைமுன் நின்றுகொளென்பின்னரென்றார் உளஎ

சொல்லானதுகேட்டே சொல்வான்வடோச்சியர்கோன்
நல்லாயிற்றென்றே நட்படையிலேபுகுந்தான் உளஅ

அஞ்சாதேயென்றங் கவியப்போதாமுனைத்தார்
பஞ்சாகநெஞ்சம் படைத்தார்படைவீரர் உளகூ

ஆனைத்திரள்தனிலே யாவிபுகுந்தார்ப்பரித்தார்
சேனைத்திரள்தனிலே சென்றான்வடோச்சியர்கோன் உளய

ஆசுஇந்திராயனுட அருஞ்சேனைவெள்ளங்களைப்
போசனெனவந்த புகழ்வயார்வெட்டினரே உகக

திரையேழ்சமுத்திரம்போற் சேனுபதியுடனே
புரையினுமொன்றும் புத்திசற்றுமில்லாத உகஉ

சபுலைக்கெனுமரசன் தான்வந்தான்சேனையொடும்
கபுலத்துடனவிதாம் கையிலொன்றுங்காணுமல் உகந

அணியும்படைத்தலைவ ராயுதமொன்றங்கெடுத்துந்
துணிவோடவியார்தான் துப்பகரத்திற்பிடித்து உகச

நெத்திக்கையானமேல நீறுக்கவேண்டுமென்றே
பத்தியடித்தார்யானை பாரமலைபோல்விழுந்த ௨௧௫

பொற்றேரிலேறிவந்த போசன்வடோச்சிதன்னைக்
கற்போடுநின்றுகண்டாள்பனிமதிதான் ௨௧௬

பூரித்துடலமெல்லாம் போற்றித்துவாவிரந்தாள்
காரிடிந்துவிழுந்ததுபோற் கரிபரிகள்மாண்டதந்த ௨௧௭

வேடிக்கைபார்த்துநின்றாள் வேந்தர்படுங்கொற்றி
வோடித்துரத்தியடியுற்றதோலாவடித்தார் ௨௧௮

கொம்புபரிபட்டதுண்டக் குஞ்சரங்களோர்கோடி
அம்புபோற்பாய்குதிரை யடியற்றதேர்கோடி ௨௧௯

மதங்கொண்டிருங்களோது நன்றுயொருகோடி
மதம்பேசிவந்தோர் மடிந்தார்சவுக்கதனால் ௨௨௰

ஏந்தலிந்திராயனுக்கு கேற்றதொருதம்பியவன்
வாய்ந்தவல்லவடுதே வருப்பனிந்திராயனுக்கு ௨௨௧

வாகனமுமில்லையொரு வாளுமதுவில்லைகையில்லை
ஆகவெறுங்கையாகஆளதோவொன்றுளது ௨௨௨

எதிர்த்தவனையானைகளை யேறுகின்றவெம்பரியைச்
கரித்தான்தோல்தன்னாலே தாங்கரிதுமன்னவனே ௨௨௩

தம்பியுரைத்தமொழி தன்னைக்கேட்டிந்திராயன்
வெம்பியேகண்சிவந்து வீணனவிவந்தானே ௨௨௪

கத்தின்னுலிதலை யென்றேன்வடோச்சிநம்மைப்
புத்திமடிந்தோமே போரிலவிவந்தானே ௨௨௫

சத்தியுடன்பொருவோர் தாமங்கெனவழைத்துப்
புத்திகளைச்சொல்லிப் பொருவில்லாவீரர்களாய் ௨௨௬

ஐயாயிரங்கோடியானதேர்வேந்தர்களைப்
பொய்யாதனுப்பிவிட்டான் போந்தல்லையத்தான்வளைத்தார் ௨௨௭

தம்பிமுகிலினைப்போற் றறுகாது தான்வளைந்தான்
தம்பியெழுகடற்போற் றங்காலியைவளைந்த ௨௨௮

வெம்பரிகளெண்ணமில்லை வேந்தரவியைவளைந்த
தம்பமில்லானையங்கன் தறுகாதுதானெதிர்த்தார் ௨௨௯

கன்னிபனிமதிதான் கண்டுகையைத்தானெரித்து
மன்னனிந்திராயன் மாபடையனுப்பிவிட்டான் ௨௩௰

ஐயோ அவ்வொருவராற்றுவரோ இப்படைக்குக்
கைசேதம்வாராமற் கத்தாவுன்காவலென்றாள் ௨௩௧

ஆயுதமுங்கையிலில்லை அவிக்கல்லாவுன்காவல்
தாய்பிள்ளையாலவிக்குச் சார்வுதுணையிங்கில்லையே ௨௩௨

ஊருமலிக்கிங்கிலேயே யுற்ற துணையும்மிலேயே
ஆருந்துணையிங்கிலேயே அல்லாவுன் காவலென்றாள் ௨௩

கறக்கனேயாலியையுங் காப்பாய்வடோச்சியையும்
தொக்கெனவேயெண்ணிவந்தார் சூழ்படையைத்தானவியார் ௨௩

பக்கமயொத்தகொங்கைப் பனிமதிதனீ துணைகால்
விக்கைநயவியைப்படைகள் வெள்ளமெனவேவளைந்தார் ௨௩

அன்றிரவிற்பாத்திமத் தக்கு துயில்கொள்நேரம்
ஒன்றியாப்போன அலியுற்றசெய்திகேட்டிலமே ௨௩

எந்தநகர்போனரோ வெவ்விடத்துஞ்சொல்லிலமே
இந்தநகர்வந்திலேயே யேதோவெனக்கலைத்து ௨௩

அசாந்தியுடன் துயின்றா ரன்றானன்கொன்றுகண்டார்
விசாரத்துடனலியார் வேதுங்கையாலோர்படையை ௨௩

தோலாலடித்திடவுந்துட்டர் னடைமாண்டிடவும்
ஓலக்கடற்போலே யுள்ளபலசேனையெல்லாம் ௨௩

சேரமடிந்திடவுஞ்செங்குருதியோடிடவும்
பாரமதயானையெல்லாம் பாய்புலியைச்சூழ்ந்திடவும் ௨௪

கலங்கியவிநின்றிடவுங் காயம்அலிமேற்படவும்
துலங்குமிந்தவாறுய்த் துயரசிதம்மகளார் ௨௪

ஆதியறிவித்தமனும் ஆயிழையார்கண்டெழுந்தார்
சிதமதியையழைத்த செய்யிதுற்றகுல்மகளா ௨௪

இடுக்கிட்டுத்தான்விழித்தார் சிகரங்கால்தானடுங்க
அடுத்திட்டடையவன்பா லன்பாய்த்துவாவிந்தார் ௨௪

கையெடுத்தத்தானேந்தி கக்கனிடத்தோர்நினைவாய்
உய்யப்பதித்த உடனே துவாவிரந்தார் ௨௪

கத்தனேயுன்புலித்தாம் காருண்டராச்சியத்தின்
மெத்தவும்வகப்படவே மேலவளீபார்ப்பதென்ன ௨௪

பிசமிறசெய்யப் பிரித்தாய்சூருணதிலே
காசகலவெட்டிக் கலுமாவிற்சேப்பதற்கு ௨௪

வேகமெனவுந்தனுக்கு வெட்டலைத்தமன்னுதவி
ஆகமறிந்தவனீ யார்துணையமெக்களுக்கு ௨௪

உந்தனிடவாள்குதிரை யுன்கையுநீயெடுத்தாய்
என்றனக்குவேறுதுணை யேகனேயுன்னையல்லால் ௨௪

வேறொருவர்தானுமில்லை வேதமேயாலியவர்க்
கூறுகளேதுவந்தா லுரைக்கின்றவுண்மைதாய் ௨௪

உன்னைவிடமாட்டேனிக்குற்றதுநான்சொல்லிவிட்டேன்
என்னையவர்கையா லெடுத்தடக்கிக்கொள்ளுமட்டும் ௨௫

வின்னபங்கம்வாராமல் வேந்தனேநீசார்ப்பாய
அன்னமுகம்மதுக்கும் அன்பானநல்மருகர் ௨௫

பொல்லாக்கடுங்காயிர் போரதனிலேபுகுந்து
கல்லாதபேரையெல்லாங் கலிமாவிற்சேர்க்குகின்ற ௨௫௨

எல்லாப்புகழு மிறையேயுனக்கலவோ
வல்லாவுனக்கு வருவதென்னவேகமது ௨௫௩

ஆகும்பொழுதுன்னுதவி யாகுமோஎப்போதும்
சாகும்பொழுதார்தடுப்பார் தக்கோனேயுன்விதியை ௨௫௪

இந்தச்சமயமதிலிப்படிக்குச்செய்வாயோ
தந்திடீநீவாள்குதிரை தன்னையலிபாற்கொடுக்க ௨௫௫

சொர்க்கமெனக்கம்பரைத்தான் துய்யவனேநீகொடுப்பாய்
உந்தன்கிருபையதிற் குள்ளஅலிக்கிப்போது ௨௫௬

உயிருக்கவத்தம்வந்தா லுன்னைவிடேனென்றனக்குக்
கயிறுகொடுத்தேநீ காப்பாற்றவேண்டுமெங்நான் ௨௫௭

நீயனுப்புர்காலி நிஜமென் நிங்கெண்ணிவிட்டேன்
நாயனேயுன்னிடத்தில் நான்விழ்த்துத்தந்திடவோ ௨௫௮

நாச்சியார்கேட்டவுட னுயன்கிருபையோடு
மாட்சியாயாதி மலக்குகளோத்தான்கூவி ௨௫௯

என்தோழர்தம்மகளா ரென்னிடத்திற்கேட்டதுவா
பிந்தாதுநான்கபூல்த்தான் பிரியமுடனேபுரிந்து ௨௬௦

இப்போகொடாதிருந்தா லென்மேல்வெறுப்பாவரொ
அப்போகொடுத்தனனென் றந்தமலக்கோடுரைத்தான் ௨௬௧

பிந்தாதுமாவாளும் போரனகம்பரையும்
நந்தில்வீரபட்டமுமே நான்கொடுத்தேனென்றுரைத்தான் ௨௬௨

வந்ததப்போசிர்சிறந்த மானுர்கள்நாயகம்பால்
அந்தரத்தில்நின்றங் கனுமனித்ததேடரிதான் ௨௬௩

பந்தமெனப்பாத்திமத்துப் பாவைசெவியுற்றதுவே
அந்தரத்தைப்பார்த்தார்கள் அன்பானபாத்திமத்து ௨௬௪

துல்துல்தனைக்கண்டார் துல்வக்கருல்வாளுண்டார்
வல்லவிரபட்டமுமே வாகாகவந்ததுவே ௨௬௫

கண்டுமகிழ்ந்தே கத்தனலிபாற்செல்கென்றார்
வண்டப்பேயேற்பறந்துபரி வானகத்தேதாவியதே ௨௬௬

துல்துல்பறந்துசெல்லத் தய்யகம்பர்வரற்பிடிக்க
வெல்லவென்றிவீரப்பரி விண்ணிற்பறந்துசெல்ல ௨௬௭

வாளும்பறந்திசலும் வல்முலுத்தாவெனங்கெனவே
நாளும்நபிதம்மகளார் நல்லதந்தையோடுரைத்தார் ௨௬௮

நடந்தபுதுமையெல்லாம் நாயனபிதாம்கேட்டு
அடர்ந்தபடைவெல்லஅலிக்கிறையருள்வரனென்றே ௨௬௯

பதவியார்கங்கபியும் பாத்திரத்துமங்கிருந்தார்
அரசுடனேஐந்தாறுமன்பாயறியாத ௨௭௰

காயிர்களைத்தூட்டடுத்துக் கம்பருடன்வாளுமொக்கத்
தாபரமாய்வீரபட்டந் தான்போயிருக்குதங்கு ௨௭௧

வீரதண்டையோசையிட வெம்பரியுந்தான்கழந்தங்
காரவேதான்முழுத்தான் அந்தரத்திற்சென்றதுவே ௨௭௨

படைகளத்தைக்கண்டே பரிதானதுக்கக்
கோடைக்கரத்தாரவிகையிற் கொள்கையுடன்வாள்புகுத ௨௭௩

தலையிலேவீரபட்டந் தான்போயிருந்ததுவே
தொலையிற்பதின்காதம் தூண்டிப்படைநடுவில் ௨௭௪

தோன்றினார்கம்பர்வந்து தூண்டியிடக்கைதனிலே
செண்டிகழும்வீரபட்டஞ் சிங்காரமிகண்டனரே ௨௭௫

வலங்கைபதின்காதவழி வம்பர்படைநடுவிற்
துலங்கவேதுல்துல்வந்து தோன்றினதையாவிகண்டார் ௨௭௬

ஆலிதமக்கப்பாலே யாருமெழுகாதவழி
வாலிபமாய்நின்றார் வடோச்சியர்கோனும்படையும் ௨௭௭

நடுப்படையிலேபொருதார் காயன்புலியாலிதின்று
வடுப்பாடாத்தினவர்கள வல்லாயுங்காவலென்றார் ௨௭௮

வாளையுறைவிடுத்து வம்படையுட்புகுந்தார்
சாளயமென்றிந்த்ராயன் தம்பிதலையாகவந்தான் ௨௭௯

பதினெட்டுலெட்சம் படையானையேயெழுந்தான்
அதிரிட்டதேரங் கதுவுமெழுகோடியுண்டு ௨௮௰

ஐம்பதுகோடியடற்பரியின்தன்னுடனே
ஐம்பதுகோடிஅபசிகளதன்னுடனே ௨௮௧

வாரதுடன்காலாட்கள் வறுமைப்பான்கோடியுண்டும்
பாரதிரஅங்குவந்தே பண்பரவிவைவளைந்தார் ௨௮௨

கம்பரையும்ஆலியையுங் கார்மேகம்போல்வளைந்தார்
உம்பரெல்லாங்கண்டங் குளம்பயந்துதானிருந்தார் ௨௮௩

தல்துலெழும்பியதைச் சூழ்ந்தபடையுட்புகுந்து
மல்லுப்பொருதனைபோல் மதயானைமத்தகத்தில் ௨௮௪

வம்புபடமிதிக்கும் வாற்றெறிக்கமண்டையதின்
கொம்புகளிலேமிதிக்குங் கூததாடுமத்தகத்தில் ௨௮௫

சென்றுகொண்டுகம்பரந்தச் சேர்படையைக்குத்திநின்றார்
தண்டுலவுங்கூர்தலின மானுள்பனிமதிக்கு ௨௮௬

வண்டர்களைத்தானெடுக்கும் வண்ணம்வடோச்சியர்க்கும்
தண்டராமாலைபுனை தற்கேமகிழ்ச்சிகொடு ௨௮௭

60

பணியாரஞ்சுட்டு பலபேய்புசிப்பதற்கு
அணியானைமூனை தனை யத்துதுல்துல்கொட்டியதே ௨௮௮

கரியாணமாவிடிக்குங் கட்டளையோற்கம்பர்குத்தப்
பெட்டியாக்கிவிட்டார்கள் பேய்நரிக்கும்நாய்களுக்கும் ௨௮௯

அலிவாளின்வெட்டா லாழச்சென்னீரோடியதே
கலியோவிதென்றே கடந்தார்கள்மீந்தவர்கள் ௨௯௦

பட்டணமெல்லாஞ்சிவப்பாய் பரவிரத்தாறோடியதே
துட்டர்தனையடக்கும் துல்துல்அலிகிட்டவர ௨௯௧

தட்டமுடன்கம்பர் தானும்அலிகிட்டவர
இட்டமுடனின்றே ஏகமகிழ்ச்சியதாய் ௨௯௨

சங்கைச்சலாமுனாக்கத் தான்பிரத்திசொல்லினரே
அங்கமெல்லாந்தான்மகிழ்வா யலிதனைப்புகழ்ந்து ௨௯௩

முத்தியிட்டுத்துல்துல் முகம்தடவியேசிரித்துச்
சத்திபெறும்வாம்பரிமேற்றாலிதாமேறினரே ௨௯௪

தின்தீன்முகம்மதென்று செப்பினர்கம்பரப்போ
வான்பூமிமற்றிடமும் வகுக்கும்வல்லானைப்புகழ்ந்தே ௨௯௫

வேந்தர்பலகோடி வீற்றிருக்குமிந்த்ராயன்
சாந்துகொடுசெய்த தங்கக்கொலுமண்டபத்தில் ௨௯௬

ஏறியேதான்மிதிக்கு மேந்தலலிதுல்துலது
மாறியேவானமட்டு மாவோடும்வானரம்போல் ௨௯௭

குஞ்சரத்தின்மத்தகத்துங் கோடுகளிலும்மிதிக்கும்
அஞ்சலெனமாநிலத்தி லன்றுவலஞ்சுற்றிவரும் ௨௯௮

தோரணத்திலேமிதிக்குந் தூளாக்குமாமலையை
ஆரணத்தார்வாம்பரிதாம் அலைகட்டில்லேமிதிக்கும் ௨௯௯

மன்னர்கள்தன் தலையை மண்டிமிதித்தேயுடைக்கும்
மின்னேச்சொயித்துவருஞ் செம்பிண்த்திலேமிதிக்கும் ௩௱

பம்பரம்போலாடிநிற்கும் பார்த்தவர்கண்ணெட்டாது
செம்மையைத்துக்கையெடுத்த சேர்கோயிலையுடைக்கும் ௩௱௧

திரும்பிவருஞ்சுற்றிவருஞ் செம்பிண்த்திலேமிதிக்கும்
அரியவல்லபொன்முடியை யார்ப்பெழவேதான்மிதிக்கும் ௩௱௨

சக்கரம்போற்சுற்றிவருஞ் சண்டமென்வேயதிரும்
உக்கிரமாய்த்தேர்தனை யொன்றுநூறாக்கிவிடும் ௩௱௩

...ரண்டமுங்குலுங்கப் பந்தாடலாய்த்திரியும்
...ர்ப்படுத்திவிடுந் துட்டனரையங்கோட்டும் ௩௱௪

கெட்டியாய்த்துல்துலது கெம்பீரமாய்த்திரியும்
வெட்டினாலி வெகுகளங்கள்மாண்டதுவே ௩௱௫

எண்ணெண்ணாச்சேனைகள்தா மேகமாய்மாண்டாளுல்
மணனெல்லாந்தான்பிணங்கள் மாமலைபோலானதுவே ௩௱௬

மாண்டதைக்கண்டிந்த்ராயன் மற்றுமங்குபிரங்கியும்
கூண்டபடைவெல்லுகின்ற கோடுமுலக்கைகளும் ௩௱௭

அந்தாமானென்ற அரசனையுஞ்சேனையையும்
முந்துகொடுங்போர்க்களத்தின் மோதியவியைப்பிடித்து ௩௱௮

வந்திடுங்களென்றே வருத்தானிந்திராயனப்போ
அந்தச்சொற்கேட்டு அதிவீரரெல்லோரும் ௩௱௯

அமரிலெதிர்த்தே பலியையவளைத்தார்கள்
சமரில்அவிவாள்வீசத் தான்மடிந்தாரெல்லோரும் ௩௱௰

ஆயுதக்கையுள்ளவனுமப்போமடிந்தவனே
பாயுமவிகைவாட் பகலொளிபோலேயெறிக்க ௩௱௰௧

கோல்கொண்டுகம்பர் குத்தவடோச்சிவெட்டக்
கால்கொண்டுதுல்துலது காபிரையெலலாமடிக்க ௩௱௰௨

காலாவிதமாக நாடியிருபேர்படையும்
வேலாலெறிவார்கள் வில்மாரிதான்பொழிவார் ௩௱௰௩

தண்டத்தினலடிப்பார் சாவோர்மேல்விழுவார்
துண்டப்படுத்துந் துல்துலதுதானங்கனே ௩௱௰௪

மேலும்பதாதி மிருர்தவியைத்தான்வளைந்தார்
காலர்கடற்போலே காடியவியைவளைந்தார் ௩௱௰௫

கத்திதனையவிதான் கன்றாரவேபார்த்துச்
சத்தியெங்கேவாளுக்கென்றே தாம்கோபமாய்நினைந்து ௩௱௰௬

தாரையதுபார்க்கவெளத் தான்வீசினாலிதாம்
போரையெவர்பார்த்திடுவார் பிணங்கள்மலையானதுவே ௩௱௰௭

முழுத்தான்வெளிகளைத்தான்மூடுமலையதிபோல்
அலுத்தாரேயாலிவெட்டி யாறாகச்சோரியுற ௩௱௰௮

சோரியலையாற்றதிலேதோன்றவேதேர்கள்முங்கும்
காரிடிபோலானையெல்லாம் கண்டதுண்டமாயோடும் ௩௱௰௯

உரலுலக்கைபோல வோடுமுறுப்பிணங்கள்
பெருமுறம்போலானைச்செவி பிரந்தமலேமிதக்கும் ௩௱௨௰

சீர்கொண்டபூமியெல்லாஞ் செங்குருதியாறோடும்
போர்கொண்டமன்னருடற் பிரண்டோடுமந்நதியில் ௩௱௨௰௧

பின்னுமழைபோல் மெய்யாலிகையுறுவாள்
பின்னுமல்விசப் பிறத்திற்கம்பர்தானெருங்க ௩௨௨

பட்டாசவுக்குடனே பாரப்பீரங்கியுடன்
திட்டனந்தமானுடனே தோன்றுபடைமாண்டதுவே ௩௨௩

மிஞ்சினபேர்மாற்றுமல் வெருண்டாரென்செய்வமென்றே
கெஞ்சவடித்துக் கிட்டநில்லாதோட்டினதால் ௩௨௪

முதுகுப்புறங்காட்டி மூறிந்தோடிப்போனதுவே
மெதுவற்றபேர்களெல்லா மேன்மையில்லாதோடினரே ௩௨௫

ஆள்மடிந்தார்கூட்ட மணிமடிந்தாரங்கைகொண்ட
வாள்மடிந்தவேந்தரவர் மட்டில்லாதேமடிந்தார் ௩௨௬

குதிரைமடிந்தமலைக் குஞ்சரங்களெண்ணிலேயே
இதுமாகிரியாக வெங்குமடிந்திருக்கும் ௩௨௭

படுகளத்தைக்கண்டே பதைத்திந்திராயனுந்தான்
கெடுமதியனுமிச்செல்ல கெட்டிகெட்டியென்றழுதான் ௩௨௮

செங்கண்ணிற்றீயெரியச் சேர்த்தான்படைக்கலன்கள்
பங்கமுறுந்தன்னிடையிற் பட்டாரமுஞ்சாற்றி ௩௨௯

நாமக்குறிபோட்டு கற்சாணிச்சாம்பரிட்டுக்
காமமேகொண்டவர்போற் கவசமெடுத்தணிந்து ௩௩௰

கச்சைகட்டித்தொங்கல்வைத்துக் காலிற்கழலணிந்து
விச்சையுடன்காலின் வீரதண்டைதானணிந்து ௩௩௧

வச்சிரத்தின்ஜோடும் வாய்ப்பாயெடுத்தணிந்து
குச்சிதங்களுள்ளதெல்லா மொக்கவேதானணிந்து ௩௩௨

பொன்முடியுஞ்சூடிப் பத்ததனைத்தானெடுத்து
முன்னுள்ளதேவர் முப்பத்துமுக்கோடியுமணிந்து ௩௩௩

ஆபரணமெல்லா மநேகமெடுத்தணிந்து
தாபரமாயக்கட்டாரி தன்னிடைப்பிற்சேர்த்துகட்டி ௩௩௪

கல்லுங்கனலுங் கடுகவெடுத்தேயணிந்து
வெல்லவெனச்சக்கரங்கள் வெண்டையமுந்தானணிந்து ௩௩௫

பட்டயமுஞ்சொட்டையுந்த பரிசையுமேதானணிந்து
சட்டையங்குத்தமழுத் தாமாயந்தானணிந்து ௩௩௬

வேலாயுதமணிந்து வீசுமவலையும்மெடுத்துக்
கோலாகலமாகக் கோதண்டஅம்புதானணிந்து ௩௩௭

தூணியுடனம்பைச் சுகமாயெடுத்தணிந்து
காணியென்றதண்டமதைக் கையாரவேயெடுத்து ௩௩௮

வாளையெடுத்தணிந்து வாளுமதிமேலேபூட்டிப்
போரையடிக்கவெனப் பூமிதனில்வைத்திருந்த ௩௩௯

புத்துகான்தன்னைமுக்கால் பூரித்துச்சுற்றிவந்து
சற்றுங்கலங்காமற் ஞனிமித்தமும்பார்த்து ௧௪௰

பூசைதனைமுடித்துப் புத்துகானைத்தொழுது
மீசைதனைமுறுக்கி வீழ்ந்துபலதெண்டனிட்டு ௧௪௧

கல்லமுகூர்த்தமதில் நற்றாளைமுன்புவைத்து
வல்லமையைத்தானினைந்த மன்னவன்தானேதுசொல்வான் ௧௪௨

மனையாளைத்தானழைத்து மன்னனிந்திராயனுந்தான்
வினையலியைவென்றுவர வெண்ணீருதாருமென்றான் ௧௪௩

மனையாள்மனம்பதறி மன்னவன்முன்னீரைப்பாள்
எனையாளுமன்னவரே இந்தவிதமேன்றுணிந்தீர் ௧௪௪

என்னெணுச்சேனைகள்தா மிரணக்களத்தில்மாய்ந்ததுவே
நன்றோநீர்போறதுதான் நாடாளுமன்னவரே ௧௪௫

துன்பம்வாராதுமக்குச் சோர்வுபடுஞ்சேனையெல்லாம்
தம்பமெனவும்மைநம்பித் தானிருந்தேன்மன்னவரே ௧௪௬

போகாதிராவியிடம் போர்வெங்கையாகுமது
சோகாதேயிங்கிரும்நீர் நுஞ்சேனையையனுப்பும் ௧௪௭

சேனையனுப்புமென்றே சேயிழையாள்சொன்னவுடன்
மானைத்தானேபார்த்து மன்னவன்தானீதுரைத்தான் ௧௪௮

இந்தநினைவேணுனக்கிங் கிப்போகளம்புகுந்து
அந்தஅலியைப்பிடித்திங் கன்பாகத்தானறுத்து ௧௪௯

கட்டியெந்தனுனையதின் கால்கடுவிலேபோட்டே
எட்டியிடறுவிட்டாலென்பேரிந்திராயனல்ல ௧௫௰

தம்பிபழிக்காலிதலை தான்வாங்குவேனெனவே
நம்பியதோர்தாகிபழி நாளுநம்வடோச்சிதனை ௧௫௧

நம்புசலக்குபழி நான்கண்டேன்பிரங்கியால்
அம்பில்விசையுந்துல்துல் அத்தனையுமேநான்கொல்லுவேன் ௧௫௨

மூலத்தானைவென்ற முறையில்வடோச்சிதன்னைச்
சுலுத்தாருய்வைக்கத் துணிந்தரோ ஆலியென்போன் ௧௫௩

சேயிழையேவெண்ணீறு சீக்கிரத்திற்றாருமென்றான்
தோயுமான்கண்ணாளன் சொல்மனதொத்தநேரம் ௧௫௪

நன்மைபெற்றுவாருமென நாரிவெண்ணீறளித்தாள்
இன்மையறியாதான் இடச்சித்தமாய்மகிழ்ந்தான் ௧௫௫

தும்பியலங்கரித்துச் சூழ்பாகன்கொண்டுவந்தான்
நம்பிமேனென்றுபடத்தை நாடியிந்திராயன்வன் ௧௫௬

உம்பலத்தின்மீதேறி யோர்கோடிப்பொன்னளித்தான்
ஆம்பமெல்லாந்தொனிக்க ஆனைகராமுழங்கத் ௧௫௭

தம்பமென்றேசாமியென்றே தாண்டும்படையைவிடுத்தான்
பம்பரம்போற்சுற்றிப் படைகளிருபுறமும் ௧௫௮

ஐயாயிரங்கோடி பரசரிருபக்கம்வர
எய்யாததேர்களொரு ஏழாயிரங்கோடி ௧௫௯

பதினாயிரங்கோடி பாங்கானகாலாட்கள்
அதிரானமேளவகை யையாயிரங்களுண்டு ௧௬௦

கொடிகளொம்பானாயிரமும் கூடியேபின்னடக்கப்
படிதான்கிடுகிடெனப் பாரதட்குளிர்ந்துவிட ௧௬௧

இடியும்பயர்தெறிக்க எக்காளந்தான்முழங்கச்
சடுதியிற்கோட்டைவிட்டுத் தான்புறத்திலுற்றனனே ௧௬௨

ஆகாறியாய்ச்செலவே அப்போபனிமதிதான்
கோதாரியானபடை கண்டேகுடற்கலங்கி ௧௬௩

வேதாழியாகுமென்றங் கெண்ணிவிசாரமுற்றுத்
தாதியொருபெண்ணைவிட்டுத் தந்தையர்க்குச்சொல்லுமென்றாள் ௧௬௪

ஓடிநீயிப்போ துன்படைபோறதல்லக்
காதலாய்வல்லவனின் கருணையுள்ளதாதருக்கு ௧௬௫

ஈமான்கொண்டிட்டா லிந்தக்கரையாண்டிடலாம்
சீமானலியுடனே சென்றெதிர்க்காலமல்ல ௧௬௬

போனபடையெலாம் புரண்டேதவல்லாது
ஈனமில்லாதிக்குவந்ததேனுமுண்டோதான் ௧௬௭

கேடுவரும்போதுமதி கெட்டுவருமென்றாலே
காடிகப்பிதீனிலுற்றால் காயனருளுண்டாகும் ௧௬௮

இன்னஞ்சிலகால மிருந்தரசிங்காளவென்றால்
வண்ணமுகம்மதிட வண்மையுறுக்கான்றனையே ௧௬௯

நெஞ்சிற்கொள்ளவில்லையெனில் நின்சேனையுள்ளதெல்லாம்
பஞ்சுபம்பாடு பட்டிடுமென்றேயுரைநீ ௧௭௦

வெட்டுக்கருசசிரம் வெற்றியலிக்கென்றுசொல்லு
முட்டுப்பட்டப்போறாய்நீ மோசம்வருமென்றுசொல்லு ௧௭௧

ஆலகபியுல்லா அவர்கள்தாஞ்செய்யுந்துவாக்
காலமெல்லாங்கைக்கொள்ளுவான் கத்தாவென்றேயுரைநீ ௧௭௨

அழிந்துவிடுமுன்னாலே யாலிபதந்தன்னிற்புக்கிக்
குளிர்ந்திமான்கொண்டாச்சாற் கூடலாஞ்சொர்க்கமதில் ௧௭௩

கத்தியெடுத்தாலோ அலி கண்டதுண்டமாக்கிடுவார்
புத்திமதியில்லாவிட்டாற் புத்திசொன்னாற்கேட்டிலையோ ௧௭௪

ஆலயத்தின்புத்தைதம்பி யாவிதனைப்போக்காமல்
பாலையொத்ததினைப் பருகப்பலமோட்சமுண்டு ௧௭௫

ஆனசிங்கமாமலியென் றப்பனுடன்சொல்லுவைநீ
யானமுதமானதல்ல பயகாம்பர்தம்மருகர் ௧௭௬

இன்னகாரத்தான்கவிழ்க்க வேந்தலலியார்க்கேனும்
சொன்னபடிகேட்டுத் துரையலியைத்தான்பணிநதால் ௧௭௭

இருநகருந்தான்பிழைக்கும் ஈனமில்லாச்சொர்க்கங்கிட்டும்
அருமையுஅலிதன்பலத்தை யாராலுங்காணரிது ௧௭௮

சத்தபெலனுள்ளஅலி சங்கைநபிதம்மருகர்
உத்தமொழிசொன்னேனே னுண்மையென்றேநீநினைந்தால் ௧௭௯

இத்தரையிலின்ன மிருக்கலாஞ்சீவனொடும்
புத்தியிதுவென்றே பூராகவெண்ணச்சொல் ௧௮௰

பற்றலனைவெற்றிசெய்யும் பாராஜநுல்துலதா
இற்றிரக்கமாட்டாதிதி கேகனருள்மெத்தவுண்டு ௧௮௧

தந்தையர்க்குச்சொல்லுமவர் தங்காலமல்லவிது
விந்தைபெறும்ஆலநபி வெற்றிபெறுங்காலமிது ௧௮௨

சத்தியல்லஆலிகைவாள் காலனென்றேயுரைநீ
வெற்றிபெறவேண்டுமென்றால் வேந்தரலிதாள்பணிந்து ௧௮௩

புத்தியுடனீமானைப் பூண்டுகொள்ளநல்லதென்று
சொற்திறமாய்ச்சொல்நீயெனத் தாய்பதகப்பன்வசம் ௧௮௪

அருசிற்புலியான ஆலியவராகுமென்றே
ஒருசொற்பகர்ந்தேனுண்மையெனவேயுரைநீ ௧௮௫

வேண்டாம்படைபோக வீரத்தைவிட்டிடச்சொல்
ஆண்டோனுடைய அலியோடுதானெதிர்த்து ௧௮௬

கோபமெடுத்தாக்காத கூடிவருந்தீனரகம்
கோபத்தைவிட்டுவிட்டாற் கூடலாஞ்சொர்க்கநகர் ௧௮௭

அந்தநபிமானிடவ ராமெனவேயெண்ணிவிட்டாய்
இந்தப்புவியிலிருப்பவரைப்போலவல்ல ௧௮௮

சாலஅவர்பாதந் தருத்தருமட்டாகும்
ஏலஅவர்சிரசங்கேகனைநசைத்தொடுங்காண் ௧௮௯

அந்தநபிதம்மருக ராலிபுலியென்றுசொல்நீ
சந்தமுடனுள்ளீமான் தான்கொண்டேனுமென்றுசொல் ௧௯௰

என்னுடையதந்தையர்க்கிங் கிப்போதுரைத்திடுநீ
முன்னும்பின்னுமஞ்சாமல் முழுதுநான்சொன்னதைச்சொல் ௧௯௧

ஆறண்டுக்குரம் அரைகொடியிலக்கஅலி
நீறுபடுத்திவிட்டார் நீண்டஇபுலிசுதனை ௧௯௨

வேறுநினைவாகாது வெற்றியுடனீமானைப்
பேறுதவுதந்தையர்க்குப் பெற்றியுடனேயுரைநீ ௧௯௩

என்மனதிற்கண்டசெய்தி இவ்வளவுநானுரைத்தேன்
தன்மனதுக்கேதுசெய்வேன் தன்கருத்தென்றேயுரைநீ ௩.௬௪

அன்னமுரைத்தசெய்தி யங்கவனோடேயுரைத்தாள்
சொன்னமொழிகேட்டவுடன் சோர்ந்துமிகச்சினந்து ௩.௬௫

பெண்மதியோவென்று பிறங்கழித்துத்தான்பேசிக்
கண்படைத்தோரிப்படையைக் கண்டால்மடிந்திடுவார் ௩.௬௬

கோட்டைகடந்துவழி கொண்டானிந்திராயனப்போ
வேட்டைப்புலியெனவே வேந்தரெல்லாமுன்னடந்து ௩.௬௭

ஆனைப்படைகளெல்லா அலியாரையேவளைந்தார்
சேனைப்படைகளெல்லாந் திசைகளெட்டுந்தான்வளைந்தார் ௩.௬௮

நாற்பதின்காதம் நான்குதிக்குமும்படைகள்
ஆர்ப்பெழவேகொள்வமென்றங்கலியாரையேவளைந்தார் ௩.௬௯

நடுப்படையிலேயலியும் நன்றாகக்கம்பர்பின்னும்
வடுப்படாமேனி வடோச்சியுடனேபெருதார் ௭௰

கண்டானிந்திராயனங்கன் கடுகவொருசொல்லுரைத்தாள்
என்றைக்குங்கொன்றிடலாம் இப்போவடோச்சியுடன் ௭௰௧

போகாமல்ஆலிதன்னைப் போய்வளையுமென்றுரைத்தான்
ஆகாசத்தேபறக்கும்அப்போதலிகுதிரை ௭௰௨

கண்டுபெண்மதிதான் கல்புமிகவேதளர்ந்து
என்றுஅலியைக்காப்பா யென்னிறைவாவென்றுரைத்தான் ௭௰௩

வாழகனவடோச்சிதன்னையுங்காப்பாய்
ஆளழகுக்கம்பரவர்தமையுங்காப்பையென்றாள் ௭௰௪

இந்தப்புகழ்துலங்க இவ்வுலகிலேபாடச்
சொந்தகிதிதான்கொடுத்துச்சோராதுதவிசெய்தான் ௭௰௫

செங்கமலமாதுவளர் சோரையப்பதியில்
மங்காமலிந்திரன்போல்வாழுமுகாலீன்களிலே ௭௰௬

முத்திபெறுநாயனருவ் மூலனருமதுமகனும்
பெற்றிபெறுமராவத்தப் பிள்ளைகிளையோர்களையும் ௭௰௭

கித்தியமுங்காத்தருள்வாய் கோரிறையெப்போதுமென்றே
முத்திபெற்றவெங்கள் முகம்மதுற்றசூல்பொருட்டால் ௭௰௮

துவாவிரந்தான்பின்படைகள் சூழ்ந்துபொருதாரலியை
அவாவாகத்தான்குபிரர் அம்புமழைதான்பொழிந்தார் ௭௰௯

காந்தமும்ஊசியும்போற் கம்பர்பரிதொட்டுநிற்க
ஏந்தலெனும்ராசாக்க ளேமூலட்சம்பேலநின்றே ௮௰

அலியாரைவந்துவளைந் தாரேயனைவோரும்
கலியிதென அலிதாங் கடும்பரியைத்தான்விடுத்தார் ௮௰௧

மேகமட்டோந்தானுபர மேன்மையிந்திராயனங்கள்
தாகமுடனேயிடரி தானுயரவேபார்த்தான் ௪௧௨

அந்தாத்திலேபரியை யப்போதுகண்டனனே
அந்தோபுதுமையென்றங் கண்பானஇந்த்ராயன் ௪௧௩

ஆனைதனை நிறுத்தி ஆலிருமுன் பினின்று
பூனைதனைப்பாய்லதுண்டோ புந்திகெட்டசுண்டெலிதான் ௪௧௪

கண்டெலிபோலதிசையைச் சுற்றுதேநீசிறியன்
அண்டவில்லையென்றனக்கிங் கஞ்சிநீயேதிரிந்தாய் ௪௧௫

மண்டையெழுத்தழிந்து மாளாதேயுன்பரியைச்
சண்டைக்கிட்டுச்சாகாதே தனித்துநில்லுசொல்லுகிறேன் ௪௧௬

சொல்லுகிறேனென்றமொழி துங்கரவிதான்கேட்டு
கல்லதுநீசொல்லவே நாடியவன் முன்புநின்றார் ௪௧௭

ஏதடாவுன்பெயர்தான் எத்திசையிலுள்ளவனீ
சூதடாகற்றனேயோ சொல்லடாவுன்திறத்தை ௪௧௮

வாதிடறிக்காட்டாதே வாசிப்பாயுன்பெயரை
நீதமல்லவிந்தபுத்தி நின்றுபேசென்முன்னரில் ௪௧௯

வெட்டும்படைக்களத்தில்வீணுப்பேர்கெட்டனையே
பட்டுவிழுமுன்னாலே பகராடாவுன்பெயரை ௪௨௰

பட்டாமஞ்சாத்திப் பாழானபொன்முடிமேற்
கட்டப்பசாசுகளைத் தங்கமுடிமேலணிந்து ௪௨௧

கிட்டவந்துநின்றுகொண்டு கெம்பீரமாயுரைத்தாய்
அட்டியில்லாதிந்நேரமியானுமறிவதற்கு ௪௨௨

முன்பேயுரைநீமோசமில்லாதுன்பெயரை
பின்பேருரைத்திடுவேன் பேரைநீசொல்லுகென ௪௨௩

கேட்டவுடனிந்த்ராயன் இலுகிவெனவேசிரித்து
வாட்டமில்லாப்பேர்கேட்டாய்வாசிப்பாய்நீகேளு ௪௨௪

சாதிப்பிராமணியன் தாரணியையோர்குடையில்
சோதிப்புவியாளும் கோமானென்பேர்தானே ௪௨௫

சிங்கமொருதாற்றைச் செங்கையாரப்பிடித்தே
பங்கப்படுத்திப் பாரரசனைப்பிடித்தே ௪௨௬

செஞ்சைக்கிழித்தவனை நீருக்கியேகரத்திற்
பஞ்சாகவேபறத்தும் பாரரசர்கேசரியான் ௪௨௭

வாளெடுத்தாற்றேவர்களும் வந்தெதிர்க்கமாட்டார்கள்
நாளடுத்ததாலுனக்கு நம்முன்னேவந்துநின்றாய் ௪௨௮

படியுங்கிடுகிடென்கும் பணிமுடியுர்தானெடுங்கும்
இடியும்பயந்தொடுங்குமென்பெயரைக்கேட்டவுடன் ௪௨௯

கல்லுமுருகுங் கதையையான் கைக்கெடுத்தால்
அல்லும்பகலாகும் ஆதவன்போலாட்சியெங்கும் ௪௩௰

செல்லுமேயெண்டிசையுந் தேசமெல்லாங்கீழாகும்
வெல்லுவேனல்லால் வீணல்லவின்னமுங்கேள் ௪௩௧

என்கோட்டைநீள மெழுநூறுகாதவழி
பொன்கோட்டைகட்டிப்புதிதிய்கரசாண்டேன் ௪௩௨

தேவுகளும்பூதமிந்தத் தேசமேல்வாராது
தாவும்வயதெனக்குச் சாற்றுமூவாயிரமே ௪௩௩

ஆனையெழுநூறையாகுமொருகையாரத்
தானேபிடித்தீதறிவாய் சத்திபெலநீயறியாய் ௪௩௪

மலையைப்பிடுங்கித்திளாகவைத்திடுவேன்
அலையடிக்கும்வாரிதன்னையப்புறத்தேபோக்கிடுவேன் ௪௩௫

பூவுலகிலெவர்க்கெதிரி போர்க்கொருவர்காணாது
தேவருலகுள்ளவரும் சேரநடுங்கிடுவார் ௪௩௬

பொழுதும்நிலவும்வழி போகஅஞ்சுமென்நகரம்
தொழுதபதம்பணிவார் துட்டரெல்லாமென்னைநிதம் ௪௩௭

நித்தந்தங்கம்பொன்கொடுப்பே நீதியுலகத்தவர்க்கு
சத்தமுழக்கிவிட்டாற் றுங்காதிடியொதுங்கும் ௪௩௮

சூறுவளிகாற்றைத் தூசணிப்பேன்கையார
ஆறுநதியையவிப்பேனொருநொடியில் ௪௩௯

பந்தெறிவேன்போர்மலையைப் பாரதாரங்களெல்லாம்
இந்திரனோவிங்கழைப்பே னென்பெயரிந்திராயனென்றான் ௪௪௰

முந்தியுலகறிய மூடாநீயுன்பெயரைச்
சந்தேகமில்லாமற் றான்மொழிவாயென்றனனே ௪௪௧

சொல்லுவதுகேட்டலியார் துட்சணுமேவிளவே
நல்லதிக்கும்வீரமெல்லாம் நானறியச்சொல்லனையே ௪௪௨

உன்னைப்போல்ராசாக்களொருகோடிவந்தாலும்
என்னுடையகம்பருக்கிணைசெய்யமாட்டார்கள் ௪௪௩

நானுஞ்சிறியவன்கா ணாயன்புலியாலியென்பேர்
தீனும்புநாக்காணுடைய தீனபியின்நல்மருகன் ௪௪௪

பூவுலகிலேயிருப்பேன் பொன்னுலகிலுமிருப்பேன்
நாவுகொண்டுன்னைப்போல நான்பெருமைபேசறியேன் ௪௪௫

சாவும்பொழுதைப்பார் தன்பெருமையானதெல்லாம்
ஏவும்பொழுதிற் குதிகொன்றும்வாராதே ௪௪௬

இறத்தையுடையவனே திங்கமென்பதுநீயே
திறத்தைபடையுன்றனைப்போல் நீள்புவியிற்காணாதை ௪௪௭

வென்றேன்வெகுபேரை வீராதிவீரனீயே
கண்டேன்வெகுக்கரை கண்டதில்லையுன்னைப்போல் ௨௪௮

போழகுமுன்றனைப்போற் பேருலகிற்கிட்டாது
ஆரவர்களுன்றனைப்போ லதிகமுற்றசீமான்கள் ௨௪௯

தீரவேயுன்படைபோற் சேனாபதிதானுமில்லை
ஆரவேயுன்றனைப்போ லாபாரங்களில்லை ௨௫௦

குலத்திற்சிறியவனீ கோமானில்நீபெருமை
பெலத்திலேநீபெரியன் பேரிந்திராயனென்றாய் ௨௫௧

அரசிழக்கப்போகாதிங் கானதனாற்பார்த்திருந்தேன்
சரசமொழிபோலுமெத்தத்தான்பெருமைபேசுகிறாய் ௨௫௨

அழிந்துவிடுமுன்னாலிங் காதிபுறக்கானதிலே
குளிர்ந்திமான்கொண்டாக்காற் கூடலாஞ்சொர்க்கநகர் ௨௫௩

வழிந்துவிடுங்காயிரென்றால் வதைப்பேனுன்றன்னைவிடேன்
தெளிந்தகலிமாச்சொல்லினாற்சிமானாய்நீயிருப்பாய் ௨௫௪

விடேனென்றசொற்கேட்டு வேந்தன்மனமழன்று
சடேரென்றேவில்லெடுத்துத் தார்கணையைத்தான்றிரித்து ௨௫௫

கோதண்டவாளிதன்னைக் கோத்திந்திராயனைப்பே
மூதண்டமுங்குலுங்க மோதுபரிதுல்துலுக்கு ௨௫௬

வலக்காலிற்பாயவிட்டான் வலுவாகத்துல்துலது
துலுக்கமாய்ச்சத்தமிட்டுத் தும்பியதின்மத்தகத்தில் ௨௫௭

மலைந்துவிழுந்து மத்தகத்திலேமிதித்துத்
தலையுடலுங்கோடுகளும் தானடனமாடும்பரி ௨௫௮

வலையன்வலைவளைந்த தாறதுபோற்சுற்றிவரும்
தொலையிலேபோய்மீண்டும் தோன்றல்சிரமேல்மிதிக்கும் ௨௫௯

சிகாமணிமுடியிற் சிக்கிரத்திலேமிதிக்கும்
நிகரொருவரில்லையென்றே நின்றாமக்காற்சுற்றிவரும் ௨௬௦

மன்னன்முன்னேவந்து மலைந்தனபோற்றங்கிநிற்கும்
பின்னுமிந்திராயனிட பின்பறக்குமுன்பதக்கும் ௨௬௧

வீரமுடிதன்னையங்கு வீறாகயெற்றிவிடும்
ஆடாமத்தோடலங்கலர்ந்து திரியுங்குதிரை ௨௬௨

நீறுகுத்துமாப்போலே நின்றுதலையைத்துவைக்கும்
ஆறுதலாய்ப்பின்னுமடுக்கவேவந்துநிற்கும் ௨௬௩

சுவாமிதுணையெனவே தோன்றலிந்திராயனைப்போ
அவாமிகுதியான அநேகரத்னமாமுடியை ௨௬௪

பின்னுமவன்சூடிப் பிரகாசமாயொளிர
மின்னுமழைபோலெங்கு மிகுலாளிதொட்டனனே ௨௬௫

எண்ணொந்துகாட்காதவழியெத்திசையிலும்படைகள்
கண்கொணடபொருமெனக் கத்தனவியஞ்சாது ௪௬௬

சேனைப்படைக்கிலே சேர்ந்தாரிந்திராயனைப்போ
சோனைபோல்வாளி சொரிந்தாலேயாலிகண்டு ௪௬௭

அந்தவேலையங்கரசனிந்திராயனிட
சுந்தரஞ்சேர்வேள்முன்னர் துலங்கிநின்றாரவ்வேளை ௪௬௮

இரும்புத்தடியாலெறிந்தானேயிந்த்ராயன்
வரும்போதடிதுல்துல் வயிற்றினிடைப்பட்டதுவே ௪௬௯

இடிபட்டவசறதுபோல் எண்ணிநிற்கும்வேளையிலே
அடியற்றுப்போகுகின்ற அந்தஇந்திராயனைப்போ ௪௭௰

அம்பெடுத்துத்தான்றொடுத்தேயாலியின்மேலெய்தானே
வம்பென்றங்காலியவர் வந்தகணையைத்தடுத்தார் ௪௭௧

ஏழுமட்டுந்தான்தடுத்தா ரெண்ணிலாவாளிவிட்டான்
சாலவிதிக்கார்தடுப்பார் தான்வாளியென்றதுதான் ௪௭௨

ஆலியவர்மார்புதனி லம்பொன்றுபாய்ந்ததுவே
கோலியோகொல்லனுலே கூறுகப்பாய்ந்தமழு ௪௭௩

வந்துபுகுந்ததுபோல் மன்னாலிமார்புதனில்
தந்திரமாய்விட்டகணை தலுகாமற்றைத்ததுவே ௪௭௪

அம்புபட்டவேதனையா லலியார்மிகத்தளர்ந்து
நம்புமிறைகாவலென்ற நாடியம்மைத்தானிழுக்க ௪௭௫

இழுத்தகணைவாராதங் கேகளலிதம்விதனத்
தழுத்தம்பத்தானிழுக்க அம்புவாராததினுல் ௪௭௬

மெத்தவிதனமதாப் மேலிற்பட்ட அம்பைவெல்லக்
கத்தன்செய்வெலனவே கதறினுர்சத்தமொன்று ௪௭௭

தச்சஅம்புதானிளகித் தன்னிலேவிட்டேயுருகி
அச்சணத்தில்வாளிதா னங்குருவியோடியதே ௪௭௮

ஓடியம்புபாயவங்கோ ராயிரம்பேர்மாண்டார்கள்
நாடிபுயிரழிய நாயனலிமேனிதன்னில் ௪௭௯

சலவாத்துத்தானுரைத்தே தன்னுயிர்நீர்தான்தடவ
பெலமானபுண்ணும்பிறங்காமலாறியதே ௪௮௰

வேகத்துடன்அலிதாம் வீரவாள்தன்னுலே
தாகத்துடனின்று தனிமேய னைத்தானினைந்து ௪௮௧

வெட்டினுராலியப்போ வேகமதின்கையதனிற்
கட்டிபுரண்டுவீழ்ந்தனபோற் கையற்றுவீழ்ந்ததுவே ௪௮௨

தும்பிக்கையற்றுவிழச் சோர்ந்துமிகுகுஞ்சரங்கள்
வெம்பிமனங்குழறி வேளைமதெலாம்பயர்ந்து ௪௮௩

குஞ்சரங்களெல்லாங் குழறியேசத்தமிட்டங்
கஞ்சியதேசேனையெல்லா மங்கன்பனிமதிதான் ௪௮

சிங்கப்புலியலி வாட்டிறமாய்அழித்தவென்றூன்
துங்கத்துரைகம்பரப்போ சேர்ந்தகலையையடக்கி ௪௮

ஆனையின்றன்கால்நான்கும் அடிவயிறுமற்றுவிழ
வானைப்படைத்தவனை வாழ்த்தியேகுத்தினரே ௪௮

குத்தினார்கம்பர்நின்று குஞ்சரத்தின்கால்நடுவே
அத்தியிற்கம்பரகப்படாமற்றிரிந்தார் ௪௮

ஆடல்மகரிதானுனகம்பரைவதைத்துப்
போடவழிபார்த்தப்போ போயினார்கம்பரவர் ௪௮

நாட்டமதகரிதான் சுற்றியேகம்பர்தன்னை
வட்டமிட்டுத்தான்றிரிய வாடாதகம்பரப்போ ௪௮

அலமலைக்கட்டிமலை யானையுடகால்நடுவே
கலகலெனவேவயிற்றிற் கம்பர்கனைகொண்டுழக்க ௪௯

மதகரியின்மேலிருந்த மாபாகன்மாண்டனனே
விதம்விதமாய்த்தானடிக்க வெற்றியலி தட்டிவிட்டார் ௪௯

அடிக்கங்களெட்டாமலாலையெனச்சுற்றிவந்தார்
மடிப்புவருமென்றேமன்னரலிஅப்போது ௪௯

தும்பியுடகொம்புகளைத் துங்கரலிதாம்பிடுங்கார்
சம்பியேவேளமது தான்றூங்கிநின்றதுவே ௪௯

கைகொடுத்தங்காலியவர் கம்பர்தனையேயிழுக்க
கையைப்பிடித்துதறிக்கால்பிடித்தப்பாற்குதித்தார் ௪௯

பொய்யைப்பிடித்தவர்கள் போர்க்களத்திலேமாண்டார்
மெய்யைப்பிடித்தஅலி மீளவெட்டியார்த்தனரே ௪௯

சூறவளிக்காற்றுஞ் சோனைமழையும்போல
நீறுகவேளங்களை நின்றுறுக்கிவெட்டினரே ௪௯

போர்க்களத்தைப்பார்த்தே புதுமையென்றுனிந்திராயன்
ஆர்ப்பரிக்குந்தல்தலைதங் கண்டரண்டமுங்குலுங்க ௪௯

இந்த்ராயன்பார்த்தங்கனே எண்ணினானிப்புதுமை
சந்திரனுஞ்சூரியனுந் தானுமற்பூமட்டுமில்லை ௪௯

முந்தப்பனிமதிதான் மோசமில்லைசொன்னதெல்லாம்
சந்தித்தவ்யோர் தானுரைப்பாரந்நேரம் ௪௯

விரைந்துகஸ்மாவிரைநீ விள்ளாதிருக்கிலுன்னை
வரைந்துன்றனுக்கைவரையிட்டுத்தானறுத்து ௫

நெருப்பிலேதானிட்டு நீறாக்கிவிட்டிடுவேன்
தர்மபக்கமானிற சக்கையுடன்வாவென்றனர் ௫

சங்கையென்றங்காலிசொல்லத் தானிந்திராயன்சொல்வான்
உங்களுடனேனு வுன்றனக்குறுதியானதென்றே ௫௱௨

செங்கண்ணனிற்றியொழுகச் செப்பினானவிமுன்னே
பங்கமொன்றில்லாதான் பாரிற்புகழ்படைத்தோன் ௫௱௩

என்மருகன்காதிதலே யேற்றபழிவாங்கினையே
உன்னைவிடயாருமுலகத்திலில்லையென்றே ௫௱௪

பின்னமில்லாதிங்குரைத்த பேயாகேளிப்போது
உன்னைவிடுவதில்லை யுன்சிரசைத்தானறுத்து ௫௱௫

பத்ரகாளிக்குமனோநான் பாரப்பெலிவிடுவேன்
சித்தமறியெனவே செப்பினானிந்திராயன் ௫௱௬

உத்தரத்தைக்கேட்டவுட னோடியேகம்பரப்போ
சத்தியுடன்மாபெலமாய் தடியொன்றுதான்பாய்ந்து ௫௱௭

கோவிற்கொடிமரத்தைக் குல்லென்றுதான்பிடுங்கி
ஆவித்திந்திராயன்படை யத்தனையுந்தானுழக்கார் ௫௱௮

அப்போதலியாரங் கதிதனையேறினோந்து
செப்பமுடனினில்வந்து சேர்ந்தவடோச்சிதன்னை ௫௱௯

குப்போடுகூட்டிவந்து கூண்டைபடைவீரனையும்
தப்பாமறருனே தரந்தரமாய்க்கைகொடுத்தார் ௫௱௰

கன்னொடுரோகண்டனமே கத்தாவன்காவலென்றங்
கென்னும்விசாரம்விட்டே ஏகாவுன்காவலென ௫௧௧

வடோச்சியுந்தங்தளமும் வல்லவாகாவலென்றங்
கிடந்துநல்வேட்டையென்றே கெம்பீரமாய்த்தோடாளி ௫௧௨

நாயனலியர்தலமும் நல்லவடோச்சியார்தலமும்
ஏயவேகாதம் இருபதுண்டாகுமது ௫௧௩

வாடாதுநல்ல வடோச்சியுடனேபடையும்
கோடாது வெட்டிக்குவித்தார்பிணமலையாய் ௫௧௪

வெட்டும்பொழுதலியைவேடிக்கைபாய்தினோந்தான்
முட்டுவார்கம்பனைத்தான் மோசமறக்காப்பையென்றார் ௫௧௫

கிட்டும்படையதனைக் கேப்பைக்கிழிண்டிவிட்டார்
தட்டுவாராதலியைத்தான்காப்பாய்வல்லவனே ௫௧௬

தொட்டமுத்தாகுவித்தார் தோன்றால்வடோச்சியர்கோன்
புட்டிப்பழங்களைப்போற் பிணங்களையேதான்குவித்தார் ௫௧௭

அலியாருரைத்திடவா ரானஇந்திராயனிடம்
சலியாதிங்குன்றனைநான் தான்கொல்வேன்கேளுமென்று ௫௧௮

உன்மருகன்தாகிதனை யொர்நொடியிற்கொன்றதுபோற்
பின்னமில்லாதுன்னைப் பிளப்பேனென்றுவிசொன்னார். ௫௧௯

சவண்டுயெடுத்தானரசன் சோராதுகோசமுடன்
கவண்டியெடுத்தானரசன் கண்டவிதானேபறித்தார் ௫௨௦

செட்டானசக்கரத்தைச் சீக்கிரத்திற்றானெடுத்தான்
தட்டாமற்கம்பரதைத் தான்பறித்தாரன்னேரம் ௫௨௧

குந்தந்தனையெடுத்தான் கூடியவிதான்பறித்தார்
அந்தமுள்ளராசன் அநேகவிதம்விதமாய் ௫௨௨

விந்தைபெறவேதான் வில்லெடுத்தங்கேகோத்தான்
அந்தவில்லில்நல்ல அந்தரத்திற்பாயுமம்பை ௫௨௩

தொடுக்குமபொழுதுகம்பர் துள்ளியேதான்பறித்தார்
அடுக்குங்கணைபறித்தங் கார்த்துத்துண்டமாக்கிவிட்டார் ௫௨௪

வில்லைப்பறித்தெடுத்து வேந்தன்கழுத்திலிட்டார்
அல்லில்கடைகொள்ளு குருடனைப்போல்மிகநெங்கு ௫௨௫

ஆலாலமுண்டவருங் கயல்போலிந்திராயன்
வேலாயுதமெடுத்தான் வெற்றியடிதட்டிவிட்டார் ௫௨௬

துண்டாய்த்துங்கிவிழச் சோராதுதண்டெடுத்தான்
திண்டாடிகம்பரதைச் சீக்கிரத்திலேபறித்தார் ௫௨௭

பல்லைக்கடித்துப்பின்னர் பாரவாட்டாவெடுத்தான்
நல்லதடாவென்றங்கதை நாயனவிதட்டிவிட்டார் ௫௨௮

வலையெடுத்தான்வீச வண்மைகம்பர்தான்பறித்தார்
நிலையாகவேண்டுமென்றே நீட்டினன்கட்டாரிகொண்டு ௫௨௯

நிலையாதென்றேயவிதா னீண்டகைகொண்டேபடுத்தார்
மலையாமனத்தினன்மலைவுகொண்டானிந்த்ராயன் ௫௩௦

ஆயுதமெல்லாமிழந்தங் கானஇந்திராயனப்போ
பாயும்புலிபோலப் பார்த்தான் அவிதனையே ௫௩௧

சுற்றினாலியப்பே சொல்வாரிந்த்ராயனேநீ
சத்திபெறமாட்டாயே தானீமான்கொள்ளுகென்றார் ௫௩௨

வெற்றியுடனுரைக்க வேந்தனவனீதுரைப்பான்
சத்தியேயிப்படையில் தாங்காமல்ஏன்னுடைய ௫௩௩

கண்டமழிந்தாலுங் காலர்க்குயிர்தோற்றால்
முண்டமழிந்தாலு மூற்றாசுதோற்றாலும் ௫௩௪

மானமழிந்திடுகால் வன்பூமியாளுமன்னர்
தானுமழிவரல்லால் றாக்குவரோ தம்முயிரை ௫௩௫

மாடமழிந்தாலு மானுமக்கள்போனாலுங்
காடேனுந்திரையென நவின்றானிந்திராயன் ௫௩௬

சொன்னமொழிகேட்டவியார் தல்தலைத்தச்சாரிவிட்டுச
சின்னபின்னமாகத் திரித்தங்குவெட்டினரே ௫௩௭

சோரியனேமோதிச் சூழநதியானதுவே
வாரிதனிலோடு மரக்கலம்போமாவிபரி ௫௩௮

கூத்தாடல்பார்த்துநின்றான் கோமானிந்திராயனப்போ
ஆத்தாடியென்றே அநேகம்பேர்மாண்டாரே ௫௩௯

காற்றடிபோற்றிரிந்து கம்பரத்தபேர்படையைத்
தூற்றுரேயங்குசில தட்டனர்கனி தனைப்பார் ௫௪௰

கத்தியோதல்துலது றக்கனலியைப்பார்த்தே
சத்திபெறுமல்ல சகலத்துப்போற்றேன்றும் ௫௪௧

கம்பர்தனைப்பார்த்தாற் கண்சிவப்புப்போற்றேன்றும்
துன்பமிகவாகியங்கன் சொல்வானிந்திராயனப்போ ௫௪௨

அலிதான்சிவப்பானு ரானபரிதான்சிவப்பாம்
வலியவினைபண்ணுங்கம்பர் வந்ததுவுந்தான்சிவப்பாம் ௫௪௩

திறமுமிகப்பேர்ந்ததேன்றே நெஞ்சுதனிலெண்ணினனே
புறம்பிரியாதேஅலிதாம் போருமொரரின்றனரே ௫௪௪

முன்னாள்முழுக்காளில் முற்றுமொருகோட்டையுண்டு
பின்னாளியார் பெலத்தாலேகோட்டைவிட்டார் ௫௪௫

அந்நாளழுக்கிடங்கி லானைநீர்தானுளது
இந்நாட்கிடங்கதனி விட்டனர்செங்கீரவியார் ௫௪௬

கோமானைப்பார்த்தலிதான் கூறுவாரோர்வசனம்
சீமானுமுறுகந்தாச் சேர்ந்தபுத்தைதந்தானுவைத்து ௫௪௭

ஈமானில்வந்திலேயோ பேன்கெட்டாய்புத்தைநம்பி
ஆமீனென்றுவானோ ரறைவாரோதினில்கந்தால் ௫௪௮

கெட்டாயெனவுரைத்த கேவலத்தைக்கேட்டரசன்
விட்டான்தன்யானைதனை வேளமும்காற்றாக்காது ௫௪௯

சாலிம்பெயராமற் கவுழ்ந்துநின்று தூங்கியதே
மேலுமணியணிகள் மேன்மையதுந்தாழ்திய ௫௫௰

தூற்றுதிகள்கண்டதுவுஞ் சொல்வானிந்திராயனப்போ
தர்க்கமிட்டாய்நீயலியே சத்திபெலனுன்றனக்கு ௫௫௧

மாயங்கள்கற்றனையோ மந்திரத்தாலுன்பெலனோ
காயங்களுன்றனக்குக் கல்லோகனத்திரும்போ ௫௫௨

வேளமது தூங்கினதும் வில்லுப்பறிபோனதுவும்
ஆளமுள்ளவாட்டெறிந்தது மருங்கைதுண்டானதுவும் ௫௫௩

உன்னுடையமந்திரமோ வுங்கள்நபிமாயமிதோ
என்னுடனேசொல்லெனவே யேந்தலவன்கேட்டிடவே ௫௫௪

சின்னமில்லேக்கேழெனவே செப்புகுராலிபுலி
வன்னமுமுமிந்தமாநிலத்திலீவணங்கல் ௫௫௫

மாயமும்பொய்மந்திரமும் மனிதர்பண்ணும்புத்தநுவே
காயமும்பொய்பெண்டீரும்பொய் காணுமக்கள்தங்களும்பொய் ௫௫௬

அன்னையும்பொய் அப்பனும்பொய் ஆருமக்கள்சுற்றமும்பொய்
என்னைப்படைத்தவிறைவெட்போதாவிமெய்யாகும் ௫௫௭

பின்னைத்துணைவாராது பேய்கொண்டகாயந்துடன்
சொன்னதிதுவெல்லாந்துட்சணனேமெய்யென்றறி ௫௫௮

செய்யுந்தவநன்மைதின்மைசேர்ந்துவருங்காண்பாயே
ஐயமில்லைகத்தனவனொருவனுருவென்றே ௫௫௯

மெய்யதனையாவிசொல்லமேன்மையில்லானேதுரைப்பான்
செய்யுநன்மையுள்ளதிருநாகளக்குமுள ௫௬௰

கதையொருவனென்று கத்தனைவைக்கண்டனையோ
பித்தாநான்சொல்லுகிறேன் பேசாமற்றீவில்வந்தால் ௫௬௧

வித்தினமாய்க்காண்பையென வேந்தனிந்திராயன்கேட்டங்
குத்தரவுசொல்லாமலொருநினைவுட்கொண்டோர்ந்தான் ௫௬௨

சாகதுலகாண்டு தானிருப்பாராருமுண்டோ
வாகாயிருப்பவருமாள்வதென்னென்றெண்ணமுற்று ௫௬௩

பனிமதிசொல்லத்தனையும் பார்க்காய்மனதிலுள்ளிக்
கனியொருவனுண்டெனவே காவலவிசொன்னதுவை ௫௬௪

ஆராய்ந்துபார்ப்பமென்றே யானைவிட்டுக்கீழிறங்க
சேராயிந்திராயனங்கனேமிதனினின்றனகே ௫௬௫

துல்துல்தனைவிட்டலிதாந் தோற்றமுடன்கீழிறங்க
அல்லும்பகலுமழியாதவனருளால் ௫௬௬

கலகமொழிந்ததென்றே கத்தனலிதங்கரந்தித்
பெலமாயப்பதித்தகத்தி பேர்க்கப்பாடாதிவரால் ௫௬௭

சட்டமுடன்கம்பர்தமைத் தான்கூவியாலிபுலி
இட்டமுடன்கைவாளைச் சீக்கிரத்தில்வாங்குமென்றார் ௫௬௮

இட்டமுடன்கம்பரெடுத்தார்கைவாளதனை
மட்டில்லாச்சேனைகளுமன்னரலியைப்பார்த்தார் ௫௬௯

நல்லதிக்கேயறிவோம்காடும்படைவெட்டாமல்
எல்லவர்க்குந்தான்கேட்க இன்பமுடனேயலிபார் ௫௭௰

எக்காளந்தன்னையேந்தலிதாமுழக்கத்
துக்கமில்லாவம்மைத் துணிவிலேதான்சேர்த்தார் ௫௭௧

வாளைத்தடைந்தலிதம் வாசமுடனேசேர்த்தார்
இளைக்குறியில்லாதலி போர்தினவர்குருவரிபோல் ௫௭௨

சண்டையிட்டபேர்களெல்லாம் தான்மாறியோய்ந்தாற்போல்
பண்டைவினைவிட்டகன்று பார்க்காயிருபடையும் ௫௭௩

சட்டமுடனலியிட்ட தன்மக்காளம்முழக்கத்
திட்டமுடன்கேட்டே சிறந்தவடோச்சியர்கோன் ௩௭௪

சண்டையொழிந்ததென்னுந் தன்மக்காளம்மிதுவே
அண்டையிலேசெல்வோமென் றானேவடோச்சியர்கோன் ௩௭௫

பட்டாவைத்தான்றுடைத்துப் பாங்காயுறைபுகுத்தித்
தட்டாமற்றோதனைச் சங்கையாய்த்தானடத்தி ௩௭௬

தன்னோடுசேர்ந்த தளங்களையுந்தான்கூட்டி
மன்னுவன்காவலென்றே மன்னாலியைத்தேடி ௩௭௭

நாள்மூன்றுசென்றதம்பி னயனலிகிட்டவந்து
தாள்மீதிலேவிழுந்து தாழ்ச்சியதுசெய்தனரே ௩௭௮

தாழ்ச்சியதுசெய்து சலாமுரைத்தபின்னர்
மீட்சிபெறுவாயெனவே மேனிதனிற்றான்றடவி ௩௭௯

கெஞ்சோடலியனைத்து நேசமொடுந்தான்மகிழ்ந்து
அஞ்சாதிர்நீர்கிளைத்த லங்கருமங்கிட்டுமென்றார் ௩௮௦

கிட்டுமென்றசொற்கேட்டே கீர்த்திவடோச்சிசொல்வான்
தட்டுவராதென்றுமுளதக்கோனின்றன்னருளால் ௩௮௧

இருப்போதலியாரங்காண இந்திராயனைத்தான்
குப்போடுதானோக்கிக் கொள்கையுடனேசிரித்து ௩௮௨

மன்னான்வலதுகையை வண்மையலிதான்பிடித்தார்
தண்மையாய்த்தாழ்ச்சிகள் செய்தானேயிந்திராயனப்போ ௩௮௩

சகரந்தனைநாடி நன்றலியோடேநடந்தான்
பகரிதங்கேபிணங்கள் பாரமலைபோற்கிடந்த ௩௮௪

குருதியிலேயாறு கூடும்வழிமீதாறுது
பகருமின்றநன்னெறியிற் பதிந்தவிந்திராயனனே ௩௮௫

ஐயமில்லாமலங்கன்பாகத்தானலியார்
கையைப்பிடித்துயர்த்திக் கண்டமட்டுந்தான்றூக்கி ௩௮௬

கோட்டைதனிற்புகுந்து கொள்கையுடனேநடந்து
நாட்டையெல்லாந்தான்கடந்து நாடியிந்திராயனுடன் ௩௮௭

நாற்பத்தெண்ணாயிரங்கால் கன்றியுள்ளமண்டபத்தில்
ஆர்ப்பிந்தவனிருக்கும் அறுகோணபீடமதில் ௩௮௮

மன்னனொடுமன்னாலி மாதவத்தோடேயிருந்தார்
வன்னமுள்ளசெங்கோல் வடோச்சியர்கோனப்போது ௩௮௯

ஆங்கவன்தன்சேனையொடு மாலிவிலாபக்கமுற்றான்
பாங்கானகம்பர்வந்து பாய்புலிக்குப்பின்னிருந்தார் ௩௯௦

இந்த்ராயன்சேனையிறந்ததுபோய்மீதியுள்ளோர்
வந்திருந்தாரிந்திரன்பின் வாரியைப்போலேவளைந்து ௩௯௧

கற்புடையமெல்லியல்லாள் கன்னியணிமதிதான்
கற்புடையகோட்டைக்குள் நாயகருளென்றறிந்தாள் ௮௯௨

பூணூற்பிராமணரும் போர்தங்கிருந்தார்கள
கோணுதால்லகுதிகாரரும்மிருந்தார் ௮௯௩

கூடுஞ்சபைதனிலே கூறுவளிந்திராயனைப்போ
காடும்புடையவிளையகன்றாய்முகம்பார்த்து ௮௯௪

எந்தனக்காய்வெட்டவென்றே யென்னிடத்திலேயிசைவு
தந்துவிட்டுப்போன சவுனியட்டாச்சியிவன் ௮௯௫

மீனைமீன்பாய்ந்ததுபோல் வினைத்துவிட்டிங்கென்பதியில்
பூனைபுலியாய்ந்ததுபோற் புல்லமைவினைத்தானலே ௮௯௬

என்றுனதுகேட்டார் இருக்கும்லட்டாச்சிசொன்னான்
கன்றுக்கேளரசே நாடேந்தசெய்தியெல்லாம் ௮௯௭

தாவடியைவெல்பதற்குத்தடையில்லையெம்மரசே
மாவமுடனுன்னைவிட மற்றவர்கள்வீரமேதோ ௮௯௮

கண்டிருந்துஞ்சொல்வதென்ன கத்தனலிதஞ்செய்தி
உண்டுடுக்கஇன்னமுனக்கு நாளுண்டுகண்டாய் ௮௯௯

உன்மருகன்தானிவன் உள்ளசமர்த்தனதெல்லாம்
தன்மனதுக்கேற்றபலி தான்காட்டிமாண்டிலையோ ௯௱

உச்சிபட்டபாட்டதனை புன்கண்ணுற்கண்டாயேல்
பட்சிகள்போல்நீதான் பறந்துவிடுவையரணத்தில் ௯௱௧

கட்மேலேபோல்வளர்ந்த எங்கள்புனியர்தன்
பட்டுவிங்கள்தனைப்பார்த்தால்நீயுந்தரிக்காய் ௯௱௨

உந்தன்படைத்தலைவரும் பேச்சைத்தான்கேட்டுஞ்
சிந்தையுயிரிழந்து சேர்ந்தாரேமண்ணிடம் ௯௱௩

சண்டைமுகத்தாலிட்டச்சபதங்கள்கூறினையே
அண்டையிலேயாலபுலிக் காசாரஞ்செய்வதென்னே ௯௱௪

வெற்றியுள்ளோனீயிருக்கவேணபடைமாள்வதென்றே
பத்தியந்தன்கோட்டையெல்லாம்பாரமலைபோற்பிணங்கள் ௯௱௫

சத்திகெட்டங்கேயுருண்டார் தானுள்ளவீரமிதோ
புத்தியுள்ளோன்வெற்றிசெய்யப் போகுதேயென்றேபுகழ்ந்து ௯௱௬

தாட்டிகமாய்நீவிடுத்த சபுலக்கெந்தேவரச்சே
வாட்டிமறபிரங்கியென்போன் மாண்டதைக்கேட்டிலையோ ௯௱௭

தனுவையொடித்துங்கழுத்திற் றன்மாலைபோட்டகம்பர்
மனுவெல்திவ்கெண்ணிநின்றாய் மதிக்கிலுன்போலேகோடி ௯௱௮

69

அரசர்களும்போதாதே யறையுந்தல் தம்பியைத்தான்
துரிசத்திற்கொல்லப்புத்துந் துண்டாய்ப்பறந்திலையோ ௯௯

உந்தன்மகள்கல்ல வுயர்ந்தபனிமதிதான்
இந்தவலிக்குப்பயந்திங்கே யுனக்குப்புத்திசொன்னாள் ௯௰

தப்பினேனும்ஆலிக்கென்றே தானுசமர்த்தாப்பேசுகிறாய்
ஒப்பிலொருநாழிகைக்குள்ளுழன்றுபோய்விடுவாய் ௯௧௧

தலையுமிழந்து தான்யோகமாவியும்போய்
நிலையுமுணக்குணவு நீபுவியிலல்லமுண்டு ௯௧௨

பட்டத்தியானை பட்டது நீபார்க்கிலையோ
கட்டத்திற்குத்தானொருவன் நயத்திலுக்குத்தானொருவன் ௯௧௩

கையெடுத்தபுத்தையெல்லாங் களத்திலேதோர்த்தனையே
ஐயமில்லாப்பொன்முடியை யார்ப்பினொடுபோக்கினையே ௯௧௪

புலியாயிருந்தனையே போசாலிதன்னிடத்தில்
எலியாயிருக்கின்றாய் என்னையேன்கொல்லுகிறாய் ௯௧௫

ஆலமரத்தோடுகட்டி யாலிபுலியாந்தலையைச்
சாலவாள்வீசினவத் தருவிழுதமுடியதே ௯௧௬

வெட்டினவெட்டெல்லாம் விருதாவிற்போகாமற்
கிட்டினதுபோலிருக்குங் கிட்டாதகன்றிடுவார் ௯௧௭

ஆராலும்வெல்லரிதின் காலிதலைவாங்கரிது
தீராதகோப்பிடிக்குஞ் செம்பைவைத்துக்கைதொழுதால் ௯௧௮

கம்பருக்கிங்குத்தரவு காவலநீசொன்னக்கால்
உம்பரையும்வென்றிடலா முன்மதத்தைக்காட்டினையே ௯௧௯

இந்தக்களத்திலிம்பாலிதம்மிடத்தில்
வந்தனையேயுன்சமர்த்தேன் வல்லஅலியிடத்தில் ௯௨௰

அல்லார்தம்வரம்பரிலை யாராலும்வெல்லரிது
சல்யாதுவாளம்பட்டுந் தாவிவிடுங்கண்டேனுன் ௯௨௧

கோலாகலமாகக் கொண்டேனுனிமானை
மாலாகநற்சுவர்க்கம் வாய்த்திட்டதேயென்றனக்கு ௯௨௨

நெருப்பிற்கிடந்தவனை நீராளமாக்கிவைத்தார்
பொருப்பத்துடன்கோயிற்கட்டிப் பேய்நாயைக்கையெடுத்தாப் ௯௨௩

செம்பைவைத்துக்கையெடுத்தாற்சேதம்பிடிக்கும்விட்டுத்
தம்பநயியுடைய தன்மப்புதுக்கான்படியே ௯௨௪

வீணாசைவையாதே வேதத்திலங்கிடென்று
ஆணைசிங்க மறைந்தவடோச்சியப்போ ௯௨௫

அலியார்தமைநோக்கி யானவிந்திராயன்சொல்வான்
நலியாதுநாயனேநீ ரன்றுகக்கண்டதுண்டோ ௯௨௬

கண்டதுண்டோசொல்லெனவே காயலன்கேட்டிடவே
அண்டருலகுற்றபுலியானவலி சொல்லலுற்றார் ௯௨௭

தன்னுடையறாகுதன்னோந் தானறியாமானிடவர்
மன்னவனைக்காண மதியுண்டோசொல்லுகென்றார் ௯௨௮

பின்னுமிந்திராயன் பிரத்திமொழிசொல்லலுற்றான்
மூன்னும்பின்னுமூலமந்த்ர முத்திதருமென்றுரைத்தான் ௯௨௯

சொல்லக்கேளாயாசேகுசொல்லுவனென்றேயாலிசொன்னார்
அல்லாபடைத்தபடைப் பானதிலொன்றுகுமது ௯௩௰

பொல்லாதகாபிரதைப் போதுமெனத்தானுரைப்பார்
சொல்லுமதின்விபரஞ் சொகுசாகநீகேளு ௯௩௧

தன்புருடனைச்சேர்ந்தாற் தக்கபுகழுமுண்டாம்
பின்சோரனைச்சேர்ந்தால் பேருலகிற்றும்வசைபாம் ௯௩௨

அல்லாவைத்தான்புகழ்ந்தா லாகுநலம்பெற்றிடலாம்
இல்லாதமந்திரங்க ளீடேற்றந்தாராது ௯௩௩

ஆவியழியாதிங்காளவுடமறுளழியும்
ஓவியங்கள்தானழியுமுள்ளஇறைதானழியாள் ௯௩௪

ஆக்கையெவர்க்குமுண்டு மல்லாவுக்காக்கையில்லை
சேர்க்கையெவர்க்குமுண்டு சேர்க்கையாதிக்கில்லையென்றார் ௯௩௫

பிறுதியப்புத்தேயுலாயு பெற்றவர்கட்காசையைந்தும்
அறுதியைந்துங்கற்றவர்களாலயத்தினுள்ளிருப்பார் ௯௩௬

மண்ணுக்குநான்முகனு மால்நீர்க்குமாலனுமாம்
வண்ணனிடியயேச்சுரனு மால்வெளிசதாசிவனும் ௯௩௭

காற்றிற்குநாதமல்லாற் கத்தர்தான்வேறுமுண்டோ
பார்த்துரையுமென்றே பகர்ந்தானிந்திராயனப்போ ௯௩௮

ஈதுவாயலியுரைப்பா ரேழைநீகேட்டிலையோ
இதுவெல்லாம்நாயனல்ல வேகண்டடைப்பானதுகள் ௯௩௯

படைத்தபடைப்பல்லாது பாரவிசையாகாது
ஜடத்தினுயிருறல் தானுரைக்கநீகேளாய் ௯௪௰

பானைகுடஞ்சட்டி பலபாத்திரங்களெல்லாம்
கூனையிதுவெல்லாம் குசவனுண்டாக்கின்றது ௯௪௧

உண்டாக்கும்பாண்ட முனக்குச்சிவ்மாகாதென்னுர்
என்றுக்கும்நாயனொரு காருமுறுவல்லனென்றீர் ௯௪௨

உருவில்லையென்றிங் குரைதீர்கேளும்மகிலே
நெருநீனையாக்கோயிலுக்கு சேர்ந்தாற்கைகூடுவதேன் ௮௰௩

பருவமிதைச்சொல்லெனவே பகர்ந்தானிந்திராயனப்போ
கருவிலருளான கருணையலிபீதுரைத்தார் ௮௰௪

செல்லும்பதரு நிறைந்திருக்குங்கண்டாயே
சொல்லுமந்தக்காற்றாலே தூரப்படுஞ்சாவியெல்லாம் ௮௰௫

தண்ணீருங்கள்ளுஞ் சலமுமதைப்போற்றேனும்
உண்ணீராற்றாகமும்போம் உரைக்குங்கள்ளைக்குடித்தால் ௮௰௬

தாகந்தெளியாது தானுருவைக்கையெடுத்தாற்
றாகந்தெளிந்துவிடுந் தனியோனைக்கையெடுத்தால் ௮௰௭

ஆகமுடன்கண்ணினுக்கு மவ்வொளிபோலாகுமிறை
ஏகமுடனேநிரம்பி யெங்குநிறைந்தபொருள் ௮௰௮

எங்குநிறைந்திருப்பானிறையோனுருவமென்ற
பொங்குமொழிகேட்டுப் புகல்வனிந்திராயனப்போ ௮௰௯

ஆத்துமாவம்முடனு மாயிருக்கக்கண்டோமோ
சாற்றுவனீயிறையைத் தான்கண்டதுண்டோசொல் ௯௰

கண்டதுண்டோவென்றுரைத்தீர் காவலனேயான்சொல்கேள்
கொண்டசுரூபமுண்டோ குதாயையான்காண்பதற்கு ௯௰௧

சுரூபமெடுத்தவனோ தோன்றும்படைப்புள்ளவனோ
அருவுருவமில்லானை யார்காணப்போறமென்றார் ௯௰௨

அரூபமில்லையென்றீ ரன்றானவேதமெல்லாந்
திருவுடனேநன்றாகத் தெளிவுடனேயாகுமறை ௯௰௩

எட்டிலெழுதினதா ரென்னுடனேசொல்லுமென்று
தாட்டிகமாய்க்கேட்டிடவே தாரலிதாமீதுரைப்பார் ௯௰௪

ஏடுமெழுத்தாணி வென்றெழுதக்கையுளதோ
தேடுகின்றவேதா ரிட்டித்தாலுண்டாகும் ௯௰௫

உண்டாகும்வேதமென்றிங் குரைத்தீரலிப்படியே
நன்றாகநாயனுக்கு நன்னயிகளேதுக்கென்றான் ௯௰௬

ஏதுக்கென்றேயுரைத்த இந்திராயனேகேளாய்
காதுக்குப்பொன்பூணிற் கண்ணுக்கழகதுண்டோ ௯௰௭

வேதம்விருப்பதற்கு வெற்றியின்றதா தரென்றார்
ஆகந்தனைப்படைத்தா ருருமலன்வீட்டினுக்கு ௯௰௮

சொர்க்கநரகமென்றுதோன்றிரண்டுமேபடைத்தான்
ஏக்கமில்லாச்சொர்க்கத்திற்கு நேர்பயிகளைப்படைத்தான் ௯௰௯

குடியேற்றவேதங் கொடுத்தான்முகம்மதுக்குக்
கொடிதானகும்பியைக் குடியேற்றவேண்டுமென்றே ௯௬௰

மாயோன்றனைப்படைத்தான் மாயத்தையுங்கொடுத்தான்
ஆயத்தால்வேதத் தரசர்கபியாகுமென்றே ௯௬௧

கபியாகுமென் றுரைத்த காயலாவியேகேளுதற்
செவிதாய்ப்பிராமணர்கள் தேசத்தினிலேற்றமென்ன ௯௬௨

உயர்ந்தகுலமானதென்ன வுர்சவிபேசொல்லுமென்றான்
காயந்தனிந்திராயன்சொல்ல நன்றியல்சொல்லலுற்றார் ௯௬௩

கலையுமானன்னபினாட் டோன்றன்சிலபேர்களுண்டு
நிலையாகக்காலியவர் கேசமுடன்மேய்த்திடுவார் ௯௬௪

காலியவர்மேய்க்கையிலே காராம்பசுவின்றன்னைக்
கோலியேகானகத்திற் கொண்டுகழுத்தறுத்தே ௯௬௫

வால்தோல்கால்வன்னரம்பும் வன்சாணியோடிரத்தம்
சால்பார்குழியைவெட்டித் தான்புதைத்தநற்சதையே ௯௬௬

கூட்டுக்கறிபோட்டுக்கள்ளுஞ் சொந்தமெனவேகுடித்தார்
ஓட்டும்பசுவுடையோ னூரெங்குந்தான்தேடி ௯௬௭

காட்டகத்திற்றேடுகையிற் கண்டானிக்கள்ளர்தம்மைக்
கூட்டிக்கொண்டுகள்ளர்தம்மைக் குண்டுகட்டாய்க்கட்டியபின் ௯௬௮

மூன்குடுமிபின்குடுமி விட்டுத்தலைசிரைத்து
வன்குழியிலேபுதைத்த வன்சாணியையெடுத்தே ௯௬௯

சாம்பலைச்சுட்டதடனேத் தான்கள்ளர்நெற்றியிலே
போக்காலிக்கொம்பதுபெற் போட்டிரத்தமுந்தடவி ௯௭௰

பசுவினரம்பைப் பல்பூணூல்தானுமிட்டு
ஒசுவாபிருதோலி லுற்றகோற்குமிட்டு ௯௭௧

மாட்டினுடையகோபிபத்தை வாயிலேதான்வார்த்தங்
கீட்டுக்கழுதையின்மேலேற்றியேயூரைச்சுற்றி ௯௭௨

காட்டிலேயோட்டிவிட்டான் காலியுடையோனவரைத்
தாட்டிகமாய்க்கெட்டவர்கள் தானொருபாயமிட்டு ௯௭௩

கீர்த்திதனைத்தவசாய்க்கிட்டியபிராமணர்கள்
சாத்திரமொன்றேயெடுத்துச் சாதிகளைத்தூஷணிப்பாய் ௯௭௪

தங்கள்குலமதிகந் தானென்றயேசிடுவார்
பங்கமிகப்பட்டோர் பிராமணரென்றேயுரைத்தார் ௯௭௫

ஆகமக்களெல்லாமனைத்துமொருசாதிகண்டீர்
போதமுள்ளசமானைப் போய்த்தோர்கள்தாழ்ந்தகுலம் ௯௭௬

இந்திராயன்படைப்போர்.

71

தாழ்ந்தகுலமென்றலியே சாற்றுகீர்கேளுமென்சொல்
ஆழ்ந்தகருத்திளராய் அநேகநூலோர் திகலம் ௧௭௭

கோத்தகுறிகாரர்சொற்றுளிசமாயிருப்பதென்னே
சார்ந்துரைகள்சொல்லுமென்றே சாற்றினனிந்த்ராயன் ௧௭௮

குறியெல்லாமெய்யெனவே கூறினீர்கேளரசே
செதிவானகெற்பமதிற் சேர்ந்திருக்கும்பிள்ளைதன்னை ௧௭௯

ஆண்பெண்ணென்றேயுரைத்தா லக்குறியுமெய்யாகும்
வீண்பேச்சுநெடுத்தமொழி மெய்யாமோகேளரசே ௧௮௰

நல்லநாட்டால்பார்த்து நல்முகூர்த்தமும்பார்த்து
வல்லமையராகி வகைவிபரமும்பார்த்து ௧௮௧

ஓமசக்திதான்வளர்த்தங் குள்ளபலசாத்திரமும்
ஆமெனவேதரன்பார்த்த அந்தத்திருமங்கிலியம் ௧௮௨

தாலிகட்டுமுன்னையிலே தானறுப்பதெவ்விதமோ
சாலென்றாலுந் தருமனிவனென்றாலும் ௧௮௩

வாலியென்றாலு மவுத்துவந்தால்விட்டிடுமோ
காலியிவனென்றாலுங் காலனும்விட்டிடுவதில்லை ௧௮௪

சாத்திரமுங்குறியுந் தானுரைப்பதோர்கிசமோ
சூத்திரமெல்லாம்படைத்த துய்யோனொருவனிசம் ௧௮௫

மற்றதெல்லாம்வீணெனவே மன்னரவிசொன்னவுடன்
உற்றதொருவிசன முற்றுரைப்பேன்கேண்மன்னனே ௧௮௬

எறும்புகடையானதலைக் கெல்லாமுயிருளதே
அறவதனைக்கொல்லுவதிங் காகுமோ ஆகாதேக் ௧௮௭

சொல்லுமென்றான்மன்னன் தொடர்ந்தலிதாமீதுரைப்பார்
பல்லுலகின்தன்னிற் பகைசிறிதுண்டான துண்டு ௧௮௮

பாம்புபுலிகடுவாய் பழிசெய்யும்சாதியுண்டு
ஆம்படியேகொன்றிடலாம் அல்லதுகொல்லாகாது ௧௮௯

மனுவுக்குணவான மறமும்படையுண்டதுகேள்
மனுவதுடன்பிசுமிப் பட்டாலருக்கிடலாம் ௧௯௰

பூமானில்லாக்கருபா பேசற்றும்படை தினவாக்குக்
கோமானுரைப்படிக்குக் கொன்றுதின்னக்கிடலாம் ௧௯௧

ஆதியலியேகான் அறைவேனொருவசனம்
நீதியிறையோன் கிச்சாயமாய்க்காப்பதற்கு ௧௯௨

எங்கேயேனவுரைத்தா யெந்தலையான்சொலக்கேள்
இங்கேமனுக்களுக்கே யேத்தமானதிலும் ௧௯௩

நந்துதிசைவெய்யோன் தானுடலிலுள்ளனென்றும்
தந்துமனதிற் றுனைவணங்கொண்டிருந்தான்

மனதுகலங்காதே மற்றும்பால்நீரதுபோற்
றனதாகவெப்படைப்புந் தானிருப்பான்கண்டீரே

கண்டாயென்றேயுரைத்த கத்தனடியேகேளும்
உண்டாக்குமையன் ஒருவனையேயுரைத்தீர்

தீனவர்க்குமட்டிமுண்டோ சேர்காபிருக்குமுண்டோ
தானமுடன்சொல்லுமென்று தானல்லையக்கேட்டவுடன்

சொல்லத்தான்கேளரசே சோர்வில்லாதேயுரைக்கக்
கல்லூக்குட்டேரைக்குயிர் காத்திரணமுங்கொடுப்போன்

ஆக்கும்பொழுதன்னவனூர்க்குமுகவியுண்டு
காக்குமிறைவெல்லுமுண்டு காபிருக்குந்தீனவர்க்கும்

பார்த்தாலொளிவிசுலாம்பகருமிருட்காபிர்களே
கேத்திரயெங்கு நிசப்பமாய்நிற்குகின்ற

கோமான்சுவர்க்கபதிகோதில்லா தீன்வெளிச்சம்
தேமாங்கனிபகுர்தத் திறோர்புகுவரதில்

வரகமிருளொரு நரகமதற்கேயுணர்த்
நாரகமுலகாயிரவர் சூழுமதிலேபுகுவார்

யாபிலைபுந்தீனரையுங் கட்டளையாற்சீர்தூக்கிற்
றூபரமாய்வெண்மதியுந் தானிருளும்போலாகும்

கத்தனிசுலாமதையுங் காபிரையுஞ்சீர்தூக்கில்
பித்தனையும்பொன்னுவென்று பேசலமென்றுரைத்தார்

பேய்கொண்டகாபிர்களைப் பேயதுதானேபுசித்து
வாய்புணர்ச்சியானதுபோல் கடுச்சந்நிமீதிழுக்கும்

மாட்டும்பீதன்னைச்சுட்டு மார்பதிலும்நெற்றியிலும்
மீட்டுமதுகோமியத்தை மேல்தலையிலேதெளித்து

கோட்டிகொள்ளுங்காபிர் கொடியநரகான்வார்கள்
தாட்டிகமாலோகங்களைத் தனதாகவேசேர்த்து

காட்சியடித்துருவாக்க கன்முக்குங்கர்தும்வைத்து
மீட்சியில்லாதேயுறப்பு மேன்மையாயுண்டுபண்ணி

கோயிலிலேவைத்துக் கும்பிட்டீர்சாமியென்று
ஆயிபகள்ளரதை யாவியெடுத்தேயுடைத்து

செட்டிகடைவைத்துத் தின்வாங்கும்வேளையிலே
தட்டிமொழிபேசிடுமோ சாமியென்றுசொல்லிடுமோ

இந்திராயன்படைப்போர்.

முட்டியேகும்பிட்டவர் மோட்சமதுதான்தருமோ
அட்டியொன்றுமில்லாம லருந்தீனிலவர்திடுங்காண் ௭௧௧

ஆராலுங்காணுத வாதிதனை யேவணங்கில்
நேரானசொர்க்கபதி நேசமுடனேபெறலாம் ௭௧௨

அம்மனென்றுசாமியென்றிக் கானபொம்மைதன்னைச்செய்தீர்
கும்பமுலைப்பெண்களைத்தான் கூடுவரோசாமியவர் ௭௧௩

உன்பெண்ணைப்பார்க்கிறவ னுதாரிகாபிரவன்
என்றுந்தொழவேண்டு மேகபெரியவனை ௭௧௪

சாமியவனுக்குஞ் சாற்றுகின்றவெவ்விடமும்
தோமிலாவல்லான் றுதியெல்லாங்கைக்கொளுவான் ௭௧௫

பேசாதசாமிமுன்னேப் பேயாட்டுத்தாளுடி
கூசாமல்நிற்குகின்ற கோதையற்குத்தான்டணையம் ௭௧௬

காசுபணங்கொடுத்துக் கண்டவர்கள்சேர்ந்திவோர்
பூசைபண்ணிநித்தல் பொங்குநீர்வேண்டாங்காண் ௭௧௭

சாமியிடபெண்டுனைத் தான்வைத்துறிப்பதுண்டோ
ஆமியசாமியவனையுமே சேர்வதுண்டோ ௭௧௮

குளிமைடத்துகிறீர் குணங்கெட்டகல்லதற்கு
அழிமையுள்ளபுத்துகட்கே யானவெண்ணெய்தேங்கிளநீர் ௭௧௯

மெய்க்கொக்கவார்த்து விழுந்துதெண்டஞ்செய்யுகிறீர்
தைக்காட்டெண்ணயத்திற் றன்சுவறுமோமேனி ௭௨௰

கல்லையுடைக்குமப்போ காளற்பறக்கும்புத்தைத்
தொல்லைப்படுத்துகிறீர் தோசமல்லவோகாளை ௭௨௧

பரமேச்சுரனனவே பாரச்சிலையுண்டுபண்ணி
சரவெல்லாந்தான்கூடி நாடியேதேரேறி ௭௨௨

வடம்பூட்டியெல்லோரும் வருத்தமிகப்பட்டினைந்து
இடம்பூட்டியேயிருக்கச் செய்கிறீர்மாயவென்றால் ௭௨௩

வேருமடக்காதோ சிரிப்பவர்க்குடலெடுத்தீர்
யாருமிதைப்பாராமல் ஆனபுத்திதன்னைவிட்டு ௭௨௪

கொஞ்சப்படுத்துகின்றோர் கூடுவார்நரகில்
அஞ்சப்படைத்தோனை யன்பாய்வணக்கிடுவீர் ௭௨௫

செத்தசடலமதைத் தீயிலேதான்போட்டுச்
சற்றுமதியில்லாமற் றுனெருவனையேவி ௭௨௬

கம்புகொண்டுகிண்டியதைக் கண்டுசுடச்சொல்லுகிறீர்
வம்பிங்கிதுகளெல்லாம் வல்லவனேனென்றுமுள்ளான் ௭௨௭

பெண்ணுருவுமாணுருவும் பேராயவன்காண்பான்
கண்ணுருவமாணிக்கத்தைக் கண்டுகொண்டுதானிகழ்வான் ௭௨௮

அப்படியுஞ்செய்வாரோ வாதிதனக்கேற்றிடுமோ
இப்படியுங்காவி ரிடருய்கடப்பதென்னே ௭௨௯

தாய்தகப்பன்செத்தவுடன் தான்மொட்டையாய்த்தலையை
ஆயத்துளபிள்ளையை யுதபுகேடாய்ச்செய்யுகிறீர் ௭௩௰

நாயன்பொறுட்பானே நாளெல்லாம்வீணுசீசோ
தூயவிந்திராயனப்போ துக்கமாய்ச்சொல்லலுற்றான் ௭௩௧

நாளெல்லாம்வீண்தபசாய் நான்கேட்டேனென்றழுது
பாழ்செய்தோமென்று பதைபதைத்தாளிந்திரன்தான் ௭௩௨

அழுதவனைத்தானமர்த்தி யாலிபுலியீதுரைப்பார்
பழுதுபடாதீமானைப் பாங்காகச்சொல்லுமென்றார் ௭௩௩

அலியாரின்கைபிடித்தே யாகுமிசுலாமானான்
மெலிவெல்லாந்தான்விடுத்து மேன்மைபெறத்தீனனான் ௭௩௪

கோமான்தன்தேசமெல்லாங் கொண்டார்பெருந்தீனை
ஆமரவென்றீமானை யனைவோருங்கொண்டனரே ௭௩௫

அருமைக்குணத்தோடு மாநகருரினில்வாழ்
தருமனகுமதிட தன்மகனுமிலங்கோன் ௭௩௬

திருவளருஞ்செல்வஞ் சிறந்தராவுத்தனுமே
பெரும்புகழாய்வாழப்பெரியோனுதவிசெய்வான் ௭௩௭

அரசனுடுசேர்ந்தவரையன்பாகத்தானிருத்திச்
சார்பதியெல்லாம்புகழத் தொழுதாசலியுடனே ௭௩௮

அப்போதிபுலிசக்கனியாயமென்றழுதான்
இப்போதென்கூடவொட்டா யிப்படிச்செய்தாரலிதாம் ௭௩௯

சலித்தானிபுலீசு தானிந்திராயன்சொல்வான்
ஒலித்தானமுள்ளவரோ உண்மையலியேகேளும் ௭௪௰

எந்தன்பனிமதியை யான்பெற்றபேதைதனை
இந்தவுலகுதனில் யான்சொல்லப்போறதென்னோ ௭௪௧

மூந்தவொருபெண்ணை மோகமுடன் தாகிகொண்டான்
சொந்தத்தபசிருந்து துய்யமலையாளோடு ௭௪௨

கோவிற்குளங்கட்டிக் கோடிமுதற்றன்மஞ்செய்து
வாவிகளுண்டாக்கி வளர்போசனங்கொடுத்து ௭௪௩

தேவியருநானுஞ்சிறந்த நல்லநோன்பிருந்து
யாவியேயித்தமன்ன மிகவேகொடுத்து ௭௪௪

இந்திராயன்படைப்போர்.

சித்தர்கபசிருந்தோம் நீதியுள்ளபெண்ணைக்
கத்தன்கொடுத்தான் கண்மணிபோற்பின்னொருபெண் ௭௬௫
பெற்றபலனைகவந்தாள் பெரும்புனிமதியாம்
சத்தருள்ளவென்மகள்தான் சோராதமுருடையாள் ௭௬௬
அறிவுக்கடலான வாயிழையாளென்மகளைப்
பொறுதியுள்ளயென்மகளைப் போந்தவடோச்சியர்க்கு ௭௬௭
கல்யாணஞ்செய்யக் கனமுறிவனைத்தளித்தேன்
ல்லாவதுபோல நாட்டமொடுசெய்வதற்கே ௭௬௮
ாறுதியாயூர்கோலம் போந்துவரும்வேளையிலே
றதிகெட்டவோலையினு லங்கெழுதிச்செய்திகண்டேன் ௭௬௯
க்தமருமகனை மோசமதுசெய்துவந்தான்
ஏத்தபடையெடுத்திங்கித்தனைக்கும்வெற்றிசெய்தான் ௭௱௰
சாற்றரியவெற்றிசெய்தான்தானுமுங்கள்நல்லுதவித்
தோற்றந்தினாலே துணையேகிடையாத ௭௱௧
தங்களுதவியினாற் றுணிடுசெய்தானே
அங்கமுடனிருந்தா னனவடோச்சியர்கோன் ௭௱௨
அன்றவன்பேர்சொன்னதினா லங்கவனுக்கேதாலி
இன்றெழுதவுங்கள்மனத் திசைந்தபடிசொல்கவென்றான் ௭௱௩
கூறுமொழிகேட்டுக் கூறுவாராலிபுலி
பேறுபெறும்நல்ல பெண்ணாள்பனிமதியை ௭௱௪
வாழும்வடோச்சியர்க்கு வண்மையுடனேகொடுக்க
ாளும்மனதெளவே நாயனல்தாமுனைத்தார் ௭௱௫
ாடுமொழிகேட்டவுட னன்றாகஇந்திரர்கோன்
தேடுத்தெருக்களெல்லாஞ் சிறப்பாயலங்கரித்தே ௭௱௬
பந்தற்கெதுவிதமாய்ப் பாவினையுண்டானதெல்லாம்
அந்தமுடன்கோலமிட்டங் கங்கரவீதியெல்லாம் ௭௱௭
ஜாடினைகள்செய்தே துரையாம்வடோச்சிதன்னை
ொடியேயூர்கோலம் நன்றாய்வருகவென்றே ௭௱௮
ள்ளரவடோச்சிதன்னைத் தானேமணமாக
வெள்ளானைமீதேற்றி வீதியெங்குஞ்சுற்றிவந்ததே ௭௱௯
வந்துமணப்பந்தலதில் வாய்ப்பாய்த்தவிசில்வைத்தே
கொந்துலாவும்பூங்குழலாட் கோதைப்னிமதிக்கு ௭௯௰
பாதாதிதேசமுதல் பாங்காயலங்கரித்தே
வேதன்விதிப்படி மெல்லியளைத்தான்கூட்டி ௭௯௧

ஆதியலிமுன்விடுத்தா ரப்போபணிமதிதான்
நீதியலிதம்பதத்தில் நேசத்துடனேபணிந்தாள் ௭௬௨

கண்டங்கலியார்க்குக் கல்புமிகவேகுளிர்ந்து
விண்டாரென்பிள்ளையென்றே வேற்றியோடங்குரைத்து ௭௬௩

உந்தன்மனம்போலுறுதி யுண்மையுள்ளாளைக்கண்டான்
அந்தமுள்ளநல்லவருளாண்டோன் தருவனென்றார் ௭௬௪

சுமானைக்கொள்ளென்றிசைத்தாரலியார்தாம்
சிமானுரைத்தவுடன் செப்புவாள்தேன்மொழிதான் ௭௬௫

கோமானபிதனையுங் கொள்கையுடனுங்களையும்
தோமேதுமில்லாமற் றுதியாருநித்திரையில் ௭௬௬

கண்டேன்மனமதனிற் கண்மொரனிமானைக்
கொண்டேனந்நாளிலென்றே கோதைகலிமாவுரைத்தாள் ௭௬௭

அஞ்சாதுநன்று யரிவைகலிமாவுரைத்தாள்
மஞ்சார்குடையிறசூல் மார்க்கமுறைநேயுள்ளதெல்லாம் ௭௬௮

வாயினால்வல்லிசொல்ல வள்ளலலிகேட்டிருந்தார்
கூயினரிந்திரனைக்கோதையுரைகேட்டனையா ௭௬௯

கேட்டேனலியரசே கெட்டிகெட்டியென்றுரைத்தான்
சீட்டேன்வடோச்சியர்க்குச் செய்யுந்தவமிதென்றே ௭௭௰

திக்காவெழுதி நிறைவேற்றியங்கலிதாம
மிக்கானபாத்திகா மேன்மையொடுமோதினரே ௭௭௧

எக்காலும்வாழ்ந்திருமென் றேகனலிதாமுரைத்துச்
சக்கொன்றில்லாத தையல்பனிமதியின் ௭௭௨

கையைப்பிடித்தேகொடுத்தார் காவல்வடோச்சியிடம்
மெய்யாகனல்லோரு மேன்மைத்துவாவிரந்தார் ௭௭௩

வல்லியருநல்ல வடோச்சியுமொன்றாயிருந்தார்
சொல்லிலடங்காத சுகம்பெற்றுவாழ்ந்திருந்தார் ௭௭௪

ஜெகமெங்குந்தான்புகழுஞ் செல்வனிந்திராயனுக்கு
முகம்மதுதீன்சுல்த்தான் மன்னைப்பேருங்கொடுத்து ௭௭௫

முழுத்தான்கழுத்தானல் மோகமுடன்வாழ்ந்திரென்று
அழப்பாகவெங்காளும் அஞ்சியோகையொடுக்கும் ௭௭௬

ஆலயத்தினுள்ளிருந்த வாட்புத்துகானையெல்லாம்
வாலயமாய்த்தானெடுத்து வாரிதனிலேயெறிந்தார் ௭௭௭

சங்கச்சிலைகளெல்லாந் தானுலையிற்போட்டுருக்கி
அங்கத்துடன்பள்ளிகட்டி டாலயங்களுள்ளதெல்லாம் ௭௭௮

பொங்கத்துடனிடித்துப் போந்தபள்ளிவார்சற்கட்டி
இங்கிதமாயாதி யிறையவனைத்தான்றொழுதார் ௭௭௯

பெரியவனைத்தாவ்வணங்கும் போரானஆனையில்வாழ்
ரியலர்கள்சிங்கமெனுங் தருமாரகுமதுசேய் ௭௮௦

.. ரிகட்டிப்பேறுபெற்ற பண்பிராவுத்தனைப்போல்
அளளிகொடைகொடுத்தா னன்பாகவாழியவே ௭௮௧

ஆறுதிங்களாலிபுலி யங்கிருந்துதீன்விளக்கித்
.. றுதலாய்த்தீனைத் திறமாகவேபயிற்றி ௭௮௨

அங்கரப்பெண்கட்கெல்லா மானயிகலாம்பயிற்றி
.. ங்கரில்வாழ்ந்திருமென்றின்பாகவாழ்த்தியக்கு ௭௮௩

.. ன்தாலிதானிழந்த மோகனமார்மங்கையர்க்குப்
.. ன்தாலிகட்டிவைத்துப் பேரறிவுதான்பயிற்றி ௭௮௪

கத்திபெண்மேற்சிலதைக் கட்டளையாய்த்தானிறுத்தி
கற்றீனதனைபிந்தகாட்டிலுள்ளோர்க்கோதிவையும் ௭௮௫

அல்லும்பகலுமணிநகரவீதியெல்லாம்
சொல்லுங்கலிமாவைச் சோர்வில்லாதோதிவையும் ௭௮௬

உத்தரவுசெய்தங் குடனவியார்மன்னனிவன்
சித்தமுள்ளதேவியர்க்குத் தீன்முறைமையேபயிற்றி ௭௮௭

குத்தாபாவுண்டாக்கிக் கூண்டசிறுபிள்ளைகட்கு
நற்றுதலாயோதிவைக்க நல்லதுஅறிவாளர்தம்மை ௭௮௮

ஓதிவையுமென்றங் குடனில்லமையுங்கொடுத்து
ஆதியருட்பெற்ற அலியார்நிலைநிறுத்தி ௭௮௯

வட்டாரமண்டலத்தில் வல்லியர்க்கெல்லாந்தீனைத்
தட்டாமலேவருத்தித் தானுஞ்சிலநாளிருந்து ௭௯௦

வாசம்பொருந்தும் வடோச்சிநகருள்ளதெல்லாம்
தேசம்புகுந்தே சிறக்கவேதிருக்கி ௭௯௧

இந்திராயன்தன்மகளேந்தல்பணிமதிக்கு
முந்துநல்லக்காளை மொழிதாகிபெண்டீரை ௭௯௨

தாலியிழந்தவளைத் தானலியாரங்கழைத்துக்
கோலிபொருமாப்பிளைக்குக் கொள்கையுடன்தாலிகட்டி ௭௯௩

ஈமானிலக்கியவ ளிருந்தவூரிற்கரசயக்
கோமானவிநிறுத்திக் கொள்கைபலதும்முரைத்தே ௭௯௪

தக்கமில்லாதிந்த்ராயன் தன்னிடத்திலேலார்செய்தி
மக்கநகர்போகவென்று மன்னரலியார்முரைத்தார் ௭௯௫

துக்கமெல்லாந்தீர்ந்த சுலுத்தானுரைக்கலுற்றார்
அக்கனருளா லாலகபியைக்காண ௭௯௬

நானும்வருவனென்று நாயனவிபாவிற்புக்கித்
தீனிசுலாமானதனுஞ் சென்றுகச்சுத்தான்தொழுதே ௭௯௭

இங்குவரவேண்டுமென்றங் கேழாயிரந்தேரிற்
றங்கமதுதானேற்றிச் சாலவுஞ்ஞூறானையின்மேல் ௭௯௮

ஆடையாபரண மங்காயினிதேற்றிப்
பாடலங்கள்கூட்டம் பதினுன்காயிரத்துடனே ௭௯௯

மங்கையணிமதியும் வள்ளல்வடோச்சியருஞ்
சங்கைபெறவேண்டுமென்றே தங்கூட்டத்தோடெழுந்தார் ௮௱

அலியாருடன்கூடி யன்பாகவேயெழுந்தக்
கொலியார்கடற்போல வுவகொங்குந்தான்கடந்து ௮௱௧

தண்டாயுதமெடுத்துத் தான்கம்பர்பின்வரவே
கொண்டாடித்தீனோர் குழாங்கள்நெங்கிவர ௮௱௨

மக்கநகர்சொல்கவென்றே மாமலையெல்லாங்கடந்து
திக்குகளெல்லாம்விசயஞ் செலுத்துகின்றநாயகராம் ௮௱௩

வல்லநபிபாலில் வழுத்தவொருதூதனைத்துச்
சொல்லுவீர்நான்வார் சோபனமென்றாலியார் ௮௱௪

நல்லதென்றுதூதர் நடந்தார்வழிதொலைத்து
அல்நிதராக்கூந்தலரிவைதருநாயகமாம் ௮௱௫

பாத்திமாநாச்சியரும் பண்பானநபியும்
எத்தமுள்ளயார்களுநல் லின்பஅச்சுக்காபிகளும் ௮௱௬

அலிபோனதெவ்விடமோ அலிவரக்காணகிலமே
மெலிவேதுவந்ததுண்டோ மீண்டுவரக்கண்டிலமே ௮௱௭

எண்ணிவிசாரமட்டங் கெல்லோருந்தான்சலிப்பாய்
தண்ணீர்மதியதுபோற் றுணிருக்கும்வேளையிலே ௮௱௮

அலியாரனுப்பிவிட்ட ஆளோடிப்போயுடனே
மலிவானபள்ளியிற்போய் மக்கநபிதாள்பணிந்து ௮௱௯

வாராரலியென்றே வள்ளலிடத்தேயுரைத்தார்
மாறுகளுண்மையுள்ள மாநபியும்யார்களுடன் ௮௱௰

வீற்றிருக்கும்வேளையிலே வோர்தாலியாரும்புக்கிச்
சாற்றரியசேனையுடன் றுணுமலியுல்லார்வும் ௮௱௰௧

இந்திராயனுடன் கேந்தல்வடோச்சியரும்
வந்தார்களாமக்கநகர் மாநகரவீதியெல்லாம் ௮௱௰௨

வள்ளல்வடோச்சியுடன் நாலப்பனிவதியும்
எள்ளவில்லாநங்கயிர் னின்பமுடனேபணிந்து ௮௱௰௩

கம்பருஞ்சென்றுலம்பி காலதனிற்றான்பணிந்து
அம்பரமெல்லாம்புகழு முகும்மதுதீன்சுல்தானும் ௮௱௰௪

மக்கநபியுல்லாதம் வண்பதத்தினைபணிந்து
மிக்காகவேயதபாய் பிசுமிக்காலிற்றனிருந்தார் ௯௱௰௫

ஆலநபியிடத்தி லாலியெடுத்தேயுரைத்தார்
ஏலநடந்தசெய்தி யெல்லாம்படிப்படியே ௮௧௰௬

சொன்னாலியெடுத்துச் சொல்லநபிதாங்கேட்டு
என்னுருயிரே யிறையுமக்குவெற்றிசெய்வான் ௮௧௰௭

மன்னுவுன்காவலென்றே மார்போடுதான்சேர்த்துப்
பொன்னனமேனிதனைப் புதிதாகக்கண்டோமென்றே ௮௧௰௮

கொசுலாயவரே கூடியலியைத்தழுவி
ஓசுவாகவேயிருந்தா ரோதுவாரவிபுலி ௮௧௰௯

இங்ஙனிருக்கின்றே ரெய்டைக்குந்தாவெசமான்
தங்கிலாதீனோர் கன்றியென்றேறாலிசொன்னர் ௮௨௰

பனிமதிதான்சென்று பயகாம்பர்த[illegible]த்தில்
இனிமையுடனேயிறைஞ்சா னேகநபியேதுரைப்பார் ௮௨௧

உந்தனிவறீவே னுள்ளீ மான்கொண்டலர்ஙீ
அந்தமுடன்சுவர்க்க மாதிதருவாளெனவே ௮௨௨

சாற்றினாராலநபி தானேவடோச்சிசென்றங்
கேத்தநபிதாட்பணிந்தா னின்புறநம்நபிதாம் ௮௨௩

வள்ளல்நபியுல்லா வடோச்சிதனையும்மகிழ்ந்தே
எள்ளவில்லாதும்பெயர்தா னென்பெயரொன்றெயுரைத்தார் ௮௨௪

அரசன்வலதுகையை யன்பாய்நபிபிடித்துப்
பிரசமெனவேயிருந்து பெற்றியுடனேமகிழ்ந்து ௮௨௫

கதியாவெகுமதியுங் காட்சிபெறவேகொடுத்துக்
கெதிர்சேர்வையென்றே கிருபைத்துவாவுஞ்செய்தார் ௮௨௬

மன்னன்கொடுபோனதெல்லா மாநபிக்குக்காணிக்கையாய்ச்
சொன்னதானங்கொடுத்துத் துய்பகச்சுசெய்துநன்றாய் ௮௨௭

தேசத்துக்குப்போகவென்றே சேர்ந்தபுயப்பட்டனரே
வாசமுடன்தீனை வளர்ந்தேறச்செய்யுமென்றே ௮௨௮

மன்னனையுநல்ல வடோச்சியையுமாதினையும்
தங்நகர்க்குச்செல்லுமென்றே தானனுப்பினார்நபினர் ௮௨௯

வாழுமனைபோயிருந்தார் மன்னரலியாரும்
ஆறுமனைமிலவாவர்களுஞ்சேர்ந்தார் ௮௯

முகம்மதுகல்க்கான் மானகரந்தான்சேர்ந்தார்
சுவமுடனேதினுஞ் சுகமாகவாழியவே ௮௯

வடோச்சியுக்தேவியரும் வாழுநகரிற்புகுந்தார்
மடக்கொடியுந்தானு மணமாகவாழியவே ௮௯

வானேடுபூமி வளமாகவாழியவே
தீனுந்துனியாவுஞ் சிறப்பாகவாழியவே ௮௯

உலாகொடுந்தா ஆலீந்தா மூன்மையுடன்வாழியவே
தரையிற்புகழவருஞ் சங்கையுள்ள ஆலைகள் ௮௯

செஞ்சொற்குகவிசெய்யுந் திரனருதுமாளும்
பொஞ்சாபுகழ்ராவுத்தர் பிள்ளையவன்தான்வாழி ௮௯

அம்மானையைப்படிக்குமன்னோரெவாரும்வாழியவே
டெம்மானருளாற்பெரியோரும்வாழியவே ௮௯

இப்புத்தகங்கேட்டவர்களெல்லோரும்வாழியவே
அப்புத்தகங்கேட்டோ ரனைவோரும்வாழியவே ௮௯

ஆலைகள்வாழ மகுபதருள்புத்திரனும்
பெருதவுடைய பிள்ளைமிகவாழியவே ௮௯

கத்தனருட்பெற்ற காஜுசாவாழியவே
சுற்றமுடன்ர[illegible]ந்தப் பிள்ளையுர்வாழியவே ௮௯

ஆலைகளெல்லோரு[illegible]வாழியவே
பாரைப்புரக்கும் பண்பரசர்வாழியவே ௮௪

அல்லாவருளு மாலாபிமன்னூட்டும
வல்லமுகிமித்தின் வண்மைவரிசைப்பேறும் ௮௪

அரியமுகசுலின்க ளனைவர்வரிசைப்பேறும்
வரிசைத்தலீல்செய்வர்க்கு மன்னிநிதம்வாழியவே ௮௪

பாடினவர்சுற்றம்பலபேரும்வாழியவே
நீடூழிகாலம் நிரப்பமாய்வாழியவே ௮௪

பூமீதிலெல்லோரும் புகழாகவாழியவே,
ஆமீனென் றனைவோரும்வாழியவே ௮௪

—— (*) ——

ஐந்தாவது இந்திராயன்படைப்போர் முற்றிற்று.

அல்லாசுபுகானுகுத்தாலா உதவியாலும் - இறசூல்சல்லாகு அலைகிஸ ஓசல்லம் அவர்கள்து வரப்பறக்கத்தினாலும் ஐந்துபடைப்போரில்(உதசு மருடு)பாடலும் முற்றிற்று முற்றும்.

—— (*) ——